லட்சுமி பிரபா



# சூரியகாந்தி பூக்கள்

வானதி பதிப்பகம்

கட்டிக்காட்டியிருக்கிறேன். ஒரு பெண்ணுக்கு வீடு தான் உலகம். வீடுதான் பாதுகாப்பு. கதாநாயகி அஞ்சலிக்கு சொந்த வீட்டில், அதுவும் பெற்ற தந்தை மூலமாகவே ஆபத்து ஏற்படுகிறது. அதிலிருந்து அவள் எப்படி தப்பித்தாள்? வாசியுங்கள்!

"பௌர்ணமி நிலவு" நாவலில் கதாநாயகி வைஷ்ணவி, பெற்றவர்களை இழந்த அபலைப் பெண். பெரியம்மாவின் வீட்டிற்கு அடைக்கலமாக வந்தவள். பெரியம்மாவின் கொடுமைக்கும், சித்ரவதைக்கும் ஆளாகின்றாள். உச்சகட்டமாக பணத்திற்கு ஆசைப் பட்டு ஒரு மகா முரடனுக்கு அவளை விலை பேசுகிறாள் பெரியம்மா. இந்த நிலவு பெண்ணுக்கு விடிவுகாலம் பிறந்ததா? என்பதை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

சூரியகாந்தி பூக்கள் நாவலை மிக அழகான முறையில் வடிவமைத்து, அச்சிட்டு வெளியிட்ட வானதி பதிப்பகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

அன்புடன்

**லட்சுமி பிரபா M.A., B.Ed.,**

## இந்நூலில் இடம் பெற்றுள்ள நாவல்கள்


★ "சூரியகாந்தி பூக்கள்" .................... 1

★ "கண்ணுக்குள் ஒரு கவிதாஞ்சலி...!" 75

★ "பவுர்ணமி நிலவு" .................... 153

# சூரியகாந்தி பூக்கள்



## 1

விடிந்து வெகு நேர மாகியும், படுக்கையை விட்டு எழ மனமில்லாமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண் டிருந்தாள் வீணா.

இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. ஏதோ வொரு இன்ப உணர்வு மனதை முழுவதுமாய் ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. மனதில் உள்ளதை யாரிடமாவது சொல்லி மகிழ வேண்டும் போலிருந் தது.

ஆனால், இதை வெளிப்படையாக யாரிடமும் சொல்ல முடியாதே?

பெற்றவர்களுக்கு வீணா ஒரே மகள்.

அக்கா தங்கை என்று இருந்தாலாவது... மனதில் உள்ளதை அவர்களிடம் பகிர்ந்துகொள்ளலாம். ஆலோசனை கேட்கலாம்.

எதற்கும் வழி இல்லையே?

அப்பா சுந்தரம் ஒரு பிசினஸ்மேன். அம்மா சாந்தா தனியார் நிறுவனத்தில் அதிகாரி. - கை நிறைய சம்பாதிப்பவள்.

ஆபீசுக்கு தினமும், தானே காரை ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டு... இரவு ஏழு மணிக்கு மேல்தான் வீடு திரும்புவாள்.

அலுத்துக் களைத்து வந்ததும்... ஒரு குளியல் போட்டுவிட்டு போனில் தனது நெருங்கிய சிநேகிதிகளோடு மணிக்கணக்காக அரட்டை அடிக்கத் தொடங்கிவிடுவாள்.

தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை... கலகலவென்று சிரித்து அரட்டைக் கச்சேரியை முடித்துவிட்டு... சமையல்காரி சூடாய் கொண்டு வந்து வைக்கும் சப்பாத்தி, டால், குருமாவை ரசித்து சாப்பிட்டுவிட்டு... ஓய்ந்துபோய் உடனே படுக்கையில் சாய்ந்துவிடுவாள்.

சில நேரங்களில்... படுப்பதற்கு முன் டெலிவிஷன் செய்திகளில் மூழ்கிப் போவதும் உண்டு.

அந்த தருணத்தில்... மகள் வீணா அம்மாவின் அருகே சென்று, பாட சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் கேட்டாலோ அல்லது பள்ளியில் நடந்த முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வந்தாலோ... வள்ளென்று எரிந்து விழுவாள்.



“ஏய் வீணா! உனக்கு அறிவு வேணாம்? அம்மா ஒரு பெரிய ஆபீசுக்கு மேலதிகாரி தெரியு மில்ல...? காலையில இருந்து அடுக்கடுக்கா வேலைகள்... எல்லாத்தையும் இழுத்துப்போட்டு கட்டியழுதுட்டு டயர்டாகி... வீட்டுல வந்து இப்போ தான் அப்பாடான்னு உட்கார்ந்தேன் வந்துட்டியா? அம்மாவைப் பார்த்தா... உனக்குப் பாவமா இல்லையா? நீ ஒரு புத்திசாலிப் பொண்ணு... கிளாஸ்ல ஃபர்ஸ்ட் ரேங்க் எடுக்கிறவள்தானே? கொஞ்சம் அம்மாவைப் புரிஞ்சு நடந்துக்கோ... நீ இப்போ சின்னப் பொண்ணு இல்ல... எதுவா இருந்தாலும் நீயே மேனேஜ் பண்ணிக்கணும். அது தான் நல்லது. புரிஞ்சுதா? தொந்தரவு பண்ணாம போ... அந்த பக்கமா... ச்சே!” என்று பொரிந்து தள்ளிவிடுவாள் சாந்தா.

அப்பா சுந்தரத்தைப் பத்தியோ கேட்கவே வேண்டாம். அவர் வீடு திரும்புவதற்குள் வீணா தூங்கிப்போய்விடுவாள். பணத்தை எப்படியெல் லாம் பெருக்கலாம்? என்று சதா அப்பா சிந்தித்தாரே தவிர... மகளிடம் பாசத்தைக் காட்டுவதற்கு, பத்து நிமிடங்களாவது ஒதுக்கலாம் என்று அவருக்கு தோன்றாமல் போனது... வீணாவின் துரதிர்ஷ்டம் தான்!

இரவு பதினொரு மணிவாக்கில்... பார்ட்டி அல்லது மீட்டிங்கில் கலந்துகொண்டு நண்பர் களுடன் மது அருந்திவிட்டு களைத்துப்போய் வீட்டிற்கு வந்ததும் படுப்பவர்... மறுநாள் காலை பத்துமணி வாக்கில்தான் கண் விழித்தே பார்ப்பார்.

பாசத்திற்காக வீணா ஏங்கித் தவிப்பதை... கணவன், மனைவி இருவருமே புரிந்து கொள்ளவில்லை.

அவரவர் கோணத்தில் பார்த்தால்... அன்பு மகள் வீணாவுக்காகத்தானே ஓடி, ஓடி சம்பாதித்து சேர்த்து வைக்கிறோம். மகளின் எதிர்கால நல் வாழ்விற்காக மெழுகுவர்த்தியாக உருகிக் கொண் டிருக்கிறோம் என்று மனதளவில் இருவருமே நியாயம் கற்பித்துக் கொண்டிருந்தார்கள் என்பது தான் நிஜம்.

அம்மா சாந்தா என்றாவது தனக்காக ருசியாக தன் கைப்பட சமைத்துப் போடமாட்டாளா? ஆசையாய், பாசமாய் ஊட்டிவிட மாட்டாளா? தலை சீவிவிட்டு, பூச்சூடி விட்டு அழகு பார்க்கமாட்டாளா? குறைந்தபட்சம் தன் கையால் பரிமாற மாட்டாளா? என்று ஏங்கித் தவித்த வண்ணம் இருந்தாள் வீணா.

இத்தனை ஆசைகளும் பாட்டி பர்வதம் ஊரிலிருந்து வந்தால் பூர்த்தியாகும். அதுவும் தற்காலிகமாகத்தானே? குறைந்தபட்சம் இரண்டு மாதங்கள்தான் பாட்டி இங்கு தங்கியிருப்பாள்.

பாட்டி பர்வதம் ஊரிலிருந்து வந்து இறங்கி விட்டால் போதும்... வீணாவுக்கு குஷி பிய்த்துக் கொண்டு போய்விடும். அந்த இரு மாதங்களும் அவள் சொர்க்கத்தில்தான் இருப்பாள்.

பேத்திக்கு தன் கையால் ஊட்டிவிட்டு, சடை பின்னிவிட்டு, அவளுக்குப் பிடித்த உணவு வகைகளை பார்த்துப் பார்த்து சமைத்துப் போட்டு, மடியில் தலை சாயவைத்து தட்டிக் கொடுத்து... கிட்டத்தட்ட உள்ளங்கையிலே தாங்கிவிடுவாள் பர்வதம்.



பாட்டி தனது மகனின் வீட்டிற்குக் கிளம்பிப் போய்விட்டால்... வீணாவுக்கு உலகமே சூனிய மாகிவிட்டது போலிருக்கும். அழுகை அடைத்துக் கொண்டு வரும்.

இரவில், தனிமையில் தலையணை நனையும் வண்ணம் தேம்பித் தேம்பி அழுது களைத்துப்போய் கண் உறங்குவாள்.

மறுநாளிலிருந்து சமையல்காரம்மாளின் நளபாகம்தான். பாசம் கடுகளவும் இல்லாமல் கடமைக்காக அசட்டையாக அவள் பரிமாறிவிட்டுப் போகும் உணவை... ஒப்புக்கு கொறித்துவிட்டு... அவசரமாகப் பள்ளிக்கு கிளம்புவாள் வீணா.

பள்ளியில் சக மாணவிகள் உணவு இடை வேளையின்போது பெருமையாகப் பீற்றிக் கொள்ளும்போது... வீணாவுக்குள் ஏக்கமும், துக்கமும் தொண்டையை வந்து அடைக்கும்.

“இதோ... பார்த்தியா அபி? எங்கம்மா எனக்குப் பிடிச்ச உருண்டை வடைக் குழம்பும், தொட்டுக்க வாழைத் தண்டுக்கறியும் சமைச்சு இருக்காங்க... வாவ்! ரொம்ப ரொம்ப டேஸ்டா இருக்கும் என்பாள் ஒருத்தி.

“எங்கம்மாவும்தான்... எனக்கு பிடிக்குமே”ன்னு வெஜிடபிள் பிரியாணியை கமகமன்னு காரசாரமா சமைச்சிருக்காங்க... எனக்காக அம்மா சிரத்தை எடுத்து சமைச்சிருக்கிற பிரியாணி... அப்பப்பா! அம்மாவோட பாசமும் சேர்ந்திருக்கிறதால சுவை ரொம்ப அபாரம் தெரியுமா? இந்தா... சாப்பிட்டுப் பார்த்து நீயே சொல்லேன்...” என்பாள் இன் னொருத்தி.

அவர்களுக்குள் தத்தம் அம்மாக்களைப் பற்றி பலவும் பேசியபடி மகிழ்ச்சியுடன் உணவைப் பகிர்ந்து கொள்வார்கள்.

அவர்களது பேச்சைக் கேட்டாலே... வீணாவுக்கு மனம் கனத்துப் போய்விடும். அழுகை தொண்டையை அடைக்கும். உணவு இடைவேளைக்குப் பின்பு... இதே கவலையில், கவனம் பாடத்தில் பதிய மறுக்கும்.

எதற்கு வம்பு? எதற்கு வீண் மனச் சஞ்சலம்? என்ற நினைப்பில்... வீணா யாருடனும் சேர மாட்டாள்.

தனியாக அமர்ந்து ஒப்புக்கு நான்கைந்து வாய் அள்ளிப் போட்டுக்கொண்டு தண்ணீரை 'மடக்... மடக்' என்று பருகிவிட்டு எழுந்து சென்று... புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு நேரத்தை வீணாக்காமல் படிக்க ஆரம்பித்துவிடுவாள்.

"நல்லா படிக்கணும் வீணா! அப்பா, அம்மா சதா உன்னைப் பத்தி நெனக்கலையே? வேலை வேலைன்னு பறக்கிறாங்களே?ன்னு குறைப்பட்டுக் காதே... யாருக்காக இப்படி ஓடி ஓடி உழைக்கிறாங்க? எல்லாம் உனக்காகத்தானே? நீ புத்திசாலிப் பொண்ணு இல்லையா? இதையெல்லாம் புரிஞ்சுக் கிட்டு கவனத்தை சிதறவிடாம அக்கறையா படிக் கணும். எவ்ளோ வசதி இருந்தாலும் பொண்ணுங் களுக்கு படிப்புதான் பெரிய பலம்...

படிச்சு, நல்ல வேலையில் உட்கார்ந்து கை நிறைய சம்பாதிக்கணும். ஆம்பிளைகிட்ட கை நீட்டி நிக்கப்படாது. சொந்தக் கால்லே சுயமா நின்னு



சம்பாதிக்கணும். இந்தக் காலத்துல பொண்ணுங்க... தங்களோட உத்தியோகத்தைதான் ஊன்றுகோலா நினைக்கணும். அதுதான் அவங்களுக்கு பாதுகாப்பும் கூட. புரியுதா வீணா? மனசுல எதையும் வச்சுக்காதே!... இப்போ படிப்பைத் தவிர வேற எந்த சஞ்சலமும் உன் மனசுல இருக்கவே கூடாது. சரியா வீணா கண்ணு?" பாட்டி பல முறை வீணாவுக்கு புத்தி கூறி விட்டுத் தான் செல்வாள்.

போன் செய்தாலும் இதை வலியுறுத்தாமல் இருக்கவே மாட்டாள்.

கவலையும், ஏக்கமும் பாடாய்படுத்தினாலும்... அதை ஒதுக்கி வைத்துவீட்டு... வீணா சிரத்தையாய் தான் படித்து வந்தாள்.

பாட்டியைத் தவர.. அவள் வேறு யாரிடமும் மனம்விட்டுப் பேசியதில்லைதான்.

பக்கத்து வீட்டில் கமலி குடி வந்ததிலிருந்து... வீணாவுக்கு புது தெம்பு பிறந்து விட்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கமலி...! பெயருக்கேற்றபடி அழகான பெண். படித்தவள் சுறுசுறுப்பானவள்.

கணவன் கதிருடன் ஒன்றாக பைக்கில் அமர்ந்து வேலைக்குச் சென்று வருபவள்.

வீட்டின் முன் பக்கத்தில் அழகான தோட்டம் உண்டு.

நடுவிலுள்ள நடை பாதையில் முன்னும் பின்னுமாய் உலாவியபடி வீணா படித்துக்கொண்டிருப்பாள்.

பக்கத்து வீட்டிலிருந்த கமலி... காம்பவுண்ட் சுவரிலிருந்து எட்டிப் பார்த்து வலிய பேச்சுக் கொடுப்பாள்.

"படிக்கிறியாம்மா?"

"ஆமா... அக்கா!"

"நாங்க இந்த வீட்டை விலைக்கு வாங்கிட்டோம். என் பேர் கமலி. ஆபீஸ்லே வேலை பார்த்துட்டு இருக்கேன். உங்க தோட்டம் அழகா இருக்கு. அதே மாதிரி தோட்டம் அமைக்கனும்னு எனக்கு ஆசை... உங்கம்மாவுக்கு நல்ல ரசனைதான்! தோட்டம் கலை நயத்தோட பச்சைப் பசேல்னு கண்ணை ஈர்க்குது..."

"ஓ... அம்மாவுக்கு நல்ல ரசனைதான் ஒத்துக்கிடேறன். ஆனா தோட்டத்தைப் பராமரிக்கிறதுக்கு அம்மாவுக்கு நேரமில்ல... ஏன்னா அவங்க வேலைக்குப் போறாங்க. தோட்டக்காரரின் கை வண்ணத்துல பராமரிப்புலதான்... தோட்டம் பளிச்சுன்னு அழகா இருக்கு..." முறுவலித்தாள் வீணா.

"தன்னால முடியாட்டியும், சம்பளத்துக்கு ஆள் போட்டாவது" இப்படியொரு அழகான தோட்டத்தை உருவாக்கி அதை பராமரிச்சுட்டு வர்றாங்களே உங்கம்மா? அவங்களை நான் பாராட்டியே ஆகணும்.

வீணாவுக்கு, கமலியின் பேச்சு ரொம்பவே பிடித்துப் போனது. தினமும் மாலை நேரத்தில் அம்மா வருவதற்குள்... கமலி அக்காவுடன் மனம்



விட்டு சிரித்துப் பேசி அரட்டை அடித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

சமீபகாலமாக... அதுவும் கடந்த ஒரு மாத காலமாக அவள் மனதில் புதிதாக குடிபுகுந்து... அவளை வசிகரித்துக் கொண்டிருந்தான் அபிஷேக்.

கூடப் பிறந்த தமக்கையைப் போலவே... கமலியிடம் பாசமும், மரியாதையும் வைத்திருந்தாள் வீணா.

பாட்டியிடம் எப்படி வெளிப்படையாகப் பேசுவாளோ? அதே மாதிரிதான்... கமலி அக்காவிடமும் எதையும் மறைக்காமல் பேசுவாள் வீணா.

ஆனால்... இந்த அபிஷேக்கின் சமாச்சாரத்தை மட்டும் அவளால் வெளியில் சொல்ல முடியவில்லை.

சொல்லிவிட வேண்டும் என்று மனம் துடியாய் துடித்தது. அதைச் சொல்லாமல் மூடி மறைக்கும்படி... எதுவோ அவளைத் தடுத்தது. புரண்டு புரண்டு படுத்தாள்.

'இந்த உணர்வுக்கு என்ன பெயர்?

இதுதான் காதலா? எனக்கா? சேச்சே? அப்படியெல்லாம் இருக்காது. அப்படியென்றால் இது என்ன?

இந்த அவஸ்தைக்கு என்ன காரணம்? ஒரு கணம் கூட கண்ணிலிருந்து அபியின் முகம் விலக மறுக்கின்றதே?

சதா அபியின் ஞாபகம் உள்ளூர கனன்ற வண்ணம் இருக்கின்றது. இதற்குப் பெயர் வேற என்னவாம்?

இது நிச்சயமாய் காதல்தான்...!

நினைக்கும்போதே உள்ளூர மகிழ்ச்சி குமிழியிட்டது.

வீணாவின் வாழ்வை வீணடிக்க... தக்கத் தருணத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தது விதி!

## 2



**வ**ழக்கம் போல்... பள்ளியில் ஸ்பெஷல் கிளாஸை முடித்துவிட்டு தனது சைக்கிளில் ஏறி வந்துகொண்டிருந்தாள் வீணா.

பக்கத்துத் தெருவிலிருந்து அவளுடன் கூடவே வரும் மரியா... இன்று பள்ளிக்கு வரவில்லை.

மரியா படிப்பில் சுமார் ரகம்தான்... ஒப்புக்குத்தான் படித்தாளே தவிர... கிளாஸில் ஏதாவது டெஸ்ட் என்று அறிவிப்பு செய்துவிட்டால் போதும்... மரியா பள்ளிக்கு மட்டம் போட்டுவிடும் ரகம்!

இதே போல் சென்ற மாதமும் அவள் மட்டும் போட்டிருந்தாள். மாலை ஆறு மணி ஆகிவிட்டதால்... இருள் வேறு வேகமாய் கவியத் தொடங்கியிருந்த நேரம்...

பிரதான சாலை வழியாகத்தான் தினமும் பள்ளிக்கு வந்து போக வேண்டும் என்று அம்மா சாந்தா அவளுக்கு உத்தரவிட்டிருந்தாள்.



ஆனால் என்றாவது ஒரு நாள் மரியாவுடன் சேர்ந்து அவசரமாக ஒரு சந்தில் புகுந்து குறுக்கு வழியில் சைக்கிளை ஓட்டிக்கொண்டு வருவதுண்டு.

அன்றும் அப்படித்தான்!

இருள் கவிந்துகொண்டு வருவதையும் வானில் மேகங்கள் குமுறுவதையும் கண்ட வீணா... மழை பெய்ய ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது? என்ற பயத்தில் தன்னந்தனியாக அந்த சந்தில் சைக்கிளில் புகுந்துவிட்டாள்.

அது ஒரு குறுகலான நீண்ட சந்து! ஆளரவமற்ற சந்து அது!

அக்கம் பக்கத்தில் கூப்பிட்ட குரலுக்கு யாரும் வந்து உதவமாட்டார்கள்.

என்ன கெட்ட காலமோ? பாதி வழியில் சைக்கிள் பஞ்சராகிவிட்டது. சைக்கிளை விட்டு இறங்கி குனிந்து ஆராய்ந்து பார்த்து 'வீடு வரை சைக்கிளை உருட்டிக்கொண்டு செல்ல வேண்டியதுதான். மெயின் ரோட்டிலேயே சென்றிருக்கலாமோ? ஆளரவமற்ற சந்தில் தன்னந்தனியாக புகுந்து வந்தது தவறு! என்று நினைத்தாள்.

'காலம் கெட்டுக் கிடக்கிறது. பத்து நிமிஷம் தாமதமானாலும் பரவாயில்லை. மெயின் ரோட்டிலேதான் நீ வரணும். அவசரத்துக்கு சந்து பொந்துலே புகுந்துடாதே... நிதானமாவே வா... ஞாபகத்துல வச்சுக்கோ' என்று அம்மா ஆயிரம் தடவை சொல்லுவாளே". மரியா இன்று என்னுடன் வந்திருந்தால்... இந்தப் பதட்டமும் பயமும் வந்தே இருக்காதே? இலேசாக தூற ஆரம்பித்துவிட்டதே?...

பதட்டத்துடன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வேகமாய் நடந்தாள்.

கருமேகங்கள் சூழ்ந்திருந்ததால்... வழக்கத்திற்கு மாறாக வேக வேகமாய் இருள் கவிந்துகொண்டு வந்தது.

அரை இருளில் குண்டும் குழியுமான சந்தில் தடுமாறியபடி சைக்கிளையும் தள்ளிக்கொண்டே போனவள்... ஏதோ நடைச் சத்தம் கேட்டுச் தற்செயலாய் திரும்பிப் பார்த்தாள்.

திக்கென்றிருந்தது.

யாரோ ஒருவன் அவசரமாய் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். இவள் திரும்பிப் பார்த்ததும்... இன்னும் கொஞ்சம் நடையை துரிதப் படுத்தினான்.

ஓங்கி உயரமாய் பார்ப்பதற்கு கரடுமுரடாய் முரடன் போலவே இருந்தான்.

பல்லிடுக்கில் புகையும் பீடி வேறு! அந்த இருளிலும் அதன் நெருப்புக் கங்கு பளிச்சென்று தெரிந்தது.

இவள் தனியாக சைக்கிளில் சந்தில் புகுந்ததைப் பார்த்துவிட்டுத்தான்... இவன் பின் தொடர்ந்திருக்கிறான் போலும்.

‘ஐயோ... கடவுளே! குறுக்கு வழியில் புகுந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?’

இங்கு தொண்டை கிழிய கத்திக் கூச்சல் போட்டாலும்... யாரும் வந்து எட்டிக்கூடப் பார்க்க மாட்டாங்களே?



நான் செய்த முட்டாள் காரியத்தினால்... இப்படி எசகுபிசகாக மாட்டிக் கொண்டேனே?

எப்படியாவது இந்த சந்தைக் கடந்துவிட்டாள் போதும். மெயின்ரோடு வந்துவிடும். பளிச்சென்று விளக்குகள்... கடைகள்... ரோட்டில் யாரும் உதவிக்கு வருவார்கள்.

முதலில் இந்த தடியன் என்னைத் துரத்துவதை விட்டு விட்டு, அப்படியே வந்த வழியே பதுங்கிச் சென்றுவிடுவான்.

கடவுளே!... ஊகூம்... இனிமேலும் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு சென்றால்... நான் இவனிடம் அகப்பட்டுவிடுவேன்.

சைக்கிளை போட்டுவிட்டு ஓட வேண்டியது தான்...

மனதில் மின்னல் மின்னியதைப் போல் யோசனை உதிக்க, சைக்கிளை ‘தொப்’பென்று போட்டு விட்டு ஓட ஆரம்பித்தாள்...

‘தப.. தப... தப...’ என்ற சப்தம்!

பின்னால் அந்த முரடனும் வேகமாய் அவளைத் துரத்தினான்.

‘இன்னும் இருபதடி தூரம்தான்... அதைக் கடந்துவிட்டால் பிரதான சாலை வந்துவிடும்.

கவலையில்லை. கத்திக் கூச்சலிட்டு யாரையாவது உதவிக்கு அழைக்கலாம்... அதுவரை இவனிடம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க வேண்டுமே... கடவுளே! என்னைக் காப்பாற்று...!”

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு... ஒரு புள்ளிமானின் வேகத்தில் ஓடத்தான் செய்தாள்.

இரையைக் கண்ட புலி போல் வெறித்தனத்துடன் பாய்ந்தோடி வந்தவன்... சட்டென்று அவளை நெருங்கி அவளது துப்பட்டாவைப் பற்றி இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில்,

தோள் பட்டையின் ஓரத்தில் துப்பட்டாவைச் சேர்த்து குத்தியிருந்த ஊக்கு கழன்று நறுக்கென்று அவளது தோளில் குத்திப் பதம் பார்த்தது.

வீலென்று அலறியபடியே பயத்துடன் அவனை ஏறிட்டாள். அவளது வழியை மறித்தாற் போல் எதிரில் கோணலாய் சிரித்தபடியே வந்து நின்றான். குப்பென்ற சாராய நாற்றம்!

“யா...” யாராச்சம் என்னைக் காப்பாத்துங்க ப்ளீஸ் ஐயோ..! எனக்கு ஆபத்து... யாராவது வாங்களேன்... ஹெல்ப்! ஹெல்ப்...!”

வயிற்றை எக்கி... பெருங்குரலில் அலறினாள் வீணா...

சாலையில் ‘சர்... சர்’ என்று வாகனங்கள் விரைந்து கொண்டிருந்ததாலும்... வித விதமான ‘ஹாரன்’ சப்தங்கள் ஒலித்துக் கொண்டிருந்ததாலும்... வீணாவின் அபயக்குரல் யார் காதிலும் எட்டவில்லை.

கூச்சல் போடறியா? போடு... நல்லா கத்தும்மா கண்ணு! யாரும் உன்னைக் காப்பாத்த வரவே மாட்டாங்க... அவங்களுக்கு அவங்க சோலிதான் முக்கியம்... அடுத்தவங்களைப் பத்தி யாரும் கவலைப்பட மாட்டாங்க கண்ணு!”



கோணலாய் சிரித்தபடி இன்னும் அருகில் நெருங்கினான். திகிலும் பயத்திலும் வீணாவுக்கு நாடி நரம்புகள் எல்லாம் வெடவெடத்தன.

கிடு கிடுவென்று அவளது மலர் மேனி நடுங்கியது.

இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

அவனுக்கோ கோபம் மூண்டது. சட்டென்று அவளது வலது தோளில் அழுத்தமாய் கையை வைத்தான்.

அவ்வளவுதான்...! எங்கிருந்துதான் அவளுக்கு இவ்வளவு பலம் வந்ததோ... தெரியவில்லை.

பலங்கொண்டமட்டும் கையை இழுத்து... அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

எதிர்பாராத தாக்குதலில் திகைத்து... பின்பு அவன் சுதாரிப்பதற்குள்... கை விரல்களை மடக்கி முட்டியால் அவனது மூக்கில் குத்தினாள்.

“ஆ... ஆ...” அலறினான் அந்த முரடன்.

சில்லு மூக்கு உடைந்து ‘குபுக்’ என்று மூக்கிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியது. அவனது கவனத்தை சிதறடித்துவிட்டு... சமயோசிதமாய் வந்த வழியே திரும்பி ஓடினாள்.

“ஏய்... ஏய்... ஏய்...” கத்தியபடி அவனும் விரட்டினான். பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு தலைதெறிக்க ஓடியவள் யார் மீதோ திடீரென்று மோதிவிட்டு... வீலென்று அலறினாள்.

# 3



வாட்ட சாட்டமாய் ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான். மோதின வேகத்திலோ, பயத்திலோ அலறிவிட்டு நிலை தடுமாறி சரிந்து விழப் பார்த்தவளை... சட்டென்று இரு கரங்களாலும் தாங்கிக் கொண்டவன்... "பார்த்து... ஜாக்கிரதை" என்று மெல்லிய குரலில் கூறிவிட்டு அவளையும்... அவளைத் துரத்திக்கொண்டு வந்த முரடனையும் பார்த்துவிட்டு... அவளது இக்கட்டான சூழ்நிலையைப் புரிந்துகொண்டான்.

புறாக் குஞ்சாய் நடுநடுங்கியபடி... "எ... என்னைக் காப்பாத்துங்க ப்ளீஸ்..." என்று முணுமுணுத்தாள்.

மறுகணமே சட்டென்று அவனது முதுகின் பின்னாள் ஒண்டினாள் வீணா.

இவனை சட்டை செய்யாமல்... வீணாவின் கையைப் பற்றி இழுக்க அந்த முரடன் முனைந்த போது... அவனது அடி வயிற்றில் ஓங்கி ஒரு மிதி மிதித்தான் அந்த இளைஞன்.

"அம்ம்ம்மா..." வலியில் அலறித் துடித்தபடி அடி வயிற்றை இரு கைகளாலும் அழுத்திய முரடன் மிரண்டு போனான்.

ஒரே ஒரு உதைதான். அதற்கு மேல் இளைஞனை எதிர்க்கத் துணிவின்றி... தப தபவென்று பக்கத்து



சந்தில் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஓடி இருளில் மறைந்தான்.

"ரொ... ரொம்ப தேங்க்ஸ் சார்!" கரங்களைக் கூப்பினாள் புயலில் சிக்கிய பூவிதழ்களாய் அவளது கரங்கள் இன்னமும் நடுங்கிக் கொண்டிருப்பதை அந்த இளைஞன் கவனிக்கத் தவறவில்லை.

"படிச்சிட்டிருக்கிற பொண்ணு நீங்க... இருட்டுற நேரத்துல தனியா இந்த சந்து வழியா வர்றது தப்புன்னு உங்களுக்குப் படலையா?"

"சாரி சார்! அம்மா மெயின் ரோட்டுலேதான் வரணும்னு கண்டிப்பா சொல்லியிருக்காங்கதான்... மழை வேற வர்ற மாதிரி இருந்துச்சு. இருட்டவும் தொடங்கிட்டதால குறுக்கு வழியில் சீக்கிரமா வீடு போய் சேர்ந்துடலாம்னு நெனச்சு இப்படி வந்துட்டேன். நான் பெரிய முட்டாள்தனம் பண்ணிட்டேன்னு... இப்போ நல்லா உணர்ந்துட்டேன்..."

"ஓ... உணர்ந்துட்டீங்கல்ல? அது போதும்... ஆமா உங்க லாஜிக் எனக்கு புரியவே இல்லையே?" அவனது குரலில் குறும்பு வழிந்தது.

"எ... எது புரியலை?" விழிகளை அகல விரித்துப் பார்க்கையில் ஒரு குழந்தை போலவே இருந்தாள்.

"மழைக்காலத்துல சீக்கிரமா இருட்டிடும். அந்த மாதிரி சமயத்துலதான் யாரும் ஜாக்கிரதையா இருப்பாங்க... நீங்க என்னடான்னா... இந்த மாதிரி சந்தர்ப்பத்துல இந்த சந்துக்குள்ள ஆபத்தைத் தேடிக்கிட்டு புகுந்து புறப்பட்டுட்டீங்களே? அதான் புரியலைன்னு சொன்னேன்...'

"அ... அது வந்து... சீக்கிரமா போய் சேர்ந்துட லாம்கிற நெனப்புல முட்டாள்தனம் பண்ணிட்டேன். நீங்க மட்டும் வரலைன்னா... என் கதி அவ்ளோதான்! சீக்கிரமா வீட்டுக்குப் போறதுக்குப் பதிலா... சீக்கிரமா மேலே போயிருப்பேன் கடவுள் மாதிரி வந்தீங்க. நன்றி சார்!" தழுதழுத்தாள்.

"இதுக்கெல்லாம் நன்றி எதுக்கு சொல் லிக்கிட்டிருக்கீங்க..? இது என் கடமையில்லையா? ஒரு பெண்ணோட மானத்தைக் காப்பாத்தறதுக்கு... எனக்கு நல்ல சந்தர்ப்பத்தை கடவுள் ஏற்படுத்தி கொடுத்துட்டாரு... நீங்க கும்பிட்ட கடவுள்தான் என்னை அனுப்பி வச்சிருப்பாருன்னு நெனச்சுக்க வேண்டியதுதான்... கடவுள் மாதிரி'ன்னு... பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. நான் சாதாரண மனுஷன் தான்...! ஆமா... அது உங்க சைக்கிளா?" தன் னடக்கமாக நிதானமாகப் பேசிய இளைஞனை பிரமிப்புடன் பார்த்தாள் வீணா.

"ஆமா சார்! சைக்கிள் திடீர்னு பஞ்சராகிப் போச்சு. கீழே இறங்கிப் பார்த்துட்டு தள்ளிட்டுப் போக ஆரம்பிச்சேன்... அந்த தடியன் ஃபாலோ பண்ணி..."

"ஓகே... நடந்து போனதையே பேச வேணாமே மிஸ்...?"

"அயாம் வீணா! ஸ்கூல்லே பிளஸ் டூ படிச்சுட் டிருக்கேன்..."

"வீணா... நல்ல பேருதான். நமக்குள்ளே என்ன ஒற்றுமை பாருங்களேன். என்னோட பைக்கும் மக்கர் பண்ணிடுச்சு. அதை மெக்கானிக் ஷெட்டுலே



விட்டுட்டு வரும்போது தூறல்... இந்த சந்து வழியா சீக்கிரமா மெயின் ரோட்டுக்குப் போயிடலாம்னு தற்செயலா இப்படி வந்தேன். உங்களை சந்திச்சேன். அயாம் அபிஷேக்! பக்கத்துலதான்... பெரிய நிறு வனத்துல 'சிஸ்டம் அனாலிஸ்டா' ஒர்க் பண்ணிட் டிருக்கேன். வேலைக்குச் சேர்ந்து ரெண்டு வருஷமாச்சு... வீட்டுக்கு நான் மூத்தவன். போன வருஷம் என்னோட தங்கைக்கு கல்யாணம் பண்ணி வச்சோம். அவளுக்கு படிப்பு வரலை. 'டென்த்'துல ஃபெயிலாயிட்டா... ஸ்கூல்லே அவ படிச்சுட்டிருந்த வரைக்கும் காலையில நான்தான் ட்ராப் பண்ணு வேன். ஈவ்னிங் அப்பாவோ, அம்மாவோ வந்து அழைச்சுட்டுப் போயிடுவாங்க... வயசுப் பொண்ணை தனியா அனுப்பறதுக்கு அவ்ளோ பயம்...! நீங்க கூட இனிமே ஒரு துணையோட வந்து போறதுதான் நல்லது. காலம் ரொம்பவே கெட்டுக்கிடக்கு பாருங்க... அதுக்குதான் சொல்றேன்..." பேசியபடியே நடந்து சென்று கீழே விழுந்து கிடந்த சைக்கிளை எடுத்து தள்ளியபடியே வந்தான்.

"ஓகே சார்! தேங்க்யூ..." என்றவளுககு மனம் பாறாங்கல்லாய் கனத்துப் போனது.

"அபிஷேக்கின் தங்கை கொடுத்து வைத்தவள். அன்பான அண்ணன், பாசமுள்ள பெற்றோர்கள். 'அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கியிருக்கி றார்கள். பாதுகாப்பாய் பொத்தி பொத்தி பத்திரமாய் பார்த்திருக்கிறார்கள். போட்டி போட்டுக் கொண்டு பாசத்தைப் பொழிந்திருக்கிறார்கள். ஹூம்...! அந்தப் பெண் மிகவும் கொடுத்து வைத்தவள்தான்...

ஆனால்... நான்...? என்னிடம் பாசம் காட்டுவதற்கு அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நேரமே கிடைக்கவில்லையே?

கேட்டால்... 'எல்லாம் உனக்காகத்தானே?' என்று கூறி என் வாயை அடைத்துவிடுகிறார்களே?

பெற்றவர்கள் இருந்தும் ஒரு அனாதையைப் போல் அல்லவா தனிமையில் கிடந்து தவிக்கிறேன்...?

பல காலமாக நெருங்கிப் பழகியவர் போன்று... அபிஷேக் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் வெளிப்படையாக என்னிடம் பேசுகிறாரே?

அவரது பேச்சும், பார்வையும் கண்ணியமாய் இருப்பதால் மனதில் அவரைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் வந்துவிட்டதே...!

இன்னும் சொல்லப்போனால்... வீணாவுக்கு அந்த முதல் சந்திப்பிலேயே அபிஷேக்கை மிகவும் பிடித்துப் போனது.

அன்று அவளது வீட்டு வாசல் வரை கூடவே வந்து விட்டுவிட்டுத்தான் போனான்.

அம்மா சாந்தா, இன்னமும் ஆபீஸை விட்டு வீட்டிற்கு வந்து சேரவில்லை.

சமையல்காரம்மா தந்த காபியைப் பருகிவிட்டு... தனது அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள் வீணா.

முன் பக்கத் தோட்டத்திற்குச் சென்று கமலி அக்காவிடம் அளவளாவ வேண்டும் என்ற எண்ணம் கூட வரவில்லை.



குறுக்கு வழியில் புகுந்து வந்ததால் தனக்கு நேர இருந்த ஆபத்தைப் பற்றியும்... ஆபத்பாந்தவனாய் அபிஷேக் தக்க தருணத்தில் வந்து அவளது மானத்தைக் காத்ததையும் சைக்கிளைத் தள்ளியபடி சிநேக பாவத்துடன் பேசியபடி வீடு வரை வந்து சென்றதையும் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தபடி இருந்தாள்.

"வீணாம்மா... உங்களை அந்த கமலி கூப்பிடறாங்க நீங்க வருவீங்கன்னு ரொம்ப நேரமா காம்பவுண்ட் சுவரு பக்கமா நின்னு நம்ம தோட்டத்தையே பார்த்துட்டிருக்காங்க"

சமையல்காரம்மா வந்து கூப்பிட்டதும் மறுக்க முடியாமல் எழுந்து சென்றாள்.

கமலி வேலைக்குச் சென்று வருபவள்தான். இரண்டு தெரு தள்ளிதான் அவளது அலுவலகம் இருந்ததால்... ஐந்தரை மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்துவிடுவாள்.

வந்ததும் வீட்டைப் பெருக்கி, காபி போட்டு பருகிவிட்டு வீணாவின் வருகையை எதிர்பார்த்து முன் பக்கமாய் காத்துக்கொண்டிருப்பாள்.

கால் மணி நேரமாவது வீணாவிடம் பேசினால்தான்... கமலிக்கு நிம்மதியாய் இருக்கும்.

உடன் பிறந்த தங்கையைப் போன்று அவளிடம் ஒரு அலாதிப் பிரியமும் பாசமும் கொண்டிருந்தாள் கமலி.

"என்ன வீணா? தோட்டத்துப் பக்கம் நீ வருவேன்னு' ரொம்ப நேரமா காத்துகிட்டிருக்கேன். ஏன் வரலே? தூறல் கூட நின்னு போச்சே? அக்கா

காத்துகிட்டிருப்பேன்'னு உனக்கு தோணவே இல்லையா?"

"சாரி அக்கா! லேசா தலைவலி... அதான் அறையிலேயே உட்கார்ந்துட்டேன்..."

"மாத்திரை தரட்டுமா? உடனே தலைவலி விட்டுரும்..."

"இல்லக்கா வேணாம்.. காய்ச்சல், தலைவலி, உடம்புவலி இதுக்கெல்லாம் அம்மா நிறைய மாத்திரை கைவசம் வச்சிருக்காங்க.. அப்புறமா டிபன் சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுப்பேன்..."

"உன் முகமே சரியில்லையே வீணா? ஸ்கூல்லே ஏதாச்சும் பிரச்சினையா?"

"ஸ்கூல்லே ஒண்ணும் பிரச்சினை இல்லக்கா..." என்று கூறியவள்... பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

சமையல்காரம்மா தென்படுகிறாளா? என்று நோட்டம் விட்டாள்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் நடந்ததைக் கூறினாள்.

வீணா ஒரு இளைஞனுடன் வந்ததை.. தூரத்தில் தனது வீட்டு மொட்டை மாடியிலிருந்தே கவனித்து விட்டாள் கமலி.

மொட்டை மாடியில் காயப் போட்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டு திரும்பும்போது இவர்களைப் பார்த்துவிட்டிருந்தாள்.

வீணாவாக அதைப் பற்றி கூறட்டும் என்ற எண்ணத்தில் அவள் அதைப் பற்றி கேட்காமல் இருந்தாள்.



இப்போது வீணாவே சகலத்தையும் சொல்லி முடித்ததும்... ஸ்தம்பித்துப் போனாள்.

"நல்ல காலம் வீணா! அந்த முரடன்கிட்டே யிருந்து எப்படியோ தப்பிச்சுட்டே... இனிமே உன்னோட கிளாஸ்மேட் மரியா வந்தால் கூட... நீ அந்த சந்துப் பக்கமா போகாதே.. நின்னு நிதானமா.. மெயின் ரோட்டு வழியாகவே வா... சரியா?

அம்மா பல வாட்டி எச்சரிக்கை செய்திருந்தும்.. நீ இப்படி அவங்க பேச்சை மீறலாமா? கடவுள்தான் உன்னைக் காப்பாத்தியிருக்காரு... நீ சொன்னதைக் கேட்டதும் எனக்கே இப்படி பதறுதே? அந்த நேரத்துல உனக்கு எப்படி இருந்திருக்கும்? சரி... நடந்ததை இத்தோட மறந்துட்டு சாமியைக் கும்பிட்டுட்டு வழக்கம் போல படிப்புல கவனத்தை செலுத்து! நடந்த விஷயத்தை என்கிட்டே சொன்னே யில்ல...? இப்போ உன் பாரம் இறங்கி இருக்குமே?

"ஆமா... கமலி அக்கா! உங்க கிட்டே சொன்னதும்... கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்குக்கா... அம்மாகிட்டே இந்த விஷயத்தைச் சொன்னா... பயங்கரமா கோபப்படுவாங்க.

நல்லா திட்டுதான் விழும்... அதை நெனச்சா தான் இன்னமும் டென்ஷனா இருக்குக்கா..."

"வேணாம்... இதை நீ சொல்ல வேணாம் வீணா! அம்மாவோட வார்த்தையை மீறினது தப்புன்னு... நீ உணர்ந்துட்டே இல்ல? அதுவே போதும்... இன்னொரு வாட்டி இந்தத் தப்பு நடக்காம பார்த்துக்கோ...! நீ இதைச் சொன்னா வீண் பிரச்சினைதான் வரும்... பாவம் உங்கம்மா!

வேலைக்குப் போறவங்க... இதைக் கேள்விப்பட்டா ஆபீசுல நிம்மதியா வேலை பார்க்க முடியாது. பெத்த மனம் பதறிப் போகும் இல்லையா? இது தேவையா? அக்காகிட்டே சொல்லிட்டே இல்ல...? போய் முகத்தைக் கழுவிட்டு... உன்னோட ரொட்டீன் வொர்க்கை பண்ண ஆரம்பி...! ராத்திரி பாட்டி போன் பண்ணினா கூட... நீ இதைச் சொல்லக் கூடாது. பாவம்... வயசானவங்க... அலறி பதறி வேகமா கிராமத்துலேர்ந்து புறப்பட்டு வந்துடப் போறாங்க அதனாலதான் சொல்றேன்..."

"சரிங்கக்கா! என்னால யாரும் கலவரப்பட வேணாம். நான் தப்பை உணர்ந்துட்டேன். இனிமே ஜாக்கிரதையா நடந்துக்கிறேன்..."

"குட்! அம்மா வர்ற நேரமாச்சுல்ல? நீ உள்ளே போம்மா... சகஜமா இரு. சரியா?"

"தேங்க்ஸ் அக்கா! நீங்க சொல்றபடியே நான் நடந்துக்கிறேன்." தலையாட்டிவிட்டு, வீட்டிற்குள் புகுந்தாள் வீணா.

ஒளிவு மறைவு இன்றி சகலத்தையும் கமலியிடம் கொட்டித் தீர்ப்பவள்தான்... தன் மனதில் ஏற்பட்ட மாற்றத்தை அவளிடம் கூறாமல் மறைத்து விட்டிருந்தாள்.

"அபிஷேக்கை எனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சு கமலி அக்கா!" தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கி வைத்தாள் வீணா.

அவனைப் பிடித்தது மட்டுமா? இன்னும் சொல்லப்போனால் அவளது மனம்... அவனை விரும்பவே ஆரம்பித்துவிட்டதே?



ஒரே நாளிலேயே... அவளது மனதில் புகுந்த காதல்... ஓசையின்றி புல்லாங்குழல் வாசிக்கத் தொடங்கியிருந்தது!

இனிய புல்லாங்குழலோசையில் மனம் மயங்கிக் கிடந்தாள் வீணா... விதி, விரைவில் அவளைப் புதை மணலில் தள்ளிவிட தருணம் பார்ப்பதை... அவள் எவ்விதம் அறிவாள்?

## 4



வீணா அடக்கமானவள். பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் போற்றி நடக்க வேண்டும். கண்ணியம் மீறாமல் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கண்ணும் கருத்துமாய் இருப்பவள் தான்!

அன்பிற்கும், பாசத்திற்கும் ஏங்கித் தவிப்பவள். காற்றில் அலைபாயும் மெல்லிய பூங்கொடி சிறு கொழு கொம்பு கிடைத்தால் சட்டென்று பற்றி பின்னிப் படர்ந்துவிடுமே...? அது போலத்தான் வீணாவின் நிலைமையும் இருந்தது.

அந்த முதல் சந்திப்பு நடந்த மறுநாள்... அவளால் எழுந்துகொள்ளவே முடியவில்லை.

கண்கள் ஜிவுஜிவென்று சிவந்து அனலாய் காய்ச்சல் அடித்ததால்... தொடர்ந்து அவள் மூன்று நாட்களாய் பள்ளிக்குச் செல்லவில்லை.

நான்காம் நாள் பள்ளிக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் அதாவது அவளது தெருவுக்கு முன்னால் இருந்த தெருவில் அந்த வளைவில் அபிஷேக் அவளுக்காக காத்துக்கொண்டிருந்தான்.

"ஹாய்... மிஸ் வீணா!"

"ஹலோ... சார்! நல்லாயிருக்கீங்களா?" சைக்கிளை நிறுத்திவிட்டு மரியாதை நிமித்தம் இறங்கி நின்று பேசினாள்.

"இதை நான் கேட்கணும். நீங்க நல்லாயிருக்கீங்களா? ரொம்ப டல்லா இருக்கீங்களே? ரெண்டு மூணு நாளா உங்களைப் பார்க்கணும்னு ட்ரை பண்ணிட்டிருந்தேன். எனக்கு மனசே சரியில்ல... நானே பேசிட்டிருக்கேனே.

சொல்லுங்க வீணா? ஆளே அடிச்சுப் போட்டாப்பல ஆயிட்டீங்களே? என்னாச்சு?"

அபிஷேக்கின் குரலில் கரிசனமும், பதற்றமும் போட்டி போட்டுக்கொண்டு தொனிப்பதை... உள்ளூர வெகுவாய் ரசித்தபடி கவனித்தாள் வீணா.

முகம் குங்குமப் பூவாய் சிவக்க... இதயம் படபடவென்று துடிக்க... இன்பப் பரவசத்தில் அப்படியே அந்தரத்தில் பறப்பதைப் போல உணர்ந்தாள்.

'என்னை... என் நலனில் அக்கறை காட்ட... ஒரு ஜீவன் இருக்கிறதே? நான் உடல் நலமில்லாமல் மூன்று நாட்களாய் வீட்டில் படுத்திருக்கும்போது... அபிஷேக் என்னை நினைத்து பரிதவித்துப்போய் இருக்கிறாரே? பதறிப்போய் விசாரிக்கின்றாரே?



இவருக்கு என் மீதுதான் எவ்வளவு அன்பு? நேசம்? பரிவு? இரக்கம்? பாசம்? கருணை? அக்கறை? கரிசனம்? இதற்கெல்லாம் என்ன காரணம்? மூன்று நாட்களாய் காய்ச்சலால் நான் அவதிப்பட்டேனே...? அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்னை கவனிக்க நேரமில்லையே...?

அப்பா பெங்களூரில் நடக்கும் கான்பரன்ஸில் கலந்துகொள்ள சென்றுவிட்டார். அம்மாவோ 'ஆபீஸில் ஆடிட்டிங் நடக்கிறது. நான் கட்டாயம் இருந்தாக வேண்டும் வீணா! என் நிலைமையைப் புரிந்துகொள். வெறும் காய்ச்சல்தானே? மருந்து மாத்திரைகளை நேரம் தவறாமல் எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும். சமையல்காரம்மா உனக்கு கஞ்சி வைத்துக் கொடுப்பாள்' என்று கூறிவிட்டு வழக்கம்போல் அலுவலகத்திற்கு பறந்து விட்டாள்.

மகளுக்காக... லீவு போட வேண்டும், கிட்டத்தில் இருந்து அனுசரணையாய் தைலம் தடவிவிட்டுக் கைகால்களைப் பிடித்துவிட்டு போர்வையைப் போர்த்தி அரவணைத்து அருகில் படுக்க வேண்டும் என்ற அக்கறை.. அம்மாவுக்குத் துளி கூட இல்லையே? என்று அழுதழுது கண்ணீர் வற்றிப் போனேனே?

சமையல்காரம்மா ஒப்புக்கு கஞ்சியைக் காய்ச்சி கொடுத்துவிட்டு அவசரமாய் சமையல் வேலையை முடித்துவிட்டுப் போவதிலேயே குறியாய் இருந் தாளே?

கமலி அக்காவோ சாயந்தரம் தவறாமல் தினமும் வந்து பார்த்துச் சென்றார். இரண்டு நாட்கள்

கஷாயம் காய்ச்சிக் கொண்டு வந்து குடிக்க வைத்தார். பாவம்.. கமலி அக்காவால் அதற்கு மேல் என்ன செய்ய முடியும்?

எனக்காக கவலைப்படவும் அக்கறை காட்டவும் ஒரு புது ஜீவன் இருக்கிறது என்று எண்ணும்போது உள்ளூர மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிப் பிரவாகமெடுக்கின்றதே?

"என்ன வீணா? பதிலையே காணோம்?" அபிஷேக்கின் குரல் அவளைக் கலைத்தது.

"ஆ!... அன்னிக்கு நடந்த சம்பவத்தால... ரொம்ப அரண்டு போயிட்டேன். அந்த அதிர்ச்சியில காய்ச்சல் வந்துடுச்சு. மூணு நாளா ஸ்கூலுக்கே போக முடியலை..."

"நினைச்சேன். அம்மாகிட்டே கூட நான் இதைப் பத்திதான் பேசினேன். என்ன அப்படி பார்க்கிறீங்க? நாங்க எப்பவும் நைட்டுலே ஒண்ணா தான் சாப்பிடுவோம். அன்றாட நிகழ்வுகளை ஒரு வரி விடாம பேரண்ட்ஸ் கிட்டே சொல்லிடுவேன். அப்போதான் தூக்கமே வரும். அவங்களும் அப்படி தான். வெளிப்படையா மனம் விட்டு என்கிட்டே பேசுவாங்க... எங்கம்மா அந்த மேட்டரைப் பத்தி கேள்விப்பட்டதுமே சொன்னாங்க...

பாவம்... அந்தப் பொண்ணு! நாளைக்கு அவளைப் பார்த்து மறுபடியும் பேசுப்பா... தைரியமா இருக்கச் சொல்லு. மெயின் ரோட்டுலேயே எப்பவும் வந்து போகச் சொல்லு'ன்னு என்கிட்ட சொன்னாங்க வீணா! ரெண்டு நாளா நா இதே ரூட்டுலே வெயிட் பண்ணிப் பார்த்தேன். நீங்க வரவேயில்ல.



வீட்டுக்கு வந்தா... பிரச்சினை வந்துடுமோ?ன்னு சங்கடமா இருந்துச்சு... என்னவோ? ஏதோன்னு உள்ளூர ஒரே பதட்டம்தான்... நான் நெனச்சாப்பல உங்களுக்கு காய்ச்சல் வந்துடுச்சு பார்த்தீங்களா? உங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... கரெக்டா எனக்கு தெரிஞ்சு போகுதே? ஆச்சரியமா இருக்கு... உங்க மேல எனக்கு இனம் புரியாத அன்பும், அக்கறையும் நேசமும் ஏற்பட்டுப் போச்சு. உங்களுக்கு ஒண்ணுன்னா... நான் அப்படியே துடிச்சு துவண்டு போயிடறேன்... இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?னு எனக்கு நானே கேட்டுப் பார்த்தா.. அதுக்கு பதில் ஒரு வார்த்தை கிடைக்குது. அது என்ன வார்த்தைன்னு கேளுங்களேன் வீணா?"

"எ... என்ன வார்த்தை?" தயங்கியபடி மெல்ல அவனை ஏறிட்டாள்.

"காதல்..."

"ஐயோ... எ... என்ன இப்படி சொல்றீங்க?"

"அப்புறம்... இதுக்கு வேற என்ன அர்த்தம் இருக்க முடியும்? மனசைத் தொட்டுப் பார்த்தா... இது காதல்தான்'னு அடிச்சு சொல்லலாம். உன் மனசுக்குள்ளேயும் இதே மாதிரி உணர்வு வந்திருக்கும்'னு நா நம்பறேன். இல்லேன்னா... இவ்ளோ நேரமா நின்னு என்கிட்டே பேசுவியா? நீயே சொல்லு நிதானமா யோசிச்சு உண்மையை சொல்லணும். அதுக்கு முன்னாடி நான் 'சாரி' கேட்டுக்கிறேன்..."

"சாரி கேட்கிறீங்களா? எதுக்கு சாரி கேட்கணும்?" திருதிருவென்று விழித்தாள்.

"நீ என் மனசுல குடியிருக்கே... உன்னை வேத்து மனுஷியா என்னால நெனக்க முடியலை... என்னைப் பொறுத்தவரை நீ வேற நான் வேற இல்ல... அந்த உரிமையில நான் நீ வா போன்னு உரிமையா பேசிட்டேன். அதுக்குதான் சாரி கேட்டேன்..."

"இல்ல... நீங்க இந்த மாதிரி உரிமையா பேசறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு... 'நீங்க... வாங்கன்'னு மரியாதையா பேசி... என்னை வேத்து மனுஷியாக்க வேணாம்..."

"அப்படின்னா... இதுக்கு என்ன அர்த்தம் வீணா? 'காதல்' அப்படிங்கிற வார்த்தையைக் கேட்டதுமே... ஏதோ கெட்ட வார்த்தையைக் கேட்டுட்ட மாதிரி பதறிப் போனே? இப்போ இப்படிப் பேசறே? எனக்கு ஒண்ணும் புரியலையே?"

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. சதா உங்க ஞாபகமாகவே இருக்கு. தூங்கினாலும் முழிச்சிருந்தாலும் உங்க உருவம்தான் மனக்கண்ணுலே வந்து நிக்குது... என் மனசு பூராவும் நீங்கதான் விஸ்வரூபம் எடுத்திருக்கீங்க.. என் காதுலே கூட எப்பவும் உங்க மென்மையான குரல்தான் எதிரொலிச்சுட்டு இருக்கு... இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?'னு எனக்கு நானே மூணு நாளா கேட்டுட்டிருக்கேன்.

உங்க மனசுலேயும் இதே கேள்விகள்தான் குடைஞ்சுட்டு இருந்திருக்குன்னு சொல்றீங்க... அதுக்கு அர்த்தம் காதல்னு நீங்க சொல்லிட்டீங்க... நீங்க சொன்னா அது சரியாத்தான் இருக்கும்'னு நா நெனக்கிறேன்..."



வெட்கத்துடன் கிசுகிசுப்பாய் பேசியபடியே சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள் வீணா.

அது ஒரு மேல் தட்டு வர்க்கத்தினர் குடியிருக்கும் பகுதி. ஆதலால்... வம்பு தும்புக்கு அலைபவர்கள் யாரும் அங்கு இல்லை. எந்த ஜன்னலிலும் தலைகள் முளைக்கவில்லை. எவரும் ஆர்வத்தோடு வாசலில் வந்து இவர்களை எட்டிப் பார்க்கவில்லை.

"ஊகூம்... இன்னும் சுத்தி வளைச்சுப் பேசினா எப்படி? ஓபனா...வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பளிச்சுன்னு சொல்லணும். நான் சொல்லட்டுமா? ஐ லவ் யூ ஸோ மச் வீணா! உன்னைப் பார்க்காம என்னால இருக்கவே முடியாது. நீ இல்லாத வாழ்க்கையை என்னால நெனச்சுக்கூட பார்க்க முடியலை. அந்தளவுக்கு உன்னை நேசிக்கிறேன். என்னோட பேரண்ட்ஸ் என் ஆசைக்கு முட்டுக்கட்டை போடவே மாட்டாங்க. நம்ம காதலுக்கு கிரீன் சிக்னல் காமிச்சுடுவாங்க. நான் இப்போ உன்னை எங்க வீட்டுகவு கூட்டிட்டுப் போனாக்கூட ஆரத்தியெடுத்து உன்னை வரவேற்பாங்க. என்னோட பேரண்ட்ஸ் எனக்கு ஃப்ரண்ட்ஸ் மாதிரி... ரொம்ப ரொம்ப அன்பானவங்க.. பாசமானவங்க... என் உணர்வுகளுக்கு மதிப்பு குடுக்கிறவங்க... அவங்க கிடைக்கிறதுக்கு நான் ரொம்ப குடுத்து வச்சிருக்கணும் தெரியுமா?

அவன் பேசப் பேச... வீணாவுக்குள் மீண்டும் ஏக்கம் ஜனித்தது. இனம் புரியாத சந்தோஷத்தில் கண்களில் கண்ணீர் ஜனித்தது.

"நீ ... இன்னமும் நான் எதிர்பார்க்கிறதை சொல்லவே இல்லையே? கடந்த ரெண்டு மூணு

நாளா நான் சரியா சாப்பிடலை தூங்கவும் இல்லை தெரியுமா? ஐ லவ் யூடா..! ரொம்பவும் டென்ஷன் பண்றியே? சீக்கிரமா சொல்லேன் வீணா!"

"ஐ-- ஐ-- டூ லவ் யு"

"இந்த உலகத்துலேயே நான்தான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன் வீணா"

அதன் பின்பு.. அவர்களது சந்திப்பு தினமும் தொடர்ந்தது.

பெற்றவர்கள் தங்களது பெண்ணின் மீது சதா ஒரு கண்ணை வைத்திருக்க வேண்டும். அன்பையும், பாசத்தையும் பொழிந்து சிநேகித பாவனையில் பழகி தங்களின் அன்புப் பிடிக்குள் சிறைப்படுத்திவிட வேண்டும்.

இல்லையெனில் விளக்கைத் தேடிச் செல்லும் விட்டில் பூச்சிகளாய்... தங்களையும் தங்களது எதிர் காலத்தையும் அழித்துக்கொள்ளும் அவல நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

வீணாவின் நிலைமையும் அப்படித்தான் இருந்தது.



# 5



வீணா காதல் வயப்பட்டதிலிருந்து அவளது போக்கே மாறிவிட்டிருந்தது.

பள்ளியை விட்டு வந்ததும் கமலியிடம் அரை மணி நேரமாவது அளவளாவி விட்டுத்தான்.. படிக்கச் செல்லுவாள் வீணா.

ஆனால் இப்போதோ அபிஷேக்கிடம் பேசுவதற்கே நேரம் சரியாய் இருந்தது.

அந்தக் குறிப்பிட்ட தெருமுனையின் வளைவில் அவன் பைக்கில் வந்து அவளது வருகைக்காக காத்திருக்க... இவளும் சைக்கிளில் அதே இடத்துக்கு வந்து நின்று... உலகையே மறந்து பேசிவிட்டு... அம்மா சாந்தா ஆபீஸை விட்டு வரும் நேரத்திற்கு முன்பாக.. 'டாண்' என்று வீட்டிற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

கமலிக்கு ஏமாற்றமாக இருந்தது.

"ஏன் வீணா? ரொம்பவும் லேட்டா வர்றியே? உன்கிட்டே பேசவே முடியலையே?" என்று அவள் கேட்கத்தான் செய்தாள்.

"ஸ்பெஷல் கிளாஸ். நேரத்தைக் கூட்டிட்டாங்க அக்கா! கிளாஸ் எடுத்து முடிச்சுட்டு அப்படியே குரூப் குரூப்பா உட்கார்த்தி வச்சு... கம்பைன் ஸ்டடி பண்ண வைக்கிறாங்க அக்கா! என்ன செய்யறது அக்கா?"

கமலியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி.. தலை குனிந்தபடியே பேசினாள் வீணா.

பொய்யே பேசாதவள்தான். காதல் மனதில் புகுந்ததுமே பொய்யும் விடுகின்றதே? ஏமாற்றவும் பொய் பேசவும் சரளமாய் வந்துவிடுகிறதே? சதா புத்தகமும் கையுமாய் இருந்தவளுக்கு... இப்போது புத்தகத்தைப் புரட்டவே மனம் வரவில்லையே? பாட்டிக்கு கூட தினமும் போன் செய்ய வேண்டும் என்று தோன்றவில்லையே? பாட்டியாக போனில் பேசினால்.. மழுப்பலாய் ஏதாவது ஒரு பொய்யை அவிழ்த்துவிட வேண்டியதிருக்கிறதே? அம்மா, அப்பா, பாட்டி என்று மூவரையும் ஒரு சேர ஏமாற்றுவது சரிதானா?

வீணாவுக்கு உள்ளூர ஏதோவொரு மூலையில் மனசாட்சி ‘சுருக்... சுருக்’ என்று குத்தத்தான் செய்தது.

ஆனால் காதல் வயப்பட்ட மனமோ அத்தனையையும் ஒதுக்கித் தள்ளியது. சதா சர்வகாலமும் காதல் உலகிலேயே அவளை சஞ்சரிக்க வைத்தது.

நல்லது கெட்டதைப் பிரித்து யோசித்துப் பார்க்கும் திறனை... காதல் என்ற உணர்வு ஆக்கிரமித்து கொஞ்சம் கொஞ்சமாக மழுங்கடித்துக் கொண்டு வந்தது.

கமலிக்கு.... வீணா சொன்ன பதில் திருப்தியாய் படவில்லை.

‘இல்லை... வீணா பொய் சொல்கிறாள். என் முகத்தை, என் கண்களை ஏறிட்டுப் பார்க்க இவளுக்குத் தெம்பில்லை. மழுப்பலாய் ஏதேதோ கூறி சமாளிக்கிறாள்.



நன்றாக படிக்கும் பெண்ணாயிற்றே இவள்?

இவளுக்கு என்னவாயிற்று? அந்த சம்பவம் நடந்த அன்று என்னோடு மனம் விட்டுப் பேசியதோடு சரி... அதன் பின்பு காய்ச்சல் வந்து அவதிப்பட்டாள். உடல் நலம் சரியாகி மீண்டும் பள்ளிக்குச் சென்றதிலிருந்தே என்னுடன் சரிவரப் பேசவில்லை. நேரத்திற்கு வீட்டிற்கு வருவதும் இல்லை.

உடன்பிறந்த தங்கையைப் போல் இவளிடம் பாசம் வைத்துவிட்டேன். இவளது எதிர்காலம் பாதித்துவிடக்கூடாதே? என்று மனம் பரிதவிக்கிறதே?

இதைப் பற்றி வீணாவின் அம்மாவிடம் பேசிப் பார்த்தால் என்ன?

வீணாவின் அம்மா சாந்தா... ஏதாவது தவறாக நினைத்துக்கொண்டால் என்ன செய்வது?

சாந்தா ஒரு ரிசர்வ்ட் டைப்! தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவள்.

‘எனக்கு என் குழந்தை மீது இல்லாத அக்கறை- உனக்கு ஏன் வந்தது?’ என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது?

‘நீ வெறும் பக்கத்து வீட்டுக்காரிதானே? உனக்கும் எங்களுக்கும் ஒட்டா? உறவா? உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போய்விடு’ என்று முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டாலும்... அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லையே...?

என்ன செய்வது? வீணாவின் முகத்தில் முன்பு சரஸ்வதி கடாட்சம் தெரியுமே.. சதா படிப்பின் மீது உள்ள அக்கறை அகத்தில் புலப்படுமே..!

ஆனால் இப்போதோ... அவள் ஏதோ ஒரு கனவுலகில் சஞ்சரிப்பது போல் தெரிகின்றதே? இந்த வயதில் வேறு என்ன கனவு வந்துவிடப் போகிறது? கண்டிப்பாக அவள் காதல் வலையில் விழுந்து விட்டாள் என்று அப்பட்டமாகத் தெரிகின்றதே?

இதிலிருந்து வீணாவை நான் எப்படியாவது மீட்டாக வேண்டுமே?

'பாம்பின் கால் பாம்பறியும்' என்று சொல்வார்களே?

நானும் இதே ரெண்டும்கெட்டான் வயதில் காதலில் சிக்கினேனே?

அது எவ்வளவு பெரிய தவறு என்று இன்றளவும் கண்ணீர் விட்டு உள்ளூர கதறிக் கொண்டிருக்கிறேனே?

என் நிலைமை... வீணாவுக்கு வந்துவிடக் கூடாதே?

அவளது எதிர்காலம் இருண்டு போய்விடக் கூடாதே!...

நான் எப்படியாவது அவளைக் காப்பாற்றியாக வேண்டுமே?

காரியம் கை மீறிப் போவதற்குள்... அவளை எந்த சேதாரமும் இல்லாமல் காக்க வேண்டுமே!...

இது என் கடமை!



அவளுக்கும் எனக்கும் எந்தவித ரத்த பந்தமும் இல்லைதான்... ஆனால் மனத்தளவில் அவள் என் தங்கை.. அவளைக் காப்பது என் கடமை..! மூன்றாம் நபருக்குத் தெரியாமல் இதை நான் செய்தாக வேண்டும்.

கடவுள்தான் எனக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். நாளைக்கு மதியத்துக்கு மேல் ஆபீசுக்கு லீவு போட வேண்டியதுதான்.

உள்ளூர தீர்மானித்துக் கொண்டாள் கமலி.

“என்னம்மா? காம்பவுண்ட் சுவருக்குப் பக்கத்துலேயே நின்னு... பக்கத்து வீட்டையே ரொம்ப நேரமா வெறிச்சுட்டிருக்கீங்க?”

குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள் கமலி.

வேலைக்காரி பொன்னம்மாள் நின்றுகொண்டிருந்தாள்.

அவள் கேட்டதற்கு பதில் சொல்லாமல் புன்னகைத்து விட்டு, “பாத்திரங்களை தேய்ச்சு வச்சுட்டீங்களா பொன்னம்மா?” என்றாள்.

“உம். தேய்ச்சு வச்சுட்டேன். உங்களண்ட ஒரு விஷயம் சொல்லணுமே?” மெல்ல இழுத்தாள்.

“சொல்லுங்க பொன்னம்மா”

“இந்த பக்கத்து வீட்டுப் பொண்ணு மேல நீங்க ரொம்ப பாசமா இருக்கீங்கல்ல? அதான்... மனசு கேட்கலை. இந்த விஷயத்தை.. உங்க காதுல போட்டு வைக்கலாம்னு...”

“சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாங்க பொன்னம்மா...”

"இந்தப் பொண்ணுக்கு ஏன் இப்படி புத்தி கோணலா போச்சோ தெரியலையே? இத்தன காலமா குனிஞ்ச தலை நிமிராம நல்ல பொண்ணாத் தான் இருந்துச்சு?"

"ஏன்... இப்பவும் அவ நல்ல பொண்ணு தான்... இன்னமும் நீங்க விஷயத்துக்கே வரலை பொன்னம்மா... என்னன்னு பளிச்சுன்னு சொல்லி டுங்க... எனக்கு பதட்டமா இருக்குல்ல?"

"அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுன்னு நீங்க சொல்றீங்க சரிதான்... படிக்கிற பொண்ணுக்கு புத்தி கெட்டுப் போகலாமா? யாரோ ஒரு வாலிபனோட தினமும் இருட்டற நேரத்துல தெருமுனை வளைவுல நின்னு பேசிட்டிருக்கா... சந்திப்பு தினமும் தொடருது... எத்தனை பேரு கண்ணுல பட்டிருக்கும் இந்தப் பொண்ணு பேரு கெட்டுப் போகாதா? நீங்க இந்த சமாச்சாரத்தை அவசியமா அந்தப் பொண்ணோட அம்மாகிட்டே சொல்லிடுங்க... அவங்க கண்டிச்சு வைக்கட்டும்... இல்லேன்னா அந்தப் பொண்ணோட எதிர்காலமே சூனியமாயிடும்..."

முகத்தை சீரியஸாய் வைத்துக்கொண்டு பேசினாள் பொன்னம்மா...

அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தாள் கமலி.

வழக்கமாய் வேலைக்காரிகள் வம்பை அவிழ்த்து விட்டு ஊர்க்கதைகளை அலசிவிட்டு செல்வார்கள்.

இவள் அந்த ரகம் அல்ல...

அனாவசியமாய் இதுவரை ஒரு வார்த்தை கூட பேசியது இல்லையே?



நிஜமான அக்கறையுடன் பரிதவிப்புடன் அல்லவா வீணாவைப் பற்றிப் பேசுகிறாள்...

"இதைப் போய் நான் எப்படி பொன்னம்மா அவங்க அம்மாகிட்டே சொல்ல முடியும். இந்தக் காலத்துல பசங்களும் பொண்ணுங்களும் சோஷியலா பேசறாங்க... பழகறாங்க. அதை நாம தப்பா நெனக்க முடியுமா சொல்லுங்க?

ஒருவேளை நட்பையும் தாண்டி... அவங்க ஒருத்தரை ஒருத்தர் விரும்பி இருக்கலாம்... காதலிக் கிறது உலக மகா குற்றம் இல்லையே? பெத்தவங்களே புரிஞ்சுக்கிட்டு காதலுக்கு பச்சைக்கொடி காட்டிட றாங்களே?...

அவள் பேசி முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் பொன்னம்மாள்.

"அம்மா! காதலிக்கிறது தப்பு இல்லைம்மா... அதை மகா குற்றம்னு நான் சொல்லவே இல்லையே? காதலிக்கிற நபர் நல்லவனா இருக்க வேணாமா? கண்டவனை நம்பி நம்ம வாழ்க்கையை ஒப்படைச்சா... கடைசியில சீரழிஞ்சு போயி அம்போன்னு நிக்க வேண்டியதுதான்... இந்தப் பொண்ணை எப்படியோ மயக்கி தன் வலையில விழ வச்சிருக்கானே? அவனைப் பத்தி எனக்கு சகலமும் தெரிஞ்சதாலதானே இவ்ளோ விசனப்பட்டு நா பேசிட்டிருக்கேன்... அந்தப் பாவி ரொம்ப மோசமானவன்.

"எ.. என்ன சொல்றீங்க பொன்னம்மா? அவனை உங்களுக்குத் தெரியுமா...? கொஞ்சம் விவரமா சொல்லுங்களேன். பதறிப் போனாள் கமலி.

காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது.

# 6



கமலிக்கு இதயம் பட படவென்று அடித்துக் கொண்டது.

சுற்றும் முற்றும் பார்த்து விட்டு "நீங்க உள்ளே வாங்க பொன்னம்மா... இங்க எதுவும் பேச வேணாம்..." என்றபடி வீட்டிற்குள் விரைந்தாள்.

"அவனை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா பொன்னம்மா? அவன் மோசமானவன்னு எப்படி சொல்றீங்க? எதையும் மறைக்காம சொல்லுங்க ப்ளீஸ்... சீக்கிரம்! அவரு வர்ற நேரமாயிருச்சு..." துரிதப்படுத்தினாள்.

"பக்கத்துல 'ராம் நகர்' இருக்குல்ல? அங்கே போன மாசம் வரைக்கும் ஒரு வீட்டுலே வேலை செஞ்சுட்டு இருந்தேன். அந்த வீட்டுக்கு எதிர் வீட்டுப் பொண்ணை நம்ப வச்சு காதலிக்க வச்சு... வீட்டை விட்டு ஓடி வர வச்சு... தாலி கட்டற மாதிரி கட்டி... கொடுமைப்படுத்தி நகை நட்டை எல்லாம் சுருட்டிக் கிட்டு... சித்ரவதை பண்ண ஆரம்பிச்சுட்டான்... எல்லாருமா சேர்ந்து அந்தப் பொண்ணை பிச்சுப் பிடுங்கி எடுத்துட்டாங்க... ஒரே பொண்ணு வீட்டுலே அவ்ளோ செல்லமா வளர்ந்தவ... திரும்பவும்



பொறந்த வீட்டுக்கு எப்படி போறது?ன்னு அவளுக்கு தயக்கம்! ஆனா இந்தப் பாவி... அவளை அடி அடின்னு அடிச்சு அனுப்பி பொறந்த வீட்டுலே இருந்து ஆதாயம் கறக்கலாம்னு முடிவு பண்ணிட் டான். பணங்காய்ச்சி மரமா நெனச்சி அவளைப் பந்தாடினான்.

சே! நம்மால பொறந்த வீட்டுக்கு தலைகுனிவு! இப்போ அப்பப்போ பணம் கேட்டு நிக்க வேண்டி யிருக்கே? நம்மால எதுக்கு அவங்களுக்கு கஷ்டம்... 'பெத்தவங்க கண்ணுல மண்ணைத் தூவிட்டு இந்தப் பாவியோட வீட்டை விட்டு ஓடிப் போனதுக்கு... எனக்கு கடவுள் சரியான தண்டனையைக் குடுத்துட் டாரு'ன்னு போன்லே அம்மாகிட்டே பேசி அழுதுட்டு.. மண்ணெண்ணெய ஊத்தி அப்படியே கொளுத்திக்கிட்டா..."

"ஐயையோ! என்ன பொன்னம்மா இது? கேட்கவே ரொம்ப பயங்கரமா இருக்கே? அவனும் இவனும் ஒரே ஆள்தானா? உங்களுக்கு நல்லாத் தெரியுமா பொன்னம்மா?"

"இதே படுபாவிதான் அம்மா! ஆள் பார்க்க வாட்ட சாட்டமா பளிச்சுன்னு சினிமா கதாநாயகன் மாதிரி இருப்பான். டிப்டாப்பா டிரஸ் பண்ணி யிருப்பான். நல்ல வசதியான குடும்பமா... அந்தக் குடும்பத்துக்கு ஒரே வாரிசா இருக்கிற பொண்ணா பார்த்து கண்ணி வச்சு வலை வீசி கோழி அமுக்கிற மாதிரி அமுக்கிறதுதான் இவனோட வேலை..."

"அந்தப் பொண்ணு தீ வச்சு கொளுத்தி செத்துப் போனாளே." அந்தப் பொண்ணோட

பேரண்ட்ஸ்.. போலீஸ்லே கம்ப்ளைண்ட் எதுவும் கொடுக்கலையா?"

"இவன் கொடுமைப்படுத்தறதா எந்தப் புகாரும் அவ கைப்பட எழுதிப் போடலை. போன்லே கடைசியா அம்மாகிட்டே பேசினவ... ஒரு லெட்டராவது எழுதி போட்டிருக்கலாம்... அப்படி அவ செய்யலை. ரெண்டு மூணு மாசமாவே அந்தப் பொண்ணு தீராத வயித்து வலியில துடிச்சதா.. ஏற்கனவே ஒரு டாக்டர் சர்டிபிகேட் வாங்கி தயாரா வச்சிருந்ததைக் காட்டிட்டான். பொண்ணைப் பெத்தவங்க ரொம்ப சாதுவானவங்க... உடம்புக்கும் முடியாதவங்க... அவளே போயிட்டா... இனி வம்பு வழக்குன்னு அலைஞ்சுதான் என்ன பிரயோஜனம்?'னு கம்முனு விட்டுட்டாங்க...

இவன் பாடு ரொம்ப கொண்டாட்டமா போச்சு. கிட்டத்தட்ட ஒரு வருஷம் இருக்கும். அந்தப் பொண்ணோட நகைகளை வச்சு தங்கச்சியைக் கட்டிக் குடுத்துட்டான். இப்போ நல்லா நோட்டம் விட்டு இன்னொரு பணங்காய்ச்சி மரத்தைப் புடிக்கலாம்னு... இந்தப் பொண்ணை மயக்கி வலையை விரிச்சுட்டான் போலிருக்கு.. அவன் கண்ணுல பாம்பு வந்து கொத்தணும். பாவி! நாசமா போகணும்...

வயிற்றெரிச்சல் தாளாமல் விரல்களை நெட்டி முறித்தாள் பொன்னம்மாள்.

"இவன்கிட்டே போயி... இந்தப் பொண்ணு மாட்டியிருக்கே கமலி அம்மா? அதை நெனச்சாத் தான் எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு... இவனை நம்பின பாவத்துக்கு ஒருத்தி நெருப்புலே வெந்து கருகிப் போயிட்டா... இவளுக்கு என்ன கதி ஆகப் போகுதோ தெரியலையே? கமலி அம்மா! இந்த விஷயத்தை நா உங்ககிட்டே சொல்லிட்டேன். நீங்க தான் அந்தப் பொண்ணை அவன் கிட்டேயிருந்து மீட்கணும்..."



"தண்டிப்பா... இது என் கடமை பொன்னம்மா! ரொம்ப நன்றி... நமக்கு என்ன வந்துச்சு?ன்னு கண்டுக்காம நீங்க போயிருக்கலாம். ஆனா நீங்க அப்படி பண்ணலை. எல்லாத்தையும் எடுத்து சொன்னீங்க... இனி எப்பாடுபட்டாவது வீணாவோட மனசை மாத்தி... அந்தப் படுபாவிகிட்டே யிருந்து அவளை காப்பாத்திடலாம்..."

நெகிழ்ந்துபோய் பொன்னம்மாளின் கைகளைப் பற்றிக்கொண்டாள் கமலி.

"இது விஷயமா எந்த உதவி வேணும்னாலும் கேளுங்க... நான் செய்யறதுக்கு காத்திருக்கேன்..."

"நல்லது பொன்னம்மா"

கணவன் கதிரின் பைக் சத்தம் வாசலில் கேட்கவே... அந்தப் பேச்சுக்கு சட்டென்று முற்றுப் புள்ளி வைத்தாள் கமலி.

இரவு உணவுக்காக... சப்பாத்தி மாவைப் பிசையும்போது வீணாவின் ஞாபகமாகவே இருந்தது.

'வீணாவிடம் இந்த விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமே? பேசினால்... எடுத்துச் சொன்னால் கேட்டுக்கொள்வாளா? மனதில் காதல் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தால்... யார் எது கூறினாலும் காதிலேயே வாங்கிக் கொள்ள மாட்டார்களே?

இவளும் அதேபோல் நடந்துகொண்டால் என்ன செய்வது? எடுத்தெறிந்து பேசிவிட்டால்...?

சேச்சே... வீணா நல்ல பெண். பணிவும் பவ்யமும் கொண்டவள். படிப்பின்மீது மிகுந்த அக்கறை கொண்டவள். வீணா தனது பாட்டியின் மீது பாசமும் மரியாதையும் கொண்டவள் ஆயிற்றே...

இவளிடமே பாட்டியின் போன் நம்பர் வாங்கி விஷயத்தைச் சொல்லி... அவரை விட்டு இவளிடம் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லச் சொன்னால் என்ன?

ஊகூம்... பாட்டி வயதானவர். ஊரில் இருப்பவர். விஷயத்தைக் கேள்விப்பட்டு... அதிர்ச்சியில் ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிட்டால் என்ன செய்வது? வேண்டாம்... பாட்டிக்கோ மற்றவர்களுக்கோ இநத் விஷயம் தெரியவே வேண்டாம்...

இந்தப் பிரச்சினையை நிதானமாக பக்குவமாகப் பேசித் தீர்க்க வேண்டும்.

வீணா அன்புக்காக ஏங்குபவள். இதை மிகச் சரியாகப் புரிந்துகொண்டு... அந்தப் பாவி காயை நகர்த்தியிருக்கிறான் போலும்...

இவளின் மீது அன்பும் நேசமும் வைத்திருப்பது போல் நடித்து இவளை வசியம் செய்துவிட்டான் போலிருக்கிறது.

வீணா படிப்பின் மீது அதீத அக்கறை கொண்டவள். இந்த அஸ்திரத்தைக் கொண்டுதான்... வீணாவை நான் மீட்க முடியும்.



நாளை மதியத்திற்கு மேல் பெர்மிஷன் போட்டுக் கொண்டு வீணாவின் பள்ளிக்கே செல்ல வேண்டியதுதான்...!

கொதிக்கும் குருமாவில் பெருங்காயத் தூளைத் தூவி கரண்டியால் கலக்கி இறக்கி வைத்தாள் கமலி.

இரவு முழுவதும் இதே சிந்தனைதான்...

அவளுக்கு பழைய நினைவுகள் எல்லாம் மீண்டும் கிளறி விட்டாற்போலிருந்தது.

ஒருக்களித்துப் படுத்தவள்... தாரை தாரையாக கண்ணீர் வடித்தாள்.

சப்பாத்தியைப் பிட்டு சாப்பிடும்போது அவளது கணவன் கதிர் அவளைப் பார்த்துக் கேட்டது... திரும்பத் திரும்ப அவளது செவிகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

“என்ன...? நெனப்பெல்லாம் இங்கே இல்லை போலிருக்கு? நெனப்பு அங்கே போயிருச்சோ? அதே நெனப்புல இருந்ததால... குருமாவை ரொம்ப ருசியா சமைச்சுட்டியோ?” எகத்தாளமாய் சிரித்துவிட்டு அவன் எழுந்து சென்றதை நினைத்து... வெகுநேரம் மவுனமாக குமுறி அழுதாள் கமலி.

# 7



கமலி, மதியம் மூன்றரை மணிக்கு... தனது அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தாள்.

தலைவலி விண் விண் என்று தெறித்தது.

இரவெல்லாம் தூங்காமல் கண் விழித்திருந்ததால்... கண் இமைகள் வீங்கியிருந்தன.

கண்களில் தகதகவென்று எரிச்சல் வேறு...!

ஹேண்ட் பேக்கிலிருந்த வாட்டர் பாட்டிலை வெளியில் எடுத்தாள்.

கைவசமிருந்த தலைவலி மாத்திரையை வாயில் போட்டு விழுங்கினாள்.

ஆட்டோ பிடித்துக்கொண்டு அந்தப் பள்ளிக் கூடத்தை அடைந்தாள்.

வீணாவின் ஸ்பெஷல் கிளாஸ் முடியும்வரை காத்திருக்கலாமா? கிளாஸ் முடிய வெகு நேரம் பிடிக்குமே?

ஊகூம்... அதற்குள் வீணாவைப் பார்த்துப் பேசிவிட வேண்டும்.

கிளாஸ் முடியும் வரை காத்திருந்தால்... ஒரு வேளை அந்த தடியன் இங்கேயே வந்துவிட்டால்... நான் என்ன சொன்னாலும் வீணாவின் மண்டையில் ஏறாதே?



காதலனின் முகத்தைப் பார்த்துவிட்டால்... மற்றவர்கள் எல்லாரும் துச்சமாகத் தெரிவார்களே?

வேண்டாம்... நான்கு மணிக்கு ஸ்கூல் முடிந்ததுமே- வீணாவை அழைத்துச் சென்றுவிட வேண்டும்.

ஏதாவது சாக்கு போக்கு சொல்லி... பள்ளி முதல்வரிடம் அனுமதி பெற வேண்டியதுதான்...

பள்ளி அலுவலகத்தை நோக்கி நேராக நடந்தாள். வராண்டாவில் இருந்த பெஞ்சில் அமர்ந்து... ஹேண்ட்பேக்கிலிருந்த பேப்பரையும் பேனாவையும் எடுத்து அனுமதிக் கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

பியூனை அழைத்து விவரம் சொன்னாள்.

அனுமதி கிடைத்ததும் பிரின்சிபாலின் அறைக்குச் சென்றாள். "வணக்கம் சார்! நான் கமலி... உங்க ஸ்டூடண்ட் வீணாவோட அக்கா... வீணாவோட பாட்டிக்கு உடம்புக்கு முடியலை... ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கோம். வீணாவை உடனடியா கூட்டிட்டு வரச் சொன்னாங்க... இந்தாங்க சார் லெட்டர்!" என்றபடி கடிதத்தை நீட்டினாள்.

அடுத்த பத்தே நிமிடங்களில் வீணா வரவழைக்கப்பட்டாள்.

" உங்க பாட்டிக்கு உடம்புக்கு முடியலையபாம். உன்னை அழைச்சுட்டுப் போக இவங்க வந்திருக்காங்க... இன்னிக்கு நீ ஸ்பெஷல் கிளாஸை 'அட்டெண்ட்' பண்ண வேணாம். மிஸ் கிட்ட சொல்லிட்டு கிளம்பு... ஆமா... இவங்க உனக்கு அக்கா தானே?"

"எஸ்... சார்! இவங்க கமலி! எங்க அக்கா தான்..."

"ஓகே ம்மா! சீக்கிரமா கிளம்பு"

"தேங்க் யூ சார்" கை கூப்பிவிட்டு வெளியில் வந்தாள் கமலி.

புத்தகப் பையை எடுத்துக்கொண்டு சிட்டாகப் பறந்து வந்தாள் வீணா.

இருவரும் பள்ளி வளாகத்தைத் தாண்டும் வரை எதுவுமே பேசவில்லை.

"அக்கா! சார்கிட்டே எதுவும் கேட்கக் கூடாதுன்னு தான் கம்முனு இருந்தேன். பாட்டி ஊருலே தானே இருக்காங்க" ஏன்... இப்படியொரு பொய்யைச் சொன்னீங்க? உங்க மேல எனக்கு நிறைய மரியாதையும் பாசமும் இருக்கு... காரணமில்லாம நீங்க இப்படியொரு பொய்யைச் சொல்ல மாட்டீங்களே? என்ன காரணம் அக்கா? உங்க ஆபீஸ் வேலையையும் ஒதுக்கிட்டு இவ்ளோ அவசரமா இங்க் ஸ்கூல் வரைக்கும் வந்திருக்கீங்களே? எதுக்கு அக்கா?"

"இந்த அக்கா மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல? கூடப் பிறந்த தங்கை மாதிரி உன் மேல நான் பாசம் வச்சிருக்கேன்னு நீ நம்பறே இல்ல...?"

"என்னக்கா இப்படி கேட்டுட்டீங்க? பாட்டிக்கு அடுத்தபடியா என் மேல பாசமா இருக்கிறது நீங்க தான்னு... நான் உங்ககிட்டேயே சொல்லியிருக்கேன்ல? உங்களை நான் என்னோட சொந்த அக்காவா நான் மதிக்கிறேன். அதனாலதான நீங்க பொய் சொல்லி ஸ்கூல்லேர்ந்து கூட்டிட்டுப்



போனாலும்... துணிஞ்சு உங்க கூட வெளியில வர்றேன். இதுலே இருந்தே தெரியலையா? நான் எவ்வளவு நம்பிக்கை உங்க மேல வச்சிருக்கேன்னு...? நீங்க என்ன செஞ்சாலும்.. அது என் நன்மைக்குத் தான்னு... எனக்குத் தெரியும். நான் உங்களை நூறு சதவீதம் நம்பறேன் அக்கா! போதுமா?"

வீணா கரிசனத்துடன் கமலியின் தோளில் கை வைத்து மெல்ல அழுத்தினாள்.

கமலியின் கண்கள் சட்டென்று பனித்தன.

"வீணா! உன்னை என்னோட தங்கையா மட்டும் நான் பாவிக்கலை. உன்னைப் பார்க்கும் போதெல்லாம்... எனக்கு என்னோட கடந்தகாலம் தான் ஞாபகத்துக்கு வருது. படிப்பு மேல உனக்கு இருக்கிற ஆர்வம் அக்கறை பணிவு மரியாதை, துறுதுறுப்பு எல்லாமே என்னையே பார்த்தமாதிரி இருக்கு.

நானும் உன்னை மாதிரிதான்... அன்புக்கு ஏங்கித் தவிச்சேன். அப்பா இறந்ததும் அம்மாதான் ஸ்கூல்ல டீச்சரா வேலை பார்த்துக் குடும்பத்தைத் தாங்கினாங்க... ஸ்கூல் விட்டு வந்தா ட்யூஷன் எடுப்பாங்க... ராத்திரி ஆனா தையல் மிஷின்லே துணி தைக்க ஆரம்பிச்சுடுவாங்க... எந்த நேரமும் உழைப்பு தான்... அனுசரணையா பேசக்கூட அவங்களுக்கு நேரம் இருந்ததில்ல... எனக்கு ரெண்டு அண்ணன்கள்...

அவங்கவங்க கடமையை சீரா செஞ்சுட்டே இருக்கணும்னு அம்மா ரொம்ப கண்டிப்பா இருந்தாங்க... அன்பா பாசமா கொஞ்சிப் பேச மாட்டேங்கிறாங்க'ன்னு உள்ளூர ரொம்ப ஏங்கிப் போனேன்.

அன்பா நேசமா இதமா நாலு வார்த்தை பேசறவங்க கிட்டே... அப்படியே மனசு படிஞ்சு போயிடுது இல்லையா? உன்னை மாதிரிதான்... நானும் ஒருத்தன்கிட்டே என் மனசைப் பறிகொடுத்தேன். அது எவ்வளவு பெரிய பிசகுன்னு... இன்னிக்கு வரைக்கும்... நான் அதை நெனச்சு உள்ளூர கதறிட்டிருக்கேன். என் நெலமை உனக்கும் வந்துடக் கூடாதுன்னுதான் பரிதவிச்சுப் போய் ஓடி வந்திருக்கேன்... உன்னோட எதிர்காலம் இருண்டு போயிடக் கூடாதுன்னுதான் இவ்ளோ உரிமையா உன்னோட அந்தரங்க விஷயத்துல தலையிடறேன். நான் இப்படி தலையிடக் கூடாதுதான்... மனசு கேட்கலை வீணா! உன்னோட வாழ்க்கை வீணாயிடக் கூடாதுங்கற அக்கறையில் துணிஞ்சு உன்கிட்டே பேச வந்திருக்கேன்... வீணா!...”

அதற்கு மேல் துக்கம் தாங்க முடியாமல்... கண்ணீர் உகுத்தாள் கமலி.

“அக்கா! கண்ட்ரோல் யுவர்செல்ஃப்! ஸ்கூல் விட்டுட்டாங்க போல... பெல் சத்தம் கேட்குது. இப்படி ஓரமா வாங்கக்கா...” அவளது கையைப் பிடித்து ஓரமாய் அழைத்துக்கொண்டு போனாள்.

சட்டென்று சுதாரித்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் கமலி.

“அக்கா! நான் அபிஷேக்கை விரும்பற விஷயம் உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?”

தயங்கி தடுமாறிக் கேட்டாள் வீணா.

கமலி ஒரு கணம் யோசித்தாள்.



“சொல்லுங்க அக்கா! அபிஷேக் நல்லவரு இல்லையா? எதிர்காலமே இருண்டு போயிடும்னு சொன்னீங்களே அக்கா? நீங்க பேசினதைக் கேட்டதும்... ரொம்ப ரொம்ப டென்ஷனா இருக்குக்கா...”

கமலிக்கு அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

“இங்க வச்சு எதுவும் பேச வேணாம். வா... ஆட்டோவுல ஏறிக்கலாம். மனசுவிட்டுப் பேசின பிறகு... அப்புறமா ஒரு முடிவுக்கு நீ வந்தா போதும்...”

மறுபேச்சு பேசாமல் கமலியுடன் ஆட்டோவில் அமர்ந்தாள் வீணா.

வீட்டிற்கு அருகாமையில் உள்ள கோலாட்சி அம்மன் கோவிலுக்கு அருகே இருவரும் இறங்கினார்கள்.

“வா! தெப்பக்குளத்துப் படிக்கட்டுகள்லே உட்கார்ந்து பேசுவோம். எந்தத் தொந்தரவும் இருக்காது...”

இருவரும் குளத்துப் படிக்கட்டில் அருகருகே உட்கார்ந்தனர்.

குளத்து நீரின் மேற்பரப்பில் கோவில் கோபுரம் மிக அழகாக பிரதிபலிப்பதை ரசனையுடன் சிறிது நேரம் உற்றுப் பார்த்தபடி இருந்தாள் கமலி.

மீன்களின் கூட்டம் திடுதிப்பென்று வந்ததால்... அந்த பிம்பம் வேகமாய் கலைந்ததையும் இமை கொட்டாமல் பார்த்தாள் கமலி.

“அக்கா! சொல்லுங்கக்கா... எனக்கு படபடப்பா இருக்கு. உள்ளூர திக்திக்குனு அடிச்சுக்குது...” என்றாள் வீணா.

"முதல்லே நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு
வீணா! சமீபத்துல டெஸ்ட் வச்சிருப்பாங்களே;
அதுலே நல்ல மார்க்ஸ் எடுத்தியா? எப்பவும்
கிளாஸ்லே ஃபர்ஸ்ட் வர்றவளாச்சே நீ? இந்
வாட்டியும் நீதான் ஃபர்ஸ்ட் வந்தியா?"

வீணாவின் விழிகளை ஊடுருவினாள் கமலி.

"இ... இல்லக்கா... மார்க்ஸ் ரொம்ப குறைஞ்
போச்சு. ஃபர்ஸ்ட் ரேங்க் எடுக்க முடியல..."

குற்ற உணர்வுடன் பார்வையைத் தழைத்து
கொண்டாள்.

"மாவட்ட அளவிலாவது முதல் இடத்தை
பிடிக்கணும். என்னோட பேர் பேப்பர்லே வரணு
இதுதான் என் லட்சியம் அக்கா!'ன்னு ... அடிக்கடி
சொல்லிட்டு இருந்தியே...? இப்போ என்னாச்சு
லட்சியம் கனவு எல்லாத்தையும் காத்துல பறக்
விட்டுட்டியா? பிளஸ்டூ-வில எடுக்கிற மார்க்ஸ் தான்
உன்னோட தலை எழுத்தையே நிர்ணயம் பண்ணும்
அதை மறந்துட்டே பார்த்தியா? மறந்ததுக்கு என்ன
காரணம்? மறக்க வச்சது யாரு? சொல்லு!

உன் மேல உயிரையே வச்சிருக்கிறதா உருகி
டிருக்கானே அந்தப் பாவி? நிஜமாவே உன் மேல
அக்கறை இருந்தா... இப்படி உன் மனசை
கெடுப்பானா? பிளஸ்-டூ படிக்கிற பொண்ணோட
படிப்பு கெட்டுப் போகுமே?ன்னு ஒரு நாளாவது
விசனப்பட்டானா? சதா நீ அவனோட நெனப்பு
லேயே இருக்கணும்னு பேச்சுலேயே மயக்கி... உன்
படிப்பைக் கெடுத்திருக்கானே? இதிலிருந்தே உனக்கு
தெரியலையா? அவன் நல்லவன் இல்லைன்னு



கொஞ்சம் நிதானமா யோசிச்சிருந்தா.. உனக்கே
புரிஞ்சிருக்கும்..."

"அபி... அபிஷேக் என் மானத்தைக் காப்
பாத்தினதால... கண்ணிமா நல்லவரா டீஸண்டா
இருந்ததால... நானே என் மனசைப் பறிகொடுத்
துட்டேன் அக்கா! முழுசா அவர் மேலேயே குற்றம்
சொல்ல முடியாதுல்ல...? தப்பு என் பக்கமும்
இருக்கே? நானும்தானே அவரை விரும்பினேன்.
அவரோட நெனப்புலேயே இருந்துட்டு சரியா
படிக்காம விட்டது என்னோட தப்புதானேக்கா?"

"நீ சொல்றது சரிதான். நீ மனசைப் பறி
கொடுக்கும் படியா நடந்துகிட்டது. அவன்தானே?
நடந்துக்கிட்டதுன்னு சொல்றதை விட... நடிச்சது
முழுக்க முழுக்க அவன்தானே? எல்லாமே நடிப்பு
வீணா? நாடகம்னு கூடச் சொல்லலாம்..."

"நடிப்பா? நாடகமா? என்னக்கா சொல்
றீங்க? அந்த முரடன் கிட்டேயிருந்து அபிஷேக்
என்னைக் காப்பாத்தினாரே? அதையா நாடகம்னு
சொல்றீங்க?"

திகைத்துப் போய் விழித்தாள் வீணா.

"கண்டிப்பா... நூறு சதவீதம் அது நாடகமாத்
தானிருக்கும் வீணா! நான் அடிச்சு சொல்றேன். அது
நடிப்புதான்... நாடகம்தான்..."

வீணாவுக்கு உலகமே தட்டாமாலையாகச்
சுற்றுவது போலிருந்தது. அதிர்ச்சியில் அவளது நா
உலர்ந்துபோனது.

# 8



"அக்கா! என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு... ஒண்ணும் புரியலையே அக்கா! எனக்கு தெளிவா புரியும்படி சொல்லுங்க அக்கா...! அது நாடகம்'னு எப்படி இவ்ளோ ஊர்ஜிதமா சொல்றீங்க? இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?" தழுதழுத்தாள் வீணா.

"நான் இப்படி ஊர்ஜிதமா சொல்றதுக்கு... ஒரு காரணம் இருக்கு. நம்ம வீட்டுலே பாத்திரம் தேய்ப் பாங்களே... பொன்னம்மான்னு... அவங்க இந்தப் பாவியைப் பத்தி நேத்து என்கிட்டே விலாவாரியா சொன்னாங்க... உங்கம்மாகிட்டே கூட இதைப் பத்தி சொல்லி எச்சரிக்கை செய்யச் சொன்னாங்க.

"உங்ககிட்டே கூட நான் அபிஷேக்கை காதலிக் கிறதா சொல்லவே இல்லையே? பொன்னம்மா வுக்கு எப்படி விஷயம் தெரிஞ்சுது?"

"பூனை கண்ணை மூடிக்கிட்டா... பூலோகமே இருண்டு போச்சுன்னு நெனச்சுக்குமாம். நீ பேசறதும் அதே மாதிரிதான் இருக்கு வீணா! தெரு முனை வளைவில் ஏகாந்தமா நின்னு பேசினா யாருமே பார்க்க மாட்டாங்கன்னு நெனப்பா? உங்க ரெண்டு பேத்தையுமே தினமும் 'நோட்' பண்ணிட்டுதான் என்கிட்ட வந்து பேசினாங்க... இந்தப் பொண்ணுக்கு புத்தி கித்தி கெட்டுப் போச்சா?'ன்னு கேட்டு... ரொம்பவே வருத்தப்பட்டுப் பேசினாங்க..."



"ஐயையோ! நிஜமாவே நான் இத்தன நாளா புத்திகெட்டுப் போய்தான் இருந்திருக்கேன். பொன்னம்மா என்னைப் பார்த்த மாதிரி.. இன்னும் எத்தனை பேரு கண்ணுல நான் பட்டேனோ தெரிய லையே அக்கா? நெனச்சாலே ரொம்ப கேவலமா இருக்கே. அம்மாவுக்கு விஷயம் தெரிஞ்சா அவ்வளவு தான்... திட்டியே கொன்னு போட்டுருவாங்க... பாட்டிக்கு தெரிஞ்சா... அதிர்ச்சியில அப்படியே உயிரை விட்டுருவாங்க... வர வர மார்க்ஸ் குறைஞ் சுட்டே வர்றதைப் பார்த்துட்டு... நானே குற்ற உணர்ச்சியில ராத்திரியில தூக்கம் வராம தவிச் சுட்டுதான் இருந்தேன். பொன்னம்மா உங்ககிட்டே சொன்ன மாதிரி... இன்னமும் எத்தன பேத்துகிட்டே என்னைப் பத்தி சொல்வாங்களோ தெரியலையே?...

அழுகை வெடிக்கப் புலம்பினாள் வீணா.

"பொன்னம்மா சொன்ன விஷயத்தை முழுசா கேள்விப்பட்டா... நீ தாங்கவே மாட்டே வீணா! காதல் மயக்கத்துல இருக்கிறப்போ... பெத்தவங்க நல்லதை எடுத்துச் சொன்னால் கூட... அதை காதுலேயே வாங்கிக்க மாட்டாங்க நீ பரவாயில்ல வீணா! படிப்பு மேல அக்கறையுள்ள பொண்ணு. நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு... அதான் இந்த மட்டுமாவது சீக்கிரமா ரியலைஸ் பண் ணிட்டே... உன்னை நான் மனசாரப் பாராட்டறேன். என்னை மூணாம் மனுஷின்னு ஒதுக்கித் தள்ளாம எல்லாத்தையும் செவி மடுக்கிறியே... குட்!" என்ற கமலி... ஒரு கணம் தயங்கிவிட்டு... பொன்னம்மா தன்னிடம் கூறிய தகவலை விலாவாரியாக எடுத்துச் சொல்லிவிட்டாள்.

அந்த அதிர்ச்சியான தகவலைக் கேட்டதும்... ஸ்தம்பித்துப் போய் கல்லாய் அமர்ந்திருந்தாள் வீணா.

"நேத்து ராத்திரியெல்லாம் இதே சிந்தனை தான் வீணா! ஒரே பொண்ணு... உன்னைப் பெத்தவங்க ஓடி ஓடி சம்பாதிச்சு உனக்காக சேர்த்து வச்சுட்டிருக்காங்க... அடுத்த பணங்காய்ச்சி மரமா உன்னைத் தேர்வு செய்திருக்கான் அந்தப் பாவி! கொஞ்ச காலமா விடாம உன்னையே ஃபாலோ பண்ணிட்டு இருந்திருப்பான்.

அன்னிக்கு உன்கிட்டே ஒரு முரடன் வம்பு பண்ணினானே? கரெக்டான நேரத்துல ஹீரோ மாதிரி வந்து... இவன்தானே உன்னை காப்பாத்தி னான்? இதெல்லாம் இவனோட செட்டப்பாதான் இருக்கும். அப்போதானே உன் மனசுல இடம் புடிக்க முடியும்? இதை சாக்கா வச்சு அன்பா அனுசரணையா பேசி உன் மனசைத் தொட்டுட்டான் இல்லையா? எல்லாமே திட்டமிட்ட சதிதான்...!"

"அபிஷேக் இவ்ளோ மோசமானவரா?"

முகத்தில் அறைந்துகொண்டு அழுதாள் வீணா.

கமலி அவள் அழுவதைப் பார்த்துவிட்டு... கவலையுடன் தோளில் கை வைத்தாள்.

"வீணா! நீ அழறதைப் பார்த்தா..." தயங்கி நிறுத்தினாள்.

"இ... இல்லக்கா... நான் என் மனசை மட்டும் தான் பறிகொடுத்தேன். இந்தளவுக்கு முட்டாள் தனமா அவனோட வலையில விழுந்துட்டோமே?ன்னு



நெனச்சுதான் அழறேன். நீங்க வேற எதையும் நெனச்சு கவலைப்பட வேணாம்..."

"அப்பாடா... நீ அழுததும் நான் என்னவோ? ஏதோ?ன்னு பதறிப் போயிட்டேன். நல்ல காலம்... எந்த சேதாரமும் இல்லாம அவன் கிட்டேயிருந்து உன்னை மீட்டுட்டேன். ஒரு வேளை பொன்னம்மா பொய்யான தகவலை சொல்லியிருப்பாங்களோன்னு... உனக்கு சின்னதா ஒரு சந்தேகம் இருக்கலாம். இல்லையா? சந்தேகம் இல்லாட்டியும்.. அந்த அபிஷேக்கைப் பத்தி ஆதாரப் பூர்வமா தெரிஞ் சுக்கிடறது நல்லது இல்லையா? ஆமா... அவன் எந்த ஆபீஸ்ல வேலை பார்க்கிறதா உன்கிட்டே சொன்னான்?"

வீணா அந்த நிறுவனத்தின் பெயரைச் சொன்னாள்.

"வாயேன்... மணி நாலரைதானே ஆகுது? அந்த நிறுவனம் இந்த ஏரியாவுலேதானே இருக்குது. ஆட்டோவுல போயி அவனைப் பத்தி விசாரிச்சுட்டு வந்துடலாமா?" ஏன் தயங்கறே...? எந்திரி வீணா! முழுசா இறங்கி என்னன்னு பார்த்துட்டா... நீ கம்ப்ளீட்டா தெளிவாயிடுவே இல்லையா?

"சரிங்கக்கா! உங்க இஷ்டம்..."

மீண்டும் ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு... கால் மணி நேரத்தில் அந்தக் குறிப்பிட்ட நிறுவனத்திற்குச் சென்றடைந்தனர்.

வரவேற்பறையில் இருந்த ரிசப்ஷனிஸ்ட்டை மெல்ல அணுகினார்கள்.

"இங்கே அபிஷேக்குன்னு ஒருத்தர் வேலை பார்க்கிறாரே? அவரை நாங்க பார்க்கணுமே?" கமலி மெதுவாய் கேட்டாள்.

"அபிஷேக்கா? அப்படி யாரும் இங்க 'வொர்க்' பண்ணலையே?" வீணா திருதிருவென்று விழித்து விட்டு... "சிஸ்டம் அனாலிஸ்டா வேலை பார்க்கிறாரே... அந்த அபிஷேக்கை பார்க்கணும்" என்றாள்.

"அபிஷேக் அப்படிங்கிற பேருலே... இந்த நிறுவனத்துல யாரும் வேலை பார்க்கலை... மேடம்! சாரி... இதே நிறுவனம்தானா?ன்னு கன்ஃபார்ம் பண்ணாம வந்துட்டீங்கன்னு நெனக்கிறேன்... போன் பண்ணி தெளிவா அவர்கிட்டே கேட்டுக்கோங்க..." பட்டென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள் வீணா.

பொலபொலவென்று கண்ணீர் வடித்தாள்.

"உஷ்... என்ன வீணா இது? நாலு பேர் வந்து போற இடம் இது... மனசை திடப்படுத்திக்கோ... எதுக்கு அழறே?" முதுகில் தட்டிக் கொடுத்தாள் கமலி.

"அக்கா! பொன்னம்மா சொன்ன நபர்... வேற யாரோவா இருக்கக்கூடாதா?ன்னு உள்ளூர நப்பாசை பட்டுதான் இங்க வந்தேன். மனசுக்குள்ளே ஒரு கூக்குரல் கேட்டுட்டே இருந்துச்சு... அபிஷேக் நல்லவரா இருக்கணுமே? கடவுளை வேண்டிக் கிட்டே இருந்தேன். கடைசியில பார்த்தா... பொன்னம்மா சொன்னாப்பல... அபிஷேக் பயங்கர மோசடி பேர்வழின்னு ஊர்ஜிதமா தெரிஞ்சு போச்சு... அதான் உடைஞ்சு போய் அழறேன்...?



"அவனோட சாயம் வெளுத்துப் போச்சு... எந்தவித இழப்பும் இல்லாம அவன் கிட்டேயிருந்து நீ தப்பிச்சுட்டே.. அதை நெனச்சு சந்தோஷப் படறதை விட்டுட்டு... இப்படி அழலாமா வீணா! கண்ணைத் துடைச்சுக்கோ... நாம்ம கிளம்பலாம்...

ஆட்டோவில் ஏறி அமர்ந்தும் கூட... மவுனமாய் கண்ணீர் உகுத்தபடியே வந்தாள் வீணா. கால் மணி நேரத்தில் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றாள் கமலி.

"வீணா! அவனுக்கு உன் கைப்பட லெட்டர் எதுவும் எழுதினியா? கூட சேர்ந்து போட்டோ ஏதாச்சும் எடுத்துக்கிட்டியா" கேட்டபடி கதவைச் சாற்றிவிட்டு வந்தாள் கமலி.

"சேச்சே... அப்படி ஏதும் போட்டோ எடுத்துக்கலை அக்கா. ஒரு நாளைக்கு வெளியில தூரமா மகாபலிபுரம் மாதிரியான இடத்துக்குப் போகலாம். சேர்ந்து போட்டோ எடுத்துக்கலாம்'னு அபிஷேக் கேட்டுட்டுதான் இருந்தான். பிளஸ்-டு படிச்சுட்டு இருககிறதால எங்கேயும் நகர முடியாதுன்னு மறுத்துட்டேன்.

உருக்கமா காதல் கடிதம் எழுதித் தாயேன். அப்பப்போ அதைப் பார்த்து சந்தோஷப்பட்டுக்கிறேன்னும் கெஞ்சினான். "அதான் நேர்லே தினமும் பார்க்கிறோமே? அப்புறம் என்ன? எக்ஸாம் முடியட்டும் பக்கம் பக்கமா லெட்டர் எழுதித் தரேன்னு ொசல்லி இருந்தேன்.. எதுக்கு அக்கா கேட்கறீங்க?"

நீண்ட பெருமூச்சு விட்டாள் கமலி.

"நல்ல காலம். நீ தப்பிச்சே... இல்லேன்னா லெட்டரையும் போட்டோவையும் காட்டி உன்னை பிளாக்மெயில் பண்ண ஆரம்பிச்சுடுவான். கடவுள் புண்ணியத்துல நீ எதுலேயும் சிக்காம தப்பிச்சுட்டே... குட்! இன்னும் என்னத்துக்கு கண்கலங்கிட்டே இருக்கே வீணா?"

"இப்படி ஏமாந்துட்டேமே?ன்னு மனசு கிடந்து அடிச்சுக்குது. தெரியாத்தனமா ஒரு கெட்டவனை விரும்பித் தொலைச்சுட்டேனே அக்கா? இது எவ்வளவு பெரிய தவறு?ன்னு நெனச்சு துடியா துடிச்சுட்டிருக்கேன் அக்கா! மனசு பூராவும் ரணமா இருக்கு...

"மனசைத் தேத்திக்கோ வீணா! நீயாச்சும் பரவாயில்லை. விஷயம் வெட்ட வெளிச்சமாகிறதுக்குள்ளே தப்பிச்சுட்டே... ஆனா நான்... அந்தக் காலத்துல அந்தப் பாவியை நம்பி வீட்டை விட்டு ஓடிப்போய்.. அந்த விஷயம் அம்பலமாகி... சொந்தக்காரங்களுக்கும் தெருவில இருக்கறவங்களுக்கும் தெரிஞ்சு குடும்பத்துக்கு தலை குனிவை ஏற்படுத்திட்டேன் வீணா! அது எவ்ளோ பெரிய கேவலம்" அதுக்கு உன் விஷயம் எவ்வளவோ பரவாயில்லை. இல்லையா?"

திக்கென்று அதிர்ந்துபோய் கமலியை ஏறிட்டாள் வீணா.

"அக்கா! நீங்க சொல்றதெல்லாம் நிஜமா? இல்ல... என்னை சமாதானப்படுத்தறதுக்காக... இப்படி சொல்றீங்களா?"



"நான் சொல்றது அத்தனையும் நிஜம்! என்னையும் கதிரையும் பொருத்தமான ஜோடின்னு... நீ சொல்வே இல்ல? நீங்க ஆதர்ஷ தம்பதியா உலா வர்றீங்க அக்கா? பார்க்கிறவங்க கண்ணு வச்சுடப் போறாங்க'ன்னு... அடிக்கடி சொல்லியே? உண்மையில நாங்க அப்படி இல்லை. அதான் நிஜம்! நீ சொல்றப்போ எல்லாம் உள்ளூர விரக்தியா நான் சிரிச்சுப்பேன். என்னோட கடந்த காலந்தான் இதுக்கெல்லாம் காரணம்... உனக்கும் அந்த நிலைமை வரக்கூடாதுன்னுதான்... நான் இவ்வளவு மெனக்கெட்டுட்டு இருக்கேன்...?

கமலி சட்டென்று இருகரங்களாலும் மூடிக்கொண்டு... முதுகு குலுங்க குமுறி அழுதாள்.

செய்வதறியாது திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள் வீணா.

அவளுக்கு இன்று அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சிதான்... கலவரத்துடன் கமலியையே பரிதாபத்துடன் வெறித்தாள்.

# 9



முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே வீணாவை ஏறிட்டுப் பார்த்தாள்.

“பொண்ணுங்க பெத்தவங்க கூட வாழறது கொஞ்சகாலம்தான்... வாழ்நாள் பூராவும் கணவன் கூட தான் சேர்ந்து வாழ்ந்தாகணும். கல்யாணத்துக்கு முன்னாடி சின்னக் கரும்புள்ளி கூட விழாம ஜாக்கிரதையா நாம நடந்துக்கணும். காதல் கத்தரிக்காய்னு மனசை அலைபாய விட்டால்... மணவாழ்க்கையில் ரொம்பவே கஷ்டப்பட்டாகணும்.

படிக்கிற வயசுல உன்னை மாதிரி காதல் வலையில விழுந்தேன்'னு சொன்னேன் இல்லையா? அன்புக்காக ஏங்கிக் கிடந்தவளுக்கு அவனோட அன்பான நேசமான பேச்சு சர்க்கரையா இனிச்சது... பெத்தவங்க நம்ம மேல பாசத்தைக் காட்டறதுக்கு நேரம் ஒதுக்க மாட்டேங்கிறாங்க'ன்னு நாம குறைபட்டுக்கிறோமே? அது எவ்வளவு பெரிய தப்பு? நமக்காகதானே நேரங்காலம் பார்க்காம உழைச்சுட்டிருக்காங்கன்னு சமாதானப் படுத்திக்கிறதை விட்டுட்டு... பெத்தவங்க மேல குறை சொல்லக் கூடாது. அதே சமயத்துல பெத்தவங்களும் பசங்களோட உணர்வுகளுக்கு மதிப்பளிச்சு... அவங்களைப் புரிஞ்சுக்கிட்டு... மனசு விட்டுப் பேசறதுக்கு கொஞ்ச நேரத்தை ஒதுக்கணும். அப்படி



ஒதுக்கினா... பசங்களும் பாதை மாறாம தடம் புரளாம சரியான நேர்வழியில போயிட்டிருப்பாங்க... இதைப் பெத்தவங்களும் சரி... பசங்களும் சரி... புரிஞ்சு நடந்துக்கணும். புரிதல் என்பது ரெண்டு பக்கமும் அவசியம் இருந்தாகணும்.

விஷயத்துக்கு வர்றேன். எங்கம்மா வேலை பார்த்து குருவி மாதிரி எனக்காக நகை சேர்த்து வச்சிருந்தாங்க... அந்தப் படுபாவி என்கிட்டே ஆதாயத்தை மட்டும்தான் எதிர்பார்த்து காதலிக்கிறதா நடிச்சிருந்திருக்கான். எங்க வீட்டுல கல்யாணத்துக்கு சம்மதிக்கலை. ‘வா... !’ நாம ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து... மாலையும் கழுத்துமா பெரியவங்க கிட்டே ஆசீர்வாதம் வாங்கிக்கலாம்'னு வற்புறுத்தினான். ‘வீட்டை விட்டு வர்றப்போ மறக்காம உன்னோட உடமைகள் நகைகளை எடுத்துட்டு வந்துடு கமலி'ன்னு நைஸா சொல்லிட்டான்.

மகுடிக்கு மயங்கிய நாகம் மாதிரி... அவன் சொல்றதுக்கு எல்லாம் தலையாட்டினேன். நடு ராத்திரி எந்திரிச்சு எல்லாத்தையும் எடுத்து வச்சேன். விடியற்கார்த்தால மூணு மணிக்கு வீட்டை விட்டுப் போறப்போ... எனக்கொரு யோசனை வந்துச்சு. கல்யாணம் செய்துகிட்டு நேரா வீட்டுக்குதானே திரும்பவும் வரப்போறோம். எதுக்கு நகைகளை எடுத்துக்கிட்டு ஓடணும்?'னு தோணுச்சு... திரும்பவும் நகைகளை எடுத்து பீரோவுல வச்சுட்டேன். சூட்கேஸ்லே என்னோட புடவைகள் மட்டும்தான் இருந்துச்சு. கரெக்டா மூணேகாலுக்கு வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு பர்லாங் தூரம் நடக்கணும். பஸ் ஸ்டாண்டுக்கு முன்னாடி ஒரு ஆலமரத்துக்கிட்டே வந்து அவன் நிக்கச் சொல்லி யிருந்தான். நானும் போய் நின்னேன். கொஞ்ச நேரத்துல அவன் வந்தான். அதோ தூரத்துல டாக்ஸி நிக்குதே... அதுலே போயிடலாம். என் நண்பன் எனக்காக டாக்ஸி அமர்த்தினான். அவனை அனுப்பி வச்சுட்டு நாம கிளம்பலாம். உன்னோட சூட்கேஸை கொண்டா அப்படின்னு சொல்லி வாங்கிட்டுப் போயிட்டான். அஞ்சே நிமிஷத்துல நண்பன்கிட்டே பேசி அனுப்பி வச்சுட்டு வர்றேன்னு சொன்னவன்... ரொம்ப நேரமா வரவே இல்லை. நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொறுமை இழந்துபோயி... தூரத்துல நின்னுட்டிருந்த டாக்ஸிகிட்டே போனேன். அங்க போனதும் எனக்கு பெரிய அதிர்ச்சி காத் திருந்தது.

அது ஏதோ பழுதடைஞ்சு போன டாக்ஸி! கேட்பாரற்று ரொம்ப காலமா ஒதுக்குப்புறமா கிடந்த டாக்ஸியை.. கை காட்டி ஏமாத்திட்டுப் போயிட்டான்னு அப்புறமாதான் எனக்கு புரிஞ்சது. ஏமாற்றம் தாங்காம அங்கேயே தேம்பித் தேம்பி அழுதேன். நல்லா பொல பொலன்னு விடிஞ்சு போச்சு... வீட்டுக்குப் போறதைத் தவிர... வேற வழி? அம்மாவையும் அண்ணன்களையும் ஏமாத்திட்டு வீட்டைவிட்டு ஓடி வந்ததுக்காக... கடவுள் எனக்குப் பெரிய தண்டனையைக் கொடுத்துட்டாருன்னு நொந்து போய் திரும்பவும் வீட்டுக்கே போனேன்.

அது கிராமம் வேற... விஷயம் தீயாய் பரவிப் போச்சு. ‘வீட்டை விட்டு ஓடிப் போனவள்’



அப்படிங்கிற பட்டம் வேற கிடைச்சுடுச்சு. அம்மா வுக்கும் அண்ணன்களுக்கும் பெரிய தலைகுனிவா போச்சு. அவமானம் தாங்காம மருந்தைக் குடிக்கப் போனேன். அம்மா தடுத்துக் காப்பாத்தினதோட... என்னை வெளியூர்லே ஹாஸ்டல்லே சேர்த்து படிக்க வச்சாங்க.

நல்ல காலமா அந்த நகைகள் பறிபோகாம இருந்ததால என்னோட மேற்படிப்புக்கு ரொம்ப உதவியா இருந்துச்சு. நல்லா படிச்சு வேலைக்குப் போக ஆரம்பிச்சேன். அம்மா எனக்கு கல்யாணம் பேசத் தொடங்கினாங்க. கல்யாணமே வேண்டாம்னு மறுத்துப் பார்த்தேன். அம்மா அதுக்கு ஒப்புக்கவே இல்ல... வந்த வரன் எல்லாம் தட்டிப் போயிட்டே இருந்தது.

அம்மாவுக்கு ரொம்ப கவலையா போச்சு. கடைசியில எங்கண்ணாவோட கிளாஸ்மேட் கதிர் வீட்டுலேர்ந்து பொண்ணு கேட்டு வந்தாங்க... எங்கண்ணாவும், அம்மாவும் எப்படியாவது இந்த வரன் முடிஞ்சுடணுமேன்னு ரொம்பக் கவலை பட்டாங்க... நான் அவங்க கிட்டே தெளிவா சொல்லிட்டேன். ‘ஊருக்காரங்க மூலமா ஓடிப்போன சமாச்சாரம் தெரியறதுக்குள்ளே... நீங்களே உண்மையைச் சொல்லிடுங்க... ஓடிப் போனது பெரிய தப்புதான்... அதை நெனச்சு அணு அணுவா செத்துட்டிருக்கேன். மத்தபடி நான் எந்தக் களங்கமும் இல்லாதவள்னு எடுத்துச் சொல்லுங்க. உங்க வார்த்தையை நம்பி... கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டா அது என் அதிர்ஷ்டம்... இல்லேன்னா... தாராளமா

அவங்களும் மாப்பிள்ளைகிட்டே எல்லா விவரத்தையும் சொல்லிட்டோம். அவருக்கு உன் மேல நம்பிக்கை இருக்காம். நம்ம வார்த்தை மேல நம்பிக்கை இருக்காம். கல்யாணத்துக்கு ஒத்துகிட்டாருன்னு... அண்ணன் சொன்னாரு. கல்யாணமும் ஆச்சு. எனக்கு வாழ்க்கை கொடுத்த கதிரை... நான் கடவுளா மதிச்சு பூஜிக்க ஆரம்பிச்சேன்.

மறுவீடு போய் வந்து தனிக்குடித்தனம் தொடங்கினதிலேர்ந்தே ரொம்ப வித்தியாசமா கதிர் பேசினாரு... நின்னா திரும்பினா யோசனையில இருந்தா... 'என்ன நெனப்பெல்லாம் வேற எங்கேயோ இருக்கு போலிருக்கு'ன்னு எகத்தாளமா சிரிச்சுக்கிட்டே கேட்பாரு...

எனக்கு அப்படியே நெஞ்சுல நெருப்பள்ளிக் கொட்டற மாதிரி இருக்கும். அன்பா பாசமா நேசமா இருக்கிறவருதான்... அப்பப்போ சமயத்துல இந்த மாதிரி தேள் கொட்றாப்பல பேசிடுவாரு... எங்க வீட்டுல சொன்னா...' எனக்கு வாழ்க்கை கொடுத்தாரே... அவருக்கு பெரிய மனசு கமலி! நீ இன்னொருத்தனை மனசார காதலிச்சுத் தொலைச்சிட்டியே? அது இந்த ஊருக்கெல்லாம் அம்பலமா போயிடுச்சே? விஷயம் தெரிஞ்சுதானே... எல்லா வரன்களும் தட்டிக் கழிஞ்சு போச்சு... துணிஞ்சு நம்ம வார்த்தை மேல நம்பிக்கை வச்சு... இவர் ஒருத்தர் தானே தாலி கட்டினாரு? அந்த நன்றிக்காக நீ கொஞ்சம் விட்டுக் கொடுத்து தான் போகணும்னு அம்மாவும் அண்ணனும் கண்டிப்பா சொல்லிட்டாங்க.. அவங்க வார்த்தையை எல்லை மீற முடியலை... வேற என்ன செய்ய முடியும் சொல்லு? என் கையில வேலை இருக்கு... ... சம்பாதிச்சு சொந்தக் கால்லே நிக்க முடியும்'னு வீராப்பா பேசிட்டு பிரிஞ்சு போறதுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

ஆனா... சமுதாயத்துல வாழாவெட்டிங்கற பட்டத்தோட வாழ்ந்தாகணும்? தனியா இருக்கிற இளம்பெண் தானேன்னு கண்டவனும் வாலாட்டிப் பார்ப்பான். கண்டவங்களும் நம்மை வேறொரு சந்தேகக் கண்ணோட்டத்துலதானே பார்ப்பாங்க?

அதுக்கு பேசாம கணவனோட காலடியிலேயே விழுந்து கிடக்கலாமே? மனைவிங்கிற அந்தஸ்து கொடுத்து அன்பாதானே நடத்துறாரு... அவரு ஏதோவொரு மூடுலே ஏதாச்சும் சொல்லிட்டு போகட்டுமே? பொறுத்துப் போயிடலாமே?ன்னு சகிச்சு வாழக் கத்துக்கிட்டேன்.

இருந்தாலும்... என்னோட கடந்த கால வாழ்க்கையை நெனச்சா... என் மேல எனக்கே வெறுப்பா இருக்கு. படிக்கிற வயசுல நான் செய்த சிறு பிசகால... இன்னமும் அணு அணுவா அவமானத்தால செத்துட்டுதானே இருக்கேன்.

பெண்கள் 'சூரியகாந்திப் பூக்கள்' மாதிரி... கணவன்கிற சூரியனோட முகத்தைப் பார்த்துதான் நாம வாழ்ந்தாகணும். கிழக்கே வந்தா... கிழக்கே திரும்பியும் மேற்கே போனா... மேற்கே திரும்பியும் சூரியகாந்தி பூக்கள் தலையாட்டும்.

வாழ்நாள் முழுக்க நம்மை பாதுகாக்கக்கூடியது கணவன்தானே? கணவனோட அன்பும் அனுசரணையும் முழுமையா கிடைக்கணும்னு ஒவ்வொரு

பெண்ணும் ஏங்குவா. மண வாழ்க்கையில எந்தவித நெருடலும் இல்லாம வாழணும்னா... பொண்ணுங்க கல்யாணத்துக்கு முன்னாடி மனசை அலைபாயவே விடக்கூடாது.

சூரிய காந்தி பூக்களைப் பாரு... சூரியன் ராத்திரி மறைஞ்சு போனா... அப்படியே தலையைத் தொங்கப் போட்டுக்கும். அவருக்கு என் மேல நம்பிக்கை இருக்கிறதாலதானே தாலி கட்டியிருக்காரு... இன்னமும் கூட வாழ்ந்துட்டு இருக்காரு...

எப்பவாவது என்னை... என் மனசைப் புரிஞ்சுக்கு வாரு... என்னை எப்பவாச்சும் குத்திக்காட்டாம... முழுமையாக அன்பை என்மேல வச்சிருப்பாருங்கிற நம்பிக்கையிலதான் நான் வாழ்ந்துட்டிருக்கேன். என் இதயத்தை ஆஞ்சநேயர் மாதிரி கிழிச்சுக் காட்டினா... அதுலே கதிர் தான் விஸ்வரூபமெடுத்து நிப்பாரு... என் மனசு பூராவும் அவர்தான் ஆக்கிரமிச்சு இருக்காரு...

இதை கண்டிப்பா என்னிக்காவது ஒரு நாள் அவரு புரிஞ்சுப்பாருங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு வீணா...!

"அ.. அக்கா! உங்களைப் பார்த்தா ரொம்பவும் பெருமையா இருக்குக்கா... உங்க நம்பிக்கை வீண் போகாது அக்கா! யாரு எப்படி போனா நமக்கு என்னன்னு இருக்காம... எனக்காக என்னைத் தெளிய வைக்கவும் அந்தப் பாவி கிட்டேயிருந்து மீட்கவும் ரொம்பப் பாடுபட்டீங்களே? இந்த நல்ல மனசு வேற யாருக்கு வரும்? அதே சமயத்துல எனக்கு பயமா இருக்குக்கா... கதிர் அங்கிள் மாதிரி பெருந்தன்மை



யானவர் கிடைச்சிருந்தும்... மண வாழ்க்கையில இன்னமும் நெருடலோடதான் நீங்க வாழ்ந்துட்டிருக்கீங்க... கல்யாணமாகி இத்தனை வருஷமாகியும் கடந்தகால வாழ்க்கை உங்களை பாதிச்சுட்டுதானே இருக்கு? இதே பாதிப்புதானே எனக்கும் வரும்? நானும் காதல் வலையில சிக்கினவள் தானே? நாளைக்கு நானும் உங்களை மாதிரிதானே வேதனைப்பட்டு நிக்கணும்? பெரிய தப்பு பண்ணிட்டேனே அக்கா? நான் காலத்துக்கும் நெனச்சு வேதனைப் படறாப்பல... ஒரு காரியத்தை பண்ணிட்டேனே?" தழுதழுத்தாள் வீணா.

"இப்போதைக்கு நீ எதைப் பத்தியும் நெனக்கவே கூடாது. படிப்பு ஒண்ணுதான் உன் குறிக்கோளா இருக்கணும். உன் கவனம் முழுவதும் படிப்புலதான் இருக்கணும். உன் வாழ்க்கையே உன் படிப்புலதான் இருக்கு' அப்படிங்கிற வைராக்கியத்தோட படிச்சு நல்ல மார்க் எடுக்கணும்.

நல்லா படிச்சு நல்ல உத்தியோகத்துல உட்காரு. அதுக்கு அப்புறமா காலம்... உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும். என்னைவிட பதினாறு வயது சின்னவள். ஜெனரேஷன் கேப் இருக்கு... எதிர்காலத்துல உன்னை நல்லா புரிஞ்சுகிட்ட வாலிபன் கண்டிப்பா உனக்கு கிடைப்பான். உன் நல்ல குணத்துக்கு ஒரு குறையும் வராது, இனிமே நீ ஜாக்கிரதையா இரு... அந்த அபிஷேக் முகத்துலேயே முழிக்காதே... அவன் ஏதாச்சும் வம்பு பண்ணினா... என்ன செய்றதுன்னு அப்புறமா நாம பேசி முடிவெடுக்கலாம். இதையொரு கெட்ட கனவா நெனச்சு மறந்துட்டு- உன் வேலையைப் பாரு... இந்த விஷயம் நம்ம ரெண்டு பேத்துக்குள்ளேயே இருக்கட்டும் சரியா?"

பெண்ணும் ஏங்குவா. மண வாழ்க்கையில எந்தவித நெருடலும் இல்லாம வாழணும்னா... பொண்ணுங்க கல்யாணத்துக்கு முன்னாடி மனசை அலைபாயவே விடக்கூடாது.

சூரிய காந்தி பூக்களைப் பாரு... சூரியன் ராத்திரி மறைஞ்சு போனா... அப்படியே தலையைத் தொங்கப் போட்டுக்கும். அவருக்கு என் மேல நம்பிக்கை இருக்கிறதாலதானே தாலி கட்டியிருக்காரு... இன்னமும் கூட வாழ்ந்துட்டு இருக்காரு...

எப்பவாவது என்னை... என் மனசைப் புரிஞ்சுக்கு வாரு... என்னை எப்பவாச்சும் குத்திக்காட்டாம... முழுமையாக அன்பை என்மேல வச்சிருப்பாருங்கிற நம்பிக்கையிலதான் நான் வாழ்ந்துட்டிருக்கேன். என் இதயத்தை ஆஞ்சநேயர் மாதிரி கிழிச்சுக் காட்டினா... அதுலே கதிர் தான் விஸ்வரூபமெடுத்து நிப்பாரு... என் மனசு பூராவும் அவர்தான் ஆக்கிரமிச்சு இருக்காரு...

இதை கண்டிப்பா என்னிக்காவது ஒரு நாள் அவரு புரிஞ்சுப்பாருங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு வீணா...!

“அ.. அக்கா! உங்களைப் பார்த்தா ரொம்பவும் பெருமையா இருக்குக்கா... உங்க நம்பிக்கை வீண் போகாது அக்கா! யாரு எப்படி போனா நமக்கு என்னன்னு இருக்காம... எனக்காக என்னைத் தெளிய வைக்கவும் அந்தப் பாவி கிட்டேயிருந்து மீட்கவும் ரொம்பப் பாடுபட்டீங்களே? இந்த நல்ல மனசு வேற யாருக்கு வரும்? அதே சமயத்துல எனக்கு பயமா இருக்குக்கா... கதிர் அங்கிள் மாதிரி பெருந்தன்மை



யானவர் கிடைச்சிருந்தும்... மண வாழ்க்கையில இன்னமும் நெருடலோடதான் நீங்க வாழ்ந்துட்டிருக் கீங்க... கல்யாணமாகி இத்தனை வருஷமாகியும் கடந்தகால வாழ்க்கை உங்களை பாதிச்சுட்டுதானே இருக்கு? இதே பாதிப்புதானே எனக்கும் வரும்? நானும் காதல் வலையில சிக்கினவள் தானே? நாளைக்கு நானும் உங்களை மாதிரிதானே வேதனைப் பட்டு நிக்கணும்? பெரிய தப்பு பண்ணிட்டேனே அக்கா? நான் காலத்துக்கும் நெனச்சு வேதனைப் படறாப்பல... ஒரு காரியத்தை பண்ணிட்டேனே?” தழுதழுத்தாள் வீணா.

“இப்போதைக்கு நீ எதைப் பத்தியும் நெனக்கவே கூடாது. படிப்பு ஒண்ணுதான் உன் குறிக்கோளா இருக்கணும். உன் கவனம் முழுவதும் படிப்புலதான் இருக்கணும். உன் வாழ்க்கையே உன் படிப்புலதான் இருக்கு’ அப்படிங்கிற வைராக்கியத்தோட படிச்சு நல்ல மார்க் எடுக்கணும்.

நல்லா படிச்சு நல்ல உத்தியோகத்துல உட்காரு. அதுக்கு அப்புறமா காலம்... உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும். என்னைவிட பதினாறு வயது சின்னவள். ஜெனரேஷன் கேப் இருக்கு... எதிர்காலத்துல உன்னை நல்லா புரிஞ்சுகிட்ட வாலிபன் கண்டிப்பா உனக்கு கிடைப்பான். உன் நல்ல குணத்துக்கு ஒரு குறையும் வராது, இனிமே நீ ஜாக்கிரதையா இரு... அந்த அபிஷேக் முகத்துலேயே முழிக்காதே... அவன் ஏதாச்சும் வம்பு பண்ணினா... என்ன செய்றதுன்னு அப்புறமா நாம பேசி முடிவெடுக்கலாம். இதையொரு கெட்ட கனவா! நெனச்சு மறந்துட்டு... உன் வேலையைப் பாரு... இந்த விஷயம் நம்ம ரெண்டு பேத்துக் குள்ளேயே இருக்கட்டும் சரியா?”

"சரிங்கக்கா!" கண்ணீரைத் துடைத்தபடியே கதவைத் திறந்தவள் அதிர்ந்து போனாள்.

வாசலில் அவளது அம்மாவும் அப்பாவும் நின்றிருந்தனர். திறந்திருந்த ஜன்னல் அருகே கதிர் நின்றிருந்தான்.

மூவரையும் ஒருசேரப் பார்த்துவிட்டு... இரு வரும் திகைத்துப்போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 10



"என்ன கமலி? நாங்க எதுக்காக உங்க வீட்டுக்கு வந்திருக்கோம்னு பார்க்கிறீங்களா?" சிரித்தபடி கேட்டாள் வீணாவின் அம்மா சாந்தா.

"வீணாவை நீங்க ஸ்கூல்லே இருந்து கூட்டிட்டுப் போனதால... பாட்டிக்கு உடல்நிலை பரவாயில்லையா?ன்னு விசாரிக்கிறதுக்காக... இவங்க மிஸ் போன் பண்ணினாங்க. இவங்க மிஸ் எனக்கு ஃபிரண்ட்தான்... நான் குழம்பிப் போயிட்டேன். அவருக்கு போன் பண்ணி சொன்னேன். நீங்களும் இவளும் திக்கஸ்ட் ஃபிரண்ட்ஸ்னு எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் எதோவொரு முக்கியமான பிரச்சினையா இருக்குமோ?ன்னு டென்ஷன் வர்றேன்னு



சொல்லி... என்னோட ஆபீசுக்கு வந்துட்டாரு... ரெண்டு பேருமா சேர்ந்து வந்தோம்.

சமையல்காரம்மா எங்களைப் பார்த்துட்டு... வீணாவை உங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போனதா சொன்னாங்க... நாங்க வந்த நேரத்துல தற்செயலா கதிரும் வந்துட்டாரு... நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருந்ததை எல்லாம் நாங்க கேட்டோம் கமலி! எங்க பொண்ணை மிகப் பெரிய இக்கட்டுலேர்ந்து மீட்டுட்டீங்க... இதுக்கு நாங்க ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கோம். அத்தோட எங்க கண்ணையும் தொறந்து வச்சுட்டீங்க... ஓடி ஓடி பொண்ணுக்காக தானே சேர்த்து வைக்கிறோம்கிற நெனப்புலேயே இருந்தோமே தவிர அவகிட்ட பாசத்தையும் பரிவையும் அன்பையும் காட்டத் தவறிட்டோம்.

எங்க தவறால... அவ தவறப் பார்த்தா.. எங்க தப்பு என்னன்னு தெளிவா தெரிஞ்சு போச்சு... இனிமே நாங்க வீணாவை எங்க கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்போம். எங்கம்மா எத்தனையோ வாட்டி எனக்கு எடுத்துச் சொன்னாங்க...

அப்போ நான் அசட்டையா இருந்துட்டேன். நீங்க மட்டும் இல்லேன்னா... எங்க வீணாவோட வாழ்க்கையே வீணா போயிருக்குமே? பெத்த தாய் நானே அவளைப் புரிஞ்சுக்கலை... நீங்க பெத்த தாய்க்கும் மேலாவும் ஒரு சகோதரியாவும் இருந்து நல்ல வழிக்கு அவளை மீட்டுட்டீங்க... ரொம்ப ரொம்ப நன்றி கமலி!"

கைகளைக் கூப்பினாள் சாந்தா.

"பிஸினஸ்லே பத்தை நூறாக்கணும். பொண்ணுக்காக ஏராளமாக சொத்து சேர்க்கணும்கிற குறியில பறந்துட்டிருந்தேன். என் பொண்ணுக்கு அவ சந்தோஷத்துக்கு நிம்மதிக்கு என்ன தேவைன்னு நான் புரிஞ்சுக்கவே இல்ல... இன்னும் கொஞ்சம் கண்டுக்காம விட்டிருந்தா... நீங்களும் தலையிடாம இருந்தீங்கன்னா... என் பொண்ணோட கதி ரொம்ப மோசமாயிருக்குமே? எதிர்காலமே கேள்விக்குறியா போயிருக்குமே? பக்கத்து வீட்டுக்காரங்க கிட்டே பழகாம நான் உண்டு என் வேலை உண்டு'ன்னு போயிட்டிருந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?னு புரிஞ்சுகிட்டோம்.

கூடப் பிறந்த சகோதரி மாதிரி அக்கறை எடுத்து எங்க பொண்ணுக்கு தெளிவா எடுத்துச் சொல்லி நல்ல கவுன்சிலிங் கொடுத்துட்டீங்க.. உங்களுக்கு நாங்க எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலைம்மா... கதிர் சார்! இப்படியொரு நல்ல மனைவி கிடைக்க... நீங்க குடுத்து வச்சிருக்கணும். பெத்தவங்களோட கடமை என்னன்னு... எங்களுக்கு நல்லா புரிய வச்சுட்டாங்க உங்க கமலி... இவங்களுக்குதான் எவ்வளவு பெருந்தன்மை, மனிதநேயம் ரியலி ஷிஇஸ் வெரி கிரேட்! பக்கத்து வீட்டுல கொலை நடந்தா கூட எட்டிப் பார்க்காம இருக்கிற இந்த காலத்துல... இப்படியொரு பொண்ணுன்னு பிரமிப்பா இருக்கு சார்!

சாந்தாவும் மகளின் தோளில் கையைப் போட்டபடியே நடந்து சென்றாள்.

"அன்புக்காக ஏங்கிய இந்த சின்னஞ்சிறு புறாவுக்கு கதகதப்பான அணைப்பும் பாதுகாப்பும்



கிடைச்சிருச்சு. இனிமே அவளுக்கு எந்தக் கவலையும் இருக்காது. வீணாவை அவங்க நல்லா புரிஞ்சுகிட்டாங்க..."

தன்னையும் அறியாமல் முணுமுணுத்தபடி... கண்கள் பனிக்க.. அவர்கள் செல்வதையே இமை கொட்டாமல் பார்த்தாள் கமலி.

"அவங்க மட்டுமா புரிஞ்சுகிட்டாங்க? நானும் தான் உன்னை நல்லா புரிஞ்சுகிட்டேன்...? என்ற குரலைக் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

"அவங்க வந்தப்பவே நானும் வந்துட்டேன். நானும் நீ பேசினதை ஒண்ணு விடாம கேட்டுட்டேன். உன் மேல நம்பிக்கை வச்சுதான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன். இருந்தாலும் திடீர் திடீர்னு கண்டபடி சந்தேகம் தலைதூக்கத்தான் செஞ்சது. அந்த மாதிரி சமயத்துல தான் உன் மனசு நோகறாப்பல குத்தி பேசிடுவேன். அடுத்த நிமிஷமே உன்னோட கலங்கின முகத்தை பார்த்துட்டு... தனிமையில என்னை நானே நொந்துக்குவேன். யாரோ ஒரு பக்கத்து வீட்டுப் பொண்ணு தடம் மாறிப் போயிடக்கூடாதுன்னு... இவ்ளோ மெனக்கெட்டிருக்கே.. மனசு விட்டு மறைக்காம பகிரங்கமா உன்னைப் பத்தியும் எடுத்து சொன்னே பாரு! அப்போ உன்னோட வெள்ளை மனசையும் பரந்த உள்ளத்தையும், பெருந்தன்மையையும் புரிஞ்சுக்கிட்டேன்.

இந்த சூரிய காந்தி பூவை நான் பரிபூரணமா ஏத்துக்கிறேன். சூரிய காந்தி பூவை... கதிரோட முழு அன்புக்காக ஏங்கித் தவிச்ச சூரிய காந்தி பூவை... பூ முகத்தை நான் வாடவே விட மாட்டேன். இது சத்தியம்!

நான் உன்னை இன்னிக்கு முழுசா புரிஞ்சுகிட்டேன் கமலி! இதைப் புரிய வச்சதுக்காக வீணாவுக்கு தான் நன்றி சொல்லணும். அவளுக்கு கவுன்சிலிங் கொடுக்கப் போய்... அதை நான் கேட்கப் போய்தானே... உன்னை நான் புரிஞ்சுக்க முடிஞ்சது. இத்தனை காலமா உன்னோட நல்ல மனசை நோகடிச்சதுக்காக... நான் ரொம்ப வருத்தப்படறேன். அயாம் ஸோ சாரி கமலி"

"ஐயோ... பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க ப்ளீஸ்."

"அப்போ... ஐ லவ் யூ'ன்னு சொல்லட்டுமா?"

குங்குமப் பூவாய் முகம் சிவந்து தலை குனிந்தவளை இதமாய் அணைத்துக் கொண்டான் கதிர்.

**முற்றும்**

# ''கண்ணுக்குள் ஒரு கவிதாஞ்சலி...!''

## 1



**ம**ழையை பூமிக்கு அனுப்பி, மண் வாசனையை எழுப்பி, பூக்களின் நலம் விசாரிக்கத் தொடங்கியது வானம்.

வழக்கம் போல் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து விட்டிருந்தாள் அஞ்சலி.

குளிரோ மழையோ எதையுமே பொருட்படுத்த மாட்டாள். சில்லென்ற நீரில் குளித்து முடித்து விடுவாள்.

''ரொம்ப சில்லுன்னு இருக்கே... எனக்கு வெந்நீர் வேண்டும்'' என்றோ... அல்லது ''நான் அப்புறம் வெயில் வந்ததற்கு பின்பு குளிக்கிறேனே'' என்றோ அவள் சிணுங்கியது இல்லை.

இன்றும் அப்படித்தான்... குளித்துவிட்டு வந்தவள்... முற்றத்தில் பெய்த மழையை சில கணங்கள் நின்று ரசித்தாள்.

பின் பக்கத்து தோட்டத்திற்குச் சென்று... மழையில் நனைந்து இலேசாய் தலை குனிந்திருந்த மஞ்சள் ரோஜாவை காம்புடன் கிள்ளிப் பறித்தாள்.

ஒவ்வொரு இதழ்களுக்கு அடியிலும் ஒளிந் திருந்த மழைத் துளிகளை... இலேசாக உதறி சிதறடித்து விட்டு... ரோஜாவை, கூடத்தில் நடு நாயகமாக மாட்டப்பட்டிருந்த அம்மாவின் படத்திற்கு சூட்டினாள்.

அம்மா தேவகி, நான்கு சட்டத்திற்குள் அடங்கி சாந்தமாய் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தாள்.

''எங்களை விட்டுட்டுப்போக... உனக்கு எப்படிம்மா மனசு வந்தது? பாட்டிக்கும் உடம்புக்கு முடியலையேம்மா... வயசானவங்க... இன்னும் எத்தனை காலத்துக்கு எங்களுக்கு ஆதரவா இருப்பாங்க? அரக்க குணம் படைச்ச அப்பா... எங்களை ஆட்டிப் படைக்கிறாரே? அவரோட கொடுமை தாங்க முடியாமதானே... மாரடைப்பு வந்து... நீ ஒரேயடியா இந்த உலகத்தை விட்டுப் போயிட்டே...

அக்கா மைதிலியை பாழுங்கிணத்துல அப்பா தள்ளி விட்டுட்டாரு... அந்தக் கொடுமையை எல்லாம்... நீ பார்த்திருந்தா புழுவா துடிச்சுப் போயிருப்பே... எனக்கும் தங்கச்சி ஷர்மிலிக்கும் அப்பா எந்த மாதிரி வேட்டு வைக்கப் போறாரோ?ன்னு... பாட்டியும் நாங்களும் பயந்து செத்துகிட்டு இருக்கோம். நல்லா படிக்க வச்சு சொந்தக் கால்லே நின்னு கை நிறைய சம்பாதிக்கும்படி என்னை உருவாக்கிட்டே... ஆபீஸை விட்டு வீட்டுக்கு வரணும்னாலே... நரகத்துக்குப் போகிற மாதிரி மனம் கசந்து போகுது. பாட்டி மட்டும் இல்லேன்னா... எங்க நிலைமை என்ன ஆயிருக்கும்னு... நெனச்சுக் கூடப் பார்க்க முடியலை. இப்போ அவங்களுக்கும் உடம்பு முடியலை... ஷர்மிலி படிச்சு முடிக்கணும்... எதிர் காலத்தை நெனச்சா... ரொம்ப



பயமா இருக்கும்மா... ஏடாகூடமா அப்பா என்ன வேணாலும் பண்ணிடுவாரே? எங்களுக்கு எப்போ விடிவு காலம் பிறக்கும்?'னு தெரியலையே அம்மா! விடிவு காலம் பிறக்குமா? இல்ல... மைதிலி அக்காவுக்கு ஏற்பட்ட கதியே எங்களுக்கும் நேர்ந்திடுமா?'ன்னு தெரியலையேம்மா...!''

அஞ்சலி உள்ளூர புலம்பியபடி... அம்மா தேவகியின் படத்தைத் தொட்டு வணங்கினாள்.

விழிகளிலிருந்து மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

''அம்மாடி அஞ்சலி!'' மெல்லிய குரலில் பாட்டி மரகதம் அழைக்கும் சப்தம் கேட்கவே... சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... இடது பக்கத்திலிருந்த அறைக்குள் புகுந்தாள்.

''என்ன பாட்டி? நைட்டெல்லாம் இருமிட்டே இருந்தீங்களே? மிளகும் சுக்கும் தட்டிப் போட்டு கஷாயம் வச்சு தரட்டுமா?'' என்றபடி ஆதரவாய் அவரது கையைப் பற்றிக் கொண்டாள்.

''மழைக்காலமா இருக்குல்ல... அதான்! இருக்கிற வேலைகள் உனக்குப் போதாதா? இப்பத்துல இருந்து பம்பரமா சுழண்டு வேலை பார்க்கப் போறே... டிபன், சாப்பாடு செய்து வச்சுட்டு ஆபீசுக்கு ஓடணும்... சாயந்தரமா அலுத்துக் கலைச்சு ஆறு மணிக்கு மேல தான் வீட்டுக்கு வர்றே... உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு... என்னைப் பத்தின கவலையை விடு... இந்தா! இதைக் கட்டிக் கிட்டு வாம்மா... இன்னிக்கு உனக்கு பிறந்தநாள்... அதுகூட உனக்கு ஞாபகம் இல்லையா?''

அஞ்சலி வியப்புடன் அந்த அட்டைப் பெட்டியைப் பிரித்தாள். அவளுக்குப் பிடித்த மயில் கழுத்து வண்ணத்தில்

சில்க் காட்டன் புடவை... பொருத்தமான வண்ணத்தில் தைக்கப்பட்டிருந்த ரெடிமேட் ரவிக்கை...!

''இன்னிக்கு எனக்கு பிறந்தநாளா? ஞாபகமே இல்லை பாட்டி எப்போ கடைக்குப் போய் இதை வாங்கிட்டு வந்தீங்க? எதுக்கு உங்களுக்கு வீண் சிரமம்? இந்த தள்ளாத வயசுல...'' அவள் பேசி முடிக்கும் முன்... கையமர்த்தினார் மரகதம்.

''போன வாரம் ஷர்மிலியை கூட அழைத்துப் போய் வாங்கி வச்சேன். இதுல என்ன சிரமம் இருக்கும்மா...? உன் பிறந்தநாள்கூட உனக்கு ஞாபகத்துல இல்ல... அந்தளவுக்கு உனக்கு கவலை... பெத்த தகப்பன் உங்களை ஆட்டிப் படைக்கிறான். அவனைப் பெத்த பாவி நான்... நீங்க படற பாட்டை தினமும் கையாலாகாததனமா வேடிக்கை பார்த்துட்டிருக்கேனே? நான் ஒரு மகா பாவி அஞ்சலி.''

''அப்படியெல்லாம் பேசாதீங்க பாட்டி! பாவம்! நீங்க என்ன பண்ணுவீங்க? பல வருஷமா எத்தனையோ வாட்டி அப்பாகிட்டே கெஞ்சியும் பார்த்தீங்க... சத்தம் போட்டும் பார்த்தீங்க... என்னை பிரயோசனம்? நாளுக்கு நாள் அவரோட அராஜகம் கூடிட்டுதான் போகுதே தவிர... குறைஞ்சபாடில்லை. இது உங்க கை மீறிப் போன விஷயம்... நீங்க என்ன செய்ய முடியும்?''

''பெத்தவ நான்தானே அஞ்சலி? என்னோட வளர்ப்பு சரியில்லைன்னு தானே அர்த்தம்? இந்தக் குற்ற உணர்வு எனக்கு இருக்கத்தானே செய்யும்?''

''உங்க வளர்ப்பிலே குறை சொல்ல முடியாது பாட்டி...! கடந்த பத்து வருஷங்களுக்கு முன்னாடி வரைக்கும்... அன்பானவரா நல்ல கணவரா குடும்பத் தலைவரா இருந்திருக்காரே? கெட்ட சகவாசத்தாலே



புத்திமாறிப் போயி... ரொம்ப மோசமானவரா மாறிட்டாரு... உங்க வளர்ப்புலே எந்தத் தப்பும் இல்லை பாட்டி... வருத்தப்படாதீங்க...''

வருத்தப்படாம எப்படி இருக்க முடியும்? நான் பெத்த பிள்ளை குடிகாரனா போக்கிரியா துக்கிரியா மாறிட்டான். இந்த வேதனையில்ல என்னோட மருமக போய் சேர்ந்துட்டா....வயசுக்கு வந்த பேத்திங்க ளோட வாழ்க்கையை சீரழிச்சுடுவானோ?ன்னு ரொம்ப பயமா இருக்கே... அந்த பாழாய் போன சிகாமணிகூட சேர்ந்து கூட்டு வியாபாரம் பண்றேன்னு... உங்கப்பன் சொன்னப்பவே நான் தடுத்துப் பார்த்தேன்... இவன் கேட்கலை... சகவாச தோஷத்தாலே குடி சூதாட்டம்னு எல்லா கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையா ஆனதோட... போதை தலைக்கேறிட்டா... வீட்டுக்கு வந்து பொண்டாட்டி பிள்ளைங்களை இழுத்துப்போட்டு அடிக்க ஆரம்பிச்சுட்டான். உங்கம்மா அப்பிராணி... இதுவே வேற எந்தப் பெண்ணாக இருந்தாலும்... கண்டிப்பா தன் பெண்களை அழைச்சுட்டு வெளிநடப்பு பண்ணியிருப்பா... நம்ம குடும்பத்தோட பாரம்பரியமும் கவுரவமும் கெட்டுப் போயிடக் கூடாதுன்னு... மென்னு முழுங்கிட்டு கம்முனு இருந்துட்டா...

வீட்டு செலவுக்குகூட சல்லிப் பைசா அவன் தர்றதில்லை... உங்கம்மா டீச்சர் வேலைக்குப் போய் தான் குடும்ப பாரத்தை இழுத்துட்டுப் போனா... எல்லாத்தையும் சகிச்சவதான்... ஆனா மூத்த மகளை கண்மூடித்தனமா உங்கப்பன் பாழுங்கிணத்துல தள்ள துணிஞ்சுட்டான்'னு தெரிஞ்சதும்... துக்கம் தாளாம கண்ணை மூடிட்டா.

கடவுள் புண்ணியத்துல பரம்பரையா வந்த இந்த சொந்த வீடு இருக்கிறதால... வாடகைப் பிரச்சினை இல்லாம

இருக்கோம். நீ கை நிறைய சம்பாதிக்கிறே... நிம்மதியா பணத்தை வீட்ல வச்சிருக்க முடியுதா? வயசுப் பொண்ணு வெளியில போய் உழைச்சு சம்பாதிச்ச காசைக்கூட உங்கப்பன் திருடிடறான். இந்த எல்லாக் கொடுமைகளையும்கூட சகிச்சுக்கலாம்...

கொஞ்ச நாளாவே இவன் போக்கு ஒரு தினுசா படறதைத்தான் என்னால தாங்கிக்கவே முடியலை அஞ்சலி! கவலையில் நான் பொசுக்னுன்னு போயிட்டா... உங்க ரெண்டு பேரோட கதியென்ன? அந்த சிகாமணியை அடிக்கடி வீட்டுக்கு உங்கப்பன் கூட்டிக்கிட்டுவர ஆரம்பிச்சுட்டான்? ''நல்லதுக்கு நரி முட்டையிடலை'ன்னு பெரியவங்க சொல்வாங்க... இந்த நரிப்பய என்னத்துக்கு நம்மை வீட்டைச் சுத்தி சுத்தி வர்றான்?'' என்றபடி தேம்பினார் பாட்டி மரகதம்.

அஞ்சலியால் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியலை. இதே கவலைதான் அவளது மனதையும் செல்லாய் அரித்துக் கொண்டிருந்தது.

இளைத்து கறுத்து எலும்பும் தோலுமாய் கண்களில் ஜீவன் தொலைந்து போயிருந்த பாட்டி தேம்பி அழுததை... அவளால் காண சகிக்க முடியவில்லை.

''நடக்கிறது நடக்கட்டும்... கடவுள் மேல பாரத்தைப் போட்டு நம்ம கடமையை செஞ்சுட்டு இருக்க வேண்டியதுதான். ஏற்கனவே உங்களுக்கு உடம்புக்கு முடியலை... இப்படி கவலைப்பட்டு அழுதா... அது உடல் நிலையை இன்னும் பாதிக்கும் பாட்டி! விட்டுத் தள்ளுங்க... இன்னிக்கு எனக்கு பிறந்தநாள்... நீங்க அழுதுட்டிருந்தா எனக்கும் அழுகை வருது...'' தழுதழுத்தாள் அஞ்சலி.

''இ... இல்லடா செல்லம்! நீ இன்னிக்கு அழக் கூடாது போய் இந்தப் புடவையைக் கட்டிக்கிட்டு வா... இந்தக் கலர் உனக்கு ரொம்ப எடுப்பா இருக்கும்.''



துக்கத்தை மென்று விழுங்கிவிட்டு கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு... வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்டார் பாட்டி மரகதம்.

புடவையை நேர்த்தியாக கட்டி நீண்ட கூந்தலை வாரி தழையப் பின்னலிட்டு முடித்து... காதோரமாய் ஒற்றை பன்னீர் ரோஜாவை செருகிக் கொண்டு அறைக்குள் புகுந்தாள்.

''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க பாட்டி.''

''தீர்க்காயுசா சவுபாக்கியவதியா நீ நீடூழி வாழணும்.''

தனது பாதங்களைத் தொட்டுப் பணிந்தவளின் அழகு முகத்தை மெல்ல வருடி விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்து திருஷ்டி கழித்தார்.

''கோவிலுக்குப் போய் உன் பேர்லே அர்ச்சனை பண்ணிட்டு வந்துடு அஞ்சலி! கூட ஷர்மிலியையும் கூட்டிட்டுப் போ...''

''டிபன் பண்ணணும். சாப்பாடு செய்யணும். ஆபீசுக்கு லேட்டாயிடுமே பாட்டி! நா சாயந்தரமா ஆபீஸ்விட்டு வந்து கோவிலுக்குப் போயிக் கிறேனே.''

''சரிம்மா உன் இஷ்டம்...!'' என்றபடி விழிகள் அகல, அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

''என்ன பாட்டி? இப்படி பார்க்கிறீங்க?'' கேட்ட படியே பக்கத்தில் இருந்த அடுக்களைக்குள் புகுந்தாள்.

பாட்டி மெதுவாக அவளைப் பின்தொடர்ந்து வந்தார்.

''அப்படியே அந்த மகாலட்சுமியே நேர்லே வந்தாப்பல இருக்கு. கையெடுத்து கும்பிடலாம் போலிருக்கு. அப்படியொரு தெய்வீக அழகோட இருக்கே நீ....! கண் குளிரப் பார்த்து ரசிக்க உங்கம்மாவுக்குத்தான் குடுத்து வைக்கலை...''

பால் குக்கரை அடுப்பிலேற்றி விட்டு... அஞ்சலி ஏதோ பதில் சொல்வதற்கு வாயெடுத்தாள்.

''இன்னிக்கு உனக்கு பிறந்தநாளா? பேஷ்! தூக்கம் கலைஞ்சு போயி மாடியிலேர்ந்து இறங்கி வந்தது நல்லதா போச்சு. இல்லேன்னா... யாருமே என்கிட்டே விஷயத்தை சொல்லியிருக்க மாட்டீங்க... அப்படித்தானே?''

ஏதோ பெரிய ஜோக்கடித்து விட்டாற்போல் கடகடவென்று சிரித்தார் மூர்த்தி.

அஞ்சலிக்கும் பாட்டிக்கும் தூக்கிவாரிப் போட்டது.

இருவரும் பதில் ஏதும் சொல்லாமல்... அர்த்த பாவனையுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விட்டு அமைதி காத்தனர்.

''இன்னிக்கு சாயந்தரம் ஆபீஸை விட்டு வந்ததும்... சூப்பரா ஒரு டின்னர் ரெடி பண்ணும்மா... என்னோட நண்பன் சிகாமணி வருவான். 'விருந்து அபாரமா இருக்கு'ன்னு பாராட்டு வாங்கணும்... சரியா? இன்றைய முக்கிய விருந்தாளி யாரு தெரியுமா? நம்ம ராஜதுரைதான்... எவ்வளவு பெரிய வி.ஐ.பி. நம்ம வீட்டுக்கு வர.... நாம குடுத்து வச்சிருக்க வேணாமா? சமீப காலமாகவே ராஜதுரை நம்ம வீட்டுக்கு வந்து போகணும்னு ஆவலா இருந்தாரு... இது நல்ல சந்தர்ப்பம்... நாம்ம அசத்திடலாம்...''

''டேய்... என்னடா இது? ராஜதுரையை எதுக்கு கூப்பிடறே... அவனும் அவங்கப்பனும் சாராயம் காய்ச்சியே முன்னுக்கு வந்தவங்கடா... அவன் எல்லாம் வி.ஐ.பி.யா? வயசுப் பொண்ணுங்க இருக்கிற வீட்டுக்கு கண்ட கண்ட காலிப் பசங்களை... எண்ணத்துக்கு கூப்பிடறே? உனக்கு புத்தி கித்தி கெட்டுப் போச்சா?''



பாட்டி கொந்தளித்துப் போய் கேட்கத்தான் செய்தார்.

''சூ...! சும்மாயிரு... வரவர உன்னோட தொல்லை ஜாஸ்தியா போச்சு. நான்தான் குடும்பத் தலைவன்... இங்க நான் வச்சதுதான் சட்டம். மறுத்தாலோ மீறினாலோ... ஃபுல்லா குடிச்சுட்டு அடிப்பேன். கண்டபடி ஏசுவேன்... தெருவே நாறிப் போயிடும் பரவாயில்லையா?'' கேட்டுவிட்டு மீண்டும் நகைத்தார் மூர்த்தி.

அஞ்சலிக்கு கிடுகிடுவென்ற நடுக்கம் உடலெங்கும் கிளைவிட்டுப் படர்ந்தது.

''அடப்பாவி! நீயெல்லாம் ஒரு அப்பனா?'' பாட்டி தழுதழுத்தார்.

''பாட்டி! சும்மாயிருங்க... உங்களை கைநீட்டிடப் போறாரு. நீங்க தாங்க மாட்டீங்க... எதிர்த்துப் பேசவேணாம். ப்ளீஸ்.''

மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

மூர்த்தி சீட்டியடித்தபடியே மாடியேறிப் போனார்.

''பாட்டி! நேத்துதான் சம்பளம் வாங்கினேன். மைதிலி அக்கா ஆபீசுக்கு போன் பண்ணி ரொம்ப அழுதா... அத்தான் குடிச்சுட்டு வந்து அவளை பெல்ட்டால விளாசித் தள்ளிட்டாராம். எல்லாம் பணத்துக்குத்தான். 'எதுக்குக்கா பட்டுட்டே இருக்கே? பேசாம நம்ம வீட்டுக்கு வந்துடு'ன்னு நான் சொன்னேன். ஆறுமாசத்துல பெண்குழந்தை இருக்கு. நான் வந்தா வீட்டுல ரெண்டு தங்கச்சிங்களோட எதிர்காலம் பாதிக்கப்படுமேன்னு... அக்கா அழுறா... அவ வாழாவெட்டியா இருந்தா எங்களுக்கு கல்யாணமே ஆகாது'ன்னு புலம்பினா... ஆபீஸ் முடிஞ்சதுமே அவ வீட்டுக்குப்போயி பாதி சம்பளப் பணத்தை குடுத்துட்டுதான் வந்தேன். இதை சொன்னா... நீங்க மனசு வருத்தப் படுவீங்கன்னு... கம்முனு இருந்துட்டேன்.

பாதி சம்பளத்தை வச்சு ஷர்மிலிக்கு காலேஜ் ஃபீஸ் கட்டணும். இந்த மாசத்தை ஓட்டணும். அப்பா செலவுக்கு கேட்கிறப்போ பணத்தை எண்ணி வைக்கணும். இதுல விருந்து ஏற்பாடு வேற? எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியலையே? அவரு சொன்னதை செய்யக்கூடியவர் பாட்டி! அதான் பயமா இருக்கு.''

மெல்லிய குரலில் புலம்பினாள் அஞ்சலி.

''அவன் சொல்றதுக்கெல்லாம்... நம்ம தலையாட்டினா எப்படி அஞ்சலி? ராஜதுரை ஒரு பொறுக்கி! அவனைக் கூப்பிட்டு விருந்து வைச்சா... அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க என்ன நினைப்பாங்க? இதுவே அந்த சிகாமணி வேற வர்றானாம்... தூத்தேறி!

ஐயையோ...! இந்த மூர்த்தி வேற எதுக்கோ அடிகோல் போடறானோ? மொத்தத்துலே... உனக்குப் பெரிய ஆபத்து காத்திருக்கு அஞ்சலி!''

அஞ்சலிக்கு பயத்தில் நா உலர்ந்தது. அடி வயிற்றில் ஒரு பயப்பந்து வேகமாய் உருண்டது.

## 2

அஞ்சலியின் விழிகளில் 'குபுக்' என்று வெப்பநீர் ஊற்றெடுத்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து சிரமப்பட்டு கண்களை இருமுறை சிமிட்டி பொங்கிய கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள்.

துக்கம் பந்தாய் எழும்பி அவளது தொண்டையை அடைத்துக் கொண்டிருந்தது.



''பூவோ? பொன்னோ?ன்னு பொத்திப் பொத்தி வளர்த்தோமே? பாவம்... மைதிலி எப்படியெல்லாம் வலியில துடிச்சாளோ? அவ முதுகுத் தோல் உரியும்படியா பெல்ட்டால அவ புருஷன் விளாசித் தள்ளியிருக்கானே? கட்டிக்குடுத்த நாள்லே இருந்து அவ சித்ரவதை தானே பட்டுட்டு இருக்கா? மூத்த பேத்தியை நெனச்சு நான் கவலைப்படுறதா இல்ல... உன்னையும் ஷர்மிலியையும் நெனச்சு அழறதா? விருந்துக்கு ஏற்பாடு பண்ணுன்னு உத்தரவு போட்டுட்டு போயிட்டான் உங்கப்பன்... பண்ணாம இருந்தால்... உங்க ரெண்டு பேத்தையும் வருத்தி எடுத்துடுவான். ஏற்பாடு பண்ணினா... கண்ட காவாலி பசங்க வீட்டுக்குள்ளே வருவானுங்க... இந்தக் கொடுமையை எல்லாம் கண்ணார பார்த்துட்டி ருக்கேனே? பேசாம பகவான் என்னை எடுத்துட்டுப் போயிடக்கூடாதா...?''

பாட்டி மரகதம் அப்படியே சரிந்து அமர்ந்து கேவி அழுதார்.

முதுகு குலுங்க தீனமாய் அழுதவரைத் தேற்றும் வகை தெரியாமல்... சில கணங்கள் வெறித்துப் பார்த்தாள் அஞ்சலி.

முட்டிக்கொண்டு வந்த அழுகையை அடக்கிய படி... சட்டென்று முழங்காலிட்டு அமர்ந்தாள்.

''என்ன பாட்டி இது? பெரியவங்க நீங்க... நீங்களே இப்படி மனசு ஒடிஞ்சு அழுதா எப்படி பாட்டி? நீங்க தானே எங்களுக்கு ஆறுதல் சொல்லி தைரியமூட்டணும்? இன்னிக்கு நேத்தா அப்பா இப்படி ஏடாகூடமா நடந்துக்கிறாரு? தினமும் ஏதாச்சும் ரோதனை பண்றதே அவரோட வாடிக்கையா போச்சே? கவலைப்பட்டு அழுதா எல்லாம் மாறிடப் போகுதா பாட்டி? சொல்லுங்க...''

வாத்சல்யத்துடன் பாட்டியின் கண்ணீரைத் துடைத்து... ஆதரவாய் அவரது புஜத்தில் கை வைத்தாள்.

''இந்த புத்திகெட்டப் பயல் ஏடாகூடமா நடந்துக்கிடறவன்தான் நான் இல்லேங்கல... ஆனா இன்னிக்கு உனக்கொரு கண்டிஷன் போட்டானே? அது உன்னை பெரிய இக்கட்டுல மாட்டி விட்டுரும்னு... என் உள் மனசு எச்சரிக்குதே அஞ்சலி? அதான் ரொம்பவே பயமா இருக்கு... அந்த ராஜதுரையையும் அவனோட அப்பனையும் பத்தி நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கேன். சரியான பொம்பளைப் பொறுக்கி பசங்க... இதெல்லாம் போதாதுன்னு சிகாமணியும் வர்றானாமே?''

''அந்தாளு அப்பாவோட நண்பராச்சே? அவரு அடிக்கடி வீட்டுக்கு வந்துட்டு தானே இருக்காரு? அவரை நெனச்சு... ஏன் பயப்படறீங்க பாட்டி?''

''வயதுக்கு மீறின பொறுப்புணர்ச்சியோட நீ நடந்துக்கிடறவள்தான்... ஆனா உனக்கு அனுபவம் பத்தாது. உலகம் புரியலை... நான் மூணு தலை முறையைக் கண்டவளாச்சே? பார்க்கிற பார்வையிலேயே என்னால எடை போட முடியும்... அந்த சிகாமணி உன்னைப் பார்க்கிற பார்வையே சரியில்லைம்மா... அவனுக்கு உங்கப்பனோட வயசு இருக்கும்... ஒரு மகள் ஸ்தானத்துல அவன் உன்னைப் பார்க்கலை... அதை நெனச்சாத்தான் எனக்கு ரொம்ப கொதிப்பா இருக்கு...''

''எனக்கும் அது புரியாம இல்ல பாட்ட! ஆனா... வேற என்ன பண்ண முடியும் சொல்லுங்க? அவரு இந்த வீட்டுக்கு வரக்கூடாதுன்னு... நாம்ம சொல்ல முடியுமா? அவ்வளவுதான்... வீட்டை ரணகளம் பண்ணிட்டுத்தான்... அப்பா மறுவேலை பார்ப்பாரு... சரிங்க பாட்டி! நம்ம அழுது புலம்பினா... ஏதாவது மாறிடப் போகுதா? நடக்கிறது தானே நடக்கும்? எந்திரிங்க... கடவுள் மேல பாரத்தை போட்டுட்டு



உங்க அறைக்குப் போங்க... இது சம்பந்தமா மேற்கொண்டு அப்பாகிட்ட எதையும் பேசாதீங்க... கோபம் வந்தா அந்த மனுஷருக்கு கண்ணுமண்ணு தெரியாதே... ஏற்கெனவே மனசெல்லாம் உங்களுக்கு ரணப்பட்டு கிடக்கு. எசகு பிசகா கையை நீட்டிட்டாருன்னா... நீங்க தாங்கவே மாட்டீங்க பாட்டி! ஜாக்கிரதை...''

''பாவிப்பய... இவன் கையை ஒடிச்சு அடுப்புல வைக்க... இவனோட ஆணாதிக்கத் திமிருக்கும் அகம்பாவத்துக்கும் இவன் பண்ற அராஜகத்துக்கும்... கடவுள் கண்டிப்பா கூலி குடுக்கத்தான் போறாரு... பார்த்துட்டே இரேன். உங்களை இந்த அசுரன் கிட்டேயிருந்து நா எப்படி மீட்கப் போறேன்'னு தெரியலையே...? கடவுள்தான்கண்ணு தொறந்து பார்க்கணும்...''

கையாலாகாமல் மெல்லப் புலம்பியபடி தளர்வாய் எழுந்து நடந்து தனது அறைக்குள் புகுந்தாள் பாட்டி.

அதற்குமேல் அஞ்சலிக்கு நிற்க நேரமில்லை.

மலை போன்று கவலை மனதை அழுத்தி னாலும்... பம்பரமாய் சுழன்று எல்லா வேலை களையும் முடித்துவிட்டு... ஹாண்ட் பேக்கை தோளில் மாட்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக ஓடிச் சென்று பஸ்ஸைப் பிடித்து ஜன்னலோரமாய் அமர்ந்தாள்.

ஜன்னல் புறத்தே முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மறுகணமே பட்டனைத் தட்டி விட்டாற் போன்று... மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் வழிந் தோடியது.

இன்று மாலை ஆபீஸை விட்டு வீட்டிற்குச் சென்றதும்... விருந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே? கண்ட கண்ட காலிப் பயல்களுக்கு நான் விருந்து பரிமாற வேண்டுமா?

ஐயோ... இதென்ன கொடுமை? கண்ணின் இமைபோல் பாதுகாக்க வேண்டிய அப்பாவே... எங்களை இக்கட்டில் மாட்டி விடுகிறாரே?

எங்களுக்கு யார் பாதுகாப்பு? இதை வெளியில் உறவினர்கள் யாரிடமும் சொல்லி முறையிடக் கூட முடியாதே? இதைக் கேள்விப்பட்டால்... நமது குடும்பத்துக்குத்தானே கேவலம்?

அப்பா யாருக்கும் அடங்க மாட்டாரே? இன்றைக்கு விருந்து வைக்க உத்தரவிட்ட மனிதர்... நாளை வேறு எந்த வம்பில் மாட்டிவிடப் போகிறாரோ?

மறுத்தாலும் அசிங்கப்பட வேண்டும்... சம்மதித்தாலும் அசிங்கப்பட வேண்டும்...

இன்று இந்த இக்கட்டிலிருந்து எப்படி நான் தப்பிக்கப் போறேன்? பேசாமல் மருந்தைக் குடித்துவிட்டு செத்துவிடலாம் போலிருக்கிறதே? இன்று மட்டும் விருந்து ஏற்பாடு நடந்துவிட்டால்... ராஜதுரை போன்ற பொறுக்கிகளுக்கு குளிர்விட்டுப் போய் விடுமோ?

இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு அடிக்கடி வீட்டுக்கு வருவானே? அப்பாவைத் தூண்டிவிட்டு காரியம் சாதித்துக் கொள்ளப் பார்ப்பானே?

அந்தக் கிழம் சிகாமணியே ஏறஇறங்க பார்வை யால் அளவெடுக்கும்போது... இந்த இளவட்டம் ராஜதுரையை கேட்பானேன்?

நான் தற்கொலை செய்து கொண்டால்... என்னாகும்?

அக்கா மைதிலியின் கதி? பாட்டி, ஷர்மிலி... என்று யாரையுமே.. நான் அம்போ என்று தவிக்க விட்டுச் செல்ல முடியாதே?



இருக்கவும் முடியவில்லை... போய்ச் சேரவும் கூடாது. இதென்ன அவஸ்தை?

அம்மா! மாங்காட்டு காமாட்சி தாயே...! எனக்கு நீதான் ஒரு வழி காட்ட வேண்டும்... காட்டும் வழியை சீக்கிரமாக காட்டு தாயே...! என்னைப் பெற்ற அரக்கன் இன்று மாலையில் கெடு வைத்து விட்டாரே...!

இந்த அபலையோட வேண்டுதலுக்கு செவி சாய்க்க மாட்டாயா தாயே?

கனத்த இதயத்தோடு இயந்திரத்தனமாய் ஆபீசுக்குச் சென்று தனது கேபினுக்குள் நுழைந்தவள்... மேஜையைத் தொட்டு வணங்கிவிட்டு, கணினியை 'ஆன்' செய்தாள்.

கவலையை மூட்டை கட்டி ஒதுக்கி வைத்து விட்டு... கவனத்தை முழுவதுமாக வேலையில் திசை திருப்பினாள்.

ஒருமணிநேரம் நகர்ந்திருக்கும்... கேபினுக்குள் பியூன் எட்டிப் பார்த்தான்.

''அஞ்சலி மேடம்! உங்களை மேனேஜர் கூப்பிடறாரு. நம்ப எம்.டி. வந்திருக்காரும்மா... எம்.டி. ரூமுக்குப் போங்க. மேனேஜர் அங்கதான் இருக்காரு...''

''ஓகே...''

கணினியை 'ஷட் டவுன்'' செய்துவிட்டு... அவசரமாய் 'எம்.டி.'யின் அறையை நோக்கிச் சென்றாள்.

பிரபல தொழிலதிபர் சந்தானம்... 'ஜெய்கோ', 'சிமெண்ட்ஸ்', 'ஜெய்கோ காட்டன் மில்ஸ்', ஜெய்கோ இண்டஸ்ட்ரீஸ்', 'ஜெய்கோ சிஸ்டம்ஸ், 'ஜெய்கோ மெகாமால்', 'ஜெய்கோக்ரூப் ஆஃப் கம்பெனீஸ்', 'ஜெய்கோ எஸ்டேட்ஸ்...' முதலிய நிறுவனங் களுக்குச் சொந்தக்காரர்.

தமிழகத்தில் மட்டுமல்ல... ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில்கூட அவருக்குச் சொந்தமான நிறுவனங்களும் எஸ்டேட்களும் பணத்தைக் கொழித்துக் கொண்டிருந்தன.

'வயதாகிவிட்டது. கோடி கோடியாக சம்பாதித்து விட்டோம். நிம்மதியாக சாப்பிட்டு ஓய்வெடுக்கலாம் என்ற எண்ணம்... சந்தானத்திற்கு கடுகளவுகூட தலைகாட்டவில்லை என்பது நிஜம்.

'உடையவன் பார்க்காவிட்டால்... பயிர் ஒரு முழம் கட்டை' என்ற பழமொழியின் தாத்பரியத்தை அவர் முழுவதுமாக உணர்ந்தவர்.

சதா பறந்து பறந்து தன்னுடைய நிறுவனங் களைக் கண்ணும் கருத்துமாக கவனித்த வண்ணம் இருந்தார்.

'எம்.டி.யின் அறையில் இருந்த வண்ணம்... எதற்கு மேனேஜர் என்னை அழைத்திருக்கிறார்?'

புருவங்கள் நெரிய யோசனையுடன் நடந்தாள் அஞ்சலி.

இனம் புரியாமல் ஒரு படப்படப்பு உள்ளுக்குள் அதிகரித்தது.

''வணக்கம் சார்!'' பவ்யமாய் இருவருக்கும் பொதுவாய் கைகூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு... மேனேஜரை ஆவலாய் ஏறிட்டாள்.

மேனேஜர் மந்தகாசமாய் அவளைப் பார்த்து முறுவலித்தார்.

''நீ பிரிப்பேர் பண்ணின புராஜெக்ட் ஏகப்பட்ட லாபத்தை நம்ம கம்பெனிக்கு அள்ளிக் குவிச்சிருக்கு அஞ்சலி! உன்னை நேர்லே பார்த்து பாராட்டு தெரிவிக்கணும்னு... எம்.டி. பிரியப்பட்டாரு...''



''இது என்னோட கடமை தானே சார்? என்னோட கடமையை நான் செய்திருக்கேன். அவ்வளவுதான்... இதுக்கு பாராட்டு தெரிவிக்கணும்னு அவசியமே இல்லையே சார்? இருந்தாலும் என்னை மதிச்சுக் கூப்பிட்டதுக்கு... ரொம்ப நன்றி சார்!''

''வெல்டன் மிஸ். அஞ்சலி!'' உன்னோட கடமையைத் தான் நீ செய்திருக்கே... உண்மையான அர்ப்பணிப்போட கடமையை செய்றவங்களைப் பார்க்கிறது ரொம்ப அபூர்வமாச்சே? அந்த அபூர்வப் பிறவிகள் கண்ணுல பட்டா... நா பாராட்டாம விட மாட்டேன். தட்டிக் குடுத்து பாராட்டி ஊக்கப் படுத்தறதை... நான் என்னோட கடமையா நெனக்கிறேன்...'' என்றார் சந்தானம்.

''ஓ... தேங்க் யூ சார்! தேங்க் யூ ஸோ மச்! அப்போ நான் என்னோட கேபினுக்குப் போலாமா சார்?''

''ஒரு நிமிஷம் அஞ்சலி! எம்.டி. உன்கிட்டே தனியா பேசணும்னு பிரியப்படறாரு... ''அவளை உன்னிப்பாய் பார்த்துவிட்டு மேனேஜர், அந்த அறையை விட்டு வெளியேறினார்.

அஞ்சலி திகைப்புடன் சந்தானத்தை ஏறிட்டாள்.

கோல்ட் பிரேமிட்ட கண்ணாடியின் வாயிலாக... சந்தானத்தின் கூரிய விழிகள் அவளை ஊடுருவிப் பார்த்தன.

''என்னது இது? மேனேஜரை வெளியில் அனுப்பிவிட்டு... என்னிடம் தனியாகப் பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

குழப்ப முலாம் பூசப்பட்ட முகத்துடன் அவரைத் தயக்கமாய் பார்த்தாள்.

''உட்காரு அஞ்சலி.''

தயங்கியபடி நாற்காலியின் நுனியில் அமர்ந்தாள்.

''உன்னைப் பத்தி விசாரிச்சேன். பொறுப்பும் கடமை உணர்வும் கொண்ட பொண்ணுன்னு மேனேஜர் சொன்னாரு. கூடவே உங்கப்பாவைப் பத்தியும் சொன்னாரு...''

சரேலென்று அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

சென்ற தீபாவளி பண்டிகைக்கு முதல்நாள் மூக்கு முட்டக் குடித்து போதையேறிப் போய் அப்பா இந்த ஆபீசுக்கே வந்து கத்தி கலாட்டா செய்து அவளது கவுரவத்தை கப்பலேற்றி விட்டு சென்றாரே...?

''ஏய்... அஞ்சலி! தீபாவளி போனஸ் பணத்தை அப்படியே சல்லிக் காசு பாக்கி இல்லாம என் கையில கொண்டாந்து தரணும். அதுக்குதான் உன்னோட ஆபீசுக்கே வந்திருக்கேன். இன்னிக்கு சாயந்தரம் நீ பணம் தரலைன்னா... தினமும் இங்கே வருவேன்... திமிரு பிடிச்ச கழுதை... சம்பாதிக்கிற திமிருடி உனக்கு... மினுக்கிக்கிட்டு ஆபீசுக்கு வரத் தெரியு துல்ல? போன வாட்டி மாதிரி போனஸ் பணத்தை என் கண்ணுல காட்டாம இருந்தே... நடக்கிறது வேற... தெரிஞ்சுக்கோ...''

பெருங்குரலில் மூர்த்தி கத்தி கூச்சல் போட்ட போது... அஞ்சலி அரண்டு போய் விட்டிருந்தாள்.

நாற்சந்தியில் நிற்க வைத்து துகிலுரிந்தாற் போன்ற அவமானத்தில் கூசிப் போனாள்.

பியூனும் வாட்ச்மேனுமாய் மூர்த்தியை வெளியில் இழுத்துக் கொண்டு போனார்கள்.

மேனேஜரிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தபோது... ''சாரிசார்! இன்னொரு வாட்டி இது நடக்காம... நான் பார்த்துக்கிறேன் சார்'' என்று கை கூப்பியவாறு கண் கலங்கி விட்டாள்.



''நீ என் பொண்ணு மாதிரிம்மா... சின்ஸியரா ஒர்க் பண்றே... உன்மேல எனக்கு நிறைய மரியாதை இருக்கும்மா... உனக்குள்ளே பெரிய சோகம் இருக்குன்னு புரியுது... இவ்ளோ மூர்க்கமா நடந்துக் கிடற மனுஷனை தினமும் எப்படி சமாளிக்கிறீங்க? நீயாவது ஆபீசுக்கு வந்துடறே... வீட்டுல இருக்கிற உங்கம்மா பாடு திண்டாட்டம் தான்... பாவம்!'' என்று அவர் கூறி முடித்ததுதான் தாமதம்...

உடைந்துபோய் விசும்பிவிட்டாள்.

''அம்மா இந்த வேதனை தாளாம மூணு வருஷத்துக்கு முன்னாடி போய் சேர்ந்துட்டாங்க சார்! பாட்டிதான் எனக்கும் என் தங்கச்சிக்கும் ஆதரவா இருக்காங்க... அப்பாவோட பிடிவாதத்தாலே எங்கக்காவோட வாழ்க்கையும் பாழாயிடுச்சு... வீட்டுல நித்தமும் கத்தி கலாட்டா பண்ணுவாரு. இன்னிக்கு ஒருபடி மேல போயி... ஆபீசுக்கு வந்துட்டாரு. என்னால ஏற்பட்ட தர்ம சங்கடத்துக்கு... மன்னிப்பு கேட்டுக்கிறேன் சார்...'' தழுதழுத்தபடி சுருக்கமாக குடும்பத்தைப் பற்றிய விஷயத்தை... வேறு வழியின்றி தெரிவித்திருந்தாள் அஞ்சலி.

'அந்த விவரம் எம்.டி.யின் செவிக்கு எட்டி யிருக்கிறதே எல்லாம் தலைவிதி.

மனம் சகித்து போய் மெல்ல அவரை ஏறிட்டாள்.

''உன்னை மாதிரி பொறுப்புணர்ச்சியும் சகிப்புத் தன்மையும் கொண்ட பெண்ணைத்தான் நான் தேடிட்டு இருந்தேன். நான் சொல்லப் போற விஷயத்தைக் கேட்டு ஸ்டன் ஆயிடாதே. கண்டிப்பா உனக்கு இது ரொம்ப சங்கடமாத்தான் இருக்கும். ஆனா நீ இதுக்கு சம்மதிச்சா... உன்னோட பிரச்சினை களை நான் தீர்த்து வைச்சுடுவேன்.

எப்போ எந்த இக்கட்டுலே பெத்தவரு மாட்டி விடுவாரோ?ங்கிற பயத்துல நீயும் உன் தங்கையும் பாட்டியும் நடுங்கிட்டு இருக்கீங்க... இல்லையா? அதை என்னால டீல் பண்ண முடியும்... என்ன சொல்றே?''

பீடிகை பலமாக இருக்கவே... நிமிர்ந்து உட்கார்ந்தாள். விழிகள் விரிய திகைப்புடன் அவரை ஊன்றிப் பார்த்தாள் அஞ்சலி.

'இன்று மாலையில் அப்பா கெடு வைத்திருக்கிறாரே? அதிலிருந்து தப்புவதற்கு ஏதோ ஒரு மார்க்கத்தை கடவுள் காட்டுகிறாரே?

''என்ன விஷயம்னு சொல்லுங்க சார்!''

''கொஞ்ச காலத்துக்கு என் மகனுக்கு மனைவியா... என் பேரக் குழந்தைகளுக்கு தாயா இருக்க முடியுமா? ஐ மீன் நடிக்க முடியுமா? இந்த அக்ரிமெண்டுக்கு ஒத்துக்கிட்டா... நான் சகலத்தையும் பார்த்துப்பேன். கொஞ்ச காலத்துக்குத்தான்... அதுக்குப்பிறகு தாராளமா விலகிப் போயிடலாம். உன்னோட வருங்காலத்துக்கு ஒரு பெரிய அபார்ட் மெண்டும் பேங்குல உன் பேர்ல ஒரு கோடி ரூபாயும் டெபாசிட் செஞ்சுடறேன். என்ன சம்மதமா?''

''என் நிலைமை சரியில்லை என்று தெரிந்ததும்... ஒரு வயதுப் பெண்ணைத் துணிந்து மனைவியாக நடிக்க அழைப்பு விடுகிறாரே? பணத்திற்காக எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளக் கூடியவள் என்று என்னை தப்புக் கணக்கு போட்டு விட்டாரே.''

கரகரவென்று கண்ணீர் சுரந்தது. நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி விட்டு எழுந்து நின்றாள். அதிர்ச்சியில் காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது.



## 3

கவலை ஒருபக்கமும்... அன்று மாலை என்ன நடக்கப் போகிறதோ? என்ற பயம் ஒரு பக்கமுமாக... அஞ்சலியை பிடுங்கித் தின்றதால்... காலையில் பச்சைத் தண்ணீர் பல்லில் படாமல் ஆபீசுக்கு வந்து விட்டிருந்தாள்.

இருக்கும் கவலை போதாதென்று எம்.டி. அவளைத் தனியாக சந்தித்து, 'என் மகனுக்கு கொஞ்ச காலம் மனைவியா நடிக்க சம்மதமா?' என்று கேட்டதும்... அஞ்சலிக்கு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சினாற் போலிருந்தது.

குப்பென்று வியர்த்து நா வறண்டு கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

பசி மயக்கம், அதீத கவலை, அதிர்ச்சி எல்லாமாக சேர்ந்ததில்... அந்த அறையே தட்டாமாலையாக சுழன்றாற் போலிருக்க... மயங்கி தொப்பென்று சரிந்து விழுந்தாள்.

அவள் திரும்பவும் கண் விழித்துப் பார்த்த போது... பக்கவாட்டில் இருந்த சோபாவில் தான் படுக்க வைக்கப்பட்டிருந்ததையும் உணர்ந்து தனக்கு வெகு அருகாமையில் மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி... சந்தானம் கவலை தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருப்பதையும் உணர்ந்து... சங்கோஜத் துடனும் சங்கடத்துடனும் சட்டென்று எழுந்து அமர்ந்தாள்

குடும்ப கவுரவத்துக்கு பங்கம் வந்து விடக்கூடாது என்று கருதிதானே அம்மா தேவகி பல சித்ரவதைகள் பட்டாள்? சகிப்புத் தன்மையுடன் அப்பா மூர்த்தியின் அட்டூழியங்களைப் பொறுத்துக் கொண்டிருந்தாள்?

இத்தனை கொடுமைகள் செய்யும் அப்பாவின் மீது... நானும் தங்கை ஷர்மிலியுமாகச் சேர்ந்து புகார் கொடுப்பதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? புகார் கொடுத்தால் அந்த மனிதரை போலீஸ் இழுத்துக் கொண்டு போய் முட்டிக்கு முட்டி தட்டி எலும்பை நொறுக்கிவிட மாட்டார்களா?

குடும்ப கவுரவம் அம்பலத்திற்கு வந்தால் அசிங்கமாகிவிடும். குடும்பப் பாரம்பரியத்தின் மதிப்பும் மரியாதையும் காற்றில் பறந்துவிடும் என்று பயந்துதானே... அப்பாவின் அத்தனை கொடுமை களையும் சகித்துக் கொண்டு வருகிறேன்?

இப்பேர்ப்பட்டவளைப் பார்த்து 'என் மகனுக்கு மனைவியாக நடிக்க சம்மதமா?' என்று இவர் கேட்டு விட்டாரே? அதோடு அதற்கு ஈடாக அபார்ட் மெண்டும் வங்கியில் பணமும் போட்டு விடுகிறேன் என்று கூறிவிட்டாரே? பணத்திற்காக எதையும் செய்யக்கூடியவள் என்று எண்ணிவிட்டாரே? ஐயோ... எத்தனை அவமானம்? ''இதெல்லாம் யாரால வந்தது? எல்லாம் அந்த அப்பாவால்தானே? கடவுளே! இன்னமும் எத்தனை எத்தனை அவமானங்களை நான் சந்திக்கப் போகிறேனோ'' என்று தெரியவில்லையே?

தாரை தாரையாக அவளது விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்ததைப் பார்த்துவிட்டு... இன்னும் அருகில் நெருங்கி வந்தார் சந்தானம்.

''ரிலாக்ஸ் அஞ்சலி! என்னத்துக்கு அழறே?'' அந்த அக்ரிமெண்ட் பிடிக்கலைன்னா... 'எனக்கு சம்மதம் இல்ல சார்'னு ஒத்தை வரியில சொல்லிட்டு நீ போயிட்டே இருக்கலாமே... அதைவிட்டுட்டு இப்படி ஷாக்காகி மயக்கம் போட்டு விழுந்துட்டே... சாரிடா... உன்னை நான் எந்த விதத்திலேயும் கட்டாயப் படுத்தலையே?''



''இ... இல்ல சார்! நீங்... நீங்க கட்டாயப் படுத்தலை தான் ஆனா பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய பொண்ணுன்னு... என்னை நீங்க தவறா நெனச்சுட்டீங்கன்னு தான்...'' எனக்கு ரொம்ப வ... வருத்தமா இருக்கு...''

''சேச்சே! யூ ஆர் மிஸ்டேக்கன்... கடந்த சில நாட்களா உனக்கே தெரியாம உன்னைப் பத்தின விவரங்களை நான் தீவிரமா சேகரிச்சேன். எல்லாத்தை யும் அலசி ஆராய்ஞ்சு கடைசியில ஒரு முடிவுக்கு வந்தேன். நீ ஒரு சொக்கத்தங்கம்னு முடிவு பண்ணினேன். குணத்துல, மரியாதையில, பண்புலே, அன்புலே, கண்ணியத்துல, கடமையில, கட்டுப் பாட்டிலே, தியாகத்துல, சகிப்புத் தன்மையில, பொறுமையில, பொறுப்பு உணர்ச்சியிலே, பாசத்துல, நேசத்துல... மொத்தத்துலே நீ காணக் கிடைக்காத பொக்கிஷம்னு... நான் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். தெரியுமா?''

அஞ்சலி நம்பமாட்டாமல் திருதிருவென்று விழித்தாள். திகைத்துப்போய் விழிகள் விரிய அவரை ஏறிட்டபடி... மெல்ல தளர்வாய் எழ முயன்றாள்.

''நோ நோ... நீ உட்கார்ந்தே பேசலாம். டேபிள்மேல இருக்கிற ஜூஸை முதல்லே குடி! அப்புறமா நம்ம பேசலாம்...''

''தேங்க் யூ சார்!'' கையை நீட்டி டேபிளின் மீதிருந்த கண்ணாடி தம்ளரை எடுத்து மடக் மடக் என்று ஒரே மூச்சில் பழச்சாறை பருகி முடித்து... சேலைத்தலைப்பால் இதழ்களை ஒற்றியபடி நிமிர்ந்து பார்த்தாள்.

நிதானமாய் தனது நாற்காலியில் கம்பீரமாய் அமர்ந்தபடி அவளை ஊன்றிப் பார்த்தார் சந்தானம்.

''அ... அப்புறம் எதுக்கு சார் எனக்கு பணம் தர்றேன்'னு சொன்னீங்க?''

''நான் பணம் தர்றேன்னு சொன்னேன்தான். உன்னோட வருங்காலம் வளமா இருக்கணும்னுதான் அப்படி சொன்னேன். உனக்கே தெரியுமே? எனக்கு பல மாநிலங்கள்லே... பல நிறுவனங்கள் இருக்கே... மேலே தூக்கிப் போட்டா ஆயிரம் காக்கா வருமே? புரியலையா அஞ்சலி? நான் கை சொடுக்கினா... பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய பெண்கள் கியூவிலே வந்து நிப்பாங்களா? இல்லையா?''

''கண்டிப்பாசார்.''

''பின்னே...? நான் எதுக்கு... சல்லடை போட்டு சலிக்காத குறையா உன்னைப் பத்தின விவரங்களை சேகரிக்கணும்? கண்ணுல விளக்கெண்ணெயை விட்டுக்காத குறையா... இத்தனை நல்ல குணாதிச யங்கள் கொண்ட பெண்ணை நான் ஏன் தேடிக் கண்டு பிடிக்கணும்?''

''ஓ... சாரி சார்! நான்தான் தவறா புரிஞ்சுகிட்டேன்.''

அஞ்சலிக்குள் பெருத்த நிம்மதி பரவியது.

''என்னோட அக்ரிமெண்டுக்கு உன்னைப் போன்ற ஒரு பெண்தான் தேவை. பணத்துக்கு துளிகூட ஆசைப்படாத... குடும்ப கவுரவத்துக்காக உயிரையே விடக்கூடிய பெண்தான் தேவை... ஒகே... அஞ்சலி! அதிர்ச்சியில் நடுநடுங்கி தடால்னு நீ மயங்கி விழுந்ததும் நான் பதறிப் போயிட்டேன். நான் பேசினது உன்னை இந்த அளவுக்கு பாதிக்கும்'னு... நா எதிர்பார்க்கவே இல்ல... எனி ஹவ்! சாரிம்மா... இதுக்கு மேல நாம இந்த விஷயத்தைப் பேச வேணாம்... வீட்டுல போயி நிதானமா யோசிச்சுப் பாரு... உனக்கு என்கிட்டே பேசணும்னு தோணுச்சுன்னா... இந்தா! என்னோட பெர்ஸனல் நம்பருக்கு காண்டாக்ட் பண்ணு. சரியா?''

அவர் நீட்டிய விசிட்டிங் கார்டை பவ்யமாய் வாங்கிக் கொண்டாள்.



''ஒருத்தருக்கு மனைவியா கொஞ்ச காலத்துக்கு நடிக்கணும்கிறதை... என்னால ஜீரணிக்கவே முடியலை சார்! அப்பா எப்படியோ வழி தவறிட்டாரே தவிர... எங்க குடும்பம் ரொம்ப பாரம்பரியமானது. அதான்...''

''புரியுது அஞ்சலி! உன்னோட 'புராஜெக்ட்' கம்பெனிக்கு லாபத்தை அள்ளித் தந்திருக்கு அதுக்காக உனக்கு ப்ரமோஷன் குடுக்கச் சொல்லியிருக்கேன்...''

''ரொம்ப ரொம்ப நன்றி சார்!''

கைகூப்பி அவரை வணங்கிவிட்டு... தனது கேபினை நோக்கி நடந்தாள்.

நேரம் ஜெட் வேகத்தில் பறந்தது.

அலுவலக நேரம் முடியும் தறுவாயில்... திக்திக் என்று மனம் அடித்துக் கொண்டது.

பயத்தில் வியர்த்து வழிந்தது.

பஸ்ஸைப் பிடித்து பயணித்து... திகிலுடன் வீட்டிற்குள் நுழைந்தபோது வாயெல்லாம் பல்லாக அப்பா மூர்த்தி அவளை எதிர்கொண்டு, ''பரவா யில்லையே? நேரத்துக்கு வந்துட்டியே? வேணும்னே நேரத்தைக் கடத்தி ரொம்ப தாமதமா வீட்டுக்கு வருவியோ?ன்னு எதிர் பார்த்தேன். குட்! இப்படித்தான் இருக்கணும். ராஜதுரையும் சிகாமணியும் ஏழரைக்கு வர்றோம்னு சொல்லிட்டாங்க... நீ மளமளன்னு ருசியா விருந்து தயாரிச்சுடறியா?'' என்றபோது... அஞ்சலிக்கு உள்ளூர பற்றிக் கொண்டு வந்தது.

''உம்...'' கசப்புடன் ஒற்றை வார்த்தையை உதிர்த்தாள்.

கூடத்தைப் பார்வையாலேயே வலம் வந்தாள்.

'ஷர்மிலி இந்நேரத்திற்கு வந்திருப்பாளே? எங்கே காணோம்?''

அவளது எண்ண ஓட்டத்தை வாசித்து அறிந்த தினுசில்...

''ஷர்மிலி பாட்டியோட அறையிலதான் இருக்கா...'' என்று கூறிவிட்டு குஷியாய் சீட்டியடித்த படி மாடியேறிப் போன அப்பாவை வெறுப்புடன் பார்த்துவிட்டு பாட்டியின் அறைக்குப் போனாள்.

ஷர்மிலி கோழிக்குஞ்சாய் நடுங்கிய வண்ணம் பாட்டியின் அருகில் அமர்ந்திருந்தாள்.

பாட்டி மரகதம் திகிலில் பேயறைந்தாற் போன்று அலங்க மலங்க விழித்தாள்.

''இன்னிக்கு நீ இதுக்கு சம்மதிச்சா... நாளைக்கு வேறு எதுக்காகவாவது உன்னைக் கட்டாயப் படுத்துவானே உங்கப்பன்? கண்ட கண்ட காலிப் பயல்களுக்கு... நீ மாங்கு மாங்குனு சமைச்சுப் பரிமாறணுமா? நெனச்சாலே நெஞ்செல்லாம் எரியுதே அஞ்சலி...''

''மறுத்துப் பேசினா... ரகளை பண்ணி நம்மல தெருவுக்கு இழுத்து கேவலம் பண்ணுவாரே? சரி...! நடக்கிறது எதுவோ நடக்கட்டும் அப்புறம் பார்த்துக்கலாம் ஷர்மிலி! படிக்கிறதை விட்டுட்டு ஏன் இப்படி உட்கார்ந்து நேரத்தை வீணடிக்கிறே? உன் வேலை என்னவோ... அதை கவனிம்மா... பாட்டி! கண்டதையும் நெனச்சு புலம்பாம... மனசுக்குள்ளே ஸ்ரீராமஜெயம் சொல்லிட்டே இருங்களேன். நான் 'டின்னருக்கு' சமைக்க ஆரம்பிக்கிறேன்...''

ஹேண்ட் பேக்கை சுவரிலிருந்த ஆணியில் மாட்டிவிட்டு... தனது அறைக்குச் சென்று கட்டியிருந்த புடவையை மாற்றி... எளிய காட்டன் புடவையை அணிந்துகொண்டு... கிணற்றடிக்குச் சென்று முகம் அலம்பிவிட்டு உள்ளே வந்தாள்.



கோதுமைமாவில் வெந்நீரையும் பாலையும் சிறிது எண்ணையையும் ஊற்றிப் பிசைந்து வைத்துவிட்டு... தக்காளி, வெங்காயம் காய்கறிகளை மளமளவென்று அரிந்து... இஞ்சி, பூண்டு விழுதை அரைத்து முடித்து... வெங்காயச் சட்னியை மிக்ஸியில் அரைக்க அவள் தயாரானபோது...

''ஐயையோ...'' என்று பாட்டி அலறும் சப்தம் கேட்டது.

அஞ்சலி திடுக்கிட்டு ஒரே ஓட்டமாக சப்தம் வந்த திசை நோக்கி ஓடினாள்.

பாத்ரூம் வாசலில்... படிக்கட்டில் அலங் கோலமாய் விழுந்து கிடந்தார் மரகதம்.

படிக்கட்டின் முனையில் விழுந்து மோதியதில்... நெற்றியிலிருந்து இரத்தம் வேகமாக கசிந்தது.

''ஐயோ பாட்டி! என்ன இது? கவனமா இருந்திருக்கக் கூடாதா? என்னையாவது ஷர்மிலியை யாவது கூப்பிட்டு இருந்தா கைத்தாங்கலா பிடிச்சுட்டு வந்திருப்போமே? இரத்தம் கொட்டுதே? வயசான காலத்துல உடம்புக்கு முடியாத நேரத்துல... இது வேற வேதனையா? கடவுளே!'' புலம்பியடி அவரைத் தூக்கி அமர்த்தி தன் மார்போடு அவரது தலையை சாய்த்துக் கொண்டாள்.

சத்தம் கேட்டு ஓடிவந்த தங்கையிடம், ''சீக்கிரமா ஓடிப்போய் ஆட்டோ புடிச்சுட்டு வா! அதுக்கு முன்னாடி கிச்சன்லே இருந்து காபித்தூளைக் கொஞ்சம் எடுத்துட்டு வா... சீக்கிரம் உத்தரவிட்டாள்.

தங்கை ஷர்மிலி நீட்டிய காபித்தூள் டப்பா விலிருந்து கொஞ்சம் அள்ளி எடுத்து பாட்டியின் காயம் பட்ட நெற்றியில் வைத்து அழுத்தினாள்.

ஷர்மிலி ஆட்டோ பிடிப்பதற்காக ஓட்டமாக ஓட... நடந்த களேபரத்தில் எழுந்த சப்தத்தைக் கேட்டு... மாடியிலிருந்து வேகமாய் இறங்கி வந்தார் மூர்த்தி.

பளிச்சென்று இஸ்திரி போடப்பட்ட வேஷ்டி சட்டையை அணிந்துகொண்டு... இரவு விருந்துக்கு வருகைதரும் நண்பர்களை வரவேற்க ஆவலோடு காத்திருந்தவரின் முகம் ஏமாற்றத்தில் கூம்பிப் போனது.

இரு மகள்களும் பாட்டியைக் கைத்தாங்கலாகப் பிடித்து ஆட்டோவில் ஏற்றுவதைக் கண்டு... கோபத்தில் மனம் கொந்தளித்தது.

தனது எதிர்பார்ப்பில் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்ட மரகதத்தைக் கண்டு... எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

''நல்ல நேரத்துல... எல்லாத்தையும் கெடுத்து தொலைச்சிட்டியே அம்மா! உன்னால எல்லாம் கெட்டு குட்டிச் சுவரா போச்சு போ! ராஜதுரையும் சிகாமணியும் ஆவலா விருந்துக்கு வர்றோம்'னு சொன்னாங்க... இனி... நான் ஃபோன் பண்ணி அவங்களுக்குச் சொல்லியாகணுமே! சே!''

''என்னப்பா இது? பாட்டி வேணும்னா விழுந்தாங்க... அவங்களே காயம் பட்டு வேதனையில இருக்காங்க... அவங்களை கோவிச்சுக்கிறீங்க? டிரைவர்! கொஞ்சம் சீக்கிரமா தீபம் நர்ஸிங் ஹோமுக்கு போங்க... ப்ளீஸ்'' அப்பாவை வெறுப்புடன் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டாள் அஞ்சலி.

ஆட்டோ வேகமெடுத்துப் பறந்தது.

காயத்திற்கு மருந்துபோட்டு கட்டு போட்டு முடித்த டாக்டரைப் பார்த்து ''டாக்டர் ஐயா! என் உடம்பு ரொம்ப



பலவீனமா இருக்கு. அடிக்கடி தலை சுத்தறாப்பல இருக்கு. உடம்புலே தெம்பே இல்ல... எனக்கு குளுக்கோஸ் ஏத்துங்க ஐயா! என்னை பெட்டுல சேர்த்து நல்லா கவனிங்க ஐயா!'' இந்தப் பொண்ணுங்களுக்கு நான்தான் ஆதரவு. இவங்களைக் கரையேத்த வரைக்கும் நான் நல்லா இருக்கணும் இல்லையா? இன்னிக்கே என்னை அனுப்பிடாதீங்க ஐயா!'' பரிதாபமாய் கெஞ்சினார் மரகதம்.

''கவலைப்படாதீங்கம்மா... கவனிச்சுட்டா போச்சு.''

அடுத்த பத்தாவது நிமிடத்தில் பாட்டிக்கு அறை ஒதுக்கப்பட்டது. ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டது.

''என்ன பாட்டி? எவ்ளோ உடம்புக்கு முடியாம இருந்தாலும் சாமானியத்துல டாக்டர்கிட்டே சொல்ல மாட்டீங்க இன்னிக்கு என்னடான்னா... இவ்ளோ வெளிப்படையா பேசிட்டீங்க... ஆச்சரியமா இருக்கு பாட்டி!'' என்றாள் அஞ்சலி.

''அஞ்சலி! உங்கப்பன்கிட்டே நீ சொன்னியே? பாட்டி வேணும்னா விழுந்தாங்க?ன்னு கேட்டியே...? அதுதான் நிஜம்! நான்தான் வேணும்னே விழுந்து வாரி காயப்பட்டேன். வீட்டுலே நடக்க இருந்த இரவு விருந்தை தடுக்கிறதுக்கு... எனக்குவேற வழி தெரியலையம்மா... துட்டு போனா போகுது. ரெண்டு மூணுநாள் பெட்டுல கிடக்கிறேன். என்னால இவ்ளோதான் செய்ய முடியும். அதுக்கு அப்புறமா வீட்டுக்கு போனா... உங்கப்பன் மறுபடியும் ஆரம்பிச்சுடுவானே? எத்தனை நாளைக்கு இப்படி தாக்கு பிடிக்க முடியும்னு தெரியலையேடா...!''

தீனமாய் பேசி கண்ணீர் வடித்த மரகதத்தைப் பார்த்து திகைத்துப் போய்விட்டாள் அஞ்சலி.

வயதான காலத்தில் தங்களுக்காக விழுந்து இரத்தம் சிந்திய தியாகியைக் கண்டு... அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

நீர்த்திரையிட்ட விழிகளால் பாட்டியை நன்றிப் பெருக்கோடு பார்த்தவள்... ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். விதி சிரித்தது. அவளைக் கண்ணீர்க் கடலில் தள்ளிவிட தருணம் பார்த்தது.

## 4

பனி படர்ந்து இருந்ததால்... தூரத்தே தெரிந்த மலைத்தொடர்கள் எல்லாம், பாலிதீன் பைகளில் போட்டு கட்டி வைத்தாற்போன்று மங்கலாகத் தெரிந்தன.

பால்கனியில் நின்றபடி தூரத்திலிருந்த மலைத் தொடர்களை வெறித்துக் கொண்டிருந்தான் ஜெயநித்யன்.

மார்கழிக்குளிர் ஊசியாய் உடலை ஊடுருவிக் கொண்டிருந்ததை சிறிதும் பொருட்படுத்தாமல்... ஸ்வெட்டர் அணியாமல்... அவன் நின்றிருந்த கோலத்தைப் பார்த்த பார்வதிக்கு... பெற்ற வயிறு பிசைந்து வலித்தது.

''நித்யா!''

உலக நினைப்பின்றி இலக்கின்றி எங்கோ வெறித்துக் கொண்டிருந்தவனுக்கு... அம்மாவின் குரல் செவிகளை எட்டவில்லை போலும்!

''நித்யா... நித்யா!''

குரலுயர்த்தி மேலும் இருமுறை அழைத்ததும்தான்... திரும்பிப் பார்த்தான்.



''என்னம்மா... கூப்பிட்டீங்களா?'' என்றபடி மெல்ல நடந்து அருகில் வந்து நின்றான்.

''நித்யா! என்னப்பா இது? எஸ்டேட்டு குளிரு உடம்பை வாட்டி எரிக்குது. நீ என்னடான்னா... கால்லே செப்பல்கூட போடாம சில்லுன்னு இருக்கிற தரை மேல மணிக்கணக்கா நிக்கிறியே? ஸ்வெட்டரும் போட்டுக்கலை... ஊதல் காத்து உடம்புக்கு ஒத்துக்காதுப்பா...''

''அப்படி ஏதாச்சும் உடம்புக்கு வராதா?ன்னு தான் நானும் பார்க்கிறேன். வந்து தொலைய மாட்டேங்குதே?''

''ஏப்பா இப்படி விரக்தியா பேசறே...? ஜெய்கோ நிறுவனங்கள் இந்தியா முழுவதிலும் பரவிக் கிடக்கு. நம்ம அத்தனை சொத்துக்களுக்கும் ஏகபோக வாரிசு நீதானே? அப்பாவுக்கு அப்புறமா நீதானே எல்லாத்தையும் கவனிச்சுக்கணும்? நம்மளை நம்பி எத்தனை பணியாளர்கள் வேலை செய்றாங்க? எத்தனையோ குடும்பங்கள் நம்மளை நம்பிப் பிழைக்கிறாங்க... உங்கப்பா இன்னமும் ஓடி ஓடி உழைச்சுட்டிருக்காரு... இன்னும் எத்தனை காலத்துக்கு அவரால எல்லாத்தையும் கட்டி மேய்க்க முடியும்?

அவருக்கும் வயசாகிட்டுப் போகுதுல்ல? நீ கொஞ்சம் மாறணும் நித்யா! எல்லா பொறுப்பையும் நீ ஏத்துக்கிட்டா... அப்பா எவ்ளோ சந்தோஷப்படுவாரு. தெரியுமா? பழசை மறந்துட்டு சகஜ நிலைக்கு நீ வரணும்பா... அதுதான் எங்க எல்லோருடைய வேண்டுதலும்...''

''எவ்ளோ ஈஸியா சொல்லிட்டீங்கம்மா'' பழசை என்னால எப்படிம்மா மறக்க முடியும்? மறக்கக்கூடிய பந்தமா அது? கவி...! என் உயிர்லே உணர்விலே கலந்த கவி...! அவ இப்படி அம்போன்னு என்னை விட்டுட்டுப் போயிட்டாளே?ம்மா...? இன்னமும் கூட இந்த

யதார்த்தத்தை என்னால நம்பவே முடியலைம்மா... இதெல்லாம் கனவா இருக்கக் கூடாதா?ன்னு மனசுக்குள்ளே சதா புலம்பிட்டே இருக்கேன். நான் என் கவியை விட்டுப் பிரிஞ்சி எதுக்கும்மா இருக்கணும்? நீயே சொல்லு.''

''நித்யா! கவி உனக்காக ரெண்டு தங்க விக்கிரகங்களை விட்டுட்டுப் போயிருக்காளே? மறந்துட்டியாப்பா... தாயை இழந்து தவிக்கிற குழந்தைகளை... தகப்பனையும் இழந்து தவிக்க விடப் போறியா சொல்லு? தாய் தகப்பன் இல்லாத அனாதைகளா... பாசத்துக்கு ஏங்கி பரிதவிக்கணுமா?''

''அந்த ஒரு காரணத்துக்காகத்தான்... நான் இன்னமும் உயிரோட நடைப்பிணமா நடமாடிக் கிட்டிருக்கேன். நான் என்னம்மா பாவம் பண்ணினேன்? ஏன் கடவுள் என் கிட்டேயிருந்து கவியைப் பிரிச்சாரு?''

''எல்லாம் விதிப்பா... வேற என்ன சொல்ல முடியும் நித்யா? அஞ்சு குட்டிக்கு இன்னிக்கு பிறந்தநாள். கோவில்லே அவ பேருக்கு அபிஷேக ஆராதனை அர்ச்சனை செய்ய ஏற்பாடு பண்ணி யிருந்தேன். குருக்கள் வந்து பிரசாதம் தந்துட்டுப் போயிருக்காரு? நீ சீக்கிரமா குளிச்சிட்டு கீழே இறங்கி வாப்பா... குழந்தைகளோட சேர்ந்து டிபன் சாப்பிட்டுட்டு அவங்களை கார்லே கூட்டிட்டு, இந்த 'மயிலாடும்பாறை' எஸ்டேட்டை சுத்தி வா... முடிஞ்சா பக்கத்துல 'நெடுங்குண்டம்' வரைக்கும் போயிட்டு வா! சாயந்தரமா 'போடி மெட்டு'க்குப் போயி.. பார்வதி பேசி முடிக்கும் முன் இடைமறித்தான் நித்யன்.

''நெடுங்குண்டத்துக்கும் போடி மெட்டுக்கும் என்னால போக முடியாதும்மா... ரெண்டுத்துக்கும் நடுவுல இருக்கிற மலைப்பாதையில இருந்து காரோட சரிஞ்சு விழுந்துதானே கவி... என்னோட கவி காலமாயிட்டா... தயவுசெய்து



என்னை அங்க போகச் சொல்லி 'கம்பெல்' பண்ணாதீங்க ப்ளீஸ்.''

''சரி... சரி... சரியப்பா... நீ அங்கெல்லாம் போக வேணாம். குழந்தைகளோட சேர்ந்து சாப்பிட்டு 'மயிலாடும் பாறை'யை ஒரு ரவுண்ட் சுத்திட்டு வா! அது போதும்பா...''

''உம்... சரிம்மா.''

மகன் இந்த மட்டுமாவது இறங்கி வந்தானே? என்ற சிறு திருப்தியுடன் மாடியை விட்டு இறங்கிச் சென்றாள் பார்வதி.

நித்யனின் விழிகள் தன்னிச்சையாய் அந்த ஹாலில் நடுநாயகமாக மாட்டப் பட்டிருந்த படத்தின்மீது படிந்தன.

அந்த சுவரில் முன்பு ஆளுயரத்தில் கவிதாவின் படம் சந்தன மாலை சாற்றி மாட்டப்பட்டிருந்தது.

அதை... நித்யாவின் அப்பா சந்தானம், அகற்றி விடும்படி கடுமையாக உத்தரவிட்டிருந்தார்.

பணியாட்கள் பயந்துபோய் கவிதாவின் படத்தை அகற்றிவிட்டு... அதற்கு பதிலாக குலதெய்வம் 'கழுகுமலை' முருகப் பெருமானின் படத்தை அங்கு வைத்துவிட்டிருந்தார்.

நித்யன் அசந்து போய் தூங்கிக் கொண்டிருந்த சமயத்தில் சாமர்த்தியமாக படத்தை மாற்றி வைத்த தோடு... கவிதாவின் புகைப்படங்கள் அத்தனையை யும் எடுத்துக் கொண்டு போய் விட்டிருந்தார் சந்தானம்.

கண் விழித்ததும் நித்யன் அழுதான். அரற்றினான்.

''கவிதா போய் சேர்ந்துட்டா... அவ படத்தைப் பார்த்தாவது நான் கொஞ்சமாவது ஆறுதலடைஞ்சேனே? எல்லா படங்களையும் கண் மறைவா கொண்டு போயிட்டீங்களே? உங்களுக்கு என் மேல இரக்கமே இல்லையப்பா?''

''அந்தப் படத்தைப் பார்த்தா... துக்கம்தான் உனக்கு அதிகரிக்குது. உனக்கு மட்டுமில்ல... எங்க எல்லோருக்கும் தான்... மூணரை வயசிலும் ரெண்டு வயசிலுமா உன்னோட பச்சைக் குழந்தைங்க... கவிதாவோட படத்தைப் பார்த்து தினமும் தேம்பித் தேம்பி அழறாங்களே? அதைப் பார்க்க எங்க மனசுலே தெம்பில்லைப்பா... குழந்தைங்க இவ்ளோ ஏக்கத்தோடவும் சோகத்தோடவும் இருந்தா... அது அவங்களுக்கு நல்லதில்லை நித்யா! அவங்க எதிர்காலம் நல்லா இருக்க வேணாமா? இதையெல்லாம் மனசுல வச்சுக்கிட்டுதான்... அந்த மாதிரி செய்தேன். கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். குழந்தைகளுக்காக நீ இதை சகிச்சுதான் ஆகணும் நித்யா!''

திட்டவட்டமாய் சொல்லி விட்டிருந்தார் சந்தானம்.

நித்யனும் வேறு வழியின்றி மவுனமாகி விட்டான்.

ஆனாலும் அவனுக்கு மனம் தாளவில்லை.

கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு தேடி எப்படியோ கவிதாவின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தை கண்டுபிடித்து விட்டான்.

அதை யாருக்கும் தெரியாமல் படுக்கை அறையில் கட்டிலில் மெத்தைக்கு அடியில் ஒளித்து வைத்துக் கொண்டு அவ்வப்போது தனிமையில் அதை எடுத்து கண்கொட்டாமல் பார்த்து மானசீகமாகப் பேசி கண்ணீர் உதிர்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தான்.

இன்று பழக்க தோஷத்தில் ஹாலின் சுவரிலிருந்த படத்தைப் பார்த்து, கழுகுமலை முருகனின் படம் தென்பட்டதும் ஏமாற்றத்துடன் வேகமாய் படுக்கை அறைக்குள் புகுந்தான்.



எச்சரிக்கை உணர்வுடன் கதவைத் தாழிட்டு விட்டு... கட்டிலில் மெத்தைக்கு அடியிலிருந்த படத்தை எடுத்து உற்று நோக்கினான்.

காந்தமாய் ஈர்க்கும் கண்கள், சங்கு கழுத்து, வரிசைப் பற்கள் தெரிய வசீகரமாய் சிரித்துக் கொண்டிருந்தாள் கவிதா.

''கவி! உன்னோட கண்கள் அப்படியே காந்தமா என்னை கவர்ந்து இழுத்துடுச்சு தெரியுமா? இந்த மாதிரி வசீகர சிரிப்பை நான் எங்கேயும் பார்த்ததில்லை... அப்படியே உன்கிட்டே வசியப்படுத்திடுச்சே? பார்க்கிறவங்க கண்ணைக் கட்டிப் போடறாப்பல... அப்படியொரு பேரழகு உனக்கு...'' என்று அடிக்கடி அவளிடம் கொஞ்சலாய் வருணித்தது, ஞாபகத்திற்கு வந்தது.

''கவி! எங்க தேயிலை எஸ்டேட்டுல வேலை பார்க்கிற தொழிலாளி முத்தையாவோட பொண்ணு நீ! முத்தையாவோட விசுவாசத்தைப் பார்த்துட்டு எங்கப்பாதான் உன் படிப்புக்கு ஸ்பான்ஸர் செஞ்சாரு. தாயில்லாத பொண்ணு நீ... ஹாஸ்டல்லேயே தங்கி படிச்சு முடிச்சுட்டு இங்க திரும்பி வந்தே...''

'நெடுங்குண்டம்' எஸ்டேட்டை கவனிக்க நான் ஜீப்புலே வந்துட்டிருந்தேன். நீ உன்னோட பிறந்தநாள் அன்னிக்கு அதே பகுதியில் மேட்டுப் பகுதியில் இருக்கிற 'வன துர்க்கை' கோயிலுக்குப் போயிட்டு சரிவுலே இறங்கி வந்துட்டிருந்தே... அப்போதான் உன்னை முதன்முதலா நான் பார்த்தேன். வாட் எ ஸ்டன்னிங் பெர்ஸனாலிட்டி? வனதேவதையை நேர்லே பார்த்துட்ட மாதிரி ஒரு ஃபீலிங்! உன்னோட பேரழகு என்னை கொக்கி போட்டு இழுத்துடுச்சு. ஒரே பார்வையில் என்னை நீ வீழ்த்திட்டே...

நாம காதலர்களாயிட்டோம். கிட்டத்தட்ட ஆறு மாசத்துக்கு அப்புறம்தான் நம்ம காதலைப் பத்தி

அப்பாகிட்டே சொல்றதுக்கு எனக்கு தைரியம் வந்தது. 'கவி எனக்கு வேணும் டாடி! அவ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நெனச்சுக்கூடப் பார்க்க முடியலை'ன்னு நான் பேசினேன். என்னோட ஆசைக்கு முட்டுக்கட்டை போடாம... அவரும் நம்ம காதலுக்கு பச்சைக்கொடி காட்டினாரு. தொழிலாளி யோட பொண்ணுன்னு கூடப் பார்க்காம என்னோட பேரண்ட்ஸ் பெருந்தன்மையா உன்னை மருமகளாக்கிக் கிட்டாங்க... அப்போ நான் எவ்ளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா? உலகத்திலேயே அதிர்ஷ்டசாலி நான்தான்னு மலை முகட்டுலே ஏறி நின்னு கத்தணும்போல இருந்தது. நம்ம அன்புக்கு சாட்சியா மணிமணியா ரெண்டு அழகான குழந்தைங்க... யாரோட கொள்ளிக் கண்ணு பட்டுச்சோ... தெரியலையே? போடி மேட்டுலே நடந்த உன்னோட உறவுக்காரப் பெண்ணோட கல்யாணத்துக்கு... நீ கார்லே கிளம்பினே...

பன்னீர் ரோஜா வண்ணத்துல பனாரஸ் பட்டுப்புடவை கட்டிக்கிட்டு தேவதை மாதிரி என் முன்னாடி வந்து நின்னே... கண்ணாடியா பளபளத்த உன்னோட அழகு கன்னத்தை வருடி பத்திரமா போயிட்டுவா'ன்னு நான் சொன்னேன். பிரபல தொழிலதிபர் சந்தானத்தோட ஒரே வாரிசு ஜெயநித்யனோட அருமை மனைவி நான்! எந்தப் பூச்சாண்டியும் என்னைப் பிடிச்சுட்டுப் போயிட மாட்டான். பத்திரமா தூசு படாம வந்துடறேன். போதுமா நித்யா?ன்னு செல்லமா என் மூக்கைப் பிடிச்சு திருகிட்டு போனே... கார்லே போறப்போ கூட வசீகரமா சிரிச்சு டாட்டா காமிச்சுட்டு போனே...

அப்போ நான் சத்யமா நெனச்சுக்கூடப் பார்க்கலையே கவி! அதுதான் உன்னோட கடைசி சிரிப்புன்னு தெரியாம போயிடுச்சே? கவி... நீ போன கார் அகல பாதாளத்துல விழுந்து நொறுங்கிடுச்சே... அவ்ளோ பெரிய கிடு கிடு



பள்ளத்துல இருந்து உன்னோட சடலத்தைக்கூட எங்களால மீட்க முடியாம போச்சே கவி!

நான் ரொம்ப அதிர்ஷ்டசாலின்னு இறுமாப் போடு இருந்தேன் கவி! ஆனா விதி என் தலையில் இடியை இறக்கிடுச்சே கவி? நான் மிகப் பெரிய துர்பாக்கியசாலி! ஆமா... துரதிர்ஷ்டக்காரன். சொர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு கையில கொடுத்துட்டு கொஞ்ச நேரங்கழிச்சு எதிர்பார்க்காத தருணத்துல... அதை லபக்குன்னு யாரோ என் கிட்டேயிருந்து அபகரிச்சுட்ட மாதிரியில்ல இருக்கு?

நீ இல்லாத இந்த உலகத்துல எனக்கு இருக்கவே பிடிக்கலை கவி! இன்னிக்கு நம்ம அஞ்சு பாப்பாவுக்கு பெர்த்டே! போன வருஷம் இதே சமயத்துல நீ என்கூட இருந்தே... இப்போ நீ இல்லை... இல்லைங்கிறதை என்னால ஜீரணிக்கவே முடியலை. இன்னிக்கு என்னமோ எனக்கு உன்னோட ஞாபகம் ஜாஸ்தியா இருக்கு... என்னன்னு தெரியலை கவி! நான்... ஒரு சுய நலவாதியோ?ன்னு ஒரு சந்தேகம் வந்திருக்கு.

எஸ்... கவி! நீயில்லாம நானில்லைன்னு நம்ம ரெண்டு பேருமே காதல் டயலாக் பேசியிருக்கோம். இப்போ நீயில்ல... நான் இருக்கேனே? அப்போ நான் சொன்னது வெறும் வாய் வார்த்தைதானா? இதுவே நான் இறந்திருந்தா... நீ என்னை மாதிரி வாழ்ந் திருப்பியா? ஊகூம்... நீ மறுகணமே உயிரை விட்டிருப்பே... எனக்கு தெரியும் கவி! அந்தளவுக்கு என்னை நேசிச்சே... ஆனா நான்? குழந்தைகளை சாக்கா வச்சுக்கிட்டு... இன்னமும் உயிரோட இருக்கேனே? என் காதல் உண்மைன்னா... என் நேசம் நிஜம்னா... நானும் நீ போனதைக் கேள்விப் பட்டதுமே உயிரை விட்டிருக்கணுமே? என் மனசாட்சி என்னை ரம்பமா அறுக்குது கவி! நானும் உன்கிட்டேயே வந்துடறேன் கவி!

விரக்தியோட சலிப்போட வேண்டாவெறுப்போட நடைப் பிணமா நான் ஏன் நடமாடணும்? பூமிக்கு பாரமா ஏன் இருக்கணும்?

இன்னிக்கு இப்பவே இந்த நிமிஷமே என் கதையை நான் முடிச்சிக்கிறேன். விஷம் குடிச்சு சாகட்டுமா? இல்ல... ஒரு முழம் கயித்தை மாட்டி அதில் தொங்கிடட்டுமா? சொல்லு கவி! இப்போதைக்கு ரெண்டுமே கைவசம் இல்லையே? என்ன சிரிக்கிறே...? உங்களால எப்படி இந்த நிமிஷத்துலே சாகமுடியும்னு சிரிக்கிறியா? நான் முடிவெடுத்தா எடுத்ததுதான்! இதோ இந்த ஆப்பிள் நறுக்கிற கத்தியால உள்ளங்கைக்கு கீழே மணிக்கட்டுலே ஒரு பெரிய கீறல் போட்டுட்டா... மேட்டர் ஓவராயிடும் இல்லையா? ஐயாவோட சாமர்த்தியத்தைப் பார்த்தியா? மேலே நீ எனக்காக தனியா காத்துகிட்டுருப்பேமில்ல இதோ உடனே வந்துடறேன் கவி! மனதில் உள்ளதை டைரியில் எழுதி, வைத்துவிட்டு அழுத்தமாய் அந்தப் புகைப்படத்தை முத்தமிட்டான் நித்யன்.

புகைப்படம் நழுவி கீழே விழுந்தது.

''ஊகூம்! இனிமே உன்னை நான் மிஸ் பண்ணவே மாட்டேன் கவி! நீ இங்கே பத்திரமா இரு...'' என்றபடி படத்தை எடுத்து சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டான்.

டேபிளின் மீது இருந்த கத்தியை எடுத்தான். நீண்ட பெருமூச்செறிந்து விட்டு கத்தியை உறுதியாகப் பிடித்தபடி இடதுகை மணிக்கட்டை நோக்கி... மெதுவாக கத்தியை இறக்கினான்.



## 5

நெஞ்சுக்குள் தணலைக் கொட்டி மூடினாற் போன்று... அஞ்சலிக்குள் அப்படியொரு கொதிப்புத் திணறல்...!

தங்கை ஷர்மிலியை வற்புறுத்தி வீட்டிற்கு அவளை அனுப்பி வைத்தாள்.

''நேரமாச்சு ஷர்மி! பேஷண்ட் கிட்டே யாராவது ஒருத்தர்தான் இருக்கணுமாம். நைட்லே நீ இங்கிருந்தா... காலையிலே எழுந்து காலேஜுக்குப் போறதுக்கு கஷ்டமாயிடும். நான் பாட்டியை கவனிச்சுக்கிறேன். காலையில் குளிச்சுட்டு புக்ஸை எடுத்துக்கிட்டு நேரா இங்க வந்துடு. நான் வீட்டுக்குப் போயி சமைச்சுட்டு... உனக்கும் பாட்டிக்கும் டிபன் எடுத்துட்டு வந்துடறேன். சரியா? எதுக்கும் பயப்படாதே... அறைக் கதவைப் பூட்டிக்கிட்டு தூங்கு. அப்பா அறைக் கதவைத் தட்டினா... நீ திறக்கவே வேணாம். புரிகிறதா?''

அரை மனதோடுதான் அவள் கிளம்பிச் சென்றாள்.

அப்பாவை நினைக்க நினைக்க... உள்ளுக்குள் உலை கொதித்தது.

'அவரால் தான் இத்தனை கஷ்டங்களும்...?' என்பதை நினைக்கும் போதே... அவர் மீது வெறுப்பு அலையடித்தது.

''எங்களை காப்பாத்தணும்னு இப்படி வருத்திக் கிட்டீங்களே பாட்டி? அடி படாத இடத்துல பட்டு உயிர் போயிருந்தா என்னாயிருக்கும்னு யோசிக்காம இந்த மாதிரி செஞ்சுட்டீங்களே பாட்டி?''

''ச்சீ! அதை விட்டுத் தள்ளு... இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு பிரச்சினை இல்லாம நாம்ம நிம்மதியா மூச்சு விடலாம். அதுக்கு அப்புறம் என்ன பண்றது?ன்னு யோசிச்சியா?''

''ஒரு யோசனை இருக்கு. ஆனா... எனக்கு இரு மனசா இருக்கு. வீட்டுக்கு காலையிலே போயிட்டு... திரும்பி வர்றப்போ நா என்னோட முடிவைச் சொல்றேனே பாட்டி?''

''நல்ல முடிவா சொல்வே'ன்னு எதிர்பார்க் கிறேன். எனக்கு சோர்வா இருக்கு. நா தூங்கறேன்...''

மெல்லிய போர்வையை எடுத்து அவரைப் போர்த்திவிட்டாள்.

இரவு ஒரு பொட்டுகூட கண் அசராமல் தீவிர யோசனையிலேயே ஆழ்ந்திருந்தாள்.

காலையில் ஷர்மிலி வந்ததும்... தனது ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் வீட்டிற்குள் நுழைந்ததும் தான் தாமதம்...

''ஏய்.... அஞ்சலி! சாதாரணமா நெத்தியில் பட்ட காயத்துக்கு அம்மாவை பெட்டுலே சேர்க்கணுமா? நடக்கிறதையெல்லாம் பார்த்தா... அந்தக் கிழவி வேணும்னே விழுந்து இரவு விருந்தைக் கெடுத்து வச்சிருக்கிற மாதிரி தோணுதே? எத்தனை நாளைக்கு ஆஸ்பத்திரியில நீங்க தங்க முடியும்? வீட்டுக்கு வந்து தானே ஆகணும்? வந்ததும் அன்னிக்கு நைட்லே 'டின்னர்' வச்சுத்தானே தீரணும்? எல்லோருடன் சேர்ந்து என் மூஞ்சியில கரியைப் பூசிட்டதா நெனப்போ? ராஜதுரைக்கும் சிகாமணிக்கும் ரொம்ப ஏமாத்தமா போயிடுச்சு தெரியுமா? ராஜதுரையோட சகவாசம் கிடைக்காதா?ன்னு அவனவன் ஏங்கிச் சாகறான். ராஜதுரை ஒரு கற்பக விருட்சம் மாதிரி... அவரு நம்ம வீட்டுக்கு



அடியெடுத்து வைக்க... நாமதான் ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும். நா சொன்னாப்பல இரவு விருந்து நடந்தே ஆவணும். ஏதாவது சாக்கு போக்கு சொல்லி... மறுபடியும் தப்பிச்சு நழுவிடலாம்னு கனவு காணாதே அஞ்சலி! அப்புறம் நான் பொல்லாதவனாகிடுவேன்.

நேத்தைக்கு மட்டும் இரவு விருந்து நடந் திருந்தா... உன்னோடு வாழ்க்கை தரமே அடியோட மாறிப் போயிருக்கும். எல்லோரும் அண்ணார்ந்து பார்க்கிற உசரத்துக்கு நீ போயிருப்பே. உன்னைப் பெத்த தகப்பன் நான்... நான் உன்னோட நன்மையை உத்தேசித்து தான்... இப்படியெல்லாம் மெனக் கெடறேன். அதை ஏன் நீ புரிஞ்சுக்கவே மாட்டேங் கிறே அஞ்சலி? இனிமேலாவது புத்திசாலித்தனமா பதவிசா பாங்கா நடந்துக்கிட்டு பிழைக்கிற வழியைப் பாரு. சரியா? நான் சொன்னது உன் மண்டையில ஏறுச்சா? புரிஞ்சுதா?'' அடிக்குரலில் உறுமினார் மூர்த்தி.

''நீங்க எல்லாம் ஒரு மனுஷரா? பெத்த தகப்பன் பேசற பேச்சா இது? ராஜதுரையே ஒரு பொறுக்கி. அவனுக்கு விருந்து வச்சா... என்னோட வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்குமா? எல்லோரும் அண்ணாந்து பார்க்கிற உசரத்துக்கு... நான் போயிருவேனா? யாராச்சும் இதைக் கேட்டா... காறித் துப்பிடுவாங்க... கண்ட காலிப் பயல்களுக்கு விருந்து வைக்கும்படி பெத்த பொண்ணை டார்ச்சர் பண்றீங்களே? குடிச்சு குடிச்சு உங்க மூளை மழுங்கிப் போச்சா?'' என்று கேட்டுவிட அவளது நா துடித்தது.

தொண்டை வரை ஓடிவந்த வார்த்தைகளை... சிரமப்பட்டு மென்று விழுங்கினாள்.

கீழுதட்டை அழுந்தக் கடித்து கோபத்தை அடக்கினாள்.

''என்ன பதிலையே காணோம்? மறுபடியும் விருந்துக்கு அவங்களை நான் கூப்பிடலாம் இல்லையா?''

'எதற்கு வம்பு?' என்ற ரீதியில் மவுனமாக அவள் தலையாட்டிவிட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

குளித்துவிட்டு சமையலறையில் அலங்கோலமாய் கிடந்த பாத்திரங்களைத் தேய்த்து அலம்பி... மளமளவென்று சமைத்து டிபன்பாக்ஸில் கட்டி எடுத்து வைத்து... வீட்டை துரித கதியில் பெருக்கி முடித்து நிமிரும்போது மணி காலை எட்டரை ஆகியிருந்தது.

''டிபன் சாப்பிட நீங்களாப்பா?'' செய்தித் தாளைப் புரட்டிக்கொண்டு இருந்த அப்பாவைப் பார்த்து கேட்டாள்.

''எடுத்து வச்சுட்டு நீ கிளம்பு. நான் அப்புறமா சாப்பிட்டுக்கிறேன். நான் சொன்னது ஞாபகமிருக் கட்டும். சரியா?''

''சரிப்பா... நா வரேன்.''

ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தாள்.

ஷர்மிலிக்கு டிபன் பாக்ஸை கொடுத்து அனுப்பி வைத்துவிட்டு பாட்டியின் அருகே வந்து அமர்ந்தாள்.

பாட்டி! இட்லி சாப்பிட்டுட்டு நீங்க மாத்திரை போட்டுக்கணுமே? என்றபடி தட்டில் இட்லிகளை எடுத்து வைத்தாள்.

''இந்தப் பாவிப் பய பெத்தவ அடிபட்டு ஆஸ்பத்திரியில கிடக்கிறாளே? அவளை ஒரு நடைப் போய் பார்ப்போம்னு அவனுக்கு தோணுச்சா பாரேன்... கிராதகன்.''

''அப்பாவுக்கு காரியம் கெட்டுப் போச்சே?'ன்னு கோபம்! வேணும்னே நீங்க இப்படி பண்ணி யிருப்பீங்க'ன்னு



பேசறாரு... வீட்டுக்கு வந்து தானே தீரணும்? வந்ததும் தடபுடலா விருந்து ஏற்பாடு பண்ணிடணும்னு சொன்னாரு...''

''அடப்பாவி...! இவன் கிட்டேயிருந்து எப்படி உங்களைக் காப்பாத்த போறேனோ?''

விட்டால் கோவென்று அழும் நிலையில் பாட்டி இருந்தார்.

அவரை வற்புறுத்தி ஊட்டிவிட்டு மாத்திரை களைக் கொடுத்து விழுங்க வைத்தாள்.

''சொல்லு அஞ்சலி! வீட்டுக்குப் போயிட்டு வந்ததும் உன்னோட முடிவைச் சொல்றேன்'னு சொன்னியே? என்ன முடிவு?''

''எங்க முதலாளிக்கு மேனேஜர் மூலமா நம்ம குடும்ப விவரம் எல்லாம் தெரிஞ்சு போச்சு! அதனால அவரு இரக்கப்பட்டு நம்மளோட பிரச்சினைகளைத் தீர்த்து வச்சு உதவறேன்னு சொன்னாரு. இன்னும் சொல்லப் போனா... புகலிடம் தந்து காப்பாத்தறேன்'னு சொல்லியிருக்காரு...?''

முழு விவரத்தையும் சொன்னால்... பாட்டி மனம் கலங்குவார் என்ற பயத்தில்... பாதி உண்மையை மட்டும் கூறினாள்.

''உங்க முதலாளிக்கு புண்ணியமா போகட்டும். பெரிய பணக்காரரு இறங்கி வந்து உதவறேன்'னு சொல்லியிருக்காரு. இது எவ்ளோ பெரிய விஷயம்? இப்போதைக்கு இந்த இக்கட்டுலே இருந்து எப்படி தப்பிக்கிறது?ன்னு... கண்ணு முழி பிதுங்கிட்டு கிடக்கோமே? இந்த விஷயத்தை முன்னாடியே சொல்லாம... சாவகாசமா சொல்றியே? சுத்த அரை வேக்காடா இருக்கியே? வந்த வாய்ப்பை சாமர்த்தியமா பயன்படுத்திக்க

வேணாமா அஞ்சலி! முதல் வேலையா அந்தப் புண்ணியவான் கிட்டே உதவி கேளுடா.''

''அடுத்தவங்களுக்கு நம்மளால முடிஞ்ச உதவியைச் செய்துக்கிட்டே இருக்கணும். பணம் தந்து உதவ முடியாட்டி சரீரத்தாலே... உடல் உழைப்பால் தாராளமா உதவணும். அதே சமயத்துல எக்காரணத்தைக் கொண்டும் நாம மத்தவங்ககிட்டே உதவியை எதிர்பார்க்கக் கூடாது'ன்னு அடிக்கடி நீங்க சொல்வீங்களே பாட்டி? இப்போ முதலாளிகிட்டே உதவி கேட்கச் சொல்றீங்க... ஆச்சரியமா இருக்கு பாட்டி!''

''எதைத் தின்னா பித்தம் தெளியும்?கிற மனநிலையில் நாம இப்போ இருக்கோம். வலிய வந்து முதலாளி உதவறேங்கிறாரு. கடவுளா பார்த்து தான் அவரை அனுப்பியிருக்காருன்னு... நா நெனக்கிறேன். அதனால இந்த உதவியை அவசியம் நாம உபயோகப்படுத்திக்க வேணும்... போ அஞ்சலி! ஆபீசுக்குப் போயி... அவரைப் பார்த்து பேசு.''

''தேவையில்லை பாட்டி! தினமும் அவரு ஆபீசுக்கு வரமாட்டாரு. அவரைப் பார்க்கிறதே அபூர்வம் தெரியுமா? தன்னோட பெர்ஸனல் நம்பரை என்கிட்டே கொடுத்திருக்காரு பாட்டி! இதோ... ஃபோன்லேயே நா பேசிடறேன்...''

ஹேண்ட்பேக்கிலிருந்த அந்த கார்டை எடுத்து அந்த நம்பருக்கு முயற்சித்தாள்.

மறுமுனையில் ரிங் போனது மனதில் இனம் புரியாத படபடப்பு கூடியது.

''ஹலோ! சந்தானம் ஹியர்.''

''ஹலோ! வணக்கம் சார்! நான் அ... அஞ்சலி பேசறேன்.''



''வணக்கம். எப்படிம்மா இருக்கே? நல்லா யிருக்கியா?''

''எவ்வளவு பெரிய கோடீஸ்வரர்? அக்கறையாய் அன்பாய் நலம் விசாரிக்கிறாரே?''

அவர் மீது நல்ல அப்பிராயமும் நம்பிக்கையும் ஏககாலத்தில் மனதில் ஜனித்தன.

''நல்லாயிருக்கேன் சார்! நீங்க நல்லா யிருக்கீங்களா?''

''சவுக்கியமா இருக்கேன். சொல்ல வந்ததை தயங்காம சொல்லும்மா...''

''சார்! நான் நல்லா யோசிச்சுப் பார்த்தேன்... உங்க அக்ரிமெண்டுக்கு சம்மதம் தெரிவிக்கலாம்னு தான்... நா ஃபோன் பண்ணினேன் சார்!''

''ஓ... குட்! நீ சம்மதிச்சதிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்தான்... ஆமா... அங்கே உனக்கு பிரச்சினை ஜாஸ்தியா ஆயிடுச்சாம்மா?''

ஒரு கணம் தயங்கினாள் அஞ்சலி.

''தயங்காம சொல்லும்மா... இனிமே நமக்குள்ளே எந்த ஒளிவு மறைவும் இருக்கவே கூடாது. நீ என் மகள் மாதிரி... சொல்லு அஞ்சலி.''

தயக்கத்தை உதறிவிட்டு ரத்ன சுருக்கமாக விவரத்தைக் கூறினாள்.

''ஓகோ... இன்னும் கொஞ்ச நேரத்துல ஒரு நம்பகமான நபரை நான் ஹாஸ்பிடலுக்கு அனுப்பி வைக்கிறேன். அவர்கிட்டே நீ எதுவும் சொல்லிக்க வேணாம். உன்னோட தங்கையை, காலேஜ் ஹாஸ்டல்லே சேர்க்கிறதுக்கு அவர் ஏற்பாடு பண்ணு வாரு. அவ படிப்பு பாதியிலே பாதிக்கக்

கூடாதுன்னு தான் இப்படியொரு ஏற்பாடு! அவ படிப்பை முடிச்சதுக்கு அப்புறம்... நீ தாராளமா அவளை உன்கிட்டே கூப்பிட்டு வச்சுக்கலாம். உங்கக்காவைப் பத்தி சொன்னேயில்ல? அக்காவுக்கு நல்ல வேலை போட்டுத்தரச் சொல்றேன். சொந்தக் கால்லே சுயமா நின்னு சம்பாதிக்க ஆரம்பிச்சா... அவளுக்கே ஒரு தன்னம்பிக்கை வரும். அவளோட ஹஸ்பெண்ட் குடிச்சுட்டு வந்து அராஜகம் பண்றான். இல்லையா? அசிஸ்டெண்ட் கமிஷனரை விட்டு அவன்கிட்டே பேசச் சொல்றேன். அவனோட கொட்டம் தானாக அடங்கிடும். இதே மாதிரி உங்கப்பாவையும் அடக்க என்னால முடியும்...''

''என்னபத்தி வெளியில ஏன் சொன்னீங்க?ன்னு மறைமுகமா டார்ச்சர் பண்ணுவார் சார்!''

''புரியுது அஞ்சலி! சிலபேரு... நாம என்ன செய்தாலும் வழிக்கே வரமாட்டாங்க. இந்த மாதிரி அடாவடிப் பேர்வழிங்களை விட்டு... நாம விலகி வர்றதுதான் பெட்டர்! இன்னிக்கு சாய்ந்தரமே தங்கையை கன்வின்ஸ் பண்ணி! ஹாஸ்டல்ல என்னோட ஆள் சேர்த்து விட்டுடுவாரு... அக்காகிட்டே ஃபோன்ல விவரத்தைச் சொல்லிடு! இன்னிக்கு இரவு ஏழு மணிக்கு பாட்டியை அழைச்சுட்டு... நம்ம கார்லே ஏறி வந்துடு. நாளைக்கு காலையில அஞ்சு மணிக்கு போடிமெட்டுக்கு வந்துடலாம். அங்கிருந்து நெடுங்குண்டம்... நெடுங்குண்டத்திலிருந்து 'மயிலாடும் பாறை'க்கு... சரியா காலையில ஏழு மணிக்கு வந்து சேர்ந்துடலாம்.

பச்சைப் பசேல்னு மேற்கு மலைத் தொடர்ச்சி யையும் எஸ்டேட் அழகையும் பார்த்த மாத்திரத் திலேயே... உன்னோட அத்தனை கவலைகளும் பறந்தோடிப் போயிடும் அஞ்சலி!''



''என்னோட பிரச்சினையைப் புரிஞ்சுக்கிட்டு... மைதிலியை ஹாஸ்டல்லே சேர்த்து... எங்கக்காவுக்கு ஒரு வழிபண்ணி... என்னையும் பாட்டியையும் உங்க இடத்துக்கே வரச் சொல்லிட்டீங்க... என்னோட பிரச்சினைகள் எல்லாத்தையும் தீர்த்து வச்சுட்டீங்களே! இப்பவே என்னோட மனசிலேர்ந்து எளிய பாரம் இறங்கினாப்ல இருக்கு சார்! ரொம்ப நன்றி...''

''நன்றியெல்லாம் சொல்லி என்னை வேத்து மனுஷனாக்கிடாதே அஞ்சலி! அக்ரிமெண்ட் முடியற காலம் வரைக்கும் நீ எங்க வீட்டுப் பொண்ணு சரியா? உன்னோட வரவு நல்லவரவாகட்டும். பை!''

''பை சார்!''

''உங்க முதலாளி என்னம்மா சொன்னாரு?'' ஆவலாய் கேட்ட பாட்டியிடம்... சுருக்கமாக விவரத்தைத் தெரிவித்தாள்.

''அப்பாடா... இப்போதான் என் மனசுக்கு நிம்மதியா இருக்கு. இக்கட்டுலேர்ந்து நீங்க ரெண்டு பேரும் தப்பிச்சுடலாம். அதே சமயத்துல உங்க முதலாளி உங்கக்கா மைதிலிக்கும் நல்லதொரு வழியைக் காட்டிட்டாரே?'' அவரும் அவரோட குடும்பமும் ரொம்ப காலத்துக்கு நல்லாயிருக்கணும். உன்னோட குடும்பக் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிட்டு அவராகவே வலியவந்து உதவறாரே? இந்த நல்ல மனசு யாருக்கு வரும்? ஆமா... நம்மளை 'மயிலாடும் பாறைக்கு'' வரச் சொல்லிட்டாரே? அப்போ அந்த எஸ்டேட்டிலேயே உனக்கு வேலை போட்டுத் தந்துடுவாராமா?''

அப்படித்தான் இருக்கும்னு நெனைக்கிறேன். சரி பாட்டி! மைதிலி அக்காவுக்கு ஃபோன் பண்ணி விவரத்தை

சொல்லணும். முதலாளி அனுப்பி வைக்கிற நபர்... இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாரு. வந்ததும் அவர்கூட ஷர்மிலி படிக்கிற காலேஜுக்குப் போகணும். அப்பா, மதியம் ரெண்டு மணிக்கு மேல நண்பர்களோட சூதாட்டம் ஆடறதுக்கு கிளம்பிடுவாருல்ல? அந்த நேரத்துல வீட்டுக்குப் போயி ஷர்மிலிக்கும் நமக்கும் தேவைப்படற துணிமணிகளை எடுத்துட்டு வந்துடறேன்...''

''உம்... சரி அஞ்சலி! வீட்டுக்குப் போறே... உங்கப்பன் திடுதிப்புன்னு வந்து... நீ துணிமணிகளை 'பேக்' பண்றதைப் பார்த்துட்டா அவளோதான்! ஜாக்கிரதையா போயிட்டு வந்துடு...''

''இனிமே பயமில்லை பாட்டி! முதலாளி தலையிட்டுட்டாருல்ல? அப்பா திடீர்னு புகுந்து பிரச்சினை பண்ணினா... முதலாளி அவரை சும்மா விட்டு வைக்க மாட்டாரு... அவருகிட்டேயிருந்து நம்மளை எப்படியாவது மீட்டு கூட்டிட்டுப் போயிடுவாரு'ன்னு... எனக்கு நம்பிக்கை இருக்கு பாட்டி!''

பாட்டியை சமாதானப்படுத்திய அஞ்சலிக்கு... மனசாட்சி ரம்பமாய் அறுக்கத் தொடங்கியது.

அந்த 'அக்ரிமெண்டை'ப்பற்றி பாட்டியிடம் சொல்லாமல் மறைத்து விட்டேனே?

முதலாளியின் மகனுக்கு மனைவியாக கொஞ்ச காலத்திற்கு நடிக்க ஒப்புக்கொண்ட விவரம் தெரிந்தால்.... பாட்டியால அதை ஜீரணித்துக் கொள்ள இயலுமா? இப்போது எனக்கே மனசாட்சி அறுக்க ஆரம்பித்து விட்டதே? நல்ல குடும்பத்தில் பிறந்த எனக்கு... இப்படி யொரு நிலைமையா?

அஞ்சலிக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.



# 6

''கவி! என்னோட மணிக்கட்டை அறுத்து கிட்டு... இன்னும் கொஞ்ச நேரத்துல நான் உன்கிட்டேயே வந்துடு வேன். கொஞ்ச நேரம் காத்திரு கண்ணே! வந்துடறேன்...''

மானசீகமாக மனைவியிடம் பேசியபடி நித்யன் தனது மணிக்கட்டை அறுக்கப்போகும் தருணத்தில்...

அந்த அறைக்கதவை யாரோ படபடவென்று தட்டினார்கள்.

''சார்! சார்! சீக்கிரமா கதவைத் திறங்க... உங்க சின்னக் குழந்தை ஆதிக்கு நிலைமை சரியில்லை... வேகமா வாங்க சார்!''

வேலைக்காரன் பதற்றமாய் கத்தியதைக் கேட்டதும்... அதிர்ச்சியில் நித்யனின் கையிலிருந்த கத்தி தன்னால நழுவியது.

'ஐயோ! நல்லாத்தானே இருந்தான் குழந்தை? திடீர்னு என்னாச்சு? கடவுளே... எனக்கு அடுக்கடுக்கா சோதனைகளா வருதே?'

நான்கே பாய்ச்சலில் ஓடிப்போய் கதவைத் திறந்து மின்னல் வேகத்தில் மாடியை விட்டு இறங்கினான்.

குழந்தை பார்வதியின் மடியில் கிடந்தது. அருகில் அப்பா சந்தானம் கவலை தேய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தார்.

சுற்றிலும் மற்றவர்கள் பதற்றமாய் சோகமாய் நின்றிருப்பதைப் பார்த்தபடி... ''அம்மா! என்னம்மா ஆச்சு?

ஆதிக்கு திடீர்னு என்னாச்சு?'' அருகில் நெருங்கி குழந்தையின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

''ஆதியை கவனிச்சுக்க ஆயிரம் பேத்தை நாம வேலைக்கு அமர்த்தினாலும்... அவங்க கடமைக்கு தானே குழந்தையை கவனிச்சுக்கிறாங்க? பச்சைக் குழந்தைக்கு தெரியும்பா அந்த வித்தியாசம்? தாயோட அன்பு அரவணைப்புல கிடைக்கிற பாதுகாப்பு உணர்வு... மத்தவங்ககிட்டேயிருந்து குழந்தைக்கு கிடைக்காதுடா... சதா அதை நெனச்சு ஏங்கி அழுதா... உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

இன்னிக்கு இடைவிடாம அழுது மூச்சுத் திணறல் ஏற்பட்டிடுச்சு நித்யா! குழந்தையை அதுக்குத்தான் அதிகமா அழவிடக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லுவாங்க'' என்றார்சந்தானம்.

''என்னை விட்டுப் போன கவியை நெனச்சு நா அழறதா? இல்ல... இப்படி பேச்சு மூச்சில்லாம கிடக்கிற ஆதியை நெனச்சு கவலைப்படறதா? விதி ஏன் என்னை விடாமதுரத்துது?''

கண்ணீர் மல்க சந்தானத்தை ஏறிட்டு விட்டு பார்வதியின் அருகில் அமர்ந்து குழந்தையின் கேசத்தை மெல்லவருடினான்.

''காய்ச்சல்லே உடம்பு கொதிக்குதே?''

''இதுக்கு முழுக்க நீதான் காரணம், நித்யா.''

''இதுக்கு முழுக்க ... குழந்தைக்கு இப்படி ஆயிடுச்சுன்னு

''நானா? என்னால குழந்தைக்கு இப்படி ஆயிடுச்சுன்னு எப்படிப்பா சொல்றீங்க? வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சாதீங்க அப்பா.''

''உன்னை நோகடிக்கணும்கிறது என் நோக்கமில்ல நித்யா! சதா இறந்து போனவளை நெனச்சு



வேதனைப்பட்டே... உன் குழந்தைகளை நீ கவனிக்கத் தவறிட்டே... எங்களுக்கும் வயசாகுது. தாய் போனா என்ன? தாய்க்கு தாயா அப்பாவுக்கு அப்பாவா இருந்து... நீதானேடா உன் குழந்தைகளை கண்ணும் கருத்துமா பார்துக்கணும். பாசத்துக்கு ஏங்கித் தவிச்சே... அரை உசுரா போயிட்டாங்கடா பாவம்! கவி அகாலமா மாண்டு போயிட்டா... அது விதி! யதார்த்தத்தை ஜீரணிச்சுக்கிட்டு உன் பசங்க கிட்டே நீதான் ஒட்டுதலா இருக்கணும். அவங்களுக் காக நீ வாழணும். வாழ்க்கையை அமைச்சுக்கணும்.

''நீ இப்படியே இருந்தா... இந்த ரெண்டு குழந்தைகளையும் நாம இழக்க வேண்டியதுதான்...''

''அப்பா...'' அலறினான் நித்யன்.

''நிஜத்தை தானேடா நான் சொன்னேன். இதோ டாக்டர் வந்துட்டாரு. அவரோட ஒப்பினியன் என்னன்னு கேட்போம்டா...''

குடும்ப மருத்துவர் குழந்தையைப் பரிசோதித்து விட்டு ஊசி போட்டுவிட்டு... நித்யனை ஏறிட்டார்.

''இப்படி கவனக்குறைவா இருந்தா எப்படி? குழந்தையை ஜாஸ்தி அழவிடக்கூடாது. ஏங்க விடவும் கூடாது. காய்ச்சல் வேற அடிக்குது. ஒரு மணி நேரத்துக்கு ஒருதடவை ஸ்ரப் தரணும். யுடிகோலனால் பஞ்சை நனைச்சு... நெத்தியில் 'பத்து' போடணும். கிட்டக்க அரவணைப்பா இருந்து குழந்தையை கவனிச்சுக்கணும். குழந்தைக்கு இப்போ தேவை அன்பும் அனுசரணையும் அரவணைப்பும்தான்... அதை முதல்லே புரிஞ்சுக்கோங்க... உங்களால முடியுமா? இல்ல... நல்ல நர்சுக்கு நான் ஏற்பாடு பண்ணட்டுமா?''

''நித்யா! எனக்கு ஏகப்பட்ட வியாதிகள் இருக்குன்னு உனக்கே தெரியுமே... வயசாயிடுச்சு தள்ளாத காலத்துல

சின்னப்பசங்களை கவனிச்சுக்க என்னால முடியாதுப்பா...'' என்ற பார்வதியை பரிதாபமாய் பார்த்தான் நித்யன்.

''வேலைக்காரங்க ஒப்புக்குதானேப்பா கவனிப்பாங்க?'' அதிருப்தியுடன் சுற்றிலும் இருந்த பணியாட்களை ஒரு பார்வை பார்த்தார் சந்தானம்.

''பேசாம நர்ஸை அப்பாயிண்ட் பண்ணிடலாமாப்பா?'' ஆர்வமாய் கேட்டான் நித்யன்.

''நர்ஸும் பணத்துக்கு வேலை பார்க்கிறவள் தானே, அவகிட்டேயிருந்து அன்பும் அரவணைப்பும் குழந்தைக்கு எப்படி கிடைக்குமாம்? கடனுக்குத் தானே அவளும் வேலை செய்வா...''

நித்யனுக்கு பாசத்தில் உடம்பெல்லாம் நடுங்கியது.

'மயிலாடும் பாறை' பங்களாவின் முன் காரிலிருந்து இறங்கிய அஞ்சலியும் பாட்டியும் தயக்கமாய் பங்களாவுக்குள் நுழைந்தனர்.

பிரம்மாண்டமான ஹாலில் பணியாட்கள் பதற்றமாய் குழுமியிருந்ததைப் பார்த்துவிட்டு... அவரமாய் நடையை எட்டிப் போட்டாள் அஞ்சலி.

டாக்டர் பேசியதையும் நித்யனும் சந்தானமும் சம்பாஷித்ததையும் செவிமடுத்தபடி அவர்களருகே சென்றாள்.

''சார்... வணக்கம்!''

''அடடே... வாம்மா அஞ்சலி! இவங்க உங்க பாட்டியா? வணக்கம்மா! பேரனுக்கு திடீர்னு உடம்பு சுகமில்லை... நடந்த அமளிதுமளியில் நீ வரப் போறதை சுத்தமா மறந்துட்டேன்...''

முறுவலித்தார் சந்தானம்.



''சார்! நான் குழந்தையைப் பார்த்துக்கிறேன் சார்! நேரத்துக்கு ஸ்ரப் கொடுத்து நல்லா கவனிச்சுக்கிறேன் சார்!''

''குட்! இனி என்னோட பேரனும் பேத்தியும் உன்னோட பொறுப்பு அஞ்சலி! அப்பாடா... என் கவலை தீர்ந்தது.''

''அப்பா! யாருப்பா இவங்க?''

நித்யன் அஞ்சலியையும் பாட்டியையும் பார்த்து விட்டு கேட்டான்.

''எல்லாம் நமக்கு ரொம்ப வேண்டியவங்க தான்!'' என்றவர்... சுற்றிலும் நின்றிருந்த பணியாட் களைப் பார்த்து ''இவ அஞ்சலி! குழந்தைகளை மட்டுமில்ல... இந்தக் குடும்பத்தை நல்லபடியா இனிமே இவதான் நிர்வகிக்கப் போறா... பார்வதி உடம்புக்கு முடியாதவள்... அவளையும் இவ கவனிச்சுக்கப் போறா... இனிமே எதுவா இருந்தாலும் அஞ்சலியைக் கேட்டு நடந்துக்கோங்க... இவங்க இங்கதான் இருக்கப் போறாங்க. இவங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து குடுங்க...'' என்று உத்தரவிட்டார்.

பார்வதி அஞ்சலியைப் பார்த்து, ''இது இனிமே உன்னோட வீடுதான். எல்லா உரிமைகளோடு சுதந்திரமா நீ செயல்படலாம்.'' என்று முறுவலித்துவிட்டு எழுந்து போய்விட்டார்.

அஞ்சலி குழந்தை ஆதியின் அருகே சென்று அமர்ந்து... ஆதியை அப்படியே வாரி தன் மடிமீது போட்டுக் கொண்டாள்.

தம்பியை மடியில் தூக்கிப் போட்டுக் கொண்டதும்... சிறுமி அஞ்சு உரிமையாய் அஞ்சலியின் தோலைத் தொட்டு முறுவலித்தாள்.

''உங்க பேரு என்ன?''

''என் பேர் அஞ்சலி! குட்டி தேவதை மாதிரி ரொம்ப அழகா இருக்கியே... உன் பேர் என்ன?''

''என் பேரு அஞ்சு. ஹைய்யா... நான் அஞ்சு. நீங்க அஞ்சலி'' காய்ச்சல் கணப்பிலிருந்த ஆதி கண் மலர்த்திப் பார்த்தான்.

விழிகளில் கனிவும் கருணையும் பொங்க தன்னை மடியில் கிடத்தி அரவணைத்துக் கொண்டிருந்த அஞ்சலியை... வியப்புடன் நோக்கினான்.

''என்னடா செல்லம்? ஊசி போட்டது வலிக்குதா? பாப்பாவுக்கு ஒத்தடம் தரலாமா? சமர்த்தா ஸ்ரப் குடிச்சா காய்ச்சல் சீக்கிரமா போயிடும். அக்காகூட என்கூட விளையாட வேணாமா? ராஜா குட்டி எழுந்து வந்ததும் கண்ணாமூச்சி ஆடலாமா? சொல்லுங்க.''

குழந்தையின் பிஞ்சக் கரத்தை எடுத்து முத்த மிட்டு தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டபடி பேசியவளை... ஆதி ஆர்வமாக விழிகள் விரியப் பார்த்தான்.

அழுது சோர்ந்த விழிகளில் ஒரு மின்னல் போன்ற பளிச்சிடல் தென்பட்டது.

குழந்தையின் முகத்தில் அலாதி திருப்தியும் தெம்பும் படர்ந்தது. உரிமையாய் ஆசையாய் அஞ்சலியின் முகத்தை வருடிவிட்டு... நீண்ட பெருமூச்செறிந்து விட்டு நிம்மதியாய் விழிகளை மூடி உறங்க ஆரம்பித்தது.

அஞ்சலி வந்ததும் வராததுமாய் தனது குழந்தைகள் இரண்டும் அவளிடம் ஒட்டிக் கொண்டதை வியப்புடன் வேடிக்கை பார்த்தபடி சோபாவில் அமர்ந்திருந்தான் நித்யன்! நேரம் நகர்ந்தது.

சந்தானம் ஏதோவொரு யோசனையுடன் மாடியேறிச் சென்றார். அடுத்த கால் மணி நேரத்தில் ''நித்யா... நித்யா''



என்று அவர் கடுங்கோபம் கொண்டு சிங்கமாய் கர்ஜித்த சப்தம் கேட்டு திடுக்கிட்டு மேலே பார்த்தாள் அஞ்சலி.

''இதோ வந்துட்டேன் அப்பா'' குரல் கொடுத்தபடி பதறிப்போய் மாடிக்கு விரைந்தான் நித்யன்.

பாட்டி மரகதம் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று விட்டிருந்தாள்.

''என்னவோ? ஏதோ?'' என்று அஞ்சலிக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

தூங்கிவிட்ட குழந்தையை கட்டிலில் படுக்க வைத்து போர்த்தி விட்டாள். சிறுமி அஞ்சு கரடி பொம்மையை வைத்துக் கொண்டு தன்னை மறந்து லயித்துப்போய் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

அஞ்சலி தயக்கத்துடன் மாடியேறிப் போனாள்.

சந்தானம் கோபமாய் பேசிக் கொண்டிருந்தார். அவர் குரல் வந்த திக்கை நோக்கி மெதுவாய் நடந்து... அந்த அறை வாசலுக்கு முன் தயங்கி நின்றாள்.

''உன் மனசுல என்னடா நெனச்சுட்டிருக்கே? படிச்சவன் பண்ற காரியமாடா இது? இதுக்கா உன்னை ஃபாரினுக்கெல்லாம் அனுப்பி படிக்க வைச்சேன்? இன்னிக்கு உன் முகமே சரியில்லை. பார்வையும் முகமும் வித்யாசமா படவே... உன் ரூமுக்கு வந்தேன். வந்து பார்த்தா டேபிள்லே டைரியை கவிழ்த்து வச்சிருந்தே... அப்பனும் மகனுமா இருந்தாலும் அடுத்தவங்க பெர்ஸனலா எழுதி வச்சதை வாசிக்கக் கூடாதுதான். மனசுல ஏதோவொரு நெருடல்... எடுத்து வாசிச்சுட்டேன். பாவி! தற்கொலை செஞ்சுக்க துணிஞ்சுட்டியேடா? நீயெல்லாம் ஒரு மனுஷனா? சுயநலப் பிசாசுடா நீ...''

''அ... அப்பா! பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்களேப்பா? எந்த விதத்துல சுயநலமா நான் நடந்துகிட்டேன்...? ஆமா... இது ஒரளவுக்கு உண்மைதான் அப்பா! கவி என்னோட உயிர்னு சொல்லிட்டிருந்தவன் அவ போனப்புறமும் நான் இருக்கேனே நான் சுயநலம் பிடிச்சவன்தான்... ஒத்துக்கிறேன்...''

''ஏன்டா பைத்தியம் மாதிரி பேசறே? நானும் உங்கம்மாவும் ஒருத்தர் மேல ஒருத்தர் உயிராத் தானிருக்கோம். நாளைக்கே எங்கள்லே ஒருத்தருக்கு சாவு வந்துட்டா... இருக்கிறவங்க தற்கொலையா செய்துப்போம். குறைகாலத்துக்கு பழைய ஞாபகங்கள் நினைவுகளோட இறுதிவரை வாழ்ந்து தானே முடிக்கணும்? அதானே யதார்த்தம்? உன் பசங்களைப் பத்தி துளிகூட கவலைப்படாம... 'போய் சேர' முடிவு பண்ணினியே? இது எவ்ளோ பெரிய சுயநலம்? நீ போயிருந்தா... அந்த அதிர்ச்சியில் நானும் பார்வதியும் கூடிய விரைவில் கண்ணை மூடிடுவோமே? அப்புறமா இந்தப் பசங்களோட கதியென்ன?''

''சாரிப்பா... நான் தப்பான முடிவு எடுக்கப் பார்த்தேன். நான் செய்தது முட்டாள்தனம் தான்... சுயநலமான முடிவுதான்! மன்னிச்சுங்கோங்கப்பா... கவி என்னோட உயிரிலும் உணர்விலும் கலந்துட்டாப்பா... அவளை மறக்க முடியாமத்தான் நான் இப்படி செய்துட்டேன்... சாரி.''

''உன்னோட கவி எங்கேயும் போகலை. அவளோட ஆத்மா இந்த ரெண்டு குழந்தைங்களைத்தான் சுத்தி சுத்தி வரும். அவங்க படற கஷ்டங்களைப் பார்த்தா... கவியோட ஆத்மா எப்படி சாந்தியடையும்? கண்டிப்பா சாந்தி அடையவே அடையாது.''



''ஐயோ! உங்க வாயால் அப்படி சொல்லாதீங்கப்பா! அவ ஆத்மா சாந்தி அடையணும்பா... அதுக்கு ஏதாச்சும் பரிகாரம் செய்யணுமாப்பா?'' தழுதழுத்தான் நித்யன்.

''எதுக்கு எந்தப் பரிகாரமும் இல்ல நித்யா! நீ நான் சொல்றபடி நடந்தா... தன்னால கவியோட ஆத்மா சாந்தி அடைஞ்சிடும்...''

''என்ன செய்யணும்? இனிமே பசங்ககிட்டே பாசமா நடந்துக்கிறேன். அவங்க மேல அக்கறையும் கவனமும் செலுத்தணும். அதானே சொல்ல வந்தீங்க?''

''அது மட்டும் போதாது. நீ அஞ்சலியை கல்யாணம் செய்துக்கணும். குழந்தைங்க தாயன்புக்காக ஏங்கித் தவிக்கிறாங்க... அஞ்சலி நல்ல தாயா இருந்து அவங்களை கண்ணுல வச்சுப் பார்த்துப்பா...''

''என் மனசு பூராவும் கவிதான் நிறைஞ்சிருக்கா... என்னால எப்படிப்பா அஞ்சலியை...?'' அவன் பேசி முடிக்கும் முன் இடைமறித்தார் சந்தானம்.

''உனக்கொரு மனைவி தேவைப்படாம இருக்கலாம். குழந்தைகளுக்கு ஒரு அம்மா தேவையில்லையா? அதுக்காக... கொஞ்ச காலத்துக்கு ஒரு கணவனா நடிச்சா போதும். அஞ்சலி நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவ. கொஞ்ச காலத்துக்கு குழந்தைகளை நல்லா கவனிச்சுக்கட்டும் அதுக்கு அப்புறமா நாம சொல்றப்போ அவளே விலகிப் போயிடுவா... நான் எல்லாத்தையும் பேசிட்டேன். அவ ரொம்ப நல்ல பொண்ணுப்பா... என்ன சொல்றே?''

''கவியோட ஆத்மா சாந்தி அடையணும். அதுக்காக நான் நீங்க சொல்றதுக்கு உடன்படறேன்...''

அதுவரை அவர்களது பேச்சை செவிமடுத்த அஞ்சலி... நெஞ்சம் படபடக்க கீழே இறங்கிச் சென்றாள்.

அன்றிரவு ஒன்பது மணிக்கு மேல்... சந்தானத்திடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

அறைக்குள் நுழைந்தவளை நிதானமாய் ஏறிட்டார்.

''புது சூழல் புது இடம்... எல்லாமே பிடிச்சிருக்கா அஞ்சலி?''

''பிடிச்சிருக்கு சார்!''

''அப்பான்னு சொல்லு! நித்யன் சம்மதிச்சாச்சு. அடுத்த முகூர்த்தத்துல கல்யாணத்தை வச்சுக்கலாமா?''

''உங்க இஷ்டம் அப்பா! உங்க பிள்ளை இறந்து போன மனைவி மேல இவளோ உயிரா இருக்கிறாரே? மனைவியோட பிரிவைத் தாங்க முடியாம தற்கொலை முயற்சியிலகூட இறங்கிட்டாரே? சாரிப்பா... காலையில் நீங்க கோபமா சத்தமா உங்க பிள்ளையைக் கூப்பிட்டதும்... என்னவோ ஏதோ?ன்னு பதறிப் போயிட்டேன். ஏதோவொரு உரிமையில, பதற்றத்துல நான் மாடிக்கு வந்தேன். நீங்க பேசிட்டிருந்ததைக் கேட்டேன்... மன்னிச்சுக்குங்க அப்பா.''

''இதுலே என்னம்மா தப்பு இருக்கு? அவனைப் பத்தி நீ நல்லா புரிஞ்சுக்கிட்டேயில்ல...? கோழைத் தனமா அவன் தற்கொலை செய்துக்கப் போயிருக் கானே? என்னால இன்னமும் அதை ஜீரணிக்கவே முடியலை அஞ்சலி!''

''அந்த அளவுக்கு அவர் தன்னோட மனைவியை நேசிக்கிறாரு. உண்மையிலேயே அந்த கவி ரொம்பக் குடுத்து வச்சவங்கதான்... அன்பு தேவதையா இன்னமும் உங்க புள்ளையின் இதயத்துல குடியிருக்காங்களே... கிரேட்!''

''அஞ்சலி... ப்ளீஸ்... விஷயம் தெரியாம அவளுக்கு நீ புகழாரம் சூட்டாதே... என்னால தாங்க முடியலையம்மா...'' குரலைத் தழைத்துப் பேசினார் சந்தானம்.



குழப்பத்துடன் அவரை ஏறிட்டாள்.

''அவ... அன்பு தேவதை இல்லம்மா... அரக்கி! தாடகை... வேலி தாண்டிய வெள்ளாடு... புரியலையா? படி தாண்டியவள் தரம் கெட்ட பெண். அவ இன்னமும் உயிரோடதான் இருக்கா...'' என்றவரின் விழிகளிலிருந்து கண்ணீர் சுரந்தது.

அஞ்சலிக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போனது.

## 7

அஞ்சலிக்கு தன் செவிகளை நம்பமுடிய வில்லை.

'என்னது? கவிதா படி தாண்டியவளா? தரம் கெட்ட பெண்ணா? இன்னமும் உயிரோடு இருக்கிறாளா? என் காதில் ஏதாவது கோளாறா? நான் கேட்டது நிஜம்தானா?'

அவளது மனதில் ஆயிரம் கேள்விகள் முளைவிட்டன.

''அது... அப்பா! என்ன சொல்றீங்க? எ... என்னால நம்பவே முடியலையே? இப்பேர்ப்பட்ட குடும்பத்துக்கு மருமகளாகிறதுக்கு... அவங்க பூர்வ ஜென்மத்துல புண்ணியம் பண்ணிருக்கணுமே? தன் மேல உயிரையே வச்சுட்டிருக்கிற அன்பான கணவர்... அழகான குழந்தைங்க, பாசம் காட்டற மாமனார் மாமியார்னு நிறைஞ்ச வாழ்க்கை' வாழ்ந்திருக் காங்களே? இப்படியொரு வாழ்க்கையை உதறிட்டுப் போக... அவங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

''அதுதான் எனக்கு இன்னமும் புரியாத புதிராவே இருக்கு. இதே கேள்வியைத்தான் நானும் எனக்கு நானே கேட்டுக்கிறேன். அவ சாகலைம்மா... பல காலமா திட்டம்

போட்டு இப்படியொரு விபத்தை உருவாக்கியிருக்கா... கல்யாணத்துக்குப் போனவளோட கார், அகல பாதாளத்துல உருண்டு விழுந்ததால... நாங்க எல்லோருமே விபத்துல அகால மரணம் அடைஞ்சுட்டதா நெனச்சுட்டோம். அவ பெரிய அகல பாதாளத்துல இருந்து பாடியை மீட்கிறது ரொம்பக் கஷ்டம்னு சொல்லிட்டதால... ஊர்ஜிதமாவே அவ செத்துப் போயிட்டான்னு நாங்க நம்பிட்டோம்...''

''அவங்க உயிரோட இருக்காங்கிற விவரத்தை... உங்க பிள்ளைகிட்டே ஏன் மறைச்சீங்கப்பா?''

''அவ குத்துயிரும் கொலை உயிருமா கோமா ஸ்டேஜிலேயோ கிடந்திருந்தாகூட... என் மனசு ஆறிப் போயிருக்கும். முதல் வேலையா அந்தத் தகவலை நித்யன்கிட்டே நான் கண்டிப்பா சொல்லி யிருப்பேனே? ஆனா... அவ... அவ... மகா பாவிம்மா... கள்ளக் காதலனோட ஓடிப் போயிருக்காளே? அந்தக் கேவலத்தை கேடு கெட்டவளைப் பத்தி... நான் எப்படி அவன்கிட்டே சொல்ல முடியும்?''

''மைகாட்! இப்படிக்கூட நடக்குமா? அந்தத் தகவல் உண்மைதானா?'ன்னு தீர விசாரிச்சீங் களாப்பா? ஏன்னா... 'கண்ணால பார்க்கிறதும் பொய்... காதாலே கேட்கிறதும் பொய்... தீர விசாரிச்சாத்தான் உண்மை தெரியும்'னு பெரியவங்க சொல்வாங் களேப்பா? அதுக்குதான் கேட்கிறேன்...''

''துப்பு துலக்காத குறையா... தெளிவா அலசி ஆராய்ஞ்சு பார்த்துட்டேன். என்னைப்பத்தி உனக்கு நல்லாத் தெரியுமே? பல நாட்களா உனக்கே தெரியாம உன்னைப் பத்தின தகவல்களை எல்லாம் திரட்டினதுக்கு அப்புறம்தான்... கடைசியா நான் உன்னை நேர்லே சந்திச்சேன்... அந்தத் தகவல் நூறு சதவிதம் நிஜம்தான்...''



நிஜம்னு தெரிஞ்சதுக்கு அப்புறம்... நித்யன் கிட்டே சொல்ல என்னால முடியலைம்மா... உனக் கொரு விஷயம் சொல்லணும் அஞ்சலி! பொதுவா பணக்காரக் குடும்பத்துல பொறந்த பசங்களுக்கு ஆணவமும் மமதையும் நிறைஞ் சிருக்கும். அது மட்டும் இல்ல... பணத்திலேயே புரண்டு வளர்ந்ததால... எல்லாவிதமான கெட்டப் பழக்கங்களுக்கும் அடிமையாயிட்டு இருப்பாங்க. இல்லையா? ஆனால நித்யன் அப்படியில்லையம்மா...

இதுக்கு விதி விலக்கா இருந்தான்... சிகரெட், தண்ணி, பெண்கள் சகவாசம்னு எந்தவிதக் கெட்டப் பழக்கங்களும் இல்லாத சொக்கத்தங்கமா உத்தம புருஷனா வலம் வரக்கூடியவன். மான அவமானத்துக்கு அஞ்சினவன். குடும்ப கவுரவத்தை ரொம்பப் பெரிசா மதிக்கிறவன். மானஸ்தன். காலையிலே நீயே கேட்டேயில்ல... மனைவி மேல உயிரையே வச்சிட்டிருந்தவன்... அவளுக்காக உயிரை விடத்துணிஞ்சவன்'னு புரிஞ்சுக்கிட்டியே?

இப்பேர்ப்பட்டவன்கிட்டே நான் எப்படி அந்த உண்மையைச் சொல்ல முடியும்? மனைவி கள்ளக்காத லனோட ஓடிப்போயிட்டாள்னு தெரிஞ்சா... அவன் தாங்குவானா? அவன் பெரிய மானஸ்தனாச்சே? அடுத்த செகண்டே அவன் உயிரோடவே இருக்க மாட்டானே? அந்தக் கேடுகெட்ட ஜென்மத்துக்காக... என் மகன் உயிரை விடறதா? விஷயத்தைக் கேட்ட மறுகணமே அவனோட இதயம் சுக்கு நூறாயிடுமே? அந்த பயத்துலதான் இந்த அசிங்கத்தை என் மனசுக் குள்ளேயே போட்டுப் புதைச்சுட்டேன். உனக்கு ஒண்ணு தெரியுமா? கவிதாவை நான்தான் படிக்க வைச்சேன். இதே மயிலாடுதுறை எஸ்டேட்டுலே ஒரு தோட்டத் தொழிலாளியா இருக்கிற முத்தையாவோட பொண்ணு அவ... முத்தையா நல்ல

விசுவாசி. அவனோட குணத்துக்குதான் நான் அவளை ஹாஸ்டல்லே சேர்த்து படிக்க வைச்சேன். படிப்பு முடிஞ்சு வந்ததுமே... தற்செலா நித்யன் அவளைப் பார்த்திருக்கான். அந்தப் பேரழகைப் பார்த்து மயங் கிட்டான். அவனா வந்து அவளை விரும்பறேன்'னு சொன்னான். ப்ச்! ஒரே புள்ளை இவன்... இவனோட ஆசைக்கு ஏன் முட்டுக்கட்டை போடணும்னு சம்மதிச்சு கல்யாணம் செய்து வைச்சேன்...''

''இது ரொம்பப் பெரிய விஷயம் அப்பா! எப்பேர்ப்பட்ட பெருந்தன்மை உங்களுக்கு தோட்டத் தொழிலாளியோட பெண்ணை படிக்க வச்சு... கடைசியில இவ்வளவு பெரிய சமஸ்தானத்துக்கு மருமகளா ஆக்கியிருக்கீங்க... கால முச்சூடும் விசுவாசமா இருக்கிறதை விட்டுட்டு... இவ்வளவு பெரிய துரோகத்தைப் பண்ண... அவங்களுக்கு எப்படி மனசு வந்தது? அதுவும் ரெண்டு பச்சைக் குழந்தைகளை விட்டுட்டுப் போக எப்படி மனசு வந்தது. பொதுவா அடிமட்டத்துல கஷ்டப்பட்ட குடும்பத்துலேர்ந்து வந்த பொண்ணுங்க... கட்டுக்கோப்பா கண்ணியமா குடும்பப் பொறுப்பா நடந்துப்பாங்க'ன்னு கேள்விப்பட்டிருக்கோம். இவங்க நேர் மாறா நடந்திருக்காங்க?''

''அதைச் சொல்லு! நித்யன் ஆசைப் பட்டுட்டானே?ங்கிற காரணத்துக்காகதான்... அவளை மருமகளா ஏத்துக்கிட்டேன். அவ கண்ணைப் பார்க்கிறப்போ எல்லாம்... எனக்குள்ளே ஒரு நெருடல். ஏதோவொரு காந்தத்தனம் இருக்கும். அடிக்கடி பல்வரிசை தெரிய சிரிப்பா... கண்ணுல கனிவு தெரியலாம். கருணை தெரியலாம். காந்தம், அமைதி, அன்பு, பணிவு தெரியலாம்.... ஆனா வித்தியாசமா இவளுக்கு என்ன இப்படி இருக்கே'ன்னு அடிக்கடி எனக்கு தோணுச்சு. சரி! இந்தக்



காலத்துல பொண்ணு... படிச்சவ... சோஷியலா சிரிச்சுப் பேசறதிலே என்ன தப்பு இருக்கு?ன்னு... நெனச்சு சாதாரணமா விட்டுட்டேன்.

அவ காலேஜ்லே படிக்கிற காலத்திலேயே எவனையோ காதலிச்சிருக்கா... படிப்பை முடிச்சு இந்த எஸ்டேட்டுக்கு வந்தவ... நித்யனைப் பார்த்திருக்கா... முதலாளி சந்தானத்தோட ஏகபோக வாரிசு இவன். இவனை வளைச்சுப் போட்டு பெரிய சாம்ராஜ்யத்துக்கே சக்கரவர்த்தினியாயிடலாம்னு கணக்குப் போட்டிருக்கா... கண்ணால வலை வீசியிருக்கா... அந்த காந்த வலையில் நித்யன் சிக்கிட்டான்.

யாருக்கும் வாய்க்காத அந்தஸ்து அவளுக்கு கிடைச்சது. சிகரத்துல வந்து உட்கார்ந்ததும்... நியாயமா பழைய கண்றாவியை அவள் மறந்து தொலைச்சிருக்கணும். ஆனா அந்த நெனப்பை வேரோட புடுங்கி எறிஞ்சிருக்கணும். ஆனா அவ...? பணத்துல புரண்டு வளர்ந்தவ மாதிரி... சகலத்தையும் அனுபவிச்ச வளுக்கு கொழுப்பெடுத்து போச்சு.

எப்படியோ எங்கேயோ பழைய காதலனை சந்திச்சிருப்பா... இவ பெரிய கோடீஸ்வர குடும்பத்துல வாழ்க்கைபட்டிருக்காள்'னு தெரிஞ்சதும்... அந்தக் காதலன் அடிக்கடி மீட் பண்ணி தூண்டி விட்டிருப்பான். இல்லேன்னா இவளுக்கே துணிவு வந்து இருக்குமா...

பாவம் நித்யன்! அதிர்ந்து பேச மாட்டான். கள்ளம் கபடம் தெரியாதவன். இன்னமும் பாரேன்... இவளைப் போய் தேவதையா நெனச்சு மனசுக்குள்ளே கோவில்கட்டி வச்சிருக்கான். தன்னை உள்ளங்கையில வச்சுத் தாங்கற கணவனை விட்டுட்டு நண்டும் சிண்டுமா இருக்கிற சின்னக்

குழந்தைங்களை விட்டுட்டுப் போக... எப்படித்தான் மனசு வந்ததோ?

பணத்துக்காக ஆசைப்பட்டுதானே பழைய காதலை மறந்துட்டு நித்யனை கட்டிக்கிட்டா...? அப்புறம் எப்படி இந்த ராஜ வாழ்க்கையை உதறிட்டு ஓடினாள்?னு நானும் யோசிச்சேன். கள்ளக்காதல் அவ கண்ணை மறைச்சிருக்கு. அவளுக்கு நாங்க போட்ட நகைகளோட... காரை வேணும்னே விபத்துக்குள்ளாக் கிட்டு... அவனோட ஓடிட்டா...''

''அவங்க உயிரோட இருக்காங்கங்கிறதை எப்போ தெரிஞ்சுக்கிட்டீங்கப்பா?''

''ரெண்டு மாசத்துக்கு முன்னே... என் நண்பன் கோவாவில பார்த்துட்டு வந்து என்கிட்டே சொன்னான். முதல்லே நம்பலை. நேர்லே போயி அவளைப் பார்த்தேன். என்னைப் பார்த்ததும் அவளுக்கு துக்கம் தாங்கலை. கதறி அழுதுட்டா... கடவுள் பெரிய தண்டனையை அவளுக்கு குடுத்துட்டாரு...''

எஸ்! கண்டவனை நம்பி புருஷனையும் குழந்தைகளையும் விட்டுட்டு ஓடினாள் இல்லியா? அவன், இவளை நரகத்துல தள்ளிவிட்டுட்டான். விபச்சார விடுதியில் வித்துட்டு ஓடிட்டான். முதல்லே நான் நம்பலை. அப்புறமா அவளோட கண்ணையும் சிரிப்பையும் பத்தி எனக்குள்ளே ஒரு நெருடல் இருந்தது இல்லையா? சின்னதா சந்தேகம் வந்தது... என் தலைவிதி! எனக்கு வேற வழி தெரியலை அதனால...

அந்த நரகத்துக்குப் பக்கம் போனேன். அவ என்னைக்கண்டு உடைஞ்சு அழுததும்... எல்லாமே எனக்கு விளங்கிடுச்சு. கறுத்து இளைச்சு ஆள் ரொம்பவே மாறிட்டா... கதறி அழுதா... உங்க குடும்பத்துக்கு நான் செய்த



துரோகத்துக்கு மீள முடியாத நரகத்துல மாட்டிக்கிட்டேன்'னு கதறினா... 'எல்லாத்தையும் விடு! நீ ஓடிப் போனவள்னும்... இந்த நரகத்துல கிடந்தவள்'னும் தெரிஞ்சா... அஞ்சு பாப்பாவோட எதிர்காலம் பாதிக்காதா? என்று கேட்டேன். 'காலத்துக்கும் அடுத்த தலைமுறைக்கும் மீளவே முடியாத அவமானத்தைத் தேடிக் குடுத்துட்டியே?'ன்னு காறித் துப்பினேன்.

'என்னை இங்க உயிரோட பார்த்ததையோ யாரு கிட்டேயும் சொல்லாதீங்க'ன்னு சொல்லிட்டா... 'அடுத்த வாரம் அரபு தேசத்துக்கு என்னை அனுப்பிடு வாங்க... சில பெண்களோட என்னையும் வித்துட்டாங்க'ன்னு சொன்னா... 'நீ எக்கேடு கெட்டா எனக்கு என்ன?'ன்னு வந்துட்டேன்.

ஆயிரம்தான் இருந்தாலும் அவ என் மகனோட கொஞ்ச காலம் வாழ்ந்தவ... என் பேரக் குழந்தைகளோட தாய்! மனசு கேட்கலை... என்னோட செல்வாக்கை பயன்படுத்தி அந்த நரகத்துல கிடந்து தவிக்கிற பெண்களை மீட்க ஏற்பாடு செஞ்சேன். போலீஸ் மத்த பெண்களோட அவளையும் மீட்டுச்சு...

போக்கிடம் இல்லாத அந்தப் பெண்களை இமயமலை அடிவாரத்துல இருக்கிற அபலைப் பெண்களின் 'சேவா மையத்துக்கு' அனுப்பி வைச்சாங்க... அதுக்கு முன்னாடி கமிஷனர் என்னை கூப்பிட்டு அனுப்பிச்சாரு... முஸ்லீம் பெண் மாதிரி முகத்தை கறுப்பு அங்கியால மறைச்ச பெண் அங்க நின்னுட்டிருந்தா... இந்தப் பெண் உங்ககிட்டே தனியா பேசவிரும்பறான்னு சொன்னாங்க...

யாருன்னு பார்த்தா கவிதாதான்... ''சாரி மாமா! உங்க நிழல்ல நிக்கக்கூட எனக்கு அருகதையில்ல... இனிமே நான் இப்படித்தான் உடை அணியப் போறேன். காலத்துக்கும்

சேவா மையத்துல இருந்து உழைச்சு... என்னோட பாவத்தைப் போக்கிறத்துக்காக கடவுள்கிட்டே கதறியழப் போறேன். தயவு செஞ்சு நான் உயிரோட இருக்கிறதை உங்க புள்ளைகிட்டே சொல்லிடாதீங்க... அவரு தாங்க மாட்டாரு. நான் இருக்கிற விஷயம் வெளியில் தெரிஞ்சா குழந்தைகளோட எதிர்காலம் பாதிக்கப்படும்'னு சொல்லி அழுதுட்டு... தூரமா நின்னுட்டிருந்த ஜீப்புலே மத்தப் பெண்களோட ஏறிப் போயிட்டா...

''இந்த விஷயத்தை என் மனசுக்குள்ளேயே கடைசி வரைக்கும் போட்டு புதைச்சுடலாம்னுதான் இருந்தேன். நீ... கவியைப் பத்தி உயர்வா பேசவும் தாங்க முடியலை... நீ என் மகள் மாதிரிம்மா... அதான் ஒளிவு மறைவில்லாம எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன்...''

கண்கலங்க நெகிழ்ந்துபோய் பேசியவர்... நிதானமாய் அவளை ஏறிட்டார்.

''இப்படித்தான் பெண்கள் இருக்கணுங்கிறதுக்கு உதாரணமா நீ இருக்கே... எப்படி இருக்கக் கூடாது?ங்கிறதுக்கு அடையாளமா கவி இருக்கா... ஒருவாட்டி சூடு பட்டாச்சு. அந்த பயத்துலதான் வலை வீசித் தேடாத குறையா தேடி... உன்னைத் தேர்ந் தெடுத்தேன். இந்த அற்புதமான பெண்ணால என் குடும்பத்துக்கே நிம்மதி பிறக்கும்னு... என் உள் மனசு சொல்லுச்சு.

உன்னோட குடும்பத்தையே தூண் மாதிரி நீ தாங்கிட்டிருந்தே... உன்னை மருகளாக்கிடணும்னு எனக்குள்ளே ஆசை... ஒருவேளை குடும்பம் கடமைன்னு... நீ அதுக்கு மறுத்துடுவியோ?ன்னு பயம்!

நித்யா, கவியை இன்னமும் மனசுல சுமந்துட்டிருக்கான். அவன் கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டானோ?ன்னு பயந்தேன்.



அதனாலதான் 'அக்ரிமெண்ட்' போட்டேன். இந்த அக்ரிமெண்ட் வெறும் கண்துடைப்புதான் அஞ்சலி! மனப்பூர்வமா சொல்றேன்... நீதான் நிரந்தரமா இந்தக் குடும்பத்தை நிர்வகிக்கணும். மருமகளா மகாலட்சுமியா இருந்து இந்த வம்சத்தை விளங்க வைக்கணும். சிக்கல்லே தப்பிக்க இந்த அக்ரிமெண்டுக்கு ஒத்துக்கிட்டோமே?ங்கிற வருத்தமும் நெருடலும் உனக்கு இருக்கலாம். இனி நீ அப்படிப்பட்ட எந்த சங்கடமும் இல்லாம மனப் பூர்வமா இந்தக் குடும்பத்து மருமகளா ஒன்றி வாழணும்கிறது என் ஆசை! என்னம்மா இப்படி பார்க்கிறே? நான் சொல்றதிலே உனக்கு உடன்பாடு இல்லைன்னா... நீ வெளிப்படையா பேசிடலாம்...''

அவர் பேசி முடித்ததுதான் தாமதம்... சட்டென்று அவரது பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள் அஞ்சலி.

''அக்ரிமெண்ட் சமாச்சாரத்தை நான் பாட்டி கிட்டே மூச்சே விடலை. சொல்றதுக்கு பயமாவும் தயக்கமாவும் இருந்துச்சு. விஷயம் வெளிப்பட்டா... பாட்டிக்கு என்ன பதில் சொல்றது?ன்னு நடுங்கிட்டே இருந்தேன். நல்லகாலமா என்னோட பயத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வச்சுட்டீங்கப்பா... தக்க சமயத்துல அடைக்கலம் குடுத்தீங்க... அதுக்கும் நன்றி... இந்தக் குடும்பத்துக்கு மருமகளாக்கப் போறீங்க... அதுக்கும் நன்றி...''

''சவுபாக்கியவதியா அமோகமா இரும்மா... எனக்கும் பார்வதிக்கும் குழந்தைகளுக்கும் உன்னை ரொம்பப் பிடிச்சு போச்சு. அதுலே எந்தப் பிரச்சினையும் இல்ல. ஆனா முக்கியமா நித்யனோட மனசுல இடம் பிடிக்கணும். ஆனா துரதிர்ஷ்டவசமா அந்தக் கவி அவனோட மனசு விஸ்வரூபமெடுத்து வியாபிச்சிருக்கா...

ஒரு பொண்ணுக்கு கணவன்தானே சகலமும்... நித்யனோ கவிகவி'ன்னு துதிபாடிட்டிருக்கான். கவியைப் பத்தி நாம அவன்கிட்டே சொல்லவும் கூடாது. அதே சமயத்துல அவளை அவன் மறந்து உன்கூட சந்தோஷமா வாழத் தொடங்கணும். இதெல்லாம் எப்போ நடக்கிறது? எப்போ எனக்கும் உனக்கும் நிம்மதி கிடைக்கிறது? தெரியலையே...? எனக்கு நம்பிக்கை இருக்கும்மா... காணக்கிடைக்காத பொக்கிஷம் நீ! உன்னோட அருமையை நிச்சயமா நித்யன் உணரத்தான் போறான்...'

''அவர் உணர்ந்தாலும் சரி...! உணராம போனாலும் சரி...! இப்படிப்பட்ட மென்மையான உத்தமமான மனிதர் கிடைக்க நான்தான் கொடுத்து வச்சிருக்கணும்... சரிப்பா... ரொம்ப நேரமாச்சு. குழந்தைக்கு நேரா நேரத்துக்கு 'ஸ்ரப்' தரணும். நா வரட்டுமாப்பா?'' விழிகளில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்தபடி நடந்தவளை... பிரமிப்புடன் ஏறிட்டார் சந்தானம்.

''கடவுளே... ஒரு நல்ல வழியைக் காட்டுங்க'' குலதெய்வமான கழுகுமலை முருகனின் படத்தைப் பார்த்து மானசீகமாய் வேண்டினார்.

படத்தில் சூட்டப்பட்டிருந்த மாலை கழன்று தொப்பென்று விழுந்தது.



# 8

சுயபோக சுபதினத்தில் குலதெய்வம் கழுகாச்சல மூர்த்தியின் பிரமாண்ட படத்திற்கு எதிரே நின்றபடி அஞ்சலியின் கழுத்தில் மங்கல நாண் சூட்டினான் நித்யன்.

எளிய முறையில் வீட்டிலேயே திருமணத்தை நடத்திவிட்டிருந்தார் சந்தானம்.

கடந்த இரண்டே வாரங்களில் குழந்தைகள் இரண்டும் அஞ்சலியிடம் அட்டையாய் ஒட்டிக் கொண்டுவிட்டனர்.

மணப்பெண் கோலத்திலிருந்த அஞ்சலி... எளிய அலங்காரத்திலும் தேவதையாய் ஜொலித்தாள்.

தப்பித்தவறிக்கூட அவள் நித்யனின் பக்கம் திரும்பவே இல்லை.

குழந்தை ஆதியை கையிலும் சிறுமி அஞ்சுவை மடியிலும் அமர வைத்துக் கொண்டாள்.

''அம்மாடி அஞ்சலி! இன்னிக்கு நீ மணப் பொண்ணு. பட்டுப் புடவை கட்டியிருக்கே... கசங்கிடப் போகுது. குழந்தைகளை இன்னிக்கு இவங்க பார்த்துப்பாங்க... இறக்கிவிடேன்... வேலைக்காரர்களைக் காண்பித்து பேசிய பார்வதியை மெல்ல ஏறிட்டாள் அஞ்சலி.

''இருக்கட்டும் அம்மா! புடவை கசங்கினா கசங்கட்டுப் போகுது. குழந்தைகளை விட எனக்கு எதுவும் பெரிசில்லை அம்மா! இன்னிக்கு நான் மணப்பொண்ணுதான்... ஆனா இப்படி நான் மணப்பொண்ணா ஆனதே... குழந்தைகளுக்குத் தானே?''

புன்னகை மாறாமல்... பதிலளித்துவிட்டு... ஆதியின் பட்டுக்கன்னத்தில் இதமாய் முத்தமிட்டாள்.

நித்யன் விழிகள் விரிய ஆச்சரியமாய் அவளையே பார்த்தான்.

முதல் மனைவி கவிதா சதா சர்வ அலங்காரப் பூஷிதையாய் வலம் வந்தாள்.

பட்டும் படாடோபமுமாய் வளைய வந்த தோடு... அதீத ஒப்பனையுடன் எல்லா விசேஷங் களுக்கும் விழாக்களுக்கும் சென்று வந்தாள்.

விழாக்கள் இல்லாத நாட்களில்... அவளுக்கு இருக்க இருப்பே கொள்ளாது. டிப்டாப்பாக உடை அணிந்து கொண்டு 'ஷாப்பிங்'கிற்கு சென்று விடுவாள்.

சதா சர்வகாலமும் மடிப்பு கலையாத விலை உயர்ந்த உடைகளை அணிந்திருக்கும்போது... குழந்தைகள் பாசமாய் நெருங்கி வந்தாலே... முகத்தைச் சுளித்துக் கொண்டு விலகி நின்று கொள்வாள்.

வேலைக்காரர்களை சத்தம் போட்டு அழைத்து... அவர்களை கடுமையாகத் திட்டி குழந்தைகளை கவனித்துக்கொள்ள சொல்லிவிட்டு... சுதந்திரமாக உலாவி வரச் சென்று விடுவாள்.

நித்யனுக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. 'குழந்தைகளை பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்த கவிதா ஒருநாள்கூட பாசமாய் நேசமாய் அரவணைப்பாய் குழந்தைகளை வாரி அணைத்து அமர வைத்ததில்லையே?

உள்ளார்ந்த பரிவுடனும் பாசத்துடனும் கவனித்துக் கொள்கிறாளே அஞ்சலி? அதனால்தான் குழந்தைகள் வெகு சீக்கிரமாய் இவளிடம் ஒட்டிக் கொண்டு விட்டார்களோ?

அப்பாவின் கணிப்பு என்றுமே தவறியது இல்லை. அவர்தானே இவளைத் தேடிக் கண்டுபிடித்து தேர்ந்தெடுத்து இங்கு வரவழைத்திருக்கிறார்...!



அப்பாவின் பேச்சை மீறாமல்... இவளுக்கு தாலிகட்டி விட்டேனே? இன்னமும் எதற்கு அவர் முகம் வாடிப் போய் காணப்படுகிறார்.

அவர் மனதில் ஏதோவொரு குறை இருக்கிறதே? அது என்னவாக இருக்கும்? அதைத் தெரிந்து கொண்டு அந்தக் குறையைப் போக்குவது என் கடமை யில்லையா?

நான்கு நாட்கள் கழித்து... கவியின் பிறந்தநாள் வருகிறதே!

அவளது ஞாபகார்த்தமாக 'நெடுங்குண்டத்தில்' மேட்டுப் பகுதியில் இருக்கும் வனதுர்க்கை ஆலயத்தில் 'அன்னதானம்' செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்த ஆலயத்திலிருந்து சரிவை நோக்கி ஆள் இறங்கிவரும் தருணத்தில் தானே... அவளை நான் முதன்முதலாக சந்தித்தேன்.

கடவுளே! கவியின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமே?

அங்கே சுற்றி இங்கே சுற்றி மீண்டும் அவளது நினைவு கவிதாவிடமே போய் நின்றது.

முதலிரவு!

குழந்தைகள் இருவரும் அசந்து தூங்கியதும்... பதினொரு மணிக்கு மேல்தான் அஞ்சலி அந்த அறைக்குள் புகுந்தாள்.

பால் சொம்பை மெத்தையில் வைத்துவிட்டு... அவனைத் தயக்கமாய் நிமிர்ந்து பார்த்தாள்.

''புரியுது அஞ்சலி! அம்மாவோட திருப்திக்காக தானே... நீ இந்த நேரத்துல இங்க வந்திருக்கே? அம்மா உடம்புக்கு முடியாதவங்க அவங்களுக்கு நம்ம அக்ரிமெண்ட் விவகாரமெல்லாம் தெரியாது. கடைசி வரைக்கும் தெரியாமலே இருக்கிறதுதான் நல்லது. மகனுக்கு

மறுகல்யாணத்தைப் பண்ணி வச்சுட் டோம்னு... இன்னிக்கு அவங்க முகத்துல அலாதி திருப்தி தெரிஞ்சது. அவங்க நிம்மதி என்னிக்கும் கெடாம நாம நடந்துக்க வேண்டியதுதான்.

குழந்தைங்க ரொம்ப சீக்கிரமா உன்கிட்டே நெருங் கிட்டாங்க... நீயும் அவங்களை நல்லா கவனிச்சுக்கிறே... உன்னோட வருகையாலே இந்த வீட்லே எல்லோருக்குமே நிம்மதி பிறந்திருக்கு. தேங்க் யூ ஸோ மச் அஞ்சலி! சரியான தருணத்துல உன்னை இங்கே வரவழைச்சாரே அப்பா? அவருக்கும் நான் தேங்க் பண்ணனும்...''

''பெரிய சிக்கல்லே இருந்து என்னை என் தங்கையை, என் அக்காவை, பாட்டியை மீட்டிருக்காரு அப்பா! நானும் அவருக்கு தேங்க் பண்ணனும்... அந்த நன்றியை நான் காலத்துக்கும் மறக்கவே மாட்டேன்...''

''அப்பாவுக்கு உன்னை ரொம்பவே பிடிச்சு போச்சு. மகள் மாதிரி பாசங்காட்ட ஆரம்பிச்சுட்டாரு. ஆமா... நீ வந்த அன்னிக்கு நைட்டுலே உன்னை வரவழைச்சு ரொம்ப நேரமா பேசிட்டிருந்தாரே? அவரு அப்படி என்னதான் சொன்னாரு?''

''அ... அதுவந்து... வந்து... நான் உருவாக்கின புராஜெக்ட் நிறைய லாபத்தை அள்ளித் தந்துச்சாம்... அதுக்கு ஏற்கனவே ஆபீஸ்லே கூப்பிட்டு பாராட்டினாரு... அதைப்பத்திதான் ஏதேதோ பேசிட்டிருந்தாரு. புதுப்புது புராஜெக்ட்ஸ் பத்தி பேசினதால நேரம் போனதே தெரியலை...''

எப்படியோ திணறி வாய்க்கு வந்த பொய்யை அவிழ்த்து விட்டு... சமாளித்து விட்டாள் அஞ்சலி.

''அப்பாவோட முகம் சமீப காலமா வாட்ட மாவே இருக்கு. அவரு உன்கிட்டே வெளிப்படையா பேசறாரே? இதைப் பத்தி ஏதாச்சும் உன்கிட்ட சொன்னாரா அஞ்சலி?''



''இல்லையே... என்கிட்டே எதுவும் சொல்லலைங்க.''

'மனமறிந்து மீண்டும் அவனிடம் பொய் சொல்ல வேண்டியதிருக்கிறதே?' என்று உள்ளூர குற்றஉணர்வு அவளைக் குடைந்தது.

''இன்னும் நாலு நாள்லே அஞ்சலியோட பிறந்தநாள் வருது. நெடுங்குண்டத்துல இருக்கிற மலைக் கோவில்லே 'அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்யப் போறேன். நீயும் வா அஞ்சலி! அம்மாகூட குழந்தைகளை வெளியில் கார்லே அழைச்சுக்கிட்டுப் போய் சுத்திக்காட்டிட்டு வாப்பா'ன்னு சொல்லிட்டே இருந்தாங்க... அதனால நாம குழந்தைகளையும் சேர்ந்தே அழைச்சுட்டுப் போகலாம்...''

''சரிங்க... உங்க இஷ்டப்படியே போயிட்டு வரலாம்... இந்தப் பாலைக் குடிச்சுடுங்க...'' என்றபடி சொம்பை நீட்டினாள். மெல்லிய போர்வையை எடுத்து தரையில் விரிக்கலானாள்.

''அஞ்சலி... என்ன பண்றே நீ? தரையில படுக்கப் போறியா? இந்த எஸ்டேட் குளிருலே தரை ரொம்ப சில்லுன்னு இருக்கும். உடம்பு விறைச்சுப் போயிடும். பேசாம கட்டிலேயே படுங்க... நாம்ம ரெண்டு பேரும் படிச்சவங்க... 'அக்ரிமெண்டை' மதிச்சு கட்டுப்பாடா நடந்துக்கக்கூடிய பக்குவம் நமக்கு இருக்கு. பயப்படாம கட்டில்லே படுத்துக்கோ...''

''தேங்க்ஸ்'' என்றுவிட்டு கட்டிலின் ஓரமாய் ஒருக்களித்து படுத்துக்கொள்ள... அந்தப் பக்கமாய் முதுகுகாட்டி அவன் படுத்துக் கொண்டான்.

'இத்தனை நல்லவனாய் நடந்து கொள்கிறானே? இவனிடம் போய் பொய் சொல்கிறோமே? உண்மையை எத்தனை நாளுக்கு பூட்டி வைக்க முடியும்?' என்று நினைத்து... பச்சாதாபத்தில் அஞ்சலியின் மனம் பாகாய் கரைந்தது.

மூன்று நாட்கள் மறைந்தன. மறுநாள் இறந்து போன கவிக்கு பிறந்தநாள்' என்று இறக்கை கட்டிக் கொள்ளாத குறையாக அந்த மலைக் கோவிலுக்கு இருமுறை சென்று வந்தான் நித்யன்.

ஜீப்பில் அரிசி பருப்பு முதலிய பலசரக்கு சாமான்களை தனது மேற்பார்வையில் ஏற்றி... அங்கு கொண்டு சேர்த்துவிட்டான். அர்ச்சகரையும் கோயில் நிர்வாகிகளையும் நேரில் சென்று பார்த்து பேசிவிட்டு வந்தான்.

'அந்தக் கேடுகெட்ட பெண்ணிற்காக இவன் இத்தனை தடபுடல் செய்கிறானே?' என்று நினைத்த சந்தானத்திற்கு பற்றிக்கொண்டு வந்தது.

கோபம் ஒருபக்கமும் சோகம் ஒரு பக்கமும் அவரை ஆட்டிப்படைத்தன. 'செல்'லை ஸ்விட்ச்ஆஃப் செய்துவிட்டு கால் போன போக்கில் எஸ்டேட் சரிவில் இறங்கி நடக்க ஆரம்பித்துவிட்டார்.

வெகு நேரமாகியும் அவர் வீடு திரும்பாததை எண்ணி, பார்வதி பதறிப் போய்... நித்யனிடம் புலம்ப... அவனுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது.

இன்னிக்கு மதியம் அப்பாவை கவனிச்சேன். முகம் ரொம்ப வாட்டமா இருந்துச்சு. அப்பா மனசுல ஏதோ இருக்கு அது என்னன்னு தெரிய மாட்டேங்குதே? உன்கிட்டே ஏதாச்சும் சொல்லிட்டுப் போனாரா அஞ்சலி?''

''இல்லைங்க... அப்பா எதுவும் சொல்லலை'' என்று அவள் கூறியதும் புருவங்களை நெரிய... அப்பாவின் அறைக்குள் புகுந்தான்.

சற்று நேரம் கழித்து வெளிப்பட்டவன்... ''அம்மா! அப்பா எப்படியும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாரு. நீங்க கவலைப்படாதீங்க...'' என்று கூறிவிட்டு மாடிக்கு விரைந்தான்.



அவன் கூறியதுபோல்... அடுத்த முக்கால் மணி நேரத்தில் சந்தானம் வீடு திரும்பி விட்டார்.

''என்னங்க... அப்பா வந்துட்டாரு. ரிலாக்ஸ்டா ரொம்ப தூரம் வாக்கிங் போயிட்டு வந்தாராம்...'' என்று அஞ்சலி மூச்சிரைக்க ஓடி வந்து அவனிடம் கூறியபோது...

''அதான் நான் சொன்னேன் இல்ல? நீங்கதான் அனாவசியத்துக்கு பயந்துட்டீங்க...'' என்று ஏதோ ஆங்கில நாளேட்டை புரட்டியபடி நிமிர்ந்து பார்க்காமல் பதிலளித்தான்.

அஞ்சலி திகைத்துப்போய் அவனைப் பார்த்து விட்டு யோசனையுடன் இறங்கிச் சென்றுவிட்டாள்.

மறுநாள் காலையில் அப்பாவின் அறைக்குள் புகுந்த நித்யன். ''அப்பா! வனதுர்க்கை கோயிலுக்கு நீங்களும் வாங்கப்பா?'' என்று பணிவாய் அழைத்தான்.

சந்தானத்திற்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

''கவியோட பிறந்தநாள்னு அன்னதானம் பண்றே... தாராளமா பண்ணு! புண்ணியம்தான்... எனக்கு பைல்லை பார்க்கவேண்டிய வேலை இருக்கு. நா வரலை. என்னைக் 'கம்பெல்' பண்ணாதே நித்யா!'' முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''அஞ்சலியை முதன் முதலா கோவிலுக்கு அழைச்சுட்டுப் போறேனே? நீங்களும் வாங்கப்பா... என்னப்பா அப்படி பார்க்கிறீங்க? அக்ரிமெண்ட் சமாச்சாரத்தை மறந்துட்டுப் பேசறானே?ன்னு பார்க்கிறீங்களா? செத்துப் போன கவி, என் கனவுலே வந்தாப்பா... அஞ்சலி ரூபத்துல நான்தான் நடமாடிக் கிட்டிருக்கேன். நீங்க உண்மையாவே அஞ்சலியை மனைவியா ஏத்துக்கணும்னு சொன்னாப்பா... அப்போதான் அவ ஆத்மா சாந்தி அடையுமாம்... அதனால அஞ்சலி இனி உங்களோட நிரந்தர மருமகள். என்ன்

குழந்தைகளுக்கு தாயா எனக்கு மனைவியா... அவளும் நானும் உங்க ஆசீர்வாதத்தோட வாழ்வாங்கு வாழணும்பா...''

நித்யன் பேசியதைக் கேட்டதும்... அதுவரை கனன்ற மனதில்... சில்லென்ற அபிஷேகப் பாலை வார்த்தாற் போன்றிருந்தது.

''நி... நிஜமாவா சொல்றே? ரொ... ரொம்ப சந்தோஷமா இருக்கு நித்யா...! முதல்லே அஞ்சலியைக் கூப்பிடு... அவகிட்ட உன்னோட கனவைப் பத்தி சொல்லணும்...''

உற்சாக மிகுதியில் சட்டென்று எழுந்து நின்று... மகனின் முகத்தை செல்லமாக தட்டிக் கொடுத்தார்.

''அஞ்சலி! வா... வா! அப்பா ரூமுக்குப் போலாம்.'' குழந்தை ஆதியை தோளில் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தவளை... உரிமையாய் கையைப் பற்றி கிட்டத்தட்ட இழுத்துக் கொண்டு வந்தான்.

''அம்மாடி அஞ்சலி! என் வேண்டுதல் வீண் போகலை... டேய் நித்யா! நீயே உன் கனவைப் பத்தி சொல்லேன்...'' சந்தானம் உத்தரவிட்டார்.

நித்யன் அதைச் சொல்லி முடித்ததும்... சந்தானமும், அஞ்சலியும் அர்த்த பாவனையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''சரிம்மா... நித்யன் கூப்பிடறான் இல்ல? கிளம்பு! கோவிலுக்குப் போகலாம்...''

மலைக்கோவிலில் வனதுர்க்கையை கண்ணீர் மல்க உள்ளம் உருக தரிசித்து விட்டு முன் மண்டபத்திற்கு வந்தனர்.

பிரகாரத்தில் நடந்து கொண்டிருந்த அன்னதானத்தை மேற்பார்வை இட நித்யன் பரபரப்பாய் சென்றதும்... அஞ்சலியும் சந்தானமும் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.



''என்னப்பா இது?''

''அதான்... எனக்கும் ஆச்சரியமா இருக்கு. கடவுள் புண்ணியத்துல அவன் மனசுல ஒரு மாற்றம் வந்ததே? அது ரொம்பப் பெரிய விஷயம்... நடக்கிறதெல்லாம் நன்மைக்கே. இதுக்கு மேல எந்த ரியாக்ஷனும் காட்டாம கமுக்கமா இருந்துட வேண்டியதுதான்... எனக்கு என்னமோ இந்த அம்மன் தான்... கனவுல கவி ரூபத்துல வந்து பேசியிருப் பாளோ?ன்னு தோணுது. சரி! நான் முன்னாடி போறேன். நீ நிதானமா நித்யனோட வாம்மா... என்றபடி படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றுவிட்டார்.

மீண்டும் உள்ளே சென்று அம்பாளை மனம் உருக வெகு நேரம் நின்று தரிசித்துவிட்டு வெளிப்பட்டாள் அஞ்சலி.

''அஞ்சலி! போலாமா? என்ன...? என்னவோ போலிருக்கே?''

''குழந்தைங்களை அழைச்சுட்டு வரலை. அம்மா என்னை மட்டும் போ'ன்னு சொல்லிட்டாங்க... அதான்.''

''நாளைக்கே கூட்டிட்டு வரலாம். சரியா?''

''உம்'' தலையாட்டியவள்... ஒருபடி விட்டு ஒரு படியில் தவறுதலாய் காலை வைத்துவிட்டாள். இடறி தடாலென்று விழப் போனவளை... சட்டென்று அரவணைப்பாய் பிடித்து நிறுத்தினான்.

''பாத்து... ஜாக்கிரதை! நீதான் நம்ம குடும்பத்துக்கே ஆதாரம்! அப்பா சொன்னமாதிரி அற்புதமான பெண் நீ... உன்னை எக்காரணம் கொண்டும் இழக்க மாட்டேன். ஏன்னா... ஐ லவ் யூ ஸோ மச்.''

அவளது பூ முகம் சட்டென்று மலர்ந்தது. கன்னங்கள் வெட்கத்தில் குழைய சங்கோஜமாய் அவனது பிடியிலிருந்து விலகிக் கொண்டாள்.

''உன் மனசுல என்ன இருக்கு?ன்னு சொல்லவே இல்லையே?''

''அப்பாகிட்டே அன்னிக்கு சொல்லிட்டேனே? இப்பேர்ப்பட்டவருக்கு மனைவியாகிறதுக்கு குடுத்து வச்சிருக்கணும்னு... சொன்னேனே! சரி... நான் வெளிப்படையா சொல்லிடறேன்... ஐ லவ் யூ'' என்று சிரித்துவிட்டு மெட்டி ஒலி சப்திக்க மான்போல் துள்ளி படிக்கட்டுகளில் இறங்கி ஓடினாள்.

''நான் சொன்னது பொய் அஞ்சலி! கவி என் கனவுலே வரலை. நேத்து அப்பாவோட அறையில... அவரோட டைரியை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். சகலத்தையும் தெரிஞ்சுக்கிட்டேன். அரண்டு போயிட்டேன். ஆடிப் போயிட்டேன். கவி ஒரு பாவின்னு புரிஞ்சுட்டேன். அவளை காதலிச்சதை கலியாணம் செய்துக்கிட்டதை கடந்த காலத்தை முழுசா அவ நெனப்புக்கு நெருப்பு வச்சுட்டேன். அப்பாவும் நீயும் எனக்கு அந்த விஷயம் தெரியவே கூடாதுன்னு உறுதியா இருக்கீங்க... நீங்க அந்த நெனப்போட திருப்தியா இருங்க...! மனசார சொல்றேன். இனி நீதான் எனக்கு ''சகலமும்...'' தனக்குள் பேசிவிட்டு மனைவியை நோக்கி நடந்தான் நித்யன்.

நிறைந்தது

# ''பவுர்ணமி நிலவு''

## 1



விடியற்காலை, இன்பமான உறக்க வேளை. இரவு முழுவதும் அனலைக் கக்கிக் கொண்டிருந்த மின்விசிறி... இப்போது சில்லென்று குளிர்காற்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தது.

வைஷ்ணவி போர்வையை இழுத்து கழுத்து வரை மூடிக்கொண்டாள். சிமெண்ட் தரைமீது கிடந்த பாயின் மீதுதான் அவள் சுருண்டு படுத்துக் கொண் டிருந்தாள்.

உயரம் பற்றாத தலையணை தொய்ந்து 'பிய்ந்து விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. போர்வையில் பல கிழிசல்கள். அருகே கிடந்த மரக்கட்டிலின் மேல் ஆழ்ந்து உறங்கிக் கொண் டிருந்தனர்... பெரியம்மாவின் செல்வங்களான வனிதாவும், அனிதாவும்!

முன்னறைக் கடிகாரம் ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது. பக்கத்தறையில் பெரியம்மா பலமாக இருமிக்

கொண்டிருந்தார். அதற்குமேல் இருப்புக் கொள்ளாமல் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் வைஷ்ணவி.

போர்வையை உதறி மடித்து வைத்துக் கொண்டே... மரக்கட்டிலில் பஞ்சு மெத்தையில் சுகமாக சயனித்திருந்த வனிதாவையும், அனிதாவையும் ஏக்கமாகப் பார்த்தாள்.

'இன்று ஞாயிற்றுக்கிழமை... ஓய்வு நாள் தானே? இன்னும் சிறிது நேரம் தன்னால் தூங்க முடியுமா?' அவளுக்குள் ஒரு குட்டி கேள்வி ஜனித்தது.

அவளது ஒன்றுவிட்ட சகோதரிகள் உலக நினைப் பின்றி ஆனந்தமாக எட்டு மணி வரை உறங்குவார்களே? 'கொடுத்து வைத்தவர்கள்' நிராசையான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

பாத்ரூம் கதவை படால் என்று பெரும் ஓசை யுடன் பெரியம்மா மரகதம் மூடுவதைக் கேட்டதும்... பாயைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு நடந்தாள் வைஷ்ணவி.

அடுத்த சில வினாடிகளில் பெரியம்மா அவளை அழைக்கும் அபயக்குரல் எட்டு வீடுகளைத் தொட்டுக் கொண்டு எதிர் ஒலிக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

வாசற்கதவைத் திறந்து மளமளவென்று பெருக்கி வாசலை அடைத்து கோலமிட்டுவிட்டு குளிய லறைக்குள் புகுந்து கொண்டாள்.

குளித்துவிட்டு உடைமாற்றி வந்த வைஷ்ணவி அவசரமாக அடுக்களைக்குள் அடைக்கலமானாள்.

ஆவி பறக்கும் டிகாக்ஷன் காபியை பெரியம்மாவிடம் நீட்டினாள். காபியை உறிஞ்சியபடி வைஷ்ணவியை ஏற இறங்கப் பார்த்தாள் மரகதம்.

'பெற்றவர்களை இழந்துவிட்டு அனாதையாக நம்மை அண்டிக் கொண்டு வாழும் அபலைப் பெண்ணிற்கு...



அபரிமிதமான அழகை பகவான் கொட்டிக் கொடுத்துள்ளாரே?'

வனிதாவும், அனிதாவும் பணத்தைத் தண்ணீராக செலவு செய்து அழகு சாதனப் பொருட்களை வாங்கிக் குவித்து அலங்கரித்து என்ன பிரயோஜனம்? அந்தப் பழசாகிப் போன காட்டன் புடவையில் ஒப்பனை சிறிதுமின்றி... ஒப்பற்ற பேரழகியாகத் திகழ்கின்றாளே?

இவளருகே எனது மகள்கள் நிற்க முடியுமா?'

வழக்கம்போல் பொறாமை உணர்வு தலை தூக்கியது. அவளது கோபக் கனலைக் கிளறி நன்கு விசிறிவிட்டது.

''என்ன மசமசன்னு நின்னுட்டிருக்கே? உங்க பெரியப்பாவுக்கு ராகி கஞ்சியை காய்ச்சி வையி... வனிதாவும், அனிதாவும் ரொம்ப நாளா மகாபலி புரத்தைச் சுற்றிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டாங்க... பாவம்! வயசுப் பொண்ணுங்க. இந்த வயசுல சுத்திப் பார்க்காம... எப்போ பார்க்கப் போறாங்க?

பத்து மணிக்கு கால் டாக்ஸியை வரச் சொல்லி யிருக்கேன். பக்கத்துத் தெருவுல இருக்கற என் சிநேகிதி பாக்கியமும்... அவளோட பொண்ணுங் களை கூட்டிட்டு வருவா... நாங்க எல்லாரும் போயிட்டு நைட்டுக்குதான் வீடு திரும்புவோம்.

வயசுப் பொண்ணுங்க ஹோட்டல்லே இஷ்டப் பட்டதை வாங்கி சாப்பிடட்டும். எனக்குதான் ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்காதே? எனக்குப் பாக்கியத்துக்கும் புளியோதரையும் தயிர்சாதமும் பண்ணி பார்சல் கட்டிக் கொடுத்துடு.

தொட்டுக்க காரசாரமா வெங்காய சட்னியும், தக்காளித் தொக்கும், உருளைக்கிழங்கு வறுவலும் பண்ணிடு. போதும்! ஒன்பதரைக்கு எல்லாம் பார்சல் தயாராயிடணும்.

"உன்னையும் அழைச்சுட்டுப் போகணும்னு ஆசைதான். உங்க பெரியப்பாவுக்கு நேரத்துக்கு சாப்பாடு போட்டு மருந்து மாத்திரை தரணும். அழுக்குத் துணிகளைத் துவைக்கணும்."

"சரி! பெரியம்மா... இட்லி தோசைக்கு மாவு வேற அரைச்சு வைக்கணும். பெரியப்பாவை தனியா விட்டுட்டு நாம்ப எல்லோரும் கிளம்ப முடியாதே?" முறுவலித்தாள் வைஷ்ணவி.

காலியான காபி டம்ளரை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குள் ஐக்கியமானாள்.

வைஷ்ணவிக்கு பெரியப்பா சண்முகத்தின் மீது அலாதி பாசம்... சண்முகத்தின் தம்பி மகள்தான் வைஷ்ணவி.

அழகுக் குவியலாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறோம் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். நடேசனும் - ஜோதியும்!

என்ன கெட்ட நேரமோ தெரியவில்லை... அவர்களது மட்டற்ற மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்டது. டைபாயிடு ஜுரத்தில் படுத்த ஜோதி நிரந்தரமாக கண்ணை மூடி விட்டாள்.

மூன்று வயதிலேயே பெற்ற தாயை இழந்துவிட்ட மகளின் மீது அன்பு மழையைப் பொழிந்து வளர்த்தார் நடேசன். அவள் எட்டாம் வகுப்பு படிக்கும்போதுதான் அந்தத் துயரசம்பவம் நடந்தது.

தொழிற்சாலை விபத்திலே மாண்டுவிட்ட அவள் தந்தை நடேசன் அவளை நிராதரவாக விட்டுப் போக வில்லை. இன்ஷுரன்ஸ் வொர்க் காம்பன்சேஷன் என்றெல்லாம் சேர்த்து இரண்டு லட்ச ரூபாய்களை விட்டுப் போயிருந்தார்.



அந்தப் பணத்தில்தான் வைஷ்ணவி வளர்ந்து படித்து இப்படிக் குதிர்போல நிற்கிறாள்.

"இந்தக் காலத்து விலைவாசிக்கு முன்னால் இந்தப் பணம் கடை வாய்க்குக்கூட காணுமா சொல்லுங்க... உங்க தம்பி இவளை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டாரே? நம்ப தலையில் பாரத்தை ஏத்திட்டுப் போயிட்டாரே மனுஷன்?" அடிக்கடி இரைந்து கத்துவாள் மரகதம்.

அவமானத்தில் நத்தையாய் அடுக்களைக்குள் சுருண்டு போவாள் வைஷ்ணவி. கன்னங்களும் காதுமடல்களும் சிவந்து சூடேறிவிடும்.

கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு கண்ணீர் வழியும். தனது துக்கத்தையும் வேதனையை யும் யாரிடமும் வெளிப்படுத்த மாட்டாள்.

பி.எஸ்.சி. முடித்ததும் அவளது படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள் பெரியம்மா மரகதம். மேற்கொண்டு படிக்க அவளுக்கு கொள்ளை ஆசைதான்.

பெற்றவர்களை இழந்துவிட்டு பெரியப்பாவின் நிழலில் ஒண்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவள் அவள். அவளது வார்த்தைக்கு யார் மதிப்பு கொடுப்பார்கள்?

கடந்த எட்டு மாதங்களாக... 'முருகன் ரோட்வேஸ்' என்ற லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் ரிஸப்ஷனிஸ்ட்டாகவும், டெலிஃபோன் ஆபரேட்டாகவும் பணிபுரிந்து வந்தாள்.

"பெரியப்பா... இந்தாங்க ராகி கஞ்சி!"

"லொக்... லொக்..." என்று இருமியபடியே எழுந்து அமர்ந்தார் சண்முகம். அவருக்கு காபி அருந்தப் பிடிக்காது. ராகி கஞ்சியைக் குடித்தபடியே தம்பி மகளை ஏறிட்டார்.

"நீயும் அவங்க கூடப் போயிட்டு வாயேன் வைஷு?"

''இருக்கட்டும் பெரியப்பா... உங்களுக்கு நேரத்துக்கு மருந்து மாத்திரை தரணும்... தவிர எனக்கு இன்ட்ரஸ்ட் இல்ல பெரியப்பா... அதான்.''

நெகிழ்ந்து விட்டார் சண்முகம். மனைவி மரகதம் இவளிடம் உத்தரவிட்டதைக் கேட்டுக் கொண்டுதான் படுத்திருந்தார்.

ஆனால் மனைவியை அதட்டவோ அடக்கவோ... அவரால் முடியாதே? ஆரம்பத்தி லிருந்தே மனைவிக்குப் பணிந்து அடங்கி நடந்து பழக்கப்பட்டவர் அவர்.

அவர் பரம சாது! தம்பி மகளுக்குப் பரிந்து கொண்டு பேசினால்... மனைவியிடம் மண்டகப்படி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியிருக்குமே என்ற பயத்தில்... கண்டும் காணாதது போல் நடந்து கொள்வார்.

''வைஷு! அருமையான பாசமான மகள்கூட வாழறதுக்கு நடேசனுக்குத்தான் குடுத்து வைக்கல...''

''பெரியப்பா! நீங்களும் அப்பாவும் ஒரே ஜாடை தானே? எனக்கு என்னமோ அவர் உங்க ரூபத்துல நடமாடிட்டு இருக்கற மாதிரியே இருக்கு... முக ஜாடை, குரல் எல்லாமே... அப்பா மாதிரியே இருக்கு... அவளது அழகிய விழிகளில் பாசமும் அன்பும்... ஏகத்திற்கும் ததும்பின.

நெக்குருகிப் போன சண்முகம், ''உனக்கு வாழ்க்கையில ஒரு குறையும் வராதுமா... உன்னோட நல்ல குணத்துக்கு... நீ அமோகமா இருக்கப் போறே...''

'மனைவி மரகதம் இவளை சக்கையாகப் பிழிகின்றாள். வீட்டில் மாடாக உழைத்துவிட்டு... விழுந்தடித்து வேலைக்கு ஓடி சம்பாதித்தும் வருகிறாள்.

தனக்கென்று ஒரு பைசா வைத்துக் கொள்ளாமல் சம்பளக் கவரைப் பிரிக்காமல்... அப்படியே கொண்டு வந்து மரகத்திடம் தந்து விடுகின்றாள்.



இந்த அப்பாவிப் பெண்ணின் மீது கடவுள்தான் கருணை காட்ட வேண்டும்.

சண்முகத்திற்கு உள்ளூர இரக்கம் சுரந்தது. அவளது முகத்தில் முறுவல் பூத்தது.

''நீங்க எல்லாரும் இருக்கறப்போ... எனக்கு ஒரு குறையும் வராது பெரியப்பா'' கரிசனத்துடன் பதிலளித்துவிட்டு அவசரமாக நகர்ந்தாள் வைஷ்ணவி.

''வலியை மறைத்துக் கொண்டாளா இல்லை... வலியே ஏற்படாத வகையில் மனப் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு இருக்கிறாளா? தெரிய வில்லையே... சண்முகம் அதிசயித்துப் போனார்.

புன்னகை சிந்தும் குறிஞ்சிமலர்... விரைவில் புயலில் சிக்கித் தவிக்கும் என்பதை அவர் எவ்விதம் அறிவார்?

## 2

அழகான பசுமையான தோட்டத்திற்கு மத்தியில் ஒவ்வொரு அங்குலமும் பணத்தால் இழைத்துக் கட்டப்பட்டிருந்தது. அந்த பிரமாண்ட மான பங்களா. அந்தி சாயும் பொழுது!

தோட்டத்தில் இருந்த அலங்கார ஊஞ்சலில் சோகமே உருவாக அமர்ந்திருந்தார் சிவானந்தம்.

பங்களாவின் வாசலில் வந்து நின்ற காரைப் பார்த்ததும்... மின்னல் வேகத்தில் காம்பவுண்ட் கேட்டைத் திறந்து சல்யூட் அடித்தான் காவலாளி.

காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு... கவலை தோய்ந்த முகத்துடன் அப்பா சிவானந்தம் அமர்ந்திருந்த ஊஞ்சலருகே வந்தான் ஸ்ரீதர்.

சிவந்த நிறம், சுருண்ட கேசம், ஆஜானு பாகுவான தோற்றத்துடன் கண்களை நிறைத்தான் ஸ்ரீதர்.

''என்னப்பா நீங்க? தினப்படி செக்கப் பண்ண வந்த டாக்டரை கோபமா பேசி அனுப்பிட்டீங்களாம்? இன்சுலின் இஞ்செக்ஷன் போட்டுக்க மாட்டேன்னு அடம் பண்ணினா எப்படிப்பா?''

''ஸ்ரீதர்! எனக்கு ட்ரீட்மெண்ட்டே வேணாம். விட்டுரு... எனக்கு எதுவுமே பிடிக்கலை.''

''சுகர், பி.பி. கொலஸ்ட்ரால்னு ஏகப்பட்ட வியாதி உடம்புலே இருக்கே அப்பா?'' மருந்து மாத்திரை எடுத்துக்காம... இன்சுலின் போட்டுக்காம இருந்தா வியாதி முத்திடும்... அப்புறம் கஷ்டமாயிடும் அப்பா!''

''வியாதி நல்லா முத்தட்டும். மனசுல பெரிய வேதனையை வச்சுக்கிட்டு கஷ்டப்படறதை விட... பேசாம காலாகாலத்துல போய் சேர்ந்துடலாம் ஸ்ரீதர்.''

''இப்படிப் பேசினா எப்படிப்பா? எனக்கும் தான் ரொம்ப வேதனையா இருக்கு... அதுக்காக விரக்தியடைஞ்சு இடிஞ்சு போய் உட்கார்ந்திட முடியுமாப்பா?

நமக்குப் பல நிறுவனங்கள் இருக்கு. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நம்மை நம்பி வேலை பார்த்துட்டிருக்காங்க...

மனசுல இருக்கற கவலையை ஒதுக்கி வச்சுட்டு... நிறுவனங்களை நிர்வகிச்சுட்டிருக்கேன். நம்ம நிறுவனங் களும் நல்ல லாபத்தோட வளரணும் தொழிலாளர்களோட வாழ்க்கைத் தரமும் உயரணும். அதான் என்னோட குறிக்கோள்!



அப்பா! விஸ்வம் அண்ணனோட குழந்தை சந்தீப்பை... கொஞ்சம் நினைச்சுப் பாருங்க... அவனோட எதிர்காலத்துக்காகவாவது நாம்ப இன்னும் பல காலம் வாழ்ந்தே தீரணும்கிற வைராக்கியம் வரும்.'' பேசியபடி ஆதரவாக அவரது கையை இறுகப் பற்றினான் ஸ்ரீதர்.

'விஸ்வம்' என்ற பெயரைக் கேட்டதும்... முதியவரின் விழிகளில் வெப்பநீர் ஊற்றெடுத்தது.

''விஸ்வம்... எங்களுக்கு ரொம்ப காலம் கழிச்சுப் பிறந்தான். ஏழு வருஷமா குழந்தை இல்லாம தவிச்சு தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை அவன். நல்லகாலம் உங்கம்மா எப்பவோ... பூவும் பொட்டுமா போய் சேர்ந்துட்டா...''

''விஸ்வம் அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிக்கிட்டு செத்ததை நினைச்சா... என் நெஞ்சு துடிக்குதே ஸ்ரீதர்?'' அதற்குமேல் பேச முடியாமல் மவுனமாக கண்ணீர் உகுத்தார் சிவானந்தம்.

அண்ணன் விஸ்வத்தை... அவனுக்கு நேர்ந்த கதியை நினைத்தாலே... ஸ்ரீதரின் அடிவயிறு பலமுறை சுருண்டது.

அண்ணனின் சாவுக்கு காரணமான அண்ணி வத்சலாவை நினைத்துப்பார்த்தாலே... ஆஸிட் ஊற்றியது போல் அவனது நெஞ்சு கபகபவென்று எரிந்தது.

வத்சலா... சிவானந்தம் அவர்களின் சொந்த தங்கை மகள்தான். சிறுவயதிலேர்ந்தே வத்சலாவுக் கும் விஸ்வத்திற்கும்... பெரியவர்கள் முடிச்சுப் போட்டு பேசினார்கள்.

வருங்காலத்தில் கணவனும் மனைவியுமாய் ஆகப் போகின்றவர்கள் என்று நம்பிக்கையில்... இவர்கள் உரிமையாய் சகஜமாய் பழகினார்கள்.

அதிலும் விஸ்வம் வத்சலாவின் மேல் உயிரையே வைத்திருந்தான். அவளும் சிரித்த முகத்துடன்தான் மணவறையில் வந்து அமர்ந்தாள்.

அவர்களது இனிய இல்லறத்தின் சாட்சியாக சந்தீப் பிறந்தான். குழந்தைக்கு ஒன்றரை வயதாகும் வரை ஒழுங்காக இருந்த வத்சலாவுக்கு திடுதிப்பென்று தடம் மாறிவிட்டாள்.

'நான் படிக்கும் காலத்தில 'ரகு' என்பவரை மிகவும் நேசித்தேன். அவர் கவிதைகள் எழுதுபவர். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இளைஞர் என்னை மிகவும் நேசித்தார்.

என் மனமும் அவரை விரும்பியது. அவரது குடும்பச் சொத்தில் ஏதோ வில்லங்கம் இருந்ததால் கோர்ட் கேஸ் என்று... இழுபறியாக இருந்தது. அவரைக் கைப்பிடித்தால் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று பயந்தேன்.

பெரியவர்களும் சிறுவயதிலிருந்தே என்னையும் உங்களையும் முடிச்சுப் போட்டு பேசி... கடைசியில் என்னைக் கட்டாயப்படுத்தி கழுத்தை நீட்ட வைத்து விட்டார்கள்.

சமீபத்தில் ரகுவை சந்தித்தேன். அவரது கேஸ் ஜெயித்து விட்டதால் பங்காளிடமிருந்த சொத்தை மீட்டு விட்டாராம். அவர் இன்னமும் என்னை நேசிக்கிறார்.

மனத்தராசில் எடை போட்டுப் பார்த்தேன். இப்போது அவரும் பணக்காரர்... சொல்லப் போனால் உங்களைவிட பணக்காரர் ஆகிவிட்டார். என்னைப் போலவே அவருக்கும் இலக்கிய ரசனை!

உள்ளொன்று வைத்து புறமொன்று வாழ எனக்கு விருப்பமில்லை. நான் என் ரகுவிடம் போகின்றேன். குட்பை ஃபார் எவர் என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு... தாலிச் செயினைக் கழற்றி கடிதத்தின் மீது 'பேப்பர் வெயிட்'டாக வைத்துவிட்டு வெளியேறி விட்டாள்.



விஸ்வம் இடிந்துபோய் விட்டான். அவமானம் தாளாமல் புழுவாய் துடித்தான்.

ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போன்ற வேதனையில் தவித்துப் போனான்.

வேதனையை மறக்கக் குடிக்க ஆரம்பித்தான். நாளடைவில்... அவன் சூரியோதயத்தையே பார்க்க வில்லை. எப்போதாவது விரைவில் விழிக்கும் போது... அவன் விஸ்கியில் முகம் கழுவிக் கொண்டான்.

சதா போதையிலேயே மிதந்த மகனைக் கண்டு ரத்தக் கண்ணீர் சிந்தினார் சிவானந்தம். ஒரு வருடம் உருண்டோடியது. திடீரென்று என்ன தோன்றியதோ தெரியவில்லை... விஸ்கியில் விஷத்தைக் கலந்து குடித்துவிட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டான் விஸ்வம்.

''அப்பா! அண்ணன் நம்மை விட்டுப் போய் மூணு மாசமாச்சு... அண்ணி நம்ம குடும்பத்தோட கவுரவத்துக்கு வேட்டு வெச்சுட்டாங்க.. இது தீராத கவலைதான்... ஆனா நம்ம சந்தீப்பை நெனச்சுப் பாருங்க... சகலத்தையும் சகிச்சுக்கிட்டு நாம்ப அவனுக்காக வாழத்தான் வேணும்.

பகவான் மேல பாரத்தைப் போடுங்கப்பா... டாக்டரை வரச் சொல்லியிருக்கேன். பிடிவாதம் பிடிக்காம அவரு சொல்றபடி நடந்துக்கோங்கப்பா... ப்ளீஸ்!''

தூரத்தில் தென்னை மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தான் சந்தீப். கிண்ணத்தில் பால் சாதத்தை ஏந்திக் கொண்டு அவன் பின்னாடியே அல்லாடிக் கொண்டிருந்த ஆயாவின் மீது... முதியவரின் பார்வை படிந்தது.

''பாவம் குழந்தை! சீக்கிரமா நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கோயேன் ஸ்ரீதர்... மருமகள் வந்துட்டா... அவ பொறுப்பா இவனை கவனிச்சுப்பா இல்லையா? இவனும்

ஒரு தாயோட அரவணைப்புக்கு ஏங்கிட்டிருக்கான்... அதனால...''

அவர் பேசி முடிக்கும் முன் இடை மறித்தான் ஸ்ரீதர்.

''அப்பா! ப்ளீஸ்... என் மனமே ரணமா கிடக்குது. தன்னோட முன்னால் காதலன்... கட்டின புருஷனைவிட பெரிய பணக்காரன் ஆகி விட்டான்னு தெரிஞ்சதும்... அண்ணி, அண்ணனையும் ஒன்றரை வயசுக் குழந்தையையும் உதறிட்டு ஓடிட்டாங்க...''

பத்து மாசம் சுமந்து பெத்தக் குழந்தையை விட்டுட்டு ஓடறதுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? ஆயிரம் காலத்துப் பயிரை வேரோட பிடுங்கி எறிஞ்சுட்டுப் போனாங்களே?

காலம் மாறிப் போச்சு அப்பா! எனக்கு பயமாயிருக்கு... மனைவியால அவமானப்பட்டு உள்ளுக்குள்ளே மருகி மரணத்தைத் தேடிக்கிட்டாரு விஸ்வம் அண்ணா!

எனக்கு கல்யாணம்கிற வார்த்தையைக் கேட்டாலே அலர்ஜியா இருக்கு... விட்டுடுங்கப்பா... வத்சலா அண்ணி உங்க தங்கச்சி மகள்... சின்ன வயசிலேர்ந்து நீங்க பார்த்து வளர்ந்தவங்க...

''அவங்க இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவாங்கன்னு... நாம்ப கனவுலகூட நெனச்சுப் பார்க்கலையே? முகம் தெரியாத மூணாம் மனுஷி... அடியெடுத்து வச்சு அவளால பிரச்சினை உருவாகறதை நான் விரும்பலை... சந்தீப் என்னோட உயிர்... அவனுக்கு ஒரு குறையும் வரக்கூடாது. எனக்கு எல்லாமே அவன்தான்...''

''ஸ்ரீதர்! தரகர்கிட்ட சொல்லி ஒரு ஏழைப் பெண்ணா பார்க்கச் சொல்லுவோம். அவ அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போவா இல்லியா?''



''நீங்க எந்தப் பொண்ணைப் பார்த்தாலும்... அவ இந்த சொத்து சுகத்துக்கு ஆசைப்பட்டுத்தான் கழுத்தை நீட்டுவா... நமக்கு நல்லா தெரிஞ்ச வத்சலாவே இப்படி மாறினதுக்கு அப்புறம்... நான் யாரையும் நம்பத் தயாரா இல்ல... தயவுசெய்து இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வச்சிடுங்கப்பா.''

அண்ணன் மகனின் மீது உயிரையே வைத் திருக்கும் ஸ்ரீதரைக் கண்டு... முதியவரின் மனம் பெருமிதப் பட்டது.

குழந்தை சந்தீப்புக்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருந்ததை... இருவரும் எப்படி அறிவார்கள்.

## 3

அதிகாலையில் ஆரம்பித்து ஓயாது கொட்டிய மழை வலுவிழந்து... இப்போது இலேசாக பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது.

சாரலில் வாயில் வராந்தா முழுவதும் நனைந்து விட்டிருந்தது. முன்னறை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் மரகதம்.

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரப் போற நேரத்துல... சகதியும் சேறுமா சொதசொதன்னு கிடக்கே?'' உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

வெங்காயப் பக்கவடா எண்ணெயில் வறுபடும் வாசனை... முன்னறையை நிறைத்துக் கொண் டிருந்தது. வரப்போகும் பிள்ளை வீட்டவர்களைத் திருப்தி செய்ய வைஷ்ணவி அடுப்புடன் போராடிக் கொண்டிருந்தாள்.

"ஏய்... வைஷு! ரவாகேசரிக்கு முந்திரிப் பருப்பு, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ... எல்லாம் சேர்த்தியா? நெய்யை தாராளமா விட்டியா?" அதட்டினாள் மரகதம்.

"நீங்க சொன்னபடியே பண்ணியிருக்கேன் பெரியம்மா... எதுக்கும் நீங்க டேஸ்ட் பண்ணி பாத்துடுங்க..." சிறு தட்டில் கொஞ்சம் ரவா கேசரியை வைத்து ஸ்பூனையும் சேர்த்து நீட்டினாள்.

கேசரியை சுவைத்துப் பார்த்த மரகதத்தின் முகத்தில் திருப்தி ரேகை மெல்லப் படர்ந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை! காலையிலிருந்து ஓய்வின்றி வீட்டு வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள் வைஷ்ணவி.

காலையில் குளித்துவிட்டு உடுத்திக்கொண்ட வாயில் புடவை கொஞ்சம்கூட அலங்கவில்லை. அப்போது வாரிப் பின்னலிட்ட நீண்ட கூந்தல் சிறிதும் கலையவில்லை.

கழுத்தில் கருகமணிப் பாசி, காதுகளில் சிறு ரோஜா தோடு, கைகளில் பிளாஸ்டிக் வளையல்கள்... அவள் உள்ளே வந்து நின்றதுமே நிலவு பளிச்சிட்டது போன்ற பிரமிப்பு!

"ஹூம்! வனிதாவுக்கு நிறம்தான். மட்ட மென்றால்... முகக்களையும் வாய்க்கவில்லையே? வரப்போகும்பிள்ளை வீட்டவர்களுக்கு அவளைப் பிடிக்க வேணுமே?"

உள்ளூர ஏக்கமும் அதே சமயம் கோபமும் பொங்கியது.

"பஜ்ஜி மாவைத் தயாரா வச்சிருக்கியா? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்தவுடனே சூடா போட்டு எடுத்துரு... உருளைக்கிழங்கையும், வாழைக் காயையும் சீவி வச்சுக்கோ... அசமந்தமா நின்னு என் கழுத்தை அறுத்துடாதே... சரியா?"



"எல்லாமே தயாரா இருக்கு பெரியம்மா...!" பவ்யமாய் பதிலளித்தாள். அவள் 'எள்' என்று சொல்வதற்குள் 'எண்ணெயாக' நிற்கிறாளே? மேற்கொண்டு அவளைத் திட்டுவதற்கு எந்த சாக்கும் கிடைக்கவில்லையே? மீண்டும் உள்ளே கோபம் கனன்றது.

வனிதா பீரோவைத் திறந்து புடவைகளை அள்ளிப் படுக்கையின் மீது போட்ட வண்ணம் இருந்தாள். படுக்கையில் ஒருக்களித்துப் படுத்த படியே தங்கை அனிதா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இரண்டு நாட்களாக நல்ல காய்ச்சல்! எண்ணற்ற புடவைகளை வாரியிறைத்து விட்டு... என்ன புடவை உடுத்திக் கொள்ளலாம் என்ற ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தாள் வனிதா.

அரை மனதுடன் ஆரஞ்சு வண்ண பனராஸ் புடவையைத் தேர்வு செய்து விட்டு... "ஏய் வைஷு! புடவைகளை மடிச்சு அடுக்கி வச்சுடு" அதிகாரமாக உத்தரவிட்டாள்.

சிறிது நேரத்தில் பிள்ளை வீட்டவர்கள் வந்து இறங்கினர். வைஷ்ணவி தயாரித்து வைத்த பலகாரங்களை வைத்து உபசரித்தாள் மரகதம்.

'மாப்பிள்ளை சிவந்த நிறத்துடன் களையாக இருக்கிறானே... அம்பத்தூரில் ஏதோ பெரிய ஸ்தாபனத்தில் நல்ல பதவி... கை நிறைய சம்பளம்... அந்தஸ்தான இடம்...'

மரகதத்திற்கு மகிழ்ச்சி கரை புரண்டது.

"பொண்ணுக்குப் பாடத் தெரியுமா?" வந்த பெண்களில் ஒருத்தி கேட்டு விட்டாள்.

வனிதாவிற்கு உள்ளூர நடுக்கம் பரவியது.

''தெரியும்! ஆனா... ரெண்டு நாளா அவளுக்கு தொண்டை கட்டிக் கொண்டிருக்கிறது'' மரகதம் சமாளித்தாள்.

''வாத்யம் ஏதாவது - வீணை கீணை வாசிக்கத் தெரியுமா?'' வந்தவள் விடவில்லை... தொடர்ந்து குடைந்து கேள்வி கேட்டாள்.

மூலையில் தூங்கிக் கொண்டிருந்த வீணைப் பெட்டியைத் திறந்து வீணையைத் தூக்கிக் கொண்டு வந்து மரகதம் ஜமுக்காளத்தின் மீது வைத்துவிட்டாள்.

பயத்தில் வனிதாவுக்கு வியர்த்துக் கொட்டியது.

''அம்மா! அனிதாவை... இன்னொரு வீணையை எடுத்துட்டுக் கொண்டு வரச் சொல்லுங்க... என்கூட சேர்ந்து அவளும் வாசிக்கட்டும். எனக்கு பயமா இருக்கு'' மரகதத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு... அவள் மெல்லிய குரலில் கெஞ்சுவதைக் கேட்டார் சண்முகம்.

''அனிதாவுக்குத்தான் உடம்பு முடியாம படுத்திருக்காளே...? சரி இப்போ என்ன? உன்கூட சேர்ந்து வாசிக்கணுமா? வைஷ்ணவி! இன்னொரு வீணையை எடுத்துட்டு வந்து வனி அக்காவோட சேர்ந்து வாசிம்மா'' விகல்பமில்லாமல் உத்தரவிட்டார்.

மரகதத்தின் முகம் சட்டென்று இருண்டு போனது.

சபை ஜனங்களுக்கு முன் மறுப்பு தெரிவிக்க முடியாமல்... அரை மனதுடன் வீணையுடன் வந்த மர்ந்தாள் வைஷ்ணவி.

சுருதி கூட்டி இருவரும் வாசிக்கத் தொடங்கி னார்கள்.

''வெண்ணிலாவும் வானும் போல... வீரனும் வாளும் போல'' என்ற பாடலை அற்புதமாக இசைத்தாள் வைஷ்ணவி.



வியப்புடன் அவள் மீது படிந்த மாப்பிள்ளையின் கண்கள் வேறுபுறம் திரும்பவே இல்லை. விடை பெற்றுக் கொண்டு அவர்கள் கிளம்பினார்கள். மறுநாள் பிள்ளையின் தந்தையிடமிருந்து ஃபோன் வந்தது.

''உங்களுடன் சம்பந்தம் செய்து கொள்வது பற்றி எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி... வீணை வாசித்தாளே இன்னொரு பொண்ணு? கத்தரிப்பூ வண்ணத்துல காட்டன் புடவை கட்டியிருந்தாளே? அந்தப் பெண்ணைத்தான் என் மகனுக்குப் பிடிக்கிறதாம்.

எங்களுக்கும் அந்தப் பெண்ணைத்தான் பிடிச்சிருக்கு. உங்களுக்கு சம்மதம் என்றால் மேலே பேச்சு வார்த்தைகளைத் தொடரலாம். என்ன சொல்றீங்க அம்மா?'' என்று அவர் கேட்டபோது... மரகதம் ஆத்திரத்தில் ஆடிப் போனாள்.

அன்று வீட்டில் பெரிய பூகம்பமே வெடித்தது.

''புத்தி கெட்ட மனுஷரா இருக்கீங்களே? வனிக்கு நல்ல வாழ்க்கை அமையப் போகுதுன்னு சந்தோஷப் பட்டுட்டு இருந்தேனே? உங்க பொண்ணு வாழ்க்கையில நீங்களே மண்ணள்ளிப் போட்டுட்டீங்களே?''

''ஏன் இப்படி பெரிய வார்த்தையெல்லாம் சொல்றே? அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதே மரகதம்!'' சாந்தப்படுத்தும் விதத்தில் பேசியவரை விழிகளால் சுட்டெரித்தாள்.

''உங்க தம்பி பொண்ணை கூப்பிட்டு வீணை வாசிக்க வச்சீங்களே? இப்போ என்னாச்சு தெரியுமா? எல்லோருக்கும் அவளைத்தான் ரொம்ப பிடிச் சிருக்குன்னு ஃபோன் பண்றாங்க... ஐயோ! இந்த சனியனால... என் பொண்ணோட வாழ்க்கையே போச்சே?

''நல்ல சம்மந்தம் கைவிட்டுப் போச்சே? அனாதையா நம்மை அண்டி வாழ வந்தவ... என் பொண்ணுக்கு வேட்டு வச்சுட்டாளே... பாவி!''

மரகதம் கர்ஜித்தாள். ஓலமிட்டாள். சபித்தாள்.

'தன்னைப் பார்க்க வந்தவன் இப்படி மனம் மாறி அவள் பக்கம் தாவி விட்டானே?' என்று வனிதாவுக்கு பொறாமை, ஆத்திரம்!

"இந்த மனுஷன் கூப்பிட்டா உனக்கு எங்கேடி புத்தி போச்சு?" மரகதத்தின் விழிகள் அனலைக் கக்கின.

"இல்ல... பெ... பெரியம்மா! எல்லாத்துக்கும் முன்னாடி வச்சு பெரியப்பா வற்புறுத்தினதால... ம... மறுத்துப் பேச தயக்கமா இ... இருந்துச்சு பெரியம்மா! அதான்... வ... வந்தேன்."

திக்கித் திணறி வார்த்தைகளை உதிர்த்தாள் வைஷ்ணவி. பயத்தில் கோழிக் குஞ்சாய் வெடவெடத்தாள். இந்த மாதிரி நடக்கும் என்று சத்தியமாய் அவள் கற்பனை செய்துகூட பார்க்கவில்லை.

"வீணையைத் தூக்கிட்டு வந்து வாசிச்சு... வந்தவனை மயக்கிட்டியே சனியனே! வனிக்கு வரப் போற நல்ல வாழ்க்கையை கெடுத்துட்டியே பாவி."

"பெ... பெரியம்மா! சத்தியமா நா அப்படி எதுவும் நினைக்கல பெரியம்மா... இப்படி நடக்கும்னு எனக்குத் தெரியாது..." தழுதழுத்தாள் வைஷ்ணவி.

"நல்லதுக்கு நரி முட்டையிடலை... இவ நம்ப குடும்பத்தைக் கெடுக்க வந்த கொள்ளி வாய்ப் பிசாசு... சே! நீலிக் கண்ணீர் வடிக்காதே மாய்மாலக்காரி... அப்பால போ! என் முன்னாடி நிக்காதே..."

மரகதம் சினத்தைக் கட்டுப் படுத்த முடியாமல்... ஓங்கி அவளது கன்னத்தில் ஒரு அறைவிட்டாள்.

இடக் கன்னத்தில் ஓர் இடி இறங்கியது. செவிப்பறைக்குள் பூச்சிகள் கத்தின.



இன்னொரு இடி வலக்கன்னத்தில் விழுந்தது. கண்ணுக்குள் ஆயிரம் மின்னல்கள் அறுந்து விழுந்தன.

இறங்கிய மூன்றாவது இடியை... சண்முகத்தின் வலக்கரம் தடுத்தது.

"வைஷ்ணவி! நீ உள்ளே போம்மா."

அவமானம் ஒருபுறமும் துக்கம் ஒரு புறமும்... வைஷ்ணவியைப் பிடுங்கித் தின்றன.

கீழுதட்டை அழுந்தக் கடித்து... அடுக்களைக்குள் தஞ்சமடைந்தாள்.

இதயத்தில் கோட்டை கட்டிய சோகம்... கண்ணீர் என்ற ஏணி வழியே இறங்கி வெளியேறியது.

## 4

அறைபட்ட கன்னங்கள் ஜிவு ஜிவு என்று தீயாய் காந்தின. அவமானம், துக்கம், வேதனை எல்லாம் ஒரு சேர ஆட்டிப் படைக்க புயலில் அகப்பட்ட பூங்கொடியாய் துடித்துக் கொண்டு நின்றாள்.

'அம்மா...' என்று அலறி அழவேண்டும் போன்ற துக்கம் - அது தொண்டையை அடைத்துக் கொண்டு நின்றது.

அன்று இரவு வைஷ்ணவி வெகுநேரம் உறக்க மின்றி அழுது கொண்டிருந்தாள். இடை இடையே பெரிதாக எழுந்து உடலைக் குலுக்கிய விம்மலை அடக்கிக் கொண்டு அவள் சப்தமிடாமல்... கண்ணீர் உகுத்தாள்.

தலை பாரமாக கனத்தது. நெஞ்சு வேதனை தாளாமல் வெடித்து விடும்போல் இறுகியது.

'இந்த வாழ்வு தேவைதானா? நான் எதற்காக வாழ வேண்டும்? எனக்கு விடிவு காலம் பிறக்குமா?'

'இப்படி அவமானப்பட்டுக் கொண்டு வாழ்வதற்கு செத்துவிடுவதே மேல்!'

மீண்டும் பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது. மூக்கை நீர் அடைத்துக் கொள்ளவே மூச்சுவிட முடியாமல் திணறிப் போனாள்.

மெல்ல எழுந்து அமர்ந்தாள். வனிதாவுக்கும் அனிதாவுக்கும் தெரிந்தால் கோபித்துக் கொள்வார்களே என்ற பயம்!

அன்று இரவு சாப்பாட்டின் போது பரிமாற வந்த வைஷ்ணவியை கட்டெரித்து விடுபவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள் வனிதா.

'வீணையை வாசிக்க வந்தவ... ஒரு நல்ல சம்மந்தத்தை வீணாக்கி விட்டாயே... நீ நல்லா இருப்பியா?' என்று கேட்காமல் கேட்பதுபோல அவளது கடும் பார்வை!

''என்ன வைஷு? அம்மாவும் அக்காவும் உன்னைக் கரிச்சுக் கொட்டிட்டே இருக்காங்களா? எனக்கொரு ஐடியா தோணுது.

பேசாம... இந்த வரனுக்கே நீ கழுத்தை நீட்டி விட்டு இந்த வீட்டை விட்டுப் புறப்படு... பிறகு எங்கள் வாழ்க்கையில எந்தப் பிரச்சினையும் வராது இல்லியா?''

இளையவள் அனிதாவும் அவளது பங்குக்குப் பேசி... வைஷ்ணவியின் இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சினார்கள்.

சண்முகத்திற்கு அன்றிரவு சாப்பிடவே மனமில்லை. அனாதையாகித் தம்மிடம் அடைக் கலமான தம்பி மகளின் உள்ளம் நோக... மரகதம் பேசியது. அவருக்குப் பிடிக்கவே இல்லை.



அதிலும் அத்து மீறிக் கையை நீட்டி அடித்து விட்டாளே? பாவம்! அழுது ஊறிப் போன முகத்தையும், வெந்து விட்டிருந்த கன்னங்களையும் பார்த்து அவர் பரிதவித்துப் போனார்.

''போம்மா... கண்ணைத் துடைச்சிட்டு போய் சாப்பிடு'' என்று மெல்ல முணுமுணுத்தார்.

இன்னும் ஆறுதலாக நான்கு வார்த்தைகள்... கனிவாகப் பேசி அவளை சமாதானப்படுத்த ஆசை தான்! ஆனால்... பத்ரகாளி ரூபத்தில் வளைய வந்து கொண்டிருந்த மரகதத்தின் வாய்க்கு பயந்து கப்பென்று வாயை மூடிக் கொண்டு விட்டார்.

ஏற்கனவே மண்டகப்படி வாங்கிக்கட்டிக் கொண்டு விட்டாரே? கையாலாகாத தனத்துடன் செய்வது அறியாமல்... படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார்.

''என் பொண்ணுகளுக்கு சமமா இவளையும் வீணை கத்துக்க வச்சேனே? மாசா மாசம் ஃபீஸ் கட்டி கத்துக்க வச்சதுக்கு... கை மேல பலனைக் கொடுத்துட்டாளே... பாம்புக்குப் பால் வார்த்தேனே?''

அடிபட்ட சிறுத்தையாய் இன்னமும் அடிக்கடி உறுமிக் கொண்டே இருந்தாள் மரகதம்.

'வைஷ்ணவி வீணை கத்துக் கொள்ளட்டும்கிற நல்ல எண்ணத்துலே கிளாசுக்கு அனுப்பி வச்சியாக்கும்? உன் பொண்ணுகளோட வீணையைத் தூக்கிட்டுப் போக அவளை அனுப்பினே! 'வேலைக் காரி மாதிரி அந்த அனாதைப் பெண்ணை நடத்தறாங் களே'ன்னு மத்தவங்க பேசிடக் கூடாதுன்னு பயந்து... அவளுக்கு ஃபீஸ் கட்டினே...' மத்தபடி உன் பொண்ணுகளுக்கு சமமா அவளை என்னிக்காச்சும் நீ நடத்தினது உண்டா மரகதம்?' என்று கேட்டுவிட அவரது நாக்கு துடிக்கத்தான் செய்தது.

ஆனால் அப்படியே அவர் கேட்டுவிட முடியுமா? சே! என்ன பிழைப்பு இது? வெறுப்புடன் போர்வையைத் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டார்.

வைஷ்ணவி முகத்தை நன்கு அலம்பிவிட்டு வந்து மீண்டும் படுத்தபோது... காலி வயிற்றில் 'எனக்கு?' என்ற உறுமலான கேள்வி எழும்பியது.

'தொட்டதுக்கு எல்லாம் குற்றம் குறை கண்டு பிடித்து வசை பாடும் பெரியம்மா... இவ்வளவு பெரிய விஷயம் நடந்த பிறகு இனி என்னை சும்மாவிட்டு வைப்பாளா?

ஆரம்பத்திலிருந்தே பெரியம்மாவுக்கு என்னைக் கண்டாலே ஆகாது... இப்போது எரியும் நெருப்பில் நெய் வார்த்தது போலாகி விட்டதே?

தொடர்ந்து இதே வீட்டில் நான் நீடித்திருக்க முடியுமா?

பெரியம்மாவின் ஒவ்வொரு வார்த்தையும் எனது காதுகளில் தீக்கங்கைச் செருகியது போலிருக்குமே?

வனிதா ஜாடையாகப் பேசி வறுத்தெடுத்து விடுவாள்

அனிதாவோ ஊசிக் கணைகளைப் புன்சிரிப்போடு சேர்த்து வீசுவாள்.

தற்கொலை செய்து கொள்ளலாமா? சேச்சே! தற்கொலை செய்வது மகா பூாவம் என்று அப்பா சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேனே?

வேலைக்குப் போகிறேன்... சம்பாதிக்கிறேன். பிறகென்ன?

இந்த வீட்டை விட்டு வெளியேறி ஏதாவது நல்ல ஹாஸ்டலில் தங்கிக் கொண்டு... வேலைக்குச் செல்லலாமா? 'இவளை வளர்த்து படிக்க வைத்தோம் சம்பாதிக்க ஆரம்பித்ததும்... நன்றியை மறந்துவிட்டு வெளியேறி



விட்டாளே?' என்று பெரியம்மா அனைவரிடமும் கூறத்தான் போகின்றாள்.

'நன்றி மறந்தவள்' என்ற பழிச் சொல் வந்து சேருமே?

நான் வீட்டை விட்டு வெளியேறினால்... பெரியப்பா என்ன நினைப்பார்?

இதே வீட்டில் தொடர்ந்து இருக்க முடியாதே? என்ன செய்யப் போகின்றேன்...!''இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனாள் வைஷ்ணவி.

## 5

முழு நிலவின் மோகன ஒளியில் எம்பி ஆர்ப்பரித்தது கடல்! அந்த எம்பலையும் துள்ளலை யும்... பால்கனியில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதர்.

'பாவம் சந்தீப்! இரண்டு நாட்களாக அவனுக்கு சரியான காய்ச்சல்... அனலாகக் கொதித்த காய்ச்சலில் 'அப்பா... அப்பா' என்று அனத்த ஆரம்பித்து விட்டானே... குழந்தை!''

தனக்குள் மெல்ல முணுமுணுத்துக் கொண்டான்.

சந்தீப்புக்கு விஸ்வத்தின் மீது ஒட்டுதல் அதிகம். 'அப்பா காலமாகிவிட்டார். இனி திரும்ப வரவே மாட்டார்' என்பதைப் புரிந்து கொள்ள இயலாத பிஞ்சுப் பருவத்தில் அவன் இருந்தான்.

சிவானந்தமும், ஸ்ரீதரும்... 'அப்பா ஊருக்குப் போயிருக்காரு கண்ணா... முக்கியமான ஆபீஸ் வேலையை முடிச்சிட்டு உடனே வந்துடுவாரு ராஜா' என்று பொய் சொல்லி சமாளித்தார்கள்.

எத்தனை நாளைக்கு சமாளிக்க முடியும்.

அதிலும் சளி ஜுரம் பிடித்து உடம்புக்கு முடியாமல் போனதும்... குழந்தைக்கு அப்பாவின் ஞாபகம் அதிகரித்துவிட்டது.

அனத்தத் தொடங்கியதும் சிவானந்தம் பதறிவிட்டார்.

குடும்ப மருத்துவரின் தீவிர கண் காணிப்பில்... எப்படியோ காய்ச்சல் மட்டுப்பட்டது.

சற்று முன்னர்தான் கண்விழித்துப் பார்த்தான் சந்தீப்.

சித்தப்பா ஸ்ரீதர் பரிசளித்த 'ரோபோ' பொம்மையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு... மருந்து மாத்திரைகளின் தீவிரத்தில் மீண்டும் கண் அசந்து போனான்.

பால்கனி கதவை மூடிவிட்டு விஸ்தாரமான அறைக்குள் நுழைந்த ஸ்ரீதர்... அர்த்த பாவனையுடன் சந்தீப்பின் கட்டிலருகே அமர்ந்திருந்த ஆயாவைப் பார்த்தான்.

''இன்னும் ரெண்டுமணி நேரம் பொறுத்து டானிக் ஊத்தினா போதும் தம்பி!'' பவ்யமாக பதலளித்தாள்.

சந்தீப்பின் கேசத்தை மிருதுவாகத் தடவியபடியே ''ஜாக்கிரதையா பார்த்துக்கோங்கம்மா... நான் கொஞ்சம் பீச்சுல காலார நடந்துட்டு வரேன்'' என்று கூறிவிட்டு மாடிப்படிகளைக் கடந்து இறங்கினான்.

பிரமாண்டமான ஹாலின் பக்கவாட்டிலிருந்த அறைக் கதவைத் திறந்து மெல்ல எட்டிப் பார்த்தான் ஸ்ரீதர்.

நிம்மதியாய் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தார் சிவானந்தம்.

''முத்து.''

''இடுப்பில் துண்டைக் கட்டியிருந்த பணியாள் வேகமாய் ஓடி வந்தான்.



''அப்பா... சாப்பிட்டாரா இல்லையா?''

''டிபன் எதுவும் வேணாம்னு சொல்லிட்டாருங்க... ஒரு வாழைப்பழம்... ஒரு டம்ளர் பால் அவ்ளோதான்! பி.பி. மாத்திரையைப் போட்டுக்கிட்டாருங்க.''

ஸ்ரீதரிடமிருந்து நீண்ட பெருமூச்சு அனலாய் வெளிப்பட்டது.

பங்களாவை விட்டு வெளியேறி... கடலை நோக்கி நடந்தான். கடற்கரை மணலில் கால்கள் புதையப் புதைய நடந்தவனின் மனம்... பாறாங்கல்லாய் கனத்துக் கொண்டிருந்தது.

சோகத்தை சுமந்து கொண்டிருக்கும் மனிதனின் மனம் சோர்ந்து போய் விடுகின்றது. ஆனால் கடலின் அலைகள் 'எங்களுக்கு சோர்வே இல்லை' என்று தெம்புடன் குதித்து விசிறின.

வெள்ளியில் ஓரம் கட்டின தினுசில் கடலலைகள் மின்னின. செல்லமாய் மோதி ஒவ்வொரு முறையும் கரை மணலில் சிறிதை சுரண்டியடித்தன.

அண்ணி வத்சலாவை நினைத்தாலே... உள்ளுக்குள் உலை கொதிக்கத் தொடங்கியது.

சந்தீப்பை பத்து மாதங்கள் சுமந்து பெற்றவள் அவள்!

தாய்மை உணர்வை சுத்தமாகத் துணி கொண்டு துடைத்துப் போட்டுவிட்ட தினுசில்... பச்சிளம் குழந்தையை பரிதவிக்க விட்டு ஓடிப் போய் விட்டாளே?

தனது சுயநலத்தை மட்டும் கருத்தில் கொண்டு... பாரம்பரியமான குடும்பத்தின் கவுரவத்தை அழித்து... சந்தி சிரிக்க வைத்து விட்டாளே?

ஆஜானுபாகுவான அழகான கணவன் விஸ்வம்... அவனுக்குப் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி தலைகுனிய

வைத்து... குடிக்கு அடிமை யாக்கி, கடைசியில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைமைக்குத் தள்ளினாளே.''

பெண் இனத்திற்கே களங்கம் ஏற்படுத்தி விட்டாளே?

தனது 'ஓடுகாலித் தனத்தால்' அன்பான கணவன் அவமானப்பட்டு இறந்து விட்டானே? என்ற உறுத்தல் சிறிதளவும் இன்றி... எப்படி அவளால் சந்தோஷமாக இருக்க முடிகின்றதோ?

தவறு செய்தவள் அவள்... பாவம் செய்தவள் அவள்!

ஆனால் தண்டனை அனுபவிப்பது யார்?

தண்டனையை அனுபவிக்கும் தெம்பின்றி... அவமானப்பட்டு கூனிக் குறுகி எனது அண்ணன் இறந்துவிட்டான்.

அண்ணனின் குழந்தை இன்றளவும் பாசத்திற்கு ஏங்கித் தவிக்கிறது. சேச்சே! மனசாட்சி சிறிதுமில்லாத ஜென்மம் அவள். இப்பேர்ப்பட்ட சுயநலப் பிசாசுக்கு... கடவுள் ஏன் இன்னமும் தண்டனை தராமல் இருக்கிறாரோ?

தன்னைச்சுற்றி இருப்பவர்களை எல்லாம் நெருப்பாற்றில் தள்ளிவிட்டு... தன் சுகத்தை மட்டும் பிரதானமாக மதித்து ஓடி விட்டாளே?

அவள் எழுதி வைத்துவிட்டுப் போன கடிதம்... ஸ்ரீதரின் மனக் கண்ணில் நிழலாடியது.

'மனத்தராசில் எடை போட்டுப் பார்த்தேன். என் காதலர் உங்களைவிட பணக்காரராகி விட்டார்.'' என்று எழுதியிருந்தாளே?

படித்துவிட்டு விஸ்வம் அண்ணன் எப்படி துடித்துப் போனார்? மனைவி ஓடியபிறகு விரக்தி மேலிட... ஆபீஸ் பக்கமே'விஸ்வம் தலை வைத்துப் படுக்கவில்லை.

வத்சலா எழுதிய வாசகம்... ஸ்ரீதருக்குள் ஒரு வெறியைத் தூண்டி விட்டிருந்தது.

சதா ஆபீஸிலேயே பழியாகக் கிடந்தான். அதீத ஆர்வத்துடனும், அக்கறையுடனும் சிரத்தையுடனனும் கடுமையாக உழைத்தான்.

விஸ்வம் குடி போதையில் மூழ்கிக் கொண்டிருக்க... ஸ்ரீதரோ பிஸினஸில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான்.

அவனது அயராத உழைப்பிற்குப் பட்ட பாட்டிற்குப் பலன் கிடைக்கத்தான் செய்தது.

முன்பு எப்போதும் இல்லாத அளவில்... பன் மடங்கு லாபத்துடன் அவனது நிறுவனங்கள் வெற்றிப் பாதையில் முன்னணியில் முன்னேறின.

அனைவரும் மூக்கில் விரல் வைக்கும் வகையில் இளம் தொழிலதிபர் ஸ்ரீதர் சிகரத்தைத் தொட்டுக் கொண்டிருந்தான்.

இளம் வயதினருக்குரிய ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல்... மனதிற்கு கடிவாளம் போட்டுக் கட்டுக்குள் வைத்திருந்தான் ஸ்ரீதர்.

அவனது மனதை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான் சிறுவன் சந்தீப்.

சந்தீப்பின் பிஞ்சு உடம்பில் ஈ, கொசு அமர்ந்தாலும் துடித்துப் போய் விடுவான் ஸ்ரீதர்.

அந்த அளவுக்கு அவன் மீது உயிரையே வைத்திருந்தான்.

விதி சிரித்தது? சந்தீப்பின் உடலிலிருந்து ஏகப்பட்ட இரத்தம் வெளியாகி... உயிருக்குப் போராடும் சூழ்நிலையை உருவாக்க... விதி தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

## 6

வேலைக்குச் சென்று நாள் முழுவதும் உழைத்து விட்டு அலுத்துக் களைத்து வீடு திரும்பி யிருந்தாள் வைஷ்ணவி.

டகடகவென்று ஜகடை உருள கிணற்றிலிருந்து நீரை இறைத்துத் தோட்டத்துப் பூச்செடிகளுக்கும், கீரைப் பாத்திக்களுக்கும் தண்ணீர்விட எத்தனித்தாள்.

''வைஷு! இங்க வா... நாங்க எல்லாரும் ரிஸப்ஷனுக்குக் கிளம்பறோம். முதுல்லே வந்து காபி போட்டுக் குடு... காபி சாப்பிட்டுட்டு நாங்க போகணும். நாங்க போனதும் மெதுவா வந்து இந்தக் காரியத்தை கவனிச்சாப் போறும்.''

மரகதகத்தின் குரலில் கடுமை வழிந்தது.

''சரிங்க பெரியம்மா...'' ஓட்டமும் நடையுமாக அடுக்களைக்குள் புகுந்தாள் வைஷ்ணவி.

''என்னங்க... பாக்கியத்தோட பொண்ணுக்கு நாளைக்கு கல்யாணம் தெரியுமில்ல...? கிளம்புங்க சீக்கிரம்'' அதட்டிய மனைவியை திகைப்புடன் ஏறிட்டுப் பார்த்தார் சண்முகம்.

''உன் சிநேகிதியோட பொண்ணுக்கு கல்யாணம். நீ கிளம்பிப் போயேன் மரகதம். என்னை என்னத்துக்கு வரச் சொல்றே?'' தயங்கியபடியே கேட்டுவிட்டார்.

''இருபது வருஷத்துப் பழக்கம்... பாக்கியம், இன்னிக்கும், நாளைக்கும் குடும்பத்தோட வந்து போகணும்னு வருந்தி வருந்திக் கூப்பிட்டிருக்கா... நீங்களும் வாங்க... நாளைக்கு நம்ம பொண்ணு களோட விசேஷத்துக்கு அக்கம் பக்கம் மனுஷாள் வரவேணாமா?



''மண்டபமும் பக்கத்துல தானே இருக்கு...? கிளம்பி வரப் போறீங்களா இல்லையா?''

அதற்குமேல் மறுத்துப் பேசினால் ருத்ர தாண்டவம் ஆடி விடுவாளே? என்ற பயத்தில் அரைமனதுடன் கிளம்பிவிட்டார் சண்முகம்.

அனைவரும் கிளம்பிச் சென்றதும் வீட்டைப் பெருக்கி முடித்து.... அடுப்பு மேடையில் இறைந்து கிடந்த பாத்திரங்களை ஒழித்துப் போட்டு தேய்த்து வைத்தாள்.

''செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு... கலைந்த கூந்தலை வாரிப் பின்னலிட்டுவிட்டு கொல்லைப் புறக்கதவை மறக்காமல் சாத்திவிட்டு வரவேண்டும்'' என்று எண்ணமிட்டுக் கொண்டே கிணற்றிலிருந்து நீரை இறைத்தாள் வைஷ்ணவி.

''தோட்டத்துச் செடிகளுக்கு எல்லாம் கிணத்துல இருந்து தண்ணியைச் சேந்திதான் ஊத்தணும்... மோட்டார் தண்ணியை விட்டா கரண்ட் சார்ஜ் பில் எகிறும். பொண்ணா பொறந்தவ கட்டும் செட்டுமா சிக்கனமா இருக்கணும்.

என்ன முழிக்கிறே? உடம்புக்கும் நல்ல பயிற்சி... அதே சமயம் இறைக்க இறைக்க கிணத்துல தண்ணியும் ஊறிக்கிட்டே இருக்கும்.'' என்று மரகதம் போட்ட உத்தரவை... ஒருநாளும் வைஷ்ணவி மீறியதே இல்லை.

பவள மல்லி மரத்துக்கு நீர் வார்த்துக் கொண் டிருந்தவள் அருகில் ஏதோ நிழலாடியதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அழகு சுந்தரம் நெருங்கி நின்று கொண் டிருந்தான். மரகதத்தின் அண்ணன் மகன் அழகு சுந்தரத்திற்கு... பெயரில்தான் 'அழகு' இருந்தது.

அவனது பெயருக்கும் உருவத்திற்கும் சிறிதும் சம்மந்தமே இல்லை எனலாம். 'இவன் எப்படி இங்கே வந்தான்... அதுவும் இந்த நேரத்தில்? வைஷ்ணவிக்கு அவனைக் கண்டதுமே தூக்கி வாரிப்போட்டது.

சட்டென்று பின் வாங்கி நின்றவன் பூவாளியை பொத்தென்று கீழே வைத்தாள்.

அந்தி சாயும் நேரத்தில் வாசற்கதவை எதற்கு மூடி வைக்க வேண்டும்? என்ற எண்ணத்தில் தோட்டத்திற்குள் புகுந்து கொண்டது... எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

அவளைப் பார்வையாலேயே அளவெடுத்தபடி சல்லித்தனமாக சிரித்துக் கொண்டு நின்றிருந்தவனைக் கண்டு... அவனது மேனி மெல்லப் பதறியது.

காலுக்கடியில் பூரான்கள் நெளிவது போன்ற அருவருப்பு ஏற்பட்டது நிஜம்!

இடுப்பில் அள்ளி செருகியிருந்த கொசுவத்தைத் தழைத்து விட்டபடியே கூடத்தை நோக்கி விரைந்தாள். அழகுசுந்தரமும் அவளைப் பின் தொடர்ந்தான்.

இரண்டு தெரு தள்ளிதான் அழகு சுந்தரத்தின் வீடு உள்ளது. சுற்று வட்டிக்கு பணத்தை விட்டு சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவனது வீட்டுக்கு அருகிலேயே அடகுக்கடையும் நடத்தி அநியாயமாகப் பணத்தை சேர்த்து வைத்திருந்தான்.

பணத்தோடு சேர்த்து பாவத்தையும் மூட்டை மூட்டையாக சேமித்து வைத்திருந்தான்... பத்து பன்னிரண்டு வருடங்கள் ஆகியும் அவனது மனைவி கருத்தரிக்கவே இல்லை.

அண்ணன் மகன் அழகு சுந்தரத்தைக் கண்டாலே... மரகதத்திற்கு தலைகால் புரியாது. குஷி பிய்த்துக் கொண்டு போகும். வாயெல்லாம் பல்லாக வரவேற்று உபசரிப்பாள்.



"பெரியம்மாவும் மத்தவங்களும் ரிஸப்ஷனுக்குப் போயிருக்காங்க..." எரிச்சலுடன் கூறினாள் வைஷ்ணவி.

"தெரியும்! வீட்டுல யாரும் இருக்க மாட்டாங் கங்கிற விவரம் தெரிஞ்சுதான் வந்தேன். என்ன முழிக்கிறே? அத்தைதான் இந்த விவரத்தை எனக்கு சொன்னாங்க... இப்படிப்பட்ட சந்தர்ப்பம் அமையாதான்னு... நான் எவ்ளோ நாளா ஏங்கிட்டி ருக்கேன்னு தெரியுமா வைஷு!" அவனிடமிருந்து நாசிக்குப் பிடிக்காத வாடை குப்பென்று கிளம்பியது.

'என்னது? பெரியம்மா எதற்காக இப்படியொரு சந்தர்ப்பத்தை இவனுக்கு உருவாக்கித்தர வேண்டும்? சமீப காலமாக இவன் அடிக்கடி வர ஆரம்பித் திருக்கிறான்.'

வழியில் எங்காவது பார்த்தாலும் வலிய வந்து நின்று பேச்சுக் கொடுக்க முயற்சித்தான்... சிறிதும் லஜ்ஜையின்றி பார்வையாலேயே அவளை விழுங்கி விடுவது போல் பார்க்கிறானே?

ரிஸப்ஷனுக்கு வரமாட்டேன் என்று அடம்பிடித்த பெரியப்பாவை... அதட்டி மிரட்டி அவரையும் தன்னோடு அழைத்துச் சென்று விட்டாளே பெரியம்மா? அண்ணன் மகனுடன் சேர்ந்து அவள் ஏதோ சதி செய்கிறாள்! என்பது மட்டும் நன்கு புரிந்தது.

"என்கிட்டே உங்களுக்கு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு? அவங்க வந்தப்புறமா தாராளமா வாங்க... எனக்கு தலைக்கு மேல வேலை கிடக்கு... கிளம்பறீங்களா? நான் வாசற்கதவைத் சாத்தணும்!" வெடுக்கென்று பேசினாள் வைஷ்ணவி.

அவளது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"என்னத்துக்கு வைஷு... இப்படிக் கோபப் படறே? நீ கோபப்படறப்போகூட எவ்ளோ அழகா இருக்கே தெரியுமா?

ஊசிப் பட்டாசா நீ பொரிஞ்சு தள்ளினாலும்... உன் குரல் தேனாட்டம் இனிக்குது தெரியுமா வைஷு?''

''மிஸ்டர்! லிமிட்டைத் தாண்டி பேசறீங்க... நீங்க பெரியப்பாவுக்கு நெருங்கிய உறவுக்காரரா இருக்கலாம். ஆனா அவங்க இல்லாத நேரத்துல... தனியா இருக்கற என்கிட்டே வந்து இந்த மாதிரி யெல்லாம் பேசறது... கொஞ்சம்கூட நல்லாயில்ல... தயவுசெய்து போயிடுங்க...''

அழகிய விழிகள் தீக்கங்குகளாய் ஜொலித்தன.

''என்ன வைஷு? இந்த அத்தான் எவ்ளோ ஆசையா வந்திருக்கேன். என்னத்துக்கு இப்படி எரிஞ்சு விழறே? அக்கம் பக்கத்துல இருக்கறவங்க 'அழகு சுந்தரம் பெண்கள் விஷயத்துல மோசமானவன்'னு... உன்கிட்டே சொன்னாங்களா? நிறைய குடிப்பான்னு சொன்னாங்களா?''

எக்கச்சக்கமாக பணம் புரண்டுகிட்டிருக்கு. நா ஜாலியா அனுபவிக்கிறேன். சமீபகாலமா எல்லாத்துல யும் ஒரு சலிப்பு வந்துடுச்சு வைஷு! நீ எனக்கு கிடைக்கணுமேங்கிற ஏக்கம் வந்துடுச்சு.

நீ எனக்கு சொந்தமாயிட்டா... நானும் சுத்தமான மனுஷனாயிடுவேன். நானும் தவறுகள் செய்தவன் தான்... ஒப்புக்கிறேன்.

பணம் கொட்டிக்கிடக்கு... பொதுவா வசதி வாய்ப்போட இருக்கிற ஆம்பிளைங்க கொஞ்சம் அப்படி இப்படின்னு இருக்கத்தானே செய்வாங்க... நீ படிச்ச பொண்ணு! இது கூடவா புரியலே வைஷு! உரிமையாய் பேசிக்கொண்டே அவளை நெருங்கி வர ஆரம்பித்தான்.

''உங்களுக்கு கல்யாணம் ஆகி பல வருஷங் களாச்சு... வீட்டுல உங்க மனைவி காத்திட்டிருப் பாங்க... போயிடுங்க... உங்க ராஜலீலைக்கும் ஆட்டம்



பாட்டத்துக்கும்... வேற ஆளைப் பாருங்க. நான் நெருப்பு! இதுக்கு மேல ஒரு எட்டு வச்சா... நேரா பரலோகம் போயிடுவே...''

என்ன பார்க்கிறே? உனக்கு எல்லாம் எதுக்குடா மரியாதை? கிட்டே வந்தே... இந்த உலக்கையால உன் மண்டையைப் பிளந்துடுவேன்... ராஸ்கல்!'' சுவரோரமாக சாற்றி வைக்கப்பட்டிருந்த உலக்கையை சட்டென்று எடுத்து ஓங்கினாள்.

கலைந்த கூந்தலும் சிவந்த விழிகளுமாகப் பார்ப்பதற்கு அசுர சம்ஹாரம் செய்ய வந்த திரிபுரசுந்தரியைப் போன்று தோற்றம் அளித்தாள்.

''கத்தி ஊரைக்கூட்டி உன்னை அசிங்கப் படுத்தறதுக்கு முன்னாடி ஓடிப்போயிடு... பொறுக்கி ராஸ்கல்.'' கர்ஜித்தாள்.

''வை... வைஷு!'' பயத்தில் பின்வாங்கி நடந்து கொண்டே பேசினான்.

''நீதப்பா புரிஞ்சுகிட்டே வைஷு! உனக்கும் எனக்கும் கல்யாண ஏற்பாடு நடக்குது... அந்த உரிமையிலதான் உன்கிட்டே நான் பேச வந்தேன். சரி... நா வரேன்.''

பயத்தில் அவனது நாக் குழறியது. வாசற்கதவைத் தாண்டி ஓடிப்போனான் அழகுசுந்தரம்.

வைஷ்ணவிக்கு இதயம் தடதடத்தது. கோபத்திலும் பயத்திலும் அவளுக்கு மூச்சிரைத்தது.

'இவன் கூறுவது உண்மையா? அல்லது குடிபோதையில் உளறிவிட்டுப் போகின்றானா?'

ஒருவேளை இவன் கூறுவது உண்மையா இருக்குமோ?

உள்ளுக்குள் திகில் ஊறியது பதற்றம் சிலந்தியாய் கால் பரப்பி, இவளுள் நடக்க ஆரம்பித்தது.

## 7

''ஸ்ரீ... ஸ்ரீதர்! நம்ம சந்தீப் மா... மாடிப் படியிலேர்ந்து உருண்டு விழுந்துட்டான்பா... வேகமாக உருண்டு விழுந்ததிலே கீழ்ப்படி முனையில மோதிட்டான்... நிறைய ரத்தம் போயிடுச்சு...''

அ... அவனை வீ.ஆர். ஹாஸ்பிடல்லே சேர்த் திருக்கோம். ஐ... ஐ... ஸி.யு-வில தான் இருக்கான்... இவ்ளோ நேரமா ட்ரை பண்ணி இப்பதான் உன்னோட லைன் கிடைச்சது.

''எனக்கு பயமா இருக்கு ஸ்ரீதர்! சீக்கிரமா வர்றியாப்பா?'' தழுதழுத்தபடி பேசினார் சிவானந்தம். ஸ்ரீதருக்கு பகீரென்றிருந்தது.

''மை... மைகாட்! இத்தன பேர் இருந்தும் என்ன பிரயோஜனம்? குழந்தையை ஜாக்கிரதையா கவனிச்சுக்காம... இப்படி அசால்ட்டா இருந்திருக்கீங்க? உயிருக்கு ஒ... ஒண்ணும் ஆபத்தில்லையே அப்பா?'' கேட்டு முடிப்பதற்குள்... அவளது அடிவயிற்றில் அமிலம் சுரந்தது.

''டாக்டர்ஸ் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறாங்க... நிறைய ரத்த இழப்பு ஏற்பட்டிருக்காம்... நீ சீக்கிரமா கிளம்பி வாடா...''

மறுகணமே செல்ஃபோன் மௌனித்தது.

அவனது கார் புயல் வேகத்தில் வி.ஆர். ஹாஸ்பிடலை நோக்கி சீறிக் கொண்டு கிளம்பியது.

''பகவானே! இந்த உலகத்துல எங்களுக்குன்னு இருக்கற ஒரே பிடிப்பு... சந்தீப்தான். அவன் எங்களுக்கு



முழுசா வேணும்... அந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு பதிலா என் உயிரை எடுத்துக்கோ... குழந்தைக்கு எந்த ஆபத்தும் ஏற்படாம காப்பாத்து... பகவானே! இன்னொரு அதிர்ச்சியைத் தாங்கற சக்தி... எங்களுக்கு கிடையாது... ஜயனே!''

மனம் உருக இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டான்.

அவன் ஆஸ்பத்திரியை அடைந்தபோது... சிவானந்தம் சோகமே உருவாக தளர்ந்து போய் ஏறிட்டார்.

'எ... என்னப்பா...? டாக்டர் என்ன சொன்னா?''

''பச்! சந்தீப்புக்கு ரேர் குரூப் ரத்தமாம்... பிளட் பேங்கிலே ஃபோன் பண்ணி கேட்டிருக்காங்க... அங்கேயும் ஸ்டாக் இல்லையாம்... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனுக்கு... ஃபோன் பண்ணி சொல்லி இருக்காங்க...''

ரேர் குரூப்பைச் சேர்ந்த டோனர்ஸுக்கு அவங்க தகவல் அனுப்பியிருக்காங்க... அந்த குரூப் ரத்தமுடையவங்க மனசு இரங்கி... சீக்கிரமா வந்து பிளட் டொனேட் பண்ணினா... சந்தீப்பை காப்பாத்திடலாம்'னு டாக்டர்ஸ் சொல்றாங்க.

மருமகளால குடும்ப மானம் போச்சு... எனக்கு கொல்லி வைக்க வேண்டிய தலைப்பிள்ளை விஸ்வத்தை வாரிக் குடுத்தேன். இப்போ பேரன் உசுருக்குப் போராடிக்கிட்டிருக்கிறதை பார்க்கிறேன்...

கடவுள் என்னை... அதுவும் வயசான காலத்துல இப்படி பந்தாடுகிறாரே ஸ்ரீதர்? இப்படி அணுஅணுவா துக்கப்பட்டு சாகிறதைவிட... ஒரேயடியா கண்ணை மூடிட்டா தேவலை போலிருக்கேப்பா.''

சோகத்தில் வாய்விட்டு அரற்ற ஆரம்பித்தார் சிவானந்தம். "நம்பிக்கையைத் தளர விடாதீங்கப்பா... நாம்ப எந்தப் பாவமும் செய்யலை... பகவான் நம்மை கைவிட மாட்டாருப்பா."

தந்தையின் தோளில் ஆதரவாய் கை வைத்தான் ஸ்ரீதர். மெல்ல அரற்றியபடியே அவனது புஜத்தில் சாய்ந்து கொண்டார் சிவானந்தம்.

★ ★ ★

அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்டால்... வைஷ்ணவி தன்னையே மறந்துவிடுவாள்.

தனது கவலையையும் சோகத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு வேலையில் ஆர்வத்துடன் மூழ்கி விடுவாள்.

வேலை முடிந்து திரும்பவும் ஹேண்ட் பாக்கை மாட்டிக்கொண்டு வீட்டிற்குச் செல்லும்போதுதான்... சோக மேகங்கள் சொல்லி வைத்தாற்போல் அவளை சூழ்ந்து கொள்ளும்.

இனம் புரியாத பாரம் நெஞ்சில் ஏறி அமர்ந்து விடும். அன்று மதிய உணவு இடைவேளையின் போது... ஹேண்ட் பாக்கிலிருந்த டிபன் பாக்ஸை எடுத்து வெளியில் வைத்தாள்.

மோர் சாதத்தின் புளித்த மணம் குப்பென்று நாசியைத் துளைத்தது. கிளம்பிய அவசரத்தில்... தொட்டுக்கொள்ள உருளைக்கிழங்கு வறுவலையும் தக்காளி தொக்கையும் வைக்க மறந்துவிட்டாள்.

வழக்கமாக எடுத்துவரும் மாவடுவைக்கூட வைக்க மறந்து விட்டாள்.

மோர் சாதத்தில் சிறிதளவு தண்ணீரை விட்டுப் பிசைந்த நேரத்தில்... டெலிஃபோன் விடாமல் அலறியது.



"ஹலோ! குட் ஆஃப்டர் நூன்... முருகன் ரோட் வேஸ்!", "ஹலோ! மிஸ். வைஷ்ணவி... நாங்க பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனிலிருந்து பேசறோம்."

ஒரு சின்னப் பையன் அடிபட்டு விழுந்து உயிருக்குப் போராடிக்கிட்டிருக்கான். அவனுக்கு உடனடியா ரேர் குரூப் பிளட் தேவைப்படுது. வீ.ஆர். ஹாஸ்பிடல்லே இருந்து ஃபோன் பண்ணினாங்க.

நீங்க உடனடியா போய் பிளட் டொனேட் பண்ணினா... அந்தப் பையனைக் காப்பாத்திடலாம்."

"எ... எங்க... எந்த ஹாஸ்பிடல்?" பதறி எழுந்தாள்.

"அடையாறுல வீ.ஆர். ஹாஸ்பிடல்."

"இ... இதோ கிளம்பிட்டேன் சார்" கையைக் கழுவிக் கொண்டு அரக்கப் பரக்க 'ஹேண்ட் பேக்'கை மாட்டிக்கொண்டு மானேஜரின் கேபினுக்குள் தயக்கமாய் நுழைந்தாள் வைஷ்ணவி.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் மானேஜர் "உன்னோட மனிதாபிமானத்தைப் பாராட்டறேன் வைஷ்ணவி. போயிட்டு வாம்மா" என்றார்.

அவசரமாக விழுந்தடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

மரகதத்திற்கு தெரியாமல்... அவசரத் தேவைக்காக இருநூறு ரூபாயைத் தந்திருந்தார் பெரியப்பா சண்முகம்.

பஸ்சுக்காக காத்திருந்தால் நேரமாகிவிடும். அங்கே சிறுவனின் உயிர் ஊசலாடிக் கொண் டிருக்கிறது.

தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அந்த உயிருக்கே உலை வைத்து விடுமே" என்ற எண்ணத்தில்... காலியாக வந்த ஆட்டோவில் சட்டென்று ஏறிக் கொண்டாள் வைஷ்ணவி.

அவள் அடிக்கடி இரத்ததான முகாமில் கலந்து கொண்டு... இரத்ததானம் செய்து விட்டு வருபவள். முதியோர் இல்லத்திற்கும், அனாதை இல்லத்திற்கும் சென்று தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புவள்.

''வீ.ஆர்.ஹாஸ்பிடலுக்கு கொஞ்சம் சீக்கிரமா போங்களேன் சார்! அங்கே ஒரு குழந்தை ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்காம்... ப்ளீஸ்'' அவளது குரலில் பதற்றம் வழிந்தது.

ஆட்டோ வேகமெடுத்துப் பறந்தது.

இனம் புரியாத திகிலில் அவளது இதயம் எம்பிக் குதித்தது.

## 8

''கடவுளே! அந்தக் குழந்தைக்கு எதுவும் ஆயிடக் கூடாது.'' அவளையும் அறியாமல் பதற்றமாக இறைவனிடம் கோரிக்கை வைத்தாள்.

'முன்பின் பார்த்தறியாத குழந்தைதான்! பாவம்... குழந்தையைப் பெத்தவங்க எப்படி யெல்லாம் பரிதவிச்சுட்டு இருக்காங்களோ?' உள்ளூர பச்சாதாபம் சுரந்தது.

''இன்னும் கொஞ்சம் சீக்கிரமா போங்களேன்.'' ஆட்டோ ஜெட் வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. வீ.ஆர். ஹாஸ்பிடல் வளாகத்தில் நின்றது.

ஆட்டோகாரனுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு கிட்டத்தட்ட ஓடினாள் வைஷ்ணவி.



இவளது திகிலையும் பதற்றத்தையும் பார்த்து விட்டு தலைமை டாக்டர் புன்னகைத்துக் கொண்டார்.

நரம்பில் ஊசி இறக்கி ரத்தம் சேகரித்தபோது தலையோடு காலாய் நெகிழ்வு.

''உரிய நேரத்தில் நீங்க கொடுத்த ரத்தம்... அந்த உயிரையே காப்பாத்தி இருக்கு! நன்றி... மிஸ். வைஷ்ணவி அந்த ஆஸ்பத்திரி தலைமை மருத்துவர் பாராட்டினார்.

''மனித நேயத்தோடு செயல்பட வேண்டியது நம்ம கடமை சார்! நான் என்னோட கடமையைத்தான் செய்திருக்கேன். விலைமதிப்பில்லாத ஒரு உயிரைக் காப்பாத்தின புண்ணியம் எனக்கு இன்னிக்குக் கிடைச்சிருக்கே... அதுக்கு நான்தான் நன்றி சொல்லணும் சார்.''

அவருடன் பேசியபடியே வெளிப்பட்டவளை... கை கூப்பி வணங்கினார் சிவானந்தம்.

''பிரபல தொழிலதிபர் ஸ்ரீதரைப் பற்றி நீங்க கேள்விப்பட்டிருப்பீங்களே? அவர்தான் இவர்... இவர், ஸ்ரீதரோட அப்பா சிவானந்தம். சிவானந்தம் சாரோட பேரனைத்தான் நீங்க காப்பாத்தி இருக்கீங்க'' டாக்டர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சங்கோஜத்துடன் இருவரையும் பார்த்துக் கை கூப்பினாள் வைஷ்ணவி.

''இவங்க மிஸ்.வைஷ்ணவி! ரெகுலர் பிளட் டோணர்.''

''அம்மாடி... வைஷ்ணவி! நீ பண்ணின உதவி இருக்கே... எங்க உயிரையே நீ மீட்டுக் கொடுத் திருக்கே... என் மூத்த பையன் தவறிட்டான். அவ்ளோ பெரிய சோகத்தை

சுமந்துகிட்டு நான் உயிரோட நடமாடிக்கிட்டு இருக்கேன்னா... அதுக்கு காரணம் என் பேரன் சந்தீப்தான்!

ரணப்பட்ட மனசுக்கு அவன்தான் மருந்தா இருந்தான். அவனுக்கு இப்படி ஆனதும் நாங்க ஆடிப்போயிட்டோம். நல்ல காலம்...

தேவதை மாதிரி வந்து... என் பேரனுக்குப் புனர் ஜென்மம் குடுத்துட்டே...'' கண்ணீர் மல்கியபடி கைகூப்பி வணங்கினார்.

''எனக்கு அப்பா ஸ்தானத்துல இருக்கிற பெரியவர் நீங்க! நான்தான் உங்களை வணங்கணும். நான் பெத்தவங்களை இழந்துட்டேன். உயிர் எவ்வளவு விலைமதிக்க முடியாததுன்னு... அனுபவப்பூர்வமா உணர்ந்த பொண்ணு நான்!

''மனுஷருக்கு மனுஷர் இந்த உதவிகூட செய்யலைன்னா... நாம்ப பூமியில பிறந்ததுக்கே அர்த்தம் இல்லாம போயிடுமே சார்!'' முறுவல் பூத்தாள் வைஷ்ணவி.

''மிஸ்.வைஷ்ணவி! நீங்க பண்ணின உதவிக்கு மிக்க நன்றி! எங்க குடும்பத்து வாரிசை மீட்டுக் கொடுத்திட்டீங்க... இஃப் யூ டோண்ட் மைண்ட்... இந்தாங்க பிளாங்க் செக் நீங்க எத்தனை லட்சம் வேணும்னாலும் ஃபில்லப் பண்ணிக்கலாம்.

''எங்க திருப்திக்காக நீங்க இதை வாங்கிக்கணும். பிளீஸ்.'' அவள் முன் செக்கை நீட்டினான் ஸ்ரீதர்.

அவளது நெஞ்சில் நெருஞ்சி முள் தைத்தது. ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. 'நான் ஏழையாக இருப்பதினால் தானே செக்கை நீட்டி விட்டார்.'

''நான் ரெகுளரா பிளட் டொனேட் பண்ணக் கூடியவள் சார்! ஒரு உயிர் ஊசலாடிக்'கிட்டிருக் கேன்னுதான்... பதறிப்போய் லீவு போட்டுட்டு ஓடி வந்தேன்.''



பிரபல தொழிலதிபரோட பேரனா இருந்தாலும் சரி... செருப்பு தைக்கிறவரோட பேரனா இருந்தாலும் சரி... மனித உயிரானது... விலை மதிக்க முடியாதது.

''இந்த செக்கை எதிர்பார்த்து நான் இந்த உதவியைச் செய்யலை சார்!''

''மிஸ்.வைஷ்ணவி! நான் என்ன சொல்ல வர்றேன்னா...'' ஸ்ரீதர் பேசி முடிக்கும் முன் குறுக்கிட்டாள்.

''நான் ஏழையாக இருக்கிறதால தானே... செய்த உதவிக்கு 'செக்'கை நீட்டி விட்டீங்க? எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் செய்த உதவியை... தயவுசெய்து கொச்சைப் படுத்தாதீங்க சார்.''

அவளது மலர்ந்த முகம் சட்டென்று அனிச்ச மலராய் சுருங்கி வாடியதையும், கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் எட்டிப் பார்த்ததையும் கண்ட ஸ்ரீதர்... உள்ளூரப் பதறித்தான் போனான்.

''சா... சாரி மிஸ்.வைஷ்ணவி.''

அவள் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

இறுகின முகத்துடன் மௌனமாக கைகூப்பி விட்டு விழிகளைத் தழைத்துக் கொண்டு விருட் டென்று வெளியேறினாள்.

அரண்டு போய் விட்டான் ஸ்ரீதர்.

இந்தக் காலத்தில் இப்படியொரு இளம் பெண்ணா?

காசு பணத்தைப் பெரிதும் மதிக்காமல் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படும் வைஷ்ணவியைக் கண்டு... அவன் ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போனான்.

அவனது கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. தான் காண்பது கனவா? நனவா? என்ற ஐயப்பாடுகூட மெல்ல எட்டிப் பார்த்தது.

கண் கொட்டாமல் அவள் சென்ற திக்கையே வெகுநேரம் வெறித்துக் கொண்டிருந்தான்.

வத்சலா வசதி வாய்ப்போடு பணத்திலேயே புரண்டு வளர்ந்த பெண்... அப்படிப்பட்டவளே பணத்தைப் பிரதானமாக மதித்து... கணவனையும் குழந்தையையும் உதறிவிட்டு ஓடி விட்டாள்.

ஆனால் வைஷ்ணவி...? அவளது எளிய தோற்றமே அவளது ஏழ்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறதே?

ஏழ்மை... வறுமையில் வாடி வதங்கும் பெண்ணொருத்தி கட்டாயம் பணத்தைப் பிரதானமாக மதிப்பாள் என்று எடை போட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?

'எந்தவொரு பிரதிபலனையும் நான் எதிர்பார்க்கவில்லை' என்று நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போல் பேசி விட்டாளே?

'எத்தனை லட்சங்கள் கொட்டிக் கொடுத்தாலும்... அது என் கால் தூசுக்கு சமம்' என்ற ரீதியில் தாடை இறுக மௌனமாக நிமிர்ந்து கடந்தாளே?

அவளது சுயமரியாதை... அவனை பிரமிக்க வைத்தது. நெகிழ வைத்தது.

அந்த அற்புதமான அதிசயமான பெண்ணின் உருவம்... அழுத்தம் திருத்தமாய் மனதில் பதிந்து போனது.

'பாவம்! அந்தப் பெண்ணின் மனதை நோகடித்து விட்டேனே? அவளது கண்கள் கலங்கி விட்டனவே? செக்கை நீட்டியதும் ரோஷம் தாளாமல் அவளது மூக்கு நுனியும் காது மடல்களும் ஜிவுஜிவுத்து விட்டனவே?



''எங்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறாள். அவளது கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்கும்படி நடந்து கொண்டேனே?''

மனசாட்சி... கண்களில் விழுந்த மணலாய் உறுத்தியது.

அவனையும் அறியாமல் அவளது பெயரை உச்சரித்தான்.

'வைஷ்ணவி... அழகான பெயர். பெயர் மட்டுமா? அவளும் அழகுதான்... மனதிற்கு இதம் தரும் அழகு... நிலவை நேரில் பார்த்ததுபோல்... உள்ளம் குளிர வைக்கும் அழகு அல்லவா?

கழுத்தில் கருக மணிப்பாசி... அரதப் பழசான காட்டன்புடவை... ஆபரணங்கள் ஏதுமின்றியும் அப்சரஸாக ஜொலிக்கின்றாளே?

'அப்பா கூறியது போல்... தேவதையே நேரில் வந்ததுபோல் இருக்கின்றதே?'

அவளது குரல் அவனது செவிகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. அவனது செவியில் பாகுக்கரைசலாய் வழிந்தது.

'என்ன தெளிவான பேச்சு? இனிய குரல்...!' பணத்திற்கு மயங்காத பவித்திரமான பெண்... அழகும், குணமும், பணிவும், பவ்யமும் ஒட்டு மொத்தமாக அவளிடம் குடிகொண்டிருக்கின்றன.

அவளைப் பற்றி நினைக்க நினைக்க... மயிலிறகால் சாமரம் வீசியதைப் போன்று... மனதிற்கு இதமாக இருந்தது.

மனதிற்குள் சன்னமாய் சிலுசிலுவென்று ஒரு நீரோடை ஓடியது.

நெஞ்சக்குள் இனம் புரியாத சிலிர்ப்பு பொங்கியது நிஜம்!

# 9

**வை**ஷ்ணவி ரத்ததானம் செய்துவிட்டு வந்தாலே... உடம்பின் அயர்ச்சியும் தளர்ச்சியும் ஏற்பட்டதுபோல் இருக்கும்.

சிறிது நேரம் படுத்து ஓய்வு எடுக்கலாமா? என்று அவளது கால்கள் தொய்ந்து கெஞ்சத் தொடங்கும்!

ஆனால் அவள் எதையும் சட்டை செய்ய மாட்டாள். தொடர்ந்து தனது காரியங்களை கவனிப்பாள். பற்களைக் கடித்துக் கொண்டு பலாத்காரமாக... அலுவலக வேலையாகட்டும், வீட்டு வேலையாகட்டும் செய்து முடித்து விட்டுத்தான்... ஆசுவாசப் படுத்திக் கொள்வாள்.

இன்று... அந்த சிறுவனுக்கு ரத்ததானம் செய்துவிட்டு வந்தபோது... அவளது உடம்பில் களைப்பு தலை தூக்கவே இல்லை.

மாறாக... மனதில் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

இறக்கை கட்டிக் கொண்டு படிக்க வேண்டும்போல் மனம் சந்தோஷத்தில் ஆர்ப்பரித்தது.

ஸ்ரீதரின் முகம் அவளது மனக்கண்ணில் வந்து வந்து போனது.

பிரபல தொழிலதிபர் ஸ்ரீதர்... ஆனால் அவனிடம் பணக்கார வாலிபர்களுக்கே உரிய அலட்சியமோ அகம்பாவமோ கர்வமும், திமிரோ, அலட்டலோ... எதுவுமே தென்படவில்லை!



மாறாக... கனிவும், கண்ணியமும், மரியாதை யும் ...லே அவனது விழிகளில் ததும்புகின்றன.

'தனது அண்ணன் மகனின் உயிரைக் காத்தவள்' என்று மரியாதையுடன் பேசியவனின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் பரவியிருந்ததே?

அவளையும் அறியாமல்... அவளது இதயக் கதவுகள் திறந்து ஸ்ரீதரின் வசீகரமான உருவத்தை தன்னுள் புகுத்தி... நிறைப்படுத்திக் கொண்டிருந்தன.

அலுவலகத்திலும் சரி... வீட்டில் வேலைகள் நெட்டி முறிந்தபோதும் சரி... அவளுக்கு அலுப்பே தட்டவில்லை.

இதற்கு முன்பு அவளது மனம் சதா இரும்பு போல் கனத்துக் கொண்டிருக்கும்.

ஆனால் ஸ்ரீதரைக் கண்ட பிறகு... மனதிலிருந்த பாரம் இறங்கி இறகு போல் இலேசாகி இருந்தது.

மனதில் மகிழ்ச்சிப் பிரவாகமெடுத்துப் பொங்கிய தால்... வேலைகளை மாயமாய் செய்து முடித்தாள்.

இரவில் அனைவருக்கும் சப்பாத்தி தக்காளித் தொக்கைப் பரிமாறி முடித்துவிட்டு... தட்டில் இரண்டு சப்பாத்திகளை வைத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தாள்.

சப்பாத்தியை தக்காளித் தொக்கில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்டவளுக்கு... திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது.

வீ.ஆர். ஹாஸ்பிடலுக்கு நாளை ஃபோன் செய்து... அந்த சிறுவன் கண் விழித்து விட்டானா என்று விசாரிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

'சேச்சே! என்னது இது? இதற்கு முன்பு பலதடவை நான் ரத்ததானம் அளித்திருக்கிறேன். ரத்தம் கொடுத்ததோடு என்

வேலை கடமை முடிந்து விடும்... அதை மறந்து விடுவேன். இந்த சிறுவனைப் பற்றி நான் விசாரித்தால்... ஸ்ரீதர் என்ன நினைத்துக் கொள்வார்?

அவர் கொடுத்த செக்கை நான் கை நீட்டி வாங்காமல்... வெடுக் என்று பேசிவிட்டு வந்திருக் கிறேன்.

'எந்தவிதப் பிரதிபலனையும் நான் எதிர்பார்க்க வில்லை சார்!' என்று கூறிவிட்டு... மீண்டும் நலம் விசாரித்தால் என்ன நினைப்பார்?

ஊகூம் இது தப்பு! அதிலும் அடிக்கடி நான் அவரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

என்னையும் அறியாமல்... என் மனதில் அவருக்கு இடம் கொடுத்து விட்டேனே?

நான் ஒரு அனாதைப் பெண். பெரியப்பாவின் வீட்டில் அகதியைப்போல் அண்டி வாழும் அபலைப் பெண்.

ஸ்ரீதர்... பிரபல தொழிலதிபர், கோடீஸ்வரர்! எனக்கும் அவருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே? என் தோற்றமே 'நான் ஒரு ஏழை' என்பதை அவருக்கு காட்டி விட்டதே?

அதனால் தானே பரிதாபப்பட்டு செக்கை நீட்டினார்?

இந்த ஏழையை... அபலையை அவர் ஏற்றுக் கொள்வாரா?

ஊகூம்! அவர் பெரிய கோடீஸ்வரர் என்று தெரிந்திருந்தும்... இந்தப் பேதை மனம்... அவரை விரும்பித் தொலைத்து விட்டதே?

இருக்கும் கவலை போதாதென்று... இதென்ன மனக்கஷ்டம்?

இந்த ஒருதலைக் காதலால்... யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. இனி அவரை நினைப்பதே தவறு அல்லவா?



மனதில் கனித்த காதல்... கானல் நீர்தான்! மனதை இழுத்துக் கட்டுக்குள் அடக்கினாள்.

வாய்க்குள் திணித்துக் கொண்ட சப்பாத்தி... தொண்டைக்குள் இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

வயிற்றுப் பசி அவளைக் கிள்ளியெடுத்தது. ஆனாலும் சாப்பிட மனமிருக்கவில்லை.

கைகளைக் கழுவிக் கொண்டு சட்டென்று எழுந்து கொண்டாள். ஸிங்கில் பாத்திரங்களைத் தேய்த்து அலம்பி அடுப்பு மேடையை நன்கு சுத்தப்படுத்தி விட்டு... பாயை விரித்துப் படுத்தாள்.

தண்ணீருக்குள் அமிழ்த்தப்படும் பந்து... குபீரென்று எம்பி எழுந்து மேலே விழுவது போல்... மீண்டும் ஸ்ரீதரின் ஞாபகம் எழுந்து அவளை ஆக்கிரமித்தது.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்? இன்று எனக்கு என்ன ஆகிவிட்டது?'

என் மனம் ஏன் புத்திகெட்டு அலைகிறது? இந்தக் காதல் கை கூடுவதற்கு எந்த சாத்தியமும் இல்லையென்று தெரிந்தும்... மீண்டும் மீண்டும் என் உள்ளம் ஸ்ரீதரையே நினைத்துப் பார்க்கிறதே?

நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு இது அழகில்லையே? தெரிந்தோ தெரியாமலோ என் மனம் அவரை விரும்பிவிட்டது. இனி அதை மாற்ற முடியாது. காலமெல்லாம் அவரை நினைத்துக் கொண்டே வாழ்ந்து விட வேண்டியதுதான்!

'என் காதல் ஆத்மார்த்தமானது. பவித்திரமானது. உண்மையானது. அதில் எந்த மாற்றமும் இல்லையே?'

மடை திறந்த வெள்ளமாய் விழிகளிலிருந்து வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

விடி விளக்கின் மங்கிய வெளிச்சத்தில்... அந்த டைரியைப் புரட்டி மனதில் உள்ளதை எல்லாம் வார்த்தைகளாக எழுத்தில் வடித்தாள்.

அவளுக்கென்று பெற்றவர்களோ... உற்ற தோழிகளோ யாரும் இல்லை... மனதிலிருந்த ஆதங்கத்தை யாரிடமும் வெளிப்படையாக சொல்ல முடியாதே?

டைரிதான் அவளுக்கு வடிகாலாக இருந்தது.

''ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்.''

ராத்திரி நேரத்தில் டெலிபோன் சத்தம் அலறியதும்... சட்டென்று, டைரியை மூடி தலையணைக்கு அடியில் வைத்தாள்.

இந்த நேரத்தில் யாராக இருக்கும்? ரிசீவரை எடுத்துப் பேசினால். அதற்கும் அர்ச்சனை கிடைக்கும்.

போர்வையை இழுத்து தலைவரை போர்த்திக் கொண்டு படுத்துக்கொண்டாள்.

''ஹலோ.''

மரகதத்தின் குரலில் தூக்கக் கலக்கம் அப்பட்டமாக தொனித்தது.

''யாரு? அழகு சுந்தரமா?''

பெயரைக் கேட்டதுமே பெரியம்மாவின் தூக்கக் கலக்கம் பஞ்சாய் பறந்துவிட்டது.

''என்னப்பா இந்த நேரத்துல...?'' என்றவள், ''கொஞ்சம் பொறு அழகு! அவ தூங்கிட்டாளான்னு பாத்துட்டு வந்துடறேன்.''

ரிசீவரை மேசையில் ஒருக்களித்து வைத்துவிட்டு மெல்ல நடந்து வந்தாள்.



அந்த இரவின் நிசப்தத்திலும் மரகதத்தின் குரல் தெளிவாய் காதில் விழுந்தது.

வைஷ்ணவியின் இதயம் திக்திக் என்று அடித்துக் கொண்டது.

உள்ளூர திகிலும் பயமும் ஊறின.

## 10

விடி விளக்கு மங்கலான மஞ்சளான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது.

போர்வையைத் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்த வைஷ்ணவியின் மீது மரகதத்தின் பார்வை படிந்தது.

சிறிதுநேரம் நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு... மெல்லத் திரும்பி நடந்து சென்றாள்.

வைஷ்ணவிக்குள் ஒரு எச்சரிக்கை மணி ஓங்கி அடித்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டு மூச்சைத் திணறடித்தது.

'அழகுசுந்தரத்துடன் இந்த இரவு நேரத்தில் அப்படியென்ன ரகசியப் பேச்சு பேசப் போகிறாள் மரகதம்?'

அவன் எதற்கு இந்த நேரத்தில் பெரியம்மாவுக்கு ஃபோன் செய்ய வேண்டும்?

நான் தூங்கி விட்டேனா? இல்லையா? என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு போகிறாளே பெரியம்மா?

பீடிகை பலமாக இருக்கிறதே? பெரியம்மா நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால்... எனக்குப் பெரிய வேட்டு வைக்க சதி நடக்கிறதோ?

அழகுசுந்தரம் யாருமில்லாத நேரத்தில் அன்று வீட்டிற்கு வந்து என்னிடம் வம்பு பேசினானே?

அன்று அவன் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமா?

குடித்துவிட்டு போதையில் ஏதோ உளறி விட்டான் என்றல்லவா என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்?

பெரியம்மா அழகுசுந்தரத்துடன் சேர்ந்து கூட்டு சதி செய்யும் விவரம் எல்லாம்... பெரியப்பாவுக்கு தெரிந்திருக்குமா?

அழகுசுந்தரத்திற்கு என்னை இரண்டாம் தாரமாக கட்டி வைக்கப் பார்க்கிறாளே பெரியம்மா...?

குழந்தை இல்லை என்ற காரணத்தால்... முதல் மனைவியை ஒதுக்கிவிட்டு... எனக்கு தாலி கட்டிவிடத் துடிக்கிறானே அந்த பொறுக்கி ராஸ்கல்?

ஒரகத்தியின் மகள்... அனாதை... அபலை! தட்டிக் கேட்க ஆளில்லை என்ற தைரியத்தில் என்னைப் பாழும் கிணற்றில் தள்ளிவிட துணிந்து விட்டாளே பெரியம்மா!

என் மனதில் ஸ்ரீதருக்கு இடம் கொடுத்தபின்பு... இனி நான் யாருக்கும் கழுத்தை நீட்ட முடியாது.

மனதில் ஒருவனை வைத்துக்கொண்டு... இன்னொருவனுடன் குடும்பம் நடத்த என்னால் முடியாதே?

இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது தப்பித்துவிட வேண்டுமே!

'இந்த நேரத்தில் திருட்டுத்தனமாக அப்படி என்னதான் பேசிக் கொள்ளப் போகிறார்கள்?'



வைஷ்ணவி போர்வையை கழுத்துவரை இறக்கினாள். காதை நன்கு தீட்டிக் கொண்டாள்.

"என்ன அழகு...? உம்! சரி... நீ கவலையே படாதே... அவளைக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு!... என்னது... அவ கண்டிப்பா உனக்குத்தான்........ எப்படின்னு கேட்கறியா?

வனியோட வாழ்க்கையை தட்டிப் பறிக்கப் பார்த்தா... நாங்க ரொம்ப வேதனைப் பட்டோம் இல்லியா.....? அந்த குற்ற உணர்வு அவளுக்கு ரொம்பவே இருக்கு!

பெத்த மகள் மாதிரி கண்ணுக்குள்ள வச்சு நான் அவளை வளர்த்திருக்கேன்... என் வார்த்தையை அவ மீற முடியாது. ஏன்னா... அவ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... நீ என் பொண்ணுங்க கரை யேறுவதற்கு உதவுகிறேன் சொல்லிட்டே...!

வரதட்சனைப் பணம் சீர் செனத்தி கல்யாணச் செலவுன்னு அத்தனையையும் தந்து இந்த அத்தை பொண்ணுங்களை கரையேத்தி விடறேன்னு வாக்கு தந்திருக்கே.

அந்த அனாதை கழுதையை கஷ்டப்பட்டு வளர்த்து படிக்க வைச்சு ஆளாக்கி இருக்கேன்... அதுக்குப் பிரதி உபகாரமா... வனிதா, அனிதாவோட வளமான வாழ்க்கைக் காக... அவ உன்னைக் கல்யாணம் செய்துக்கிட்டே ஆகணும்'னு சொல்லிடப் போறேன்.

அவளுக்கு நன்றி உணர்ச்சி நிறையவே உண்டு! இல்ல... அவ சம்மதிச்சுடுவாள்...

லட்சம் லட்சமா சம்பாதிச்சு வச்சிருக்கே... உன்னைக் கட்டிக்கிட்டா மகராணி மாதிரி அமோகமா வாழலாமே...? இந்த அனாதைக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைக்குமா......?

உம்! சரி... சரி! பேசிடறேன். அழகு! நீ எனக்கு அண்ணன் பையன்தான்... நான் உனக்கு அத்தை தான்... மறுக்கலை தாயும் பிள்ளையுமா இருந் தாலும்... வாயும் வயிறும் வேற வேற இல்லையா?

காரியம் ஆனதும் நீ குடுத்த வாக்கை காப்பாத்த தவறிட்டா... நான் என்ன பண்றது?....... இல்லயில்ல... இது கலிகாலம் அழகு! நான் யாரையும் நம்பத் தயாரா இல்ல...

எனக்கு ஒரு சேஃப்டி வேணாமா? நான் சொல்றதைக் கேளு... வனிதாவையும், அனிதாவையும் கரையேத்தியே தீரணும் இல்லியா?

அவங்க கல்யாணத்தப்போ... நீ தரேன்னு சொன்னதை முன்கூட்டியே தந்துட்டா எனக்கு நிம்மதியா இருக்கும் இல்லியா?......... சரி! நீ ரொக்கத்தை என் கையில குடுத்ததும் அடுத்த நிமிஷமே அவகிட்ட சொல்லிடுவேன்.

அதுக்கு அப்புறம் அவளுக்கு யோசிக்கக்கூட டைம் தரக்கூடாது. தடபுடலா கல்யாணத்தை நடத்திடணும்... சேச்சே! அப்படியெல்லாம் போயிட மாட்டா...

நீ கந்து வட்டிக்கு விடறவன். உன் கைவசம்... ஒரு ஆட்படையே இருக்கு! அதையெல்லாம் தாண்டி அவ ஓடிட முடியுமா?

நீ பணத்தை எனக்குக் குடுத்த மறுநாளே... அவ உனக்கு மனைவி ஆயிடுவா... போதுமா? சரி... அந்த மலடியை என்ன பண்ணப் போறே?....... இத்தனை நாளா அவளை அடிச்சுத் துரத்தாம அழகு பாத்துட்டிருந்தியா?

அவ அம்மா வீட்டுலே கொண்டு போய் விட்டுட்டு வரப் போறியா? சரி... உன் இஷ்டம்! அப்போ... விழுப்புரத்துக்குப் போயிட்டு உடனே திரும்பிடுவியா அழகு...?



சரி! நாளைக்கு ராத்திரி ஏழரைக்கு உன் வீட்டுக்கு வரவா? இல்ல... நீ இங்க வர வேணாம். நானே வந்து வாங்கிக்கிறேன். ஒரு பிரச்சினையும் வராது. எல்லாம் சுமுகமா முடிஞ்சிடும்... உம்! வச்சிடு.''

ரிசீவரை டொக்கென்று வைக்கும் சத்தம்கூட மிகத் தெளிவாகக் கேட்டது.

'சே! இவளும் பெண்தானே? இரண்டு பெண்களைப் பெற்ற தாய் தானே? கொஞ்சம்கூட ஈவு இரக்கம் இல்லாமல்... அழகு சுந்தரத்தின் மனைவியை அடித்துத் துரத்தி விடச் சொல்கின்றாளே. மலடி என்று பட்டம் கொடுத்தாகிவிட்டது.

வனிதா, அனிதாவை கரையேற்றுவதற்குரிய கணிசமான தொகையை அழகுசுந்தரம் தரப் போகின்றான் போலும்!

தட்டிக் கேட்பதற்கு ஆளில்லை... அதனால் என்னை அவனுக்கு இரண்டாம் தாரமாகக் கட்டி வைக்கப் பார்க்கிறாள்.

அழகுசுந்தரத்தைக் கட்டிக் கொண்டால் மகாராணி மாதிரி அமோகமாக வாழலாம் என்கிறாளே பெரியம்மா?

வனிதாவையோ, அனிதாவையோ அவனுக்கு கட்டி வைக்க வேண்டியதுதானே?

பெரியப்பாவுக்கு இந்த விவரம் அனேகமாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அதனால்தான் அழகு சுந்தரத்தை இங்கு வரவேண்டாம் என்கிறாள்.

அப்படியே இந்தத் திட்டம் பெரியப்பாவுக்கு தெரிந்தாலும்... அவரால் என்ன செய்துவிட முடியும்?

இரு மகள்களின் வருங்கால வாழ்வுக்காக... அவரும் வாய் மூடி மவுனமாக இருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றும் இல்லைதான்.

என்ன செய்யப் போகின்றேன் நான்?

கேள்விக்குறி பூதாகரமாக கண் முன்னே வளர்ந்து அவளை மிரட்டியது.

ஒரு வழியும் புலப்படாமல் மனதை சூனியம் கவ்விக் கொண்டு இருந்தது.

## 11

**தூ**க்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதர்.

'பாவம் வைஷ்ணவி! வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்து ரத்த தானம் அளித்து சந்தீப்பின் உயிரைக் காப்பாற்றினாள்.

அவளது மனித நேயத்திற்கும் மனிதாபிமானத் திற்கும் மதிப்பு அளிக்காமல்... செக்கைக் கொடுத்து அவளது ஏழ்மையை சுட்டிக் காட்டி விட்டேனே?

'அவள் என்னை என்னவென்று நினைப்பாள்?'

ஸ்ரீதரின் மனசாட்சி ரம்யமாய் அறுத்துக் கொண்டிருந்தது.

'சே! என்ன மனிதன் நான்? அவள் பெயர் மட்டும் தானே எனக்குத் தெரியும்?'

அவள் யார்? எங்கு வேலை செய்கின்றாள்? அவளது குடும்பப் பின்னணி என்று எதையும் தெரிந்து கொள்ளாமல்... விட்டு விட்டேனே?



அவளது முகவரியையோ அல்லது வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயரையோ அறிந்து கொள்ளாதது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?

பார்த்த முதல் நாளிலேயே என் மனதைத் திருடிச் சென்ற தேவதை அவள்!

எத்தனையோ அழகிகளை நேரில் சந்தித்திருக் கிறேனே? யாரையும் கிட்டவே நெருங்க விட்ட தில்லையே?

இந்த அன்பு தேவதையை... கருணை மனம் கொண்டவளை... மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டுமா?

அவளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்... அவளிடம் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்க வேண்டும்.

என்னை அவள் மன்னிப்பாளா?

என் மனதில் அவளுக்கு இடமளித்து விட்டேன் என்று கூறினால்... என்னை ஏற்றுக் கொள்வாளா?

அதெப்படி என்னை அவள் ஏற்றுக் கொள்வாள்?

முதல் சந்திப்பிலேயே... மனக் கசப்பை ஏற்படுத்திவிட்டேனே?

அவள் மனதைப் புண் படுத்திவிட்டேனே.

சரி! நடந்தது நடந்து விட்டது. காலத்திற்கு எந்தப் புண்ணையும் ஆற்றும் சக்தி உண்டு என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

அவள் கருணை உள்ளம் கொண்டவள். மனமிரங்கி மன்னித்து விடுவாள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

அவளே என் மனைவியானால்... எவ்வளவு நன்றாக இருக்கும்?

இது சாத்தியப்படுமா?

அந்தளவுக்கு நான் அதிர்ஷ்டசாலியா?

கடவுளே! இப்படியொரு தேவதையை அனுப்பி சந்தீப்பை மீட்டுக் கொடுத்திருக்கே... மீண்டும் அவளை சந்திக்கும் பாக்கியத்தை! கொடு!

வைஷ்ணவியே இந்த வீட்டிற்கு மருமகளாக அடிஎடுத்து வைத்தால்... பாலைவனமாக வறண்டிருக்கும் எங்கள் வாழ்க்கை... கண்டிப்பாக சோலை வனமாக மாறும்.

லட்சோப லட்சம் அன்பு மலர்கள் பூத்துக் குலுங்கி மணம் பரப்பும்.

சந்தீப்புக்காக... எனக்காக... அப்பாவுக்காக... இந்தக் குடும்பத்திற்காக... இந்த பிரார்த்தனை பலித்துவிட வேண்டுமே?

'என் வேண்டுதலை நிறைவேற்றி வைப்பாயா பகவானே!' மனமுருக வேண்டிக் கொண்டான் ஸ்ரீதர்.

சந்தீப்பை ஐ.ஸி.யூவிலிருந்து அறைக்கு மாற்றி விட்டிருந்தார்கள்.

''அப்பா! நீங்க வீட்டுக்குப் போங்க... பி.பி. மாத்திரை போட்டுக்கிட்டுப் படுங்க... பாவம்! ரொம்ப டென்ஷனாயிட்டீங்களே? நான் பார்த்துக் கிறேன். நீங்க போயிட்டு காலையில் வாங்கப்பா என்று வற்புறுத்திய போது... கவலை கப்பிய முகத்தோடு ஏறிட்டார் சிவானந்தம்.

''எவ்ளோ பெரிய உதவி பண்ணியிருக்கா அந்த வைஷ்ணவி? அவளோட அட்ரஸ் தெரிஞ்சாலாவது... வீட்டுக்குப் போயி நன்றி தெரிவிச்சுட்டு வரலாம்.

ரத்ததானம் செய்துட்டு வந்தவுடனே.. நாம்ப நன்றி தெரிவிச்சோம். இல்லேங்கல... ஆனா எனக்கு என்னமோ திருப்தியா படலை. அதான்.''



அதற்குப் பின்பு அவர் கிளம்பி விட்டிருந்தார்.

''சார்! மருந்து ஊசிகளின் மயக்கத்துல குழந்தை அசந்து தூங்குகிறான்... இன்னும் மூணு மணி நேரத்துக்கு எழுந்துக்கவே மாட்டான். நாங்க அவனை கவனிச்சுப்போம். நீங்க வேணாப் படுத்து ரெஸ்ட் எடுங்க'' என்று ஸ்டாஃப் நர்ஸ் வற்புறுத்தியதால்... அரைமனதுடன் படுக்கையில் சாய்ந்தான் ஸ்ரீதர்.

ஆனால் தூக்கம் வருவதற்கு பதிலாக... வைஷ்ணவியைப் பற்றிய நினைப்புதான் அவனைச் சுற்றி சுற்றி வந்து வதைத்தது.

'இதென்ன மாயம்! நேற்றுவரை அவள் யாரோ... நான் யாரோ...

ஆனால் அவளை சந்தித்த மறுகணத்திலிருந்தே... அவள் என் உணர்வுகளோடு உள்ளத்தோடு ஒன்றி இரண்டறக் கலந்து விட்டாளே?

'பெற்றவர்களை இழந்தவள் நான்' என்றாளே? பாவம்! அப்படியென்றால்... இவள் யாருடைய பராமரிப்பில் இருக்கிறாள்?

ஒருவேளை... விடுதியில் தங்கி வேலை பார்க்கும் பெண்ணோ? 'பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனிலிருந்து ஃபோன் வந்ததும்... லீவு போட்டுவிட்டு ஓடி வந்தேன்' என்றாளே?

'அட... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனுக்கு ஃபோன் செய்து விசாரித்தால்... இவளது முகவரி கிடைத்துவிடுமே?' ஸ்ரீதருக்கு பொறி தட்டியதும்... படக்கென்று எழுந்து அமர்ந்தான்.

நெஞ்சுக்குள் ஐஸ்க்ரீம் மழை ஜிலுஜிலுவென்று வழிந்தோடியது.

## 12

கிணற்றிலிருந்து நீரை இறைத்து தோட்டத்துச் செடிகளுக்கும், மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றிவிட்டு அலுப்புடன் உள்ளே வந்த வைஷ்ணவியின் அருகே வந்தாள் மரகதம்.

''என்ன வைஷு? செடிகளுக்கு தண்ணி ஊத்திட்டு வந்தியா? பாவம்... களைச்சுப் போயிட்டியே? இனிமே நீ தண்ணி இறைக்க வேணாம்... மோட்டார் தண்ணியை விட்டாப் போச்சு!

''வர வர மெலிஞ்சுட்டே போறியே? நல்லா சாப்பிட வேணாமா வயசுப் பொண்ணு?'' அவளது முகத்தில் அரும்பியிருந்த வியர்வை முத்துக்களை பாசத்துடன் துடைத்துவிட்டாள் மரகதம்.

வைஷ்ணவியின் அகன்ற விழிகள் திகிலுடன் மேலும் விரிந்தன.

''அனிதாவோட தோழிக்கு இன்னிக்குப் பிறந்த நாளாம்... அனிதாவும், வனிதாவும் கிளம்பறாங்க... அப்படியே சாப்பிட்டு வந்துடுவாங்க... நான் எங்கண்ணன் வீட்டுக்குப் போறேன்.

நானும் சாப்பிட்டுட்டு வந்துடுவேன். நா வரதுக்குக் கொஞ்சம் லேட்டாகும். பெரியப்பாவுக்கும் உனக்கும் டிபன் செய்துகிட்டாப் போறும். சரியா வைஷு!

''ச... சரிங்க பெரியம்மா.''

தோட்டத்தில் பந்தலில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடிகளிலிருந்து மொட்டுக்களை ஏற்கனவே பறித்து வைத்திருந்தாள் வைஷ்ணவி.



கூடத்துத் தூணோரம் சாய்ந்து அமர்ந்து பூத்தொடுக்க ஆரம்பித்தாள்.

ஜோடி மொட்டுக்களை எடுத்து நாரை லாவகமாக விரல்கள் சுழற்றின.

புன்னகை பூத்த முகத்துடன் கண் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்ல நடந்து சென்றாள் மரகதம்.

அனிதாவும், வனிதாவும் பலத்த மேக்கப்புடன் பளபளக்கும் சேலையணிந்து கொண்டு வெளியேறி விட்டிருந்தனர்.

பூச்சரத்தை சாமி மாடத்திலிருந்த அம்மன் படத்திற்கு சாற்றிவிட்டு கண்மூடி தியானித்தாள் வைஷ்ணவி.

அழகுசுந்தரத்தின் வீட்டிற்கு பெரியம்மா கிளம்பிவிட்டாள் என்பது புரிந்தது.

'ரகசியமாய் காயைக் கச்சிதமாக நகர்த்துவதில் அவள் கில்லாடியாக இருக்கிறாளே?

அழகுசுந்தரம் தனக்கென்று ஒரு ஆட்படையே வைத்திருக்கிறான். இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது என்னைக் காப்பாற்று தாயே!' முதுகு குலுங்க மௌனமாகக் கண்ணீர் உகுத்தவளின் தோளின்மீது ஒரு கரம் படிந்தது.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் வைஷ்ணவி.

பீதி படர்ந்த முகத்துடன் பெரியப்பா சண்முகம் நின்று கொண்டிருந்தார்.

''வைஷ்ணவி! வாசற்கதவை தாழ்ப்பாள் போட்டுட்டு வா... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

அவர் சொன்னபடியே செய்தாள்.

"உன்கிட்டே எப்படி சொல்றதுன்னு தெரியலைம்மா... ஆனா சொல்லியே ஆகணும். உன் பெரியம்மா குணம் கெட்டவதான். ஆனா இந்தளவுக்கு அவ பேராசைக்காரியா இருப்பாள்னு நான் நெனச்சுக் கூடப் பார்க்கலைம்மா..."

நேத்து ராத்திரி... அவ அழகு சுந்தரத்தோட பேசிட்டிருந்ததை தற்செயலா கேட்டுட்டேன். எனக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டுருச்சு... அழகு சுந்தரத்துக்கிட்டே பணம் வாங்கறதுக்குத்தான் இப்போ அவ கிளம்பிப் போயிருக்கா...

அந்தப் பணத்தை அழகு எதுக்கு தர்றான்னு தெரியுமாம்மா?" மேற்கொண்டு விஷயத்தை சொல்லுவதற்குள் அவர் திணறிப் போனார்.

வார்த்தைகள் அகப்படாமல் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடின.

மனைவி மரகதத்தின் அடாத செயல் அவருக்குப் பெருத்த தலை குனிவை ஏற்படுத்தி விட்டிருந்தது.

"பெரியப்பா! நானும் நேத்து நைட்ல... அவங்க பேசறதைக் கேட்டுட்டேன். எ... எனக்கும் எல்லா விஷயமும் தெரிஞ்சு போச்சு." துக்கம் பந்தாய் எழும்பி அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது.

"எவ்ளோ பெரிய ஆபத்து காத்திருக்கு...? நீ பாட்டுக்கு அசால்ட்டா இருக்கியே வைஷு?"

உன் பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும்... கடவுள் ஒரு குறையும் வைக்க மாட்டாரும்மா... ஆனா இனிமேலேயும் பொறுமையா இங்க இருந்தேன்னா... தலைக்கு மேலே வெள்ளம் போயிடும்.

"கிளம்பு! உன் பெரியம்மாவுக்குத் தெரியாம... என் சிநேகிதனைத் தொடர்பு கொண்டு பேசி... ஆலோசனை



கேட்டேன். அடையாறுல ஒரு நல்ல பெண்கள் விடுதி இருக்காம். இதோ அந்த முகவரியைக் குறிச்சு வச்சிருக்கேன்... பாரு!" ஒரு துண்டு காகிதத்தை நீட்டினார்.

என் நண்பன் வீட்டுலேயோ... நம்ம தூரத்து உறவுக்காரங்க வீட்டுலேயோ உன்னைத் தங்க வைக்கலாம். உங்க பெரியம்மா இலேசுப்பட்டவள் இல்ல... அழகு சுந்தரத்தைப் பத்திக் கேட்கவே வேணாம்.

சல்லடை போட்டு உன்னைத் தேடுவாங்க... அதான்! கொஞ்ச காலத்துக்கு ஹாஸ்டல்லே தங்கிக்கோ... நீ வேலை பார்க்கிற ஆபீசுக்கு ரெண்டு வாரம் லீவு சொல்லிட்டு... வெளியே தலைகாட்டாம இரு... அமளி துமளி அடங்கினதுக்கு அப்புறமா... நிதானமா யோசிச்சு நாம்ப ஒரு முடிவுக்கு வரலாம். முகவரிக்கு அடியில என் நண்பனோட செல் நம்பர் இருக்கு...

கடவுள் நம்மைக் கைவிடவே மாட்டாரும்மா... அழாதேம்மா! கண்ணைத் தொடைச்சுக்கோ... முக்கியமானதை எடுத்துக்கிட்டு வா... உன்னை பஸ் ஏத்தி அங்க சேர்த்து விட்டுட்டு நானும் திரும்பணும். பெரியம்மாவுக்கு எந்த சந்தேகமும் வந்துடக்கூடாது. சீக்கிரம்" துரிதப்படுத்தினார்.

சிறு பையில் மூன்று புடவைகள், ரவிக்கைகள் இத்யாதி... ஹேண்ட் பேக்கில் டைரியும், கந்தர் சஷ்டி கவசமும் அம்மன் ஸ்தோத்திர புத்தகமும் இடம் பெற்றிருந்தன.

"உம்! ரொம்ப நல்லதும்மா... நிறைய லக்கேஜ் இருந்தா... கண்டிப்பா இப்பவே பிடிபட்டுருவோம். அந்தப் பையை என்கிட்டே குடும்மா... உங்கப்பாவை யும், அம்மாவையும் மானசீகமா வணங்கிட்டு கிளம்பு வைஷு...

இந்தா! இதுல மூவாயிரத்து ஐநூறு ரூபாய் இருக்கு... வச்சுக்கோ! தைரியமா இருக்கணும். நல்லதே நடக்கும்னு நம்பும்மா... சரியாம்மா?''

தம்பி மகளைப் பார்க்கும் போதே அவரது அடிவயிறு பிசைந்தது. ரத்தப்பாசத்தில் உடம்பு தந்தியடித்தது. உள்ளம் பதறியது.

'நம்மை நம்பி வாழ வந்த பொண்ணு! அதுவும் அழகான இளம் பெண். தம்பி மகளைத் தனியாக நிர்க்கதியாக வீட்டைவிட்டு அனுப்பி வைக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டதே?'

நினைத்துப் பார்க்கும் போதே... உள்ளுக்குள் உலை கொதித்தது.

''வாங்க பெரியப்பா... நேரமாகுது!'' தணலில் நின்று கொண்டிருப்பதைப் போன்று தவித்துக் கொண்டிருந்தாள் வைஷ்ணவி.

''முன் வாசல் பக்கமா போனா... மரகதத்தோட சிநேகிதி கண்ணுல பட்டுருவோமே? வா... தோட்டத்தைத் தாண்டி திட்டி வாசக் கதவைத் திறந்து பின்னாடி சந்து வழியாய் போயிடலாம்... வைஷு!''

கிணற்று மேடையைத் தாண்டி தோட்டத்திற்குள் புகுந்து நடந்தபோது பெரியப்பாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''பார்த்து... பெரியப்பா... ஜாக்கிரதை!''

'லொக்... லொக்' என்று இருமிக் கொண்டே தளர்ந்த நடையுடன் வந்தவரைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

பின் பக்கத்து சந்து வழியாக நடந்து மெயின் ரோட்டை அடைவதற்குள் இருவரும் வியர்த்து வழிந்தார்கள்.



பஸ் ஸ்டாப்பில் நின்றபோது கிலியுடன் திரும்பித் திரும்பிப் பார்த்தார் சண்முகம்.

பதற்றமும் பயமும் வைஷ்ணவியை பந்தாடின.

''பெ... பெரியப்பா! அதோ... பஸ் வருது! நீங்க போங்க... நான் போயிக்கிறேன்... பாவம்! இருமி இருமி உங்க தொண்டையே புண்ணாகி இருக்கும்... நேரத்துக்கு மாத்திரை சாப்பிடுங்க பெரியப்பா'' படபடத்தாள்.

''இந்த இக்கட்டான நிலையிலும் என்மீது எவ்வளவு அக்கறை... பாசம்! ஹாஸ்டல் வாசல்லே என் நண்பன் குருமூர்த்தி இருப்பான்... அட்ரஸ் பத்திரம்! ஜாக்கிரதையா இரும்மா.'' தழுதழுத்தார் சண்முகம்.

''சரி! பெரியப்பா... வரேன்'' சட்டென்று பஸ்ஸில் தன்னை திணித்துக் கொண்டாள் வைஷ்ணவி.

ஜன்னல் வழியே எட்டிப்பார்த்து கையை அசைத்தாள்.

''நான் குருமூர்த்திக்கு ஃபோன் செஞ்சு நீ தனியா வர்ற விவரத்தை சொல்லிடறேன்.'' வயிற்றை எக்கிக் குரல் கொடுத்தார்.

நீர்த்திரையிட்ட விழிகளோடு தலையாட்டி விடை பெற்றாள்.

அழுகை முட்டிக்கொண்டு வந்தது. கண்களைச் சிமிட்டி பொங்கிய கண்ணீரை சிரமப்பட்டு உள்ளிழுத்துக் கொண்டாள் வைஷ்ணவி.

''பெற்றவர்களை இழந்த அனாதை நான். இதுநாள் வரை பெரியப்பாவின் நிழலில் சகல சித்ர வதைகளையும் பொறுத்துக் கொண்டு அடைக்கலமாய் அண்டி வாழ்ந்தேன்.

இப்போது அங்கும் ஒரு ஆபத்து வந்துவிட்டது. இந்தப் பரந்த உலகில் எனக்கென்று ஆதரவுக் கரம் நீட்ட யாருமே இல்லையே?

என் நிலைமை எந்த இளம் பெண்ணிற்கும் ஏற்படவே கூடாது.

இன்னும் சிறிது நேரத்தில் அவளது வாழ்க்கைத் தடமே முற்றிலும் மாறிவிடப் போகின்றது என்பதை... அவள் எவ்விதம் அறிவாள்?

## 13

அடையாறு! பேருந்திலிருந்து மெல்ல உதிர்ந்தாள் வைஷ்ணவி. பேருந்தில் தன்னுடன் சேர்ந்து பயணித்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணியிடம்... துண்டு காகிதத்திலிருந்த முகவரியைக் காட்டி விசாரித்து வைத்திருந்தாள்.

ஆட்டோவில் ஏறினால் சுலபமாகச் சென்று விடலாம்தான்!

ஆனால்... இரவு நேரத்தில் அதுவும் அழகான இளம் பெண்ணாக இருப்பவள்... தன்னந்தனியாக ஆட்டோவில் பயணிக்க மிகவும் பயமாக இருந்தது.

ஆட்டோக்காரன் மோசமானவனாக இருந்து விட்டால்... பெரிய ஆபத்தாயிற்றே?

பலவும் எண்ணியபடி ஓட்டமும் நடையுமாக நடக்க ஆரம்பித்தாள்.

மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து சென்ற நீண்ட தெருவில் இறங்கி நடந்து அந்த வளைவில் திரும்பினாள்.

படுவேகமாய் வந்து கொண்டிருந்த காரைக் கண்டு அதிர்ந்து பதறினாள்.



பதற்றத்தில் அவளது உடம்பு கிடுகிடுவென்று நடுங்கியது. அதிர்ச்சியிலும் பயத்திலும் கண்கள் சொருக மயக்கத்திற்குள் மூழ்கினாள்.

கவலையும் திகிலும் அவளை ஆட்டிப் படைத்ததால்... அன்று முழுவதுமே அவள் சாப்பிடவே இல்லை.

பச்சைத் தண்ணீர் பல்லில் படாததாலும்... திடீர் அதிர்ச்சியாலும் மயக்கமடைந்து சரிந்து விழுந்தாள்.

நல்ல வேளையாக... கண்ணிமைக்கும் நேரத்தில் பிரேக் போட்டு காரை நிறுத்தினான் ஸ்ரீதர்.

சிவானந்தம் தனது குடும்ப மருத்துவரை வற்புறுத்தி... அன்று காலையில் சந்தீப்பை வீட்டிற்கே கொண்டுவர ஏற்பாடு செய்துவிட்டிருந்தார்.

ஸ்பெஷலிஸ்ட்கள் வீட்டிற்கே வந்து சிகிச்சை அளித்தனர்.

குழந்தையை அருகிலிருந்து கவனிப்பதற்கு திறமை வாய்ந்த நர்சுகள் நியமிக்கப்பட்டனர்.

குடும்ப மருத்துவர் குழந்தைக்கு ஊசி போட்டு மாத்திரை கொடுத்து முடித்ததும்... அவரைத் தனது காரிலேற்றிக் கொண்டு அவரது வீட்டில் இறக்கிவிடக் கிளம்பியிருந்தான் ஸ்ரீதர்.

அந்த வளைவில் திரும்பி வந்த இளம் பெண்ணைப் பார்த்ததுமே திடுக்கிட்டான்.

'இவள்... இவள்... வைஷ்ணவி தானே? இல்லை... சதா நான் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால்... இந்தப் பெண்ணின் முகம் வைஷ்ணவியைப் போல் தோற்றமளிக்கிறதா?'

கணப்பொழுதில் இந்த எண்ணம் தோன்றி மறைந்தது.

சமயோசிதமாக 'சர்ரக்' என்று பிரேக் போட்டு காரையும் நிறுத்தினான்.

மயிரிழையில் வைஷ்ணவி தப்பி விட்டாள் என்று தெரிந்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டான் ஸ்ரீதர்.

"பயப்படத் தேவையில்லை ஸ்ரீதர்... இந்தப் பொண்ணு எதிர்பாராத அதிர்ச்சியில் தான் மயங்கி யிருக்கா" குடும்ப மருத்துவரின் வார்த்தைகள்... கனன்ற மனதிற்குப் பாலை வார்த்தன.

"டாக்டர்! இவளை நம்ம வீட்டுக்கே கொண்டு போயிடலாம். வாங்க" அவளைக் குழந்தையை வாரித் தூக்குவது போல் அள்ளிப் பின் சீட்டில் கிடத்தினான்.

அவனது பங்களாவை நோக்கி... அந்தக் கார் சீற்றத்துடன் விரைந்தது.

அரைமணி நேரம் நழுவியிருந்தது.

சிரமப்பட்டு விழிகளைத் திறந்தாள் வைஷ்ணவி. பாறாங்கல்லாய் இமைகள் இன்னமும் கனத்தன.

"என்னாயிற்று எனக்கு? எங்கிருக்கிறேன் நான்?"

சுற்றிலும் பார்வையாலேயே வலம் வந்தாள்.

கவலை படிந்த முகங்களுடன் தெரிந்த சிவானந்தமும் ஸ்ரீதரும்... அவளது பார்வைக்குச் சிக்கினார்கள்.

'ஸ்ரீதரா? நான் அவரது வீட்டிலா இருக்கிறேன்? இங்கு எப்படி வந்தேன்?'

ஹாஸ்டலுக்குப் போகும் வழியில் மயங்கி விழுந்து விட்டேன் போலும்! ஐயோ! பெரியப்பாவின் நண்பர் எனக்காக அங்கே காத்திருப்பாரே?'

கவலை மனதில் முளைவிட... சட்டென்று எழுந்து கொள்ள எத்தனித்தாள். துவண்டு மீண்டும் படுக்கையில் சரிந்தாள்.



பட்டினி கிடந்த உடம்பு... அசதி... பலகீனம்... எல்லாம் சேர்ந்து அவளைச் சோர்வடைய வைத்தன.

"மிஸ். வைஷ்ணவி! உடம்பை அலட்டிக்காதீங்க... நீங்க முதல்லே சாப்பிடுங்க... நல்லா ரெஸ்ட் எடுங்க... பதட்டப்படாம மனசை ரிலாக்ஸ்டா வச்சுக்குங்க."

"ஓகே... டாக்டர்" பலத்தைத் திரட்டி எழுந்து அமர்ந்தாள்.

டாக்டர் அறையை விட்டு வெளியேறியதும் அவரைத் தொடர்ந்து சிவானந்தமும் அவளைக் கனிவுடன் பார்த்துவிட்டு இங்கிதமாக வெளியேறி விட்டார்.

ஆவி பறக்கும் இட்லிகளைத் தட்டில் ஏந்தியபடி அந்த வேலைக்காரி உள்ளே நுழைந்தாள்.

"வைஷு! முதல்லே சாப்பிடுங்க... சாப்பிட்டு முடிச்சதும் நாம்ப பேசலாம்."

சூடான இட்லியைப் பிய்த்து வெங்காய சாம்பாரில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்ட போது... உண்மையிலேயே மனதிலிருந்த பாரம் இறங்கியிருந்தது. உரிமையாய் ஸ்ரீதர். அவளை 'வைஷு' என்றழைத்தது இதமாயிருந்தது.

உள்ளம் கவர்ந்த காதலனின் பங்களாவில் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற நிம்மதி நிலவியது நிஜம்!

ஆனால் இந்த நிம்மதி நீடிக்காதே? அவர் என்னிடம் என்ன பேசப் போகின்றார்? ஹாஸ்டலில் சேர்த்து விடும்படி... அவரிடமே உதவிகேட்டுவிட வேண்டியது தான்!

சாப்பிட்டு முடித்ததும்... புத்துணர்வும் தெம்பும் கைவரப் பெற்றவளாய் நிமிர்ந்தாள். சாப்பிட்ட தட்டையும்

டம்ளரையும் எடுத்துக்கொண்டு வேலைக் காரி நகர்ந்ததும்... சொல்லி வைத்தாற்போல் உள்ளே நுழைந்தான் ஸ்ரீதர்.

சட்டென்று எழுந்து நின்றாள் வைஷ்ணவி.

''குழந்தை நல்லாயிருக்கானா? அவன் உடம்புக்கு இப்போ தேவலையா?'' நலம் விசாரித்தாள்.

''உங்க புண்ணியத்துல ரொம்பவே நல்லாயிருக்கான். உட்காருங்க.''

''இ... இல்ல... நான் அவனைப் பார்க்கணுமே! இன்னமும் ஹாஸ்பிடல்லேதான் இருக்கானா?''

அவளது கரிசனமும் அக்கறையும் அவனைப் புல்லரிக்க வைத்தன.

''வீட்டுக்கே கூட்டிட்டு வந்துட்டோம். ஸ்பெஷலிட்ஸ், ஃபேமிலி டாக்டர் நர்சுங்க எல்லாரும் நல்லபடியா கவனிச்சுட்டு வர்றாங்க... வாங்க... அவனைப் பாருங்க'' அவனைப் பின்தொடர்ந்தாள் வைஷ்ணவி.

அந்த பிரமாண்டமான அறையில் நிம்மதியாய் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தான் சந்தீப். அவர்கள் நுழைந்ததுமே... இரண்டு நர்சுகளும் நாசூக்காய் வெளியேறினார்கள்.

பால் வடியும் பிஞ்சு முகத்தைப் பார்த்ததுமே... உள்ளூர நெகிழ்ந்து போனாள் வைஷ்ணவி.

''இவனோட அம்மாவை எங்கே காணோம்? அன்னிக்குக்கூட அவங்களை நான் பார்க்கலையே?'' மெல்லிய குரலில் கேட்டபடியே மிருதுவாக சந்தீப்பின் பாதத்தை வருடினாள்.

''வாங்க... அந்த ரூமுக்கே போயிடலாம்'' அவனது முகம் திடீரென்று வாடி விட்டது. குழப்பம் பூசிய முகத்தோடு அவனை மீண்டும் பின்தொடர்ந்தாள்.



## 14

அந்த அறையில்... விஸ்வத்தின் ஆளுயர ஃபோட்டோவின் மீது சந்தன மாலை சாற்றப் பட்டிருந்தது.

''இவர் தான் எங்கண்ணா விஸ்வம்!...'' என்று ஆரம்பித்து வத்சலா ஒன்றரை வயதுக் குழந்தையை விட்டுவிட்டு ஓடிப் போனதிலிருந்து... சகலத்தையும் கூறி முடித்தான் ஸ்ரீதர்.

''மைகாட்! கொஞ்சம்கூட மனசாட்சியே இல்லாம நடந்திருக்காங்க... கேட்கவே ரொம்ப வருத்தமா இருக்கு... உங்க வேதனையை நான் கிளறி விட்டுட்டேன்னு நெனக்கிறேன். என்னை மதிச்சு... உங்க மனசை அழுத்திக்கிட்டிருந்த விவரத்தை சொன்னீங்களே?

''நானும் பெரிய இக்கட்டில மாட்டிட்டிருக்கேன் ஸ்ரீதர்...!'' என்று பீடிகை போட்ட வைஷ்ணவி... ரத்ன சுருக்கமாக தனது விவரங்களை அவனுக்குத் தெரிவித்தாள்.

''என்னை ஹாஸ்டல்லே... நீங்களே வந்து சேர்த்து விடறீங்களா ஸ்ரீதர்?''

''ஊஹூம்! முடியாது. என்னால சேர்த்துவிட முடியாது. உன்னையும் அங்க சேர நான் அனுமதிக்க மாட்டேன். வைஷு!''

''எ... என்னது?'' அவன் உரிமையாய் ஒருமையில் பேசியதைக் கேட்டதும் திகைத்துப் போய் ஏறிட்டாள்.

''சந்தீப்... அன்புக்கு ஏங்கித் தவிச்சுட்டிருக்கான். அவனுக்கு ஒரு நல்ல தாயா... என் அப்பாவுக்கு நல்ல மருமகளா... எனக்கு நல்ல மனைவியா இருந்து... இந்தக் குடும்பத்தை நிர்வகிக்கணும் நீ!''

''இல்ல... இல்ல... நான் வந்து...'' அவள் பேசி முடிப்பதற்கு முன் இடை புகுந்தான் ஸ்ரீதர்.

கொஞ்சம் பொறு வைஷு! நான் சொல்லி முடிச்சுடறேன். நான் அன்னிக்கு செக்கை கொடுத்ததுக்கு உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன். வத்சலா ஓடிப் போனதால... இந்தக் காலத்து இளம் பெண்கள் பணத்தைத்தான் பிரதானமா மதிப்பாங்கன்னு தப்பா நெனச்சுட்டிருந்தேன்.

கடவுள் உன்னை என் முன்னாடி அனுப்பி அந்தத் தவறான எண்ணத்தைப் போக்கிட்டாரு... உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே... நான் என் மனசைப் பறிகொடுத்துட்டேன்.

உன் அட்ரஸை கண்டுபிடிச்சு உன்னை... உன்னை நேரில் பார்த்து விஷயத்தை சொல்லணும்னு துடிச்சுட்டிருந்தேன். பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி... நீயே இங்க வரும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருச்சு!

ஐ லவ் யூ ஸோ மச் வைஷு!

பனியில் நனைந்த மலர்களைக் கூடையில் அள்ளி அப்படியே தலையில் கொட்டியது போலிருந்தது.

''இ... இல்ல ஸ்ரீதர்...'' திக்கித் திணறினாள்.

''வைஷு! நீயும் என்னை நேசிச்கிறேன்னு... எனக்குத் தெரியும்! என்ன திகைச்சுப்போய் பார்க்கிறே? நீ மயங்கி விழுந்ததும் உன் வீட்டுக்குத் தகவல் சொல்றதுக்காக... உன் ஹேண்ட் பேக்கை துழாவினேன். டைரி கிடைத்தது.

அடுத்தவங்களோட அந்தரங்க சமாச்சாரத்தைப் படிக்கிறது தப்புதான்! ஆனா நீ என் உயிரினும் மேலான தேவதையாச்சே? உன்னைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்கிற ஆர்வத்துல படிச்சேன்.



''சந்தோஷத்துல திக்குமுக்காடிப் போயிட்டேன்டா. உண்மையை ஒத்துக்கிறதுக்கு... உன்னோட சுய கௌரவம் இடம் கொடுக்கலை அப்படித்தானே வைஷு?''

கிசுகிசுப்பான குரலில் பேசினாலும்... உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரமான குரலில்... பொலபொல வென்று நொறுங்கிப் போனாள் வைஷ்ணவி.

சோக முலாம் பூசிய முகத்துடன் பரிதாபமாக அவளது விழிகளை ஊடுருவியனைக் கண்டு நெக்குருகிப் போனாள்.

''சா... சாரி!''

''அப்பாடா! உள்ளே வரலாமா...? என்றபடி உள்ளே வந்தார் சிவானந்தம். ஸ்ரீதர் கல்யாணமே செய்துக்காம இப்படியே இருந்துடுவான்னு பயந்தேன். எங்க மனசுல பாலை வார்த்தாப்பல... நீ வந்துட்டே! சந்தோஷமா இருக்கும்மா...''

நாளைக்கு காலையில காரை அனுப்பி உங்க பெரியப்பாவை இங்க வரவழைச்சுப் பேசிடலாம். சரியா? ஸ்ரீதர் என் மருமகளுக்கு எப்படி வேர்த்திருக்கு பாரு... மொட்டை மாடிக்கு அழைச்சுட்டுப் போ! பௌர்ணமி நிலவைப்பாத்து கடலலைகள் ஆர்ப்பரிக்கிறதை அவ பார்க்கட்டும். அங்கே காத்து அள்ளிக்கிட்டுபோகும்.'' சிரித்தார்.

சட்டென்று அவரது கால்களில் பணிந்தவளின் சிரத்தைத் தொட்டு ஆசீர்வதித்தார். ஸ்ரீதரும் நமஸ்கரித்தான்.

''அமோகமாக இருங்க'' இதுநாள் வரை இருந்த சோகம் நீங்கி நிம்மதி மனதில் குடி புகுந்தது.

''மொட்டை மாடி! தூரத்தில் எங்கிருந்தோ எஃப்.எம்.மிலிருந்து ''நிலவு தூங்கும் நேரம்... நினைவு

தூங்கிடாது...'' ஜானகியின் இனிய குரல் தேனாய் கசிந்து கொண்டிருந்தது.

''வைஷு! என் மனசே இருண்டு கிடந்துச்சு! பவுர்ணமி நிலவா நீ வந்தபிறகு தான்... என் வாழ்க்கையில் வெளிச்சம் பிறந்திருக்கு... வைஷு! இன்னமும் நீ என்கிட்ட மனசுவிட்டு ஒண்ணுமே சொல்லலையே?'' அவளது மென்கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டான் ஸ்ரீதர்.

''ஐ... ஐ லவ் யூ ஸோ மச் ஸ்ரீதர்... இந்தப் பவுர்ணமி நிலவு அதோ... கடலலைகள் சிலுசிலுக்கிற உப்புக் காத்து... இன்னிக்குத்தான் என் வாழ்நாள்லே நான் சந்தோஷமா இருக்கேன். நிம்மதியா மூச்சு விடறேன்...''

அவளது விழிகளில் ஈரம் படர்ந்தது. ''இனி உன் கண்ணுல ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூட நான் பார்க்கவே கூடாது வைஷு!'' உரிமையாய் அவளை இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

நிறைந்தது



சென்னை குரோம்பேட்டையில் வசித்து வரும் திருமதி **லட்சுமி பிரபா**, M.A.,B.Ed., பட்டதாரியாவார். கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்து வந்த போது தமிழில் ( Part I Language ) மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் முதல் ரேங்க் பெற்று தங்க மெடல் பரிசு பெற்றவர். ஆசிரியையாகவும், பள்ளி முதல்வராகவும் சில வருடங்கள் பணியாற்றியவர்.

தினத்தந்தி, தினகரன், ஞான ஆலயம், சக்தி விகடன், குமுதம் பக்தி, அவள் விகடன், ராணி, ராணி முத்து, பெண், இதயம், கண்மணி, பெண்மணி, இதய நிலா, இதயம், நல்வழி, மஞ்சுளா ரமேஷின் சினேகிதி, குமுதம் சிநேகிதி, க்ருஹஷோபா, மங்கையர் மலர், தங்க மங்கை, பாக்யா, குடும்ப நாவல், பாக்கெட் நாவல், குங்குமச் சிமிழ், தங்கம் போன்ற பல்வேறு இதழ்களில் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட ஆன்மீகக் கட்டுரைகளும், எண்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், பல நாவல்களும் எழுதியிருக்கிறார்.

சமீபகாலமாக சித்தர்கள், அமானுஷ்யம் கலந்த நாவல்களையும் எழுதி வருகின்றார். ஆன்மீகக் கட்டுரைகளுக்காகவும், சித்தர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டவும் பல புராதன சிறப்பு பெற்ற ஸ்தலங்களுக்கும், மலை [illegible]ளுக்கும் இவர் பயணம் செய்திரு[illegible]